VISIT…

***

Kalevala - A Finland Epic in Tamil (part II)

Compiled by: Elias Lonnrot

Translated into Tamil by R.Sivalingam

Edited with an introduction by Asko Parpola

(in tamil script, TSCII format, v.1.7)

கலேவலா - பின்லாந்தின் தேசிய காவியம் (பகுதி 2)

தொகுப்பு: எலியாஸ் லொண்ரொத்

தமிழ் மொழிபெயர்ப்பு: ஆர். சிவலிங்கம் (உதயணன்)

நூல் அமைப்பும் அறிமுகமும்:

டாக்டர் அஸ்கொ பார்பொலா (பேராசிரியர் - இந்திய இயல்)

***

Etext Preparation: Ms. Sarala Sandirasegarane, Kanpur, India
Proof-reading: Udhayanan (Sivalingam Ramalingam), Helsinki, Finland
PDF file preparation: Dr. K. Kalyanasundaram, Lausanne, Switzerland.
This pdf file is based on TSCInaimathi font embedded in the file. Hence this file can be viewed and printed on all computer platforms: Windows, Macintosh and Unix without the need to have the font installed in your computer.
© Project Madurai 2002
Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to preparation of electronic texts of tamil literary works and to distribute them free on the Internet. Details of Project Madurai are available at the website: <http://www.tamil.net/projectmadurai>
You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

Kalevala - A Finland Epic (part II)

(in tamil script, TSCII format)

Compiled by: Elias Lonnrot
Translated into Tamil by R.Sivalingam
Edited with an introduction by Asko Parpola

கலேவலா - பின்லாந்தின் தேசிய காவியம் (பகுதி 2)

தொகுப்பு: எலியாஸ் லொண்ரொத்
தமிழ் மொழிபெயர்ப்பு: ஆர். சிவலிங்கம் (உதயணன்)
நூல் அமைப்பும் அறிமுகமும்:
டாக்டர் அஸ்கொ பார்பொலா (பேராசிரியர் - இந்திய இயல்)

பொருளடக்கம்

	பாடல்கள்	அடிகள்
19.	வடநில மங்கையை இல்மரினனுக்கு மணம் செய்ய நிச்சயித்தல்	518
20.	விவாக விருந்துக்குப் பெரிய எருது கொல்லப்படுதல்	614
21.	திருமணக் கொண்டாட்டம்	438
22.	மணமகளின் பிரிவுத்துயர்	522
23.	மணமகளுக்கு அறிவுரை	850
24.	மணமகனும் மணமகளும் புறப்படுதல்	528
25.	மணமகனும் மணமகளும் வீட்டில் வரவேற்கப்படுதல்	738
26.	லெம்மின்கைனனின் ஆபத்தான பிரயாணம்	776
27.	வடநாட்டில் போரும் குழப்பமும்	420
28.	லெம்மின்கைனனும் அவனது அன்னையும்	294
29.	லெம்மின்கைனனின் அஞ்ஞாத வாசமும் துணிகரச் செயல்களும்	602
30.	லெம்மின்கைனனும் உறைபனி மனிதனும்	500
31.	குலப்பகையும் அடிமை வாழ்வும்	374
32.	குல்லர்வோவும் இல்மரினனின் மனைவியும்	548
33.	இல்மரினனின் மனைவியின் மரணம்	296
34.	குல்லர்வோவும் அவனுடைய பெற்றோரும்	246
35.	குல்லர்வோவும் அவனுடைய சகோதரியும்	372

கலேவலா

பாடல் 19 வடநில மங்கையை இல்மரினனுக்கு திருமணம் செய்ய நிச்சயித்தல்

அடிகள் 1 - 32 : இல்மரினன் வடநாட்டின் வீட்டுக்கு வந்து வடநில மகளை மணம் செய்யக் கேட்கிறான். அவனுக்குச் சில பயங்கரமான
வேலைகள் தரப்படுகின்றன.

அடிகள் 33 - 344 : வடநில மகளின் ஆலோசனைப்படி அவன் அந்த வேலைகளைச் செய்து முடிக்கிறான். முதலாவதாக பாம்புகள் நிறைந்த வயலை உழுகிறான்; இரண்டாவதாக துவோனியின் கரடியையும் மரண உலகின் ஓநாயையும் பிடிக்கிறான். மூன்றாவதாக துவோனலா ஆற்றில் ஒரு பெரிய பயங்கர மீனைப் பிடிக்கிறான்.

அடிகள் 345 - 498 : வடநாட்டுத் தலைவி தனது மகளை இல்மரினனுக்குத் தருவதாக வாக்களித்து விவாக நிச்சயம் செய்கிறாள்.

அடிகள் 499 - 518 : வைனாமொயினன் மனத்துயருடன் வடநாட்டை விட்டுத் திரும்புகிறான். எவரும் தன்னிலும் பார்க்க இளையவர்களுடன் விவாகத்தில் போட்டியிடக் கூடாது என்று எச்சரிக்கை செய்கிறான்.

அதன்பின் கொல்லன் அவன்இல் மரினன்
கவின்அழி வில்லாக் கைவினைக் கலைஞன்
தானே வீட்டின் தனியுள் நுழைந்து
நற்கூ ரையின்கீழ் நடந்தே போனான்.

குடுவையில் தேனும் கொணரப் பட்டது
சாடி ஒன்றிலே தேன்வந் தடைந்தது
கொல்லன்இல் மரினனின் கொழுங்கரங் களிலே;
இந்தச் சொற்களில் இயம்பினன் கொல்லன்:
"இந்தவாழ் நாளில் என்றுமே யில்லை
பொன்னிலாத் திகழும் பொற்பொழு தெல்லாம்
அருந்துவ தில்லை அளித்தஇப் பானம்
எனது**சொந் தத்தை இனிக்காண் பதன்முன்
அன்புக் குரியாள் ஆயத்த மாகுமுன்
நான்காத் திருந்தவள் நற்றயா ராகுமுன்."

அந்த வடநிலத் தலைவியப் போது
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"உனது மணமகள் உளள்பெரும் சிக்கலில்
காத்திருந் தவட்கொரு கடுந்தொ(ல்)லை வந்தது
புனையுமோர் பாதணி பொருத்தம தாயிலை
அடுத்ததும் கூடவே அளவாய் இல்லையாம்;
ஆயத்த மானவள்நின் அன்புக்கு உரியவள்
உண்மையில் அவளைநீ உடையவன் ஆகலாம்
விரியன் பாம்பார் விளைவயல் உழுதிடில்
உறும்அரா வயலினை உழுதே புரட்டினால்
பயன்படுத் தாமலோர் பாய்ந்திடு கலப்பையும்
நகர்த்தப் படாமலோர் நனிதவழ் உழுமுனை;

அதனையே புதமொன் றந்தநாள் உழுதது
வாய்க்கால் பறித்தது வலியபேய் ஒன்றுதான்
செப்பினாற் செய்ததோர் செழும்உழு முனையினால்
கூரிய அலகினைக் கொள்கலப் பையினால்
அதிர்ஷ்ட மற்றவன் அன்புறும் என்மகன்
பாதியை உழுதனன் மீதியை விட்டனன்."

அப்போ(து) கொல்லன் அவன்இல் மரினன்
அரிவை இருந்த அறையினுட் சென்றான்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"வளர்இரா நங்கையே, வைகறைப் பெண்ணே!
உன்நினை வினிலே உளவோ அந்நாள்?
திகழ்புதுச் சம்போ செய்தஅந் நாட்களை?
அரும்ஒளிர் மூடியை அடித்தவந் நாட்களை?
அப்போது நீயொரு சத்தியம் செய்தனை
அனைவரும் அறிந்த ஆண்டவன் பேரிலே
சர்வ வல்லவன் தன்முகத் தின்கீழ்
என்னிடம் வருதற் கிசைவைக் காட்டினாய்
அரியநற் கணவன் ஆகிய என்னிடம்
திகழ்நாள் முழுவதும் சினேகிதி யாக
என்கை யணைப்பில் இருக்குமோர் கோழியாய்;
அன்னைஇப் போதுனை அளிக்கிறா லில்லை
தன்பெ(ண்)ணை எனக்குத் தருகிறா லில்லை
உறுவிரி யன்வயல் உழாதே போனால்
போயுழு தராவயல் புரட்டா விட்டால்."

மணமகள் அப்போ(து) வந்தாள் உதவிட
நங்கை யவற்கு நவின்றாள் யோசனை:
"ஓகோ, கொல்ல, உயர்இல் மரின!
கவினழி வில்லாக் கைவினைக் கலைஞ!
செய்வாய் தங்கத் திலேயொரு கலப்பை
அதனை வெள்ளியால் அலங்கரித் திடுவாய்
உறுவிரி யன்வயல் உழலாம் அதனால்
பொறியரா வயலைப் புரட்டிப் போடலாம்."

அதன்பின் கொல்லன் அவன்இல் மரினன்
கொல்லுலை வைத்தான் கொழும்பொன் எடுத்தே
வெள்ளியும் வைத்தான் வியனுலைத் துருத்தியில்
அமைத்தான் கலப்பையொன் றதிலே யிருந்து;
இரும்பிலே பாதணி இயற்றினான் அடுத்து
அமைத்தான் உருக்கிலே அதன்பின் காலணி
அவற்றை அவனும் அணிந்தே கொண்டனன்
தன்கால் அணிகளைத் தரித்துக் கொண்டனன்
அணிந்தனன் இரும்பினால் ஆனமேற் சட்டை
உருக்கு வளையம் உறுத்தினான் பட்டியை
எடுத்தான் இரும்பில் இயைந்தகை யுறைகளை
கல்லினால் ஆன கையுறை கொண்டான்
கொடுங்கனல் கக்கும் குதிரையைப் பெற்றான்
அந்நற் புரவிக் கணிகலன் புட்டினான்
புறப்பட் டேகினான் போய்வயல் உழற்கு

புன்னிலம் உழுது புரட்டிப் போட்டிட.

போந்தாங்கு நோக்கினன் புரள்நெளி தலைகளை
சலசலத் திரையும் **தலையோடு கண்டான்
இனிவரும் சொற்களில் இவ்விதம் சொன்னான்:
"ஏ,நெளி புழுவே, இறைவனின் படைப்பே!
உனது தலையினை உயர்த்தி யதுயார்?
எவர்தான் சொன்னார், எவரது கட்டளை?
உன்தலை உயர்த்தி உயரமாய் நிற்க
நேராய்க் கழுத்தை நிமிர்த்தியே நிற்க?
இப்போது பாதையில் இடம்விட் டகல்க!
புன்மைப் பிராணியே புல்லினுள் மறைக!
பற்றையின் உட்புறப் பால்நுழைந் திடுக!
புற்புத ருள்ளே புகுந்துசென் றிடுக!
நீஅங் கிருந்து நிமிர்த்தினால் தலையை
நொருக்குவார் உன்தலை நுவல்மனு முதல்வன்
உருக்கு முனையுடை ஒளிர்கணை களினால்
இரும்புக் குண்டாம் இகல்மழை பொழிவார்."

பின்னர்நச் சரவப் பெருவயல் உழுதான்
புழுக்கள் நிறைந்த புமியைப் புரட்டினான்
பார்த்துழும் நிலத்திலே பாம்புகள் எடுத்தான்
புரட்டிய மண்ணில் புகும்பாம் பெடுத்தான்
அங்கே யிருந்து அவன்வந் தியம்பினான்:
"உழுதிப்போ(து) முடித்தேன் உறுவிரி யன்வயல்
புழுக்கள் நிறைந்த புமியைப் புரட்டினேன்
பாம்புகள் நிறைந்த பன்னிலம் கிளறினேன்,
இப்போது பெண்ணை எனக்கீய லாமா?
என்இணை யில்லா அன்புக் குரியளை?"

அந்த வடநிலத் தலைவியப் போது
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"அரிவை உனக்கு அளிக்கப் படுவாள்
பெண்ணிங் குனக்குப் பெறத்தரப் படுவாள்
இங்கு துவோனியின் கரடி கொணர்ந்தால்
மாய்வுல கோநாய் மடக்கி யடக்கினால்
அங்கே துவோனியின் அடர்கா டிருந்து
மரண உலகின் வதிவிடத் திருந்து;
சென்றனர் நூற்றுவர் திசைபிடித் தடக்க
மீண்டு திரும்பினோர் வியன்நிலத் தில்லை."

அதன்பின் கொல்லன் அவன்இல் மரினன்
அரிவை இருந்த அறையினுட் சென்றான்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"வேலையொன் றெனக்கு விதித்திடப் பட்டது
மாய்வுல கோநாய் மடக்கிப் பிடிக்க
துவோனிக் கரடிகள் அவைகளைக் கொணர
அங்கே துவோனியின் அடர்கா டிருந்து
மரண உலகின் வதிவிடத் திருந்து."

மணமகள் அப்போ(து) வந்தாள் உதவிட
நங்கை யவற்கு நவின்றாள் யோசனை:
"ஓகோ, கொல்ல, உயர்இல் மரின!
கவினழி வில்லாக் கைவினைக் கலைஞ!
ஒருகடி வாளம் உருக்கிலே செய்வாய்
வாய்பிணை கருவியை வடிப்பாய் இரும்பிலே
நனைந்து கிடக்குமோர் நளிர்பா றையிலே
மூன்றுநீர் வீழ்ச்சியின் தோன்று நுரையினால்;
துவோனிக் கரடிகள் அவற்றால் கொணர்வாய்
மாய்வுல கோநாய் மடக்கி அடக்குவாய்."

அதன்பின் கொல்லன் அவன்இல் மரினன்
கவினழி வில்லாத கைவினைக் கலைஞன்
ஒருகடி வாளம் உருக்கிலே செய்தான்
வாய்பிணை கருவியை வடித்தான் இரும்பில்
நனைந்து கிடந்ததோர் நளிர்பா றையிலே
மூன்றுநீர் வீழ்ச்சியின் தோன்று நுரையினால்.

பிடித்து அடக்கப் பின்புறப் பட்டான்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"பனிப்புகார் மகளே, பனிமறை பாவாய்!
மூடு பனியினை முன்சுள கால்தெளி!
பனிப்புகார் அதனை நனிமிதக் கச்செய்!
வேட்டை மிருகம் மிகஉலா விடத்தில்
கேளா திருக்கஎன் காலடி யைஅது
உறும்எனை முந்தியஃ தோடா திருக்க."

பிடித்தோ நாயைப் பொருத்தினன் கடிவளம்
கரடிக் கிரும்புச் சங்கிலி கட்டினன்
அங்கோர் துவோனியில் அமைபுற் புதரில்
நெடிதுட் புறமுள நீலக் காட்டினில்
அங்கே யிருந்து அவன்வந் தியம்பினான்:
"வயோதிப மாதே வழங்குக நின்மமகள்
துவோனியின் கரடி கவனமாய்க் கொணர்ந்தேன்
மாய்வுல கோனாய் மடக்கி அடக்கினேன்."

அந்த வடநிலத் தலைவியப் போது
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"வாத்து உனக்கு வழங்கப் படுவாள்
நீலவாத் துனக்கு நிசம்தரப் படுவாள்
**கோலாச்சி பெரும்செதிற் கொழுமீன் பிடித்தால்
விரையும் கொழுத்த மீனைப் பிடித்தால்
அந்தத் துவோனலா ஆற்றிலே அங்கே
பாதாள மாய்புவிப் படுகிடங் கினிலே
கரைவலை ஒன்றைக் கையெடுக் காமல்
திருப்பி யிடாமல் சேருமோர் கைவலை
சென்றோர் நூற்றுவர் சேர்ந்ததைப் பிடிக்க
திரும்பிவந் தோர்கள் செகத்திலே இல்லை."

இப்போ தவனுக் கெழுந்தது கவலை

தொல்லையாய்ப் பட்டன எல்லா அலுவலும்
அரிவை இருந்த அறையினுட் சென்றான்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"வேலையொன் றெனக்கு விதிக்கப் பட்டது
தந்ததைக் காட்டிலும் தரமிகு வேலை
கோலாச்சி பெருஞ்செதிற் கொழுமீன் பிடிக்க
விரையும் கொழுத்த மீனதைப் பிடிக்க
அந்தத் துவோனியின் அகல்கறுப் பாற்றில்
மரண உலகின் **மாயா அருவியில்
கைவலை கரைவலை எவையுமில் லாமல்
எந்தப் பொறியும் எடுத்தல்இல் லாமல்."

மணமகள் அப்போ(து) வந்தாள் உதவிட
நங்கை யவற்கு நவின்றாள் யோசனை:
"ஓகோ, கொல்ல, உயர்இல் மரின!
இதற்காய் வீணாய் வருத்தப் படாதே
அனல்உமிழ் கழுகொன் றமைப்பாய் இப்போ(து)
அனற்புள் படைப்பாய் அதிபிர மாண்டமாய்!
பிடிப்பாய் அதனால் பெருங்கோ லாச்சியை
விரையும் கொழுத்த மீனைப் பிடிப்பாய்
அந்தத் துவோனியின் அகல்கறுப் பாற்றில்
மாய்வுல கத்தின் பாத(ா)ளக் கிடங்கில்."

அந்தக் கொல்லன் அவ்வில் மரினன்
கவினழி வில்லாக் கைவினைக் கலைஞன்
அனல்உமிழ் கழுகொன் றமைத்திட லானான்
அனற்புள் படைத்தான் அதிபிர மாண்டமாய்
பறவையின் கால்களைப் படைத்தான் இரும்பால்
பாத நகங்களைப் படைத்தான் உருக்கால்
படகின் புறங்களால் படைத்தான் சிறகுகள்
தானே பறவையின் தவழ்சிற கேறினான்
அமர்ந்தனன் பறவையின் அகல்முது கினிலே
சிறகு எலும்பின் செறிமுனை அமர்ந்தான்.

இதன்பின் கழுகுக் கியம்பினான் வழிமுறை
பெரியதீப் பறவைக் கறிவுரை சொன்னான்:
"என்னுடைக் கழுகே, எனது பறவையே!
நான்சொல் இடத்தை நாடிப் பறந்துசெல்
துவோனியின் கறுப்புத் தொல்நிற நதிக்கு
மாய்வுல கத்தின் பாத(ா)ளக் கிடங்குக்(கு)
அறைவாய் பெருஞ்செதில் அக்கோ லாச்சியை
விரையும் கொழுத்த மீனை அடிப்பாய்!"

அந்தக் கழுகு அழகிய பறவை
எழுந்தது மேலே பறந்தே சென்றது
விரைந்துகோ லாச்சி வேட்டைக் ககன்றது
பல்லு(ள்)ள பயங்கரப் பருமீன் தேடி
அந்தத் துவோனலா ஆற்றுக் காங்கே
மாய்வுல கத்தின் பாதளக் கிடங்குக்(கு);
ஒற்றைச் சிறகு **அப்பைக் கலக்க

மற்றச் சிறகு வானைத் தொட்டது
நகங்கள் கடலில் இறங்கிப் பிறாண்ட
பாறையில் அலகு மோதிமுட் டியது.

அதன்பின் கொல்லன் அவன்இல் மரினன்
வேட்டையைத் தேடி விரைந்தே சென்றான்
அந்தத் துவோனலா ஆற்றுக் காங்கே
கழுகவ னுக்குக் காவல் இருக்க.

நீரில் இருந்தொரு **நீர்விசை எழுந்தது
இல்மரி னனையே இறுகப் பிடித்தது
கழுகு அதனது கழுத்தில் குதித்தது
திருகிய துநீர்ச் சக்தியின் சென்னியை
இழுத்தது பிடித்து இரும்தலை கீழே
காலடிக் கிடந்த கறுப்புச் சேற்றினுள்.

வந்தது துவோனியின் வலுக்கோ லாச்சி
நீர்வாழ் நாயும் நேராய் வந்தது
சின்னஞ் சிறியகோ லாச்சியு மல்ல
பென்னம் பெரியகோ லாச்சியு மல்ல;
கோடரி இரண்டு கொள்கைப் **பிடிநா
குப்பைவா ரிகைப் பிடிநீள் பற்கள்
மூன்றுநீர் வீழ்ச்சிமுன் கடைவாய் அளவு
ஏழு தோணிகள் நீளம் முதுகு
வந்தது கொல்லனை வலிதுகைப் பற்ற
கொல்லன்இல் மரினனைக் கொன்று(ண்)ண வந்தது.

கழுகு எதிரே கடுகதி வந்தது
காற்றின் பறவை கடிததை அறைந்தது
அந்தக் கழுகு அதுசிறி தல்ல
ஆனால் உண்மையில் அதுபெரி தல்ல:
வாயின் அகல மதுவறு நூறடி
ஆறுநீர் வீழ்ச்சி அளவது கடைவாய்
நாக்கின் நீளம் ஈட்டிஆ றலகு
அதன்நகம் ஐந்து அரிவாள் நீளம்;
அதுபெரும் செதிற்கோ லாச்சியைக் கண்டது
கூடிய விசைசெலும் கொழுத்த மீனதனை
அந்தமீ னினையே அடித்தது பாய்ந்து
அந்தமீன் செதிலை அடித்தே கிழித்தது.

அப்போ தந்த அதிபெரும் செதில்மீன்
விரைந்தே செல்லுமம் மிகுகொழுப் புறுமீன்
கழுகின் நகங்களைக் கடிதுதொட் டிழுத்தது
தெளிந்தநீ ரதனின் திகழடி ஆழம்;
என்னினும் கழுகு எழுந்தே பறந்தது
வானதில் உயர வலுவுடன் சென்றது
கறுப்புச் சேற்றினைக் கலக்கிக் கிளப்பி
தெளிந்தநீர் மேலே சேரக் கொணர்ந்தது.

வட்டமிட் டுயர வந்தது முன்பின்

முயற்சித் ததுஒரு முறையது மீண்டும்
உள்திணித் ததுதன் ஒற்றை நகத்தை
பயங்கர மிகுந்த படர்கோ லாச்சிதோள்
நீர்நா யதனின் நீள்வளை வெலும்பில்;
அடுத்ததன் நகத்தை அதிஉள் திணித்தது
உருக்கில் அமைந்த உறும்மலை யுள்ளே
இரும்பினால் ஆன இருங்குன் றுள்ளே;
ஆயினும் பாறையில் அந்நகம் வழுக்கி
விலகிச் சென்றது விரிகுன் றிருந்து
கோலாச்சி வழுவிக் கொண்டது அதனால்
நழுவிச் சென்றது நளிர்நீர் விலங்கு
கழுகின் கால்நகங் களிலே யிருந்து
பிரம(ா)ண்டப் பறவைப் பிடிவிர லிருந்து
நெஞ்செலும் புகளில் நேர்நகக் கீறலும்
கிழித்த காயமும் கிடந்தன முதுகில்.

பின்னர் இரும்புப் பெருநகக் கழுகு
இன்னொரு தடவை எடுத்தது முயற்சி
அதன்சிற கினிலே அனல்வீ சியது
கனலும் நெருப்பாய்க் கனன்றன விழிகள்
பிடித்தது நகங்களால் பெருங்கோ லாச்சியை
தன்பிடிக் கொணர்ந்தது தனிநீர் நாயை
உறுசெதிற் கோலாச்சி(யை) உயர்த்தி எடுத்தது
இழுத்து வந்தது இரும்நீர் விலங்கை
ஆழத் தலைகளின் அடியிலே யிருந்து
தெளிந்த நீரதன் திகழ்மேற் பரப்பு.

இரும்பு நகக்கழு கிப்படி யாக
அதனுடை மூன்றாம் அருமுயற் சியினால்
பெற்றது துவோனியின் பெருங்கோ லாச்சியை
விரையும் கொழுத்த மீனைப் பிடித்தது
அந்தத் துவோனலா ஆற்றிலே யிருந்து
படுமாய் வுலகின் பாதளத் திருந்து;
தண்ணீர் நீராய்த் தான்தெரிந் திலது
பெருங்கோ லாச்சிப் பிறழ்மீன் செதில்களால்
வருகால் காலாய் **மணக்கவு மில்லை
பருத்த கழுகின் பறப்பிற குகளால்.

இரும்புப் பாதத் திருங்கழு கதன்பின்
சென்றது சுமந்து செதிற்கோ லாச்சியை
பெரியசிந் தூரச் செறிமரக் கிளைக்கு
படர்தேவ தாருவின் தொடர்முடி யதற்கு;
சுவையை அங்கே சுவைத்துப் பார்த்தது
கோலாச்சி வயிற்றைக் குறுக்கே கிழித்தது
நெஞ்சு எலும்பை நேர்பிளந் தெடுத்தது
அடித்து நொருக்கி அதன்தலை போட்டது.

கொல்லன்இல் மரினன் கூறினன் இவ்விதம்:
"ஓ,நீ இழிந்த ஊனுண் கழுகே,
எந்த இனம்நீ இயைந்தபுட் குலத்தில்

எவ்வகைப் பிராணிநீ இருக்கும் வகையில்
சுவையை இவ்விடம் சுவைத்துப் பார்த்தாய்
கோலாச்சி வயிற்றைக் குறுக்கே கிழித்தாய்
பிளந்தே எடுத்தாய் பெரியநெஞ் செலும்பை
அடித்து நொருக்கி அதன்தலை போட்டாய்."

அப்போ(து) இரும்பால் ஆம்நகக் கழுகு
சினந்தே எழுந்து சென்றது பறந்து
படர்வான் உயரப் பறந்தே சென்றது
மேகமண் டலத்து வெளிபரப் புடே
மேகம் கலைந்தது விண்முழங் கிற்று
வான்அதன் மூடி வளைந்தே வந்தது
மானிட முதல்வனின் மாவில் தெறித்தது
திங்களின் கூரிய கொம்புகள் உடைந்தன.

அதன்பின் கொல்லன் அவன்இல் மரினன்
கொண்டே சென்றான் குறித்தமீன் தலையை
மாமியா ருக்கு வருமன் பளிப்பாய்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"நாற்க(ா)லி ஒன்றிதோ நாளெலா மழியா(து)
வடபுல நல்ல வதிவிடத் துக்கு."

பின்வரும் சொற்களில் பின்அவன் சொன்னான்
உரைத்தே அவன்தான் உரைசெய லாயினன்:
"விரியன் வயலை விரைந்துழு(து) முடித்தேன்
புழுக்கள் நிறைந்த புமியைப் புரட்டினேன்
உயர்மாய் வுலகின் ஓநாய் பிடித்தேன்
கடிதே துவோனியின் கரடிகள் கட்டினேன்
பெரிய செதிற்கோ லாச்சியைப் பெற்றேன்
விரையும் கொழுத்த மீனைப் பிடித்தேன்
துவோனலா வதனின் தொன்னதி யிருந்து
படர்மாய் வுலகின் பாதளத் திருந்து
அரிவையிப் போது அளிக்கப் படுவளா
தையலாள் இங்கே தரப்படு வாளா?"

வடநிலத் தலைவி வருமா றுரைத்தாள்:
"ஆயினும் அதிலே ஆற்றினாய் ஓர்பிழை
அடித்துத் தலையை நொருக்கிப் போட்டாய்
கோலாச்சி வயிற்றைக் குறுக்கே கிழித்தாய்
நெஞ்சின் எலும்பை நேர்பிளந் தெடுத்தாய்
சுவையை ஆங்கே சுவைத்துப் பார்த்தாய்."

அப்போ(து) கொல்லன் அவன்இல் மரினன்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"விளைசே தமிலா வெற்றியொன் றில்லை
எம்மிகச் சிறந்த இடங்களிற் கூட

நதிதுவோ னலாவிது நனிபெறப் பட்டது
படுமாய் வுலகின் பாதளக் கிடங்கில்;
ஆயத்தம் தானா அணங்(கு)எதிர் பார்த்தோள்

தயார்நிலை யுள்ளளா தனிக்காத் திருந்தவள்?"

வடநிலத் தலைவி வருமா றுரைத்தாள்
இயம்பினள் அவளே இயம்பினள் இவ்விதம்:
"ஆயத்த மானாள் அணங்(கு)எதிர் பார்த்தோள்
தயாரா யுள்ளனள் தனிக்காத் திருந்தோள்
அளிக்கப் படுவள் அரியஉன் தாரா
தரப்படு வாள்உன் தனிவாத் துனக்கு
இல்மரி னன்எனும் இகல்கொல் லற்கு
என்றுமே அருகில் இருந்திட அமர்ந்து
முழங்கால் மனையளாய் அமர்ந்தே இருக்க
கொள்கரத் தணைப்பில் கோழியா யிருக்க!"

ஆங்கொரு பிள்ளை அகலத் திருந்தது
பெருநிலத் திருந்தொரு பிள்ளைபா டிற்று:
"இவ்வதி விடங்கட் கிப்போ(து) வந்தது
எங்கள்கோட் டைக்கு இன்னொரு பறவை
வடகிழக் கிருந்தே பறந்ததக் கழுகு
கவின்வான் குறுக்கே கருடன் பறந்தது
விரிசிற கொன்றுவான் விளிம்பைமுட் டிற்று
மற்றது அலைமேல் வந்துதட் டிற்று
வால்கடற் பரப்பை வலிதே தொட்டது
தலைவான் முகட்டில் தட்டுப் பட்டது;
பார்த்தது சுற்றிலும் பார்த்தது திரும்பி
பெருவட்ட மொடே பின்முன் பறந்தது
ஆண்களின் கோட்டை அதன்மேல் அமர்ந்தது
அலகால் அதனை அதுகொட் டியது;
இரும்புக் கூரை **இயைந்த(து)ஆண் கோட்டை
அதனால் உட்புக லதுமுடிந் திலது.

பார்த்தது சுற்றிலும் பார்த்தது திரும்பி
பெருவட்ட மொடே பின்முன் பறந்தது
அரிவையர் கோட்டை அதன்மேல் அமர்ந்தது
அலகால் அதனை அதுகொட் டியது;
செப்புக் கூரை செறிந்த(து)பெண் கோட்டை
அதனால் உட்புக லதுமுடிந் திலது.

பார்த்தது சுற்றிலும் பார்த்தது திரும்பி
பெருவட்ட மொடே பின்முன் பறந்தது
மடவார் கோட்டைமேல் வந்தே அமர்ந்தது
அலகால் அதனை அதுகொட் டியது;
சணற்றுணிக் கூரையில் **தையலர் கோட்டை
அதனால் உட்புகல் அதற்கு முடிந்தது.

கோட்டை யதன்புகைக் கூண்டில்வந் தமர்ந்தது
கூரை விளிம்பைக் குறுகியங் கிருந்தது
திறந்தது கோட்டைக் கதவம் தட்டி
அமர்ந்தது கோட்டைச் சாளர மதன்மேல்
சுவரரு கணைந்தது தொடர்பசு மிறகுடன்
நூறிற குடன்சுவர் மூலையை யடைந்தது.

பின்னிய நறுங்குழற் பெண்களைப் பார்த்தது
நறுங்குழல் தலைகளை நன்கா ராய்ந்தது
மங்கையர் குழுவில் மாசிறப் பினளை
பின்னல் தலைகளில் பெரும்பே ரழகியை
முத்துத் தலைகளில் மிக்கொளி யுடையளை
மலர்தலை களில்மிகு மாபுகழ் உடையளை.

கழுகுபின் அவளைக் கடிதுபற் றியது
அவளைக் கருடன் அணைந்து பிடித்தது
குழுவில் மிகநலக் குமரிபற் றியது
வாத்துக் கணத்தில் வனப்புள் ளாளை
ஒளியும் மென்மையும் ஒருங்கிணைந் தாளை
செம்மையும் வெண்மையும் சேரவுள் ளாளை
அவளையே பிடித்தது அரியகாற் றின்புள்.

நீண்ட நகங்களில் தாங்கிய தவளை
எழில்தலை நிமிர்த்தி இருந்திடு மவளை
அருவடி வுகந்த அமைப்புடை யாளை
இறகினைப் போன்ற இனியமென் மையளை
தண்ணிய தோகைச் சாயலுயுள் ளாளை."

அந்த வடநிலத் தலைவியும் அதன்பின்
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"அன்புக் குரியநீ எங்கிருந் தறிந்தாய்,
கேட்டது எவ்விதம் கிளர்பொன் அப்பிளே,
வனிதையாம் இவளும் வளர்வது பற்றி,
நற்சணற் குழலாள் நடமிடல் பற்றி?
அரிவையின் வெள்ளி அணிஒளிர்ந் ததுவா?
பாவையின் பொன்பிர சித்தமுற் றதுவா?
எங்கள்செம் பருதி அங்கெறித் ததுவா
எங்கள் திங்கள் அங்குதிகழ்ந் ததுவா?"

பெருநிலத் திருந்தொரு பிள்ளை சொன்னது
வளர்ந்து வருமது வருபதில் சொன்னது:
"அன்புக்கு உரியது அறிந்தது இவ்விதம்
பாக்கியம் உள்ளவன் பாதையை அறிந்தான்
மகிமை பெற்ற மங்கைவீட் டுக்கு
அவளது அழகிய அகல்கா வெளிக்கு;
அவளது தந்தை அருமதிப் புள்ளவர்
கப்பல் பெரிதாய்க் கட்டி முடிப்பதால்,
அவளது அன்னையோ அதிலும் சிறந்தவள்
தடிப்பாய் ரொட்டிகள் தாம்சுட் டெடுப்பதால்,
ரொட்டி கோதுமையில் சுட்டுவைப் பதனால்,
வந்தோரை ஏற்று வைப்பதால் விருந்து.

அன்பபுக்கு உரியது அறிந்தது இவ்விதம்
சரியாம் அந்நியர் தாமும் அறிந்தது
இளமைப் பெண்ணாள் வளர்கிறாள் என்பதை
கன்னி நல்விருத்தி காண்கிறாள் என்பதை:

ஒருமுறை முற்றத் துலாவிய வேளையில்
களஞ்சியக் கூடம் காலிடும் வேளையில்
புலர்அதி காலைப் பொழுதுஅன் றொருநாள்
வளர்புலர் போதின் வைகறை வேளை
நுண்புகை கிளம்பி நுலாய் எழுந்தது
புகைதடித் தெழுந்தது புகாராய் வந்தது
சீர்த்திகொள் பாவையின் திருஇல் இருந்து
வளரும் வனிதையின் எழிற்கா விருந்து;
அரைத்துக் கொண்டு அவளே யிருந்தனள்
திரிகையின் பிடியில் செயற்பட் டிருந்தாள்;
திரிகையின் கைப்பிடி குயிலென ஒலித்தது
காட்டு வாத்தெனக் கைத்தண் டொலித்தது
திரிகையின் சக்கரம் குருவிபோன் றிசைத்தது
திரிகை அசைந்தது திகழ்முத் துப்போல்.

மீண்டும் ஒருமுறை விரைந்துசெல் வேளையில்
வயல்எல் லையிலடி வைத்திடு வேளையில்:
பசும்புல் தரையிலே பாவையும் இருந்தனள்
மஞ்சள்புல் தரையில் வழிநகர்ந் தேகினள்
கலயம் நிறைசெஞ் சாயம் காய்ச்சினள்
மஞ்சள்சா யத்தை வடித்தாள் கெண்டியில்.

மூன்றாம் முறையில் முனைந்துசெல் வேளை
பாவைபல் கணிக்கீழ் படர்ந்துசெல் வேளை
நங்கையின் நெசவு நன்றாய்க் கேட்டது;
தறியின் அச்சவள் தளிர்க்கைமோ திற்று;
சிறிய**நூ னாழி வழுவிச் சென்றது
குன்றதன் குழியில் துன்று**கீ ரியைப்போல்
தறியச் சுப்பல் செறிந்தொலி யெழுப்பின
மரத்தில் இருக்கும் மரங்கொத் தியைப்போல்
பாவோ(ட்)டு **சட்டம் படுவிசை சுழன்றது
மரத்துக் கிளையின் மரவணி லதுபோல்."

அந்த வடநிலத் தலைவியும் அதன்பின்
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"அதுதான் அதுதான் அழகென் பெண்ணே!
உனக்கெப் போதும் உரைப்பேன் அல்லவா,
கூவிடேல் தேவ தாருக ளிடையென,
பள்ளத் தாக்கிலே பாடா தேயென,
கழுத்தின் வளைவைக் காட்டா தேயென,
கரங்களின் வெண்மையைக் காட்டா தேயென,
இளமை மார்பதன் எழுச்சியை என்று,
ஏனைய உறுப்பின் எழிலினை என்று!

இலையுதிர் காலம் முழுவதும் சொன்னேன்
பாடினேன் இந்தக் கோடைஎக் காலமும்
விரைந்து செல்லும் வசந்தத் தியம்பினேன்
அடுத்த விதைப்புப் பருவத் திசைத்தேன்:
இரகசிய மானதோர் இல்லம் கட்டுவோம்
இரகசியச் சாளரம் சிறிதாய் வைப்போம்

நேரிழை யார்துணி நெய்வதற் காக
இழைநான் **கூடுநூல் இரைச்சலி னோடு,
செவிகொடார் பின்லாந்(து) திகழ்மண வாளர்
பின்லாந்(து) மணவ(ா)ளர், பெருநாட்(டு) வரன்மார்."

பெருநிலத் திருந்தொரு பிள்ளை சொன்னது
**ஒருபட்சக் குழவி உரைத்ததிவ் வாறு:
"மாபரி ஒன்றை மறைப்பது சுலபம்
முரட்டு மயிர்ப்பரி மறைப்பது எளிது
மங்கை ஒருத்தியை மறைப்பது சிரமம்
உயர்நெடுங் குழலியை ஒளிப்பது சிரமம்;
கல்லினால் கோட்டைநீ கட்டிய போதிலும்
உயர்ந்து கிளர்ந்த ஒலிகடல் நடுவில்
மகளிரைத் தடுத்து வைத்தற் காங்கே
நின்கோ ழிகளை நேர்வளர்த் தெடுக்க
மகளிரை அங்கே மறைத்தலு மரிது
அங்கே வளர்தலும் அரிதுகன் னியர்கள்
மாப்பி(ள்)ளை கைகளில் மாட்டப் படாமல்
நன்மண வாளர், நாட்டு வரன்மார்,
உயர்ந்த தொப்பிகள் அணிந்திடு மனிதர்
உருக்குக் குளம்பு உயர்பரி யுடையோர்."

முதிய வைனா மொயினன் அவனே
தாழ்ந்த தலையுடன் வீழ்ந்த மனத்துடன்
வீடு நோக்கி விரைந்திடும் வேளை
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"நான்அபாக் கியவான் நவில்துர்க் கதியினன்
ஏனெனில் எனக்கு இதுதெரிந் திலது
திருமணம் இளமையில் செய்து களிக்க
வாழ்கா லத்தில் வழித்துணை தேட!
**தன்கரு மம்மெலாம் தனியே வருந்துவான்
இளமையில் திருமணம் இயைந்தே செய்பவன்
பிள்ளைப் பருவம் பிள்ளைப் பெறுபவன்
சிறுபரா யத்தில் பெறுபவன் குடும்பம்."

அப்போ(து) வைனா மொயினன் தடுத்தான்
அமைதிநீர் மனிதன் அவன்தடுத் துரைத்தான்
வயோதிபன் இளமை மங்கையை நாடலை
அழகிய பெண்ணை அடைய முயல்வதை
போட்டியில் சேர்ந்து நீந்திப் போவதை
போட்டிக் காகப் புனலில் விரைவதை
இளம்பெண் ஒருத்திக்கு இடுவதைப் போட்டி
இளம்பரு வத்தில் இருக்கையில் அடுத்தவன்.

கலேவலா
பாடல் 20 - விவாக விருந்துக்குப் பெரிய எருது கொல்லப்படுதல்

அடிகள் 1 - 118 : திருமணக் கொண்டாட்டத்திற்கு மிகப் பெரிய எருது ஒன்று கொல்லப்படுதல்.

அடிகள் 119 - 516 : 'பீர்' என்னும் பானம் வடித்து உணவுகள் தயாரித்துத் திருமணக் கொண்டாட்ட ஏற்பாடுகள் நடைபெறுதல்.

அடிகள் 517 - 614 : நாயகர்களைத் திருமணத்திற்கு அழைக்கத் தூதுவர் அனுப்பப்படுதல்; ஆனால் லெம்மின்கைனன் மட்டும் அழைக்கப் படவில்லை.

என்ன பாடலை இப்போ(து) பாடுவோம்?
எந்தக் கதைகளை இப்போ(து) கூறுவோம்?
பாடுவோம் நாங்கள் பாடலை இவ்விதம்
இயம்புவோம் நாங்கள் இந்தக் கதைகளை:
வியன்வட பால்நில விழாக்களைப் பற்றியும்
தெய்வீகப் பானமே தேர்ந்து(ண்)ணல் பற்றியும்.

கடிமண ஒழுங்குகள் கனநாள் நடந்தன
ஆயத்த மாயின அனைத்துப் பொருட்களும்
வடபால் நிலத்து வசிப்பிடத் தாங்கே
சரியோலாப் பகுதியின் தகுவாழ் விடங்களில்.

அங்கே கொணர்ந்த அவைஎவை எவைகள்
வந்து சேர்ந்திட்ட வகைப்பொருள் எவைஎவை
வடபால் நிலத்துநீள் மணவிழா வுக்கு
குடித்து மகிழ்பெருங் குழுவத னுக்கு
உறுநாட்டு மக்களுக் குபசாரம் செய்ய
உயர்பெருங் குழுவுக் குணவு படைக்க.

*கரேலியா இடத்திலோர் காளை வளர்ந்தது
நின்றது கொழுத்துப் பின்லாந் தெருது
அதுவும் பெரியதோ சிறியதோ அல்ல
இளங்கன்று தானது இனிதாய் வளர்ந்தது;
*'ஹமே'யெனு மிடத்தில் அதன்வால் சுழன்றது
*'கெமி'யெனு மாற்றில் அதன்தலை அசைந்தது
அதன்கொம்பு நீளம் அறுநூ றடிகள்
தொ(ள்)ளாயிரம் அடிகளாம் தொடர்வாய்ப் புட்டு;
வாரமொன் றெடுக்கும் வலம்வரக் கீரி
நுவல்எரு தொருபுற நுகக்கட் டதன்மேல்;
**தூக்கணத் துக்கொரு நாட்பொழு தெடுக்கும்
பறந்து முடித்திடப் படிகொம் பிடையே
விரைந்து பபறந்து விறல்முனை யடையும்
இடையில் தங்கி எடுக்கா தோய்வு;
திங்களொன் றோடித் திரிந்ததோர் **கொடையணில்
கழுத்தி லிருந்துவால் கரைமுனை நோக்கி
அதுவால் முனையை அடையவே யில்லை
அடுத்த மாதமும் அடையவே யில்லை.

கட்டுக் கடங்காக் கன்றது இளையது
பின்லாந்து நாட்டின் பெரியதோர் காளை
கரேலியா விருந்து கொணரப் பட்டது
வடபால் நிலத்து வயல்களின் பக்கம்;
கொம்புகள் பக்கம் நின்றொரு நூறுபேர்
வாய்ப்புட் டுப்புறம் மற்றா யிரம்பேர்
அந்தக் காளையை அடுத்துப் பிடித்தனர்
வடநாட்டு கொண்டு வந்தபோ தினிலே.

வழியிலே நடந்து வந்தது எருது
நேர்சரி யோலா நீரிணை வாயிலில்
சேற்று நிலங்களில் செறிபுல் மேய்ந்தது
முதுகுமேற் புறமோ முகிலில் தோய்ந்தது;
அடித்ததை வீழ்த்த அங்கெவ ரும்மிலர்
நாட்டின் குரூரம் வீழ்த்துவோ ரங்கிலர்
வடக்கு மாந்தர் வரிசைத் தரத்தில்
உயர்ந்த பெரிய உறவின ரிடையே
எழுச்சிகொண் டுயரும் இளைஞரி னிடையே
அல்லது முதியோர் அவரிலும் இல்லை.

வயோதிபன் வெளிநாட் டொருவன் வந்தான்
*'விரோகன் னாஸ்'என்னும் கரேலியன் அவனே
இந்த சொற்களில் இயம்பினன் அவனே:
"பொறுப்பாய், ஏழை எருதே பொறுப்பாய்!
இதோநான் வருகிறேன் இகல்தண் டத்தொடே
தண்டா யுதத்தால் சார்ந்துனை அறைகிறேன்
அபாக்கியப் பிராணியே அடிப்பேன் மண்டையில்
உன்னால் முடிந்திடா தின்னொரு கோடையில்
முடியா துனது மூக்குவாய் திருப்ப
வாய்ப்புட்(டுத்) திருப்பிப் பார்க்கவொண் ணாது
இந்த வயல்களின் எல்லை வெளிகளில்
நேர்சரி யோலா நீரிணை வாயிலில்."

முதியவன் சென்றான் முன்விலங் கறைய
விரோக(ன்)னாஸ் அதைத்தொட விரைந்தே சென்றான்
போற்றுதற் குரியோன் போனான் பிடிக்க:
அங்கே எருது அசைத்தது தலையை
கறுத்த விழிகளைச் சுழற்றிப் பார்த்தது;
முதியோன் தாவித் தேவதா ரேறினான்
விரோகன்னாஸ் பாய்ந்தான் விரியும் புதருள்
போற்றுதற் குரியோன் புகுந்தான் செடிப்புதர்.

எருதினை அடிக்க ஒருவனைத் தேடினர்
ஒருவனைப் பெரிய எருதினை வீழ்த்திட
அழகிய கரேலியா அயற்புறத் திருந்து
பெரியதோட் டத்தில் பின்லாந் திருந்து
அமைதி ரஷ்யா அகல்நாட் டிருந்து
விறல்நிறை சுவீடன் வியன்நாட் டிருந்து
லாப்புவின் அகன்ற இரும்வெளி யிருந்து

மிகுவலித் *துர்யா வினிலுமே யிருந்து
துவோனலா நிலத்திலும் ஒருவனைத் தேடினர்
மரண உலகின் மண்ணின் அடியிலும்
தேடினர் ஆயினும் சேர்ந்திலர் எவரும்
நாடினர் ஆயினும் நண்ணிலர் எவரும்.

எருதினை அடிக்க ஒருவனைத் தேடினர்
அறைந்து வீழ்த்திட ஆளொன்று தேடினர்
தெளிந்த கடலதன் செறிவிரி பரப்பில்
பரந்து விரிந்த படரலை களின்மேல்.

கறுத்த மனிதன் கடலிடை எழுந்தான்
வீரன் ஒருவன் விளங்கினான் அலையில்
சரியாய்த் தெளிந்த தண்ணீ ரிருந்து
விரிந்து அகன்ற வியநீர்ப் பரப்பிருந்(து);
உயர்ந்தோர் தம்மில் ஒருவனு மன்றவன்
சிறியவர் தம்மையும் சேர்ந்தவ னன்றவன்
ஒருகல யக்கீழ் உறங்கத் தக்கவன்
நேர்ஒரு முறம்கீழ் நிற்கத் தக்கவன்.

முதியோன் இரும்பு(க்)கை முட்டியை யுடையவன்
இரும்புரோ மமுளோன் எதிர்பார் வைக்கு
தொல்பா றையிலாம் தொப்பி தலையிலே
கற்களில் செய்த காலணி கால்களில்
கனகத் தியைந்த கத்தி கரத்திலே
கத்தியில் இருந்தது கைப்பிடி செப்பினால்.

எருதை அடிக்க ஒருவன் கிடைத்தனன்
கொன்று வீழ்த்தக் கண்டனர் ஒருவனை
பின்லாந் தெருதைப் பிடித்தடிப் பவனை
நாட்டின் குரூரம் வீழ்த்துவோன் தன்னை.

தன்னுடை இரையைத் தான்கண் டதுமே
தாவி விரைந்து தாக்கினான் கழுத்தில்
காளையை முழங்கால் களிற்பணித் திட்டான்
விலாவைப் பற்றி வீழ்த்தினான் நிலத்தில்.

அதிக இரையை அவன்பெற் றானா?
அதிக இரையை அவன்பெற வில்லை:
பேழைகள் நூறு பெய்த இறைச்சியும்
அறுநூறு அடியில் அமை**பதன் இறைச்சியும்
ஏழு தோணிகள் எலாம்நிறை இரத்தமும்
ஆறு சாடிகள் அவைநிறை கொழுப்பும்
அந்த வடநிலத் தமைவிழா வுக்கு
அச்சரி யோலா அதன்விருந் துக்கு.

கட்டப் பட்டதோர் கவின்இல் வடக்கே
ஒருபெரும் வீடு உயர்பெரும் கூடம்
ஐம்பத்து நாலடி அதன்நீள் பக்கம்
நாற்பத் திரண்டடி நனிஉயர் அகலம்

கூரையில் நின்றொரு சேவல் கூவினால்
அதன்குரல் தரையில் அறக்கேட் காது,
கொல்லையில் நின்றொரு குட்டிநாய் குரைத்தால்
அதன்கத வம்வரை அதுகேட் காது.

அந்த வடநிலத் தலைவியும் அங்கே
வந்தாள் நடந்து வளர்தரை கடந்து
வந்து சேர்ந்ததும் மத்தித் தரைக்கு
சிந்தனை செய்தாள் சீருற நினைத்தாள்:
"'பீரை' எப்படிப் பெறலா மப்பா
மதுவைத் தரமாய் வடிப்ப தெப்படி
திருமண விழாவில் உபசா ரம்செய
விவாக வீட்டு விருந்தில் வழங்க?
மதுவினை வடிக்கும் வகைநான் அறியேன்
வியன்'பீர்' தோன்றிய விதமும் அறியேன்."

அங்கே இருந்தான் அடுப்பில் கிழவன்
இயம்பினன் அடுப்பினில் இருந்த கிழவனும்:
" 'பீர்'தான் பிறந்தது பார்லியி லிருந்து
**போதைச் செடியால் பொலிந்த நற்பானம்
ஆயினும் நீரிலா ததுபிறந் திலது
எரியும் நெருப்பு இலாமலு மல்ல."

**ஆரவா ரத்தின் அருமகன் அச்செடி
நன்னிலம் சிறிதாய் நாட்டப் பட்டது
உறுமராப் போல்நிலத் துழவும் பட்டது
**காஞ்சொறிச் செடியெனக் களைந்தெறி பட்டது
கலேவாப் பகுதியிற் காண்கிணற் றருகினில்
ஒஸ்மோ வயலின் உளகரை யோரம்;
ஓரிளம் நாற்று உடனங் கெழுந்தது
முளையொன்(று) பசுமையாய் முளைத்து வந்தது
ஒருசிறு மரத்தில் உயரப் படர்ந்தது
உச்சியை நோக்கி உயர்ந்தே சென்றது.

பார்லியை அதிர்ஷ்டத் தேவதை விதைத்தது
ஒஸ்மோப் புதிய உயர்வயல் திடலில்;
அழகாய் பார்லி அங்கே வளர்ந்தது
செழித்து உயர்ந்து சீராய் வந்தது
ஒஸ்மோப் புதிய உயர்வயல் திடலில்
கலேவா மைந்தனின் காட்டு வெளியினில்.

காலம் சற்றுக் கரைந்துசென் றிட்டது
அழைத்தது மரத்திருந் தப்போ தைச்செடி
திடல்வயல் பார்லி செப்பிட லானது
கேட்டது கலேவாக் கிணற்றிநீ ரதுவும்:
'கூடுவ தெப்போ(து) குவிந்தொன் றாய்நாம்
எப்போ தொருவரை ஒருவர்சந் திப்பது
தனித்த வாழ்வு தருவது துயரம்
இருவர் மூவர் இணைவது இனிமை.'

ஒஸ்மோ வின்மகள், உயர்'பீர்' வடிப்பவள்,
பாவையே பானம் பக்குவம் செய்பவள்,
பார்லித் தானியம் பைங்கரத் தெடுத்தாள்
ஆறு பார்லி அருமணி எடுத்தாள்
போதைச் செடிப்புக் குஞ்சமே ஏழு
எடுத்தாள் நீரை எட்டு அகப்பைகள்
பானையைப் பின்னர் தீயினில் வைத்தாள்
கொதிக்கச் செய்தாள் நெருப்பில் கலவை
பார்லி மணிகளில் 'பீரை'க் காய்ச்சினாள்
கரையும் கோடை காலத்து நாட்களில்
புகார்படி கடலதன் புணர்முனை நுனியில்
செறிபனிப் புகாருள தீவதன் கரையில்
மரத்தில் குடைந்த வன்புதுச் சாடியில்
மிலாறு மரத்தின் வியனார் தொட்டியுள்

எடுத்தாள் 'பீரை' இதமாய் வடித்து
பெற முடிந்திலது உறுபுளித் தன்மை
சிந்தனை செய்தாள் சீருற நினைத்தாள்
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
'இதற்கு இன்னும் எதனைச் சேர்க்கலாம்
வேறு எதனைத் தேடிப் பார்க்கலாம்
புளிக்க வைத்திடப் புதுப் 'பீர்'ப்பானம்
வடித்த மதுவை வைத்திட நுரைக்க? '

கலேவா வின்மகள் கவினுறு நங்கை,
மனோகர மென்மை மங்கையின் விரல்கள்
என்றும் பாங்காய் அசையும் இயல்பின
காலணி என்றும் கனதி குறைந்தவை
தரையின் பரப்பில் விரையும் இயல்பின
நன்னில மத்தியில் நடந்தே வந்தனள்
அடுத்ததில் ஒன்றில் அலுவல் புரிந்தனள்
இரண்டு கெண்டிகள் இடையில் அலுவல்கள்
கண்டனள் **சிராய்த்த துண்டினைத் தரையில்
தரையிலே யிருந்து சிராயை எடுத்தனள்.

அதனைப் பார்த்தனள் அதனைத் திருப்பினள்:
'இதிலே யிருந்து எதனைச் செய்யலாம்
அழகு படைத்த அரிவையின் கைகளில்
கன்னிநல் லாளின் கைவிரல் நுனியில்
இளமைப் பெண்ணாள் எழிற்கரம் கொடுத்தால்
கன்னிநல் லாளின் கைவிரல் நுனியில்? '

தனது கரங்களில் தானதைப் பெற்றாள்
கன்னிநல் லாளின் விரல்களின் நுனியில்
நல்லிளம் பெண்ணாள் உள்ளங் கைகளால்
தேய்த்தனள் தனது திகழ்இரு கரத்தால்
தேய்த்தனள் தனது செழுமிகு தொடைகளில்
அங்கே வெள்ளை அணிலொன் றுதித்தது.

தன்மக னுக்குச் சாற்றினாள் வழிமுறை

அவ்வணி லுக்கு அறிவுரை புகன்றாள்:
'புல்மேட்(டுப்) பொன்னே, புதியஎன் அணிலே!
புல்மேட்டு மலரே, புமியின் எழிலே!
நான்புகல் இடத்தே நனிவிரைந் தேகு!
இயம்பிஆ ணையிடும் இடத்தே விரைவாய்!
களிப்பு நிறைந்த கானகம் அதற்கு
தப்பியோ வாழும் முக்கிய வனத்தே
ஒருசிறு மரத்தில் ஓடிமே லேறு
தளைத்துச் சடைத்த தனிமர முடிக்கு
அதனால் கழுகு அதுபிடிக் காது
காற்றின் பறவை கண்டடிக் காது
கொணர்வாய் தேவ தாருவின் **கூம்பை
கொணர்வாய் தாருவின் கூம்பின் **செதிலை
அரிவையின் கைகளில் அவற்றினை வைப்பாய்
ஒஸ்மோ மகளின் உயர்'பீர்'ப் போடு!'

அணிலுக்(கு) ஓட அழகாய்த் தெரிந்தது
விரையத் தெரிந்தது **சடைவா லதற்கு
நீடிய பாதையை ஓடியே கடக்க
செறிதொலைப் பயணம் செய்தே முடிக்க
ஒருகா முடித்தது மறுகா **கடந்தது
கடந்தது குறுக்கே காவொரு மூன்றும்
களிப்பு நிறைந்த கானகம் சென்றது
தப்பியோ வாழும் முக்கிய வனத்தே.

கண்டது மூன்று கானகத் தருவை
சிறிய நான்கு தேவதா ருக்களை
தளர்சேற்று நின்ற தாரு(வில்)ஏ றிற்று
புற்றிடர் மரமேற் போயிட லானது
பெருங்கழு கதனைப் பிடிக்கவு மில்லை
அடர்காற் பறவை அடிக்கவும் இல்லை.

குலதேவ தாருவின் கூம்பைப் பறித்தது
தாரு மரத்தில் தழைகளை ஒடித்தது
நகங்களில் அவற்றை நன்கொளித் திட்டது
பாதத்தைச் சுற்றிப் பத்திரம் செய்தது
அரிவையின் கைகளில் அவற்றினை வைத்தது
கன்னிநல் லாளின் கைவிரல் நுனியில்.

பெண்ணவள் அவற்றை 'பீரி'ல் போட்டனள்
பகர்ஒஸ் மோமகள் பானத் திட்டனள்
ஆயினும் புளித்தெழ வில்லை யப்'பீர்'
இளமைப் பானம் எழவிலை நுரைத்து.

ஒஸ்மோ வின்மகள், உயர்'பீர்' வடிப்பவள்,
பாவையே பானம் பக்குவம் செய்பவள்,
சிந்தனை பின்னர் செய்தனள் தொடர்ந்து:
'இதற்கு இன்னும் எதனைச் சேர்க்கலாம்
புளிக்க வைத்திடப் புதுப்'பீர்'ப் பானம்
வடித்த மதுவை வைத்திட நுரைக்க? '

கலேவா வின்மகள் கவினுறு நங்கை,
மனோகர மென்மை மங்கையின் விரல்கள்
என்றும் பாங்காய் அசையும் இயல்பின
காலணி என்றும் கனதி குறைந்தவை
தரையின் பரப்பில் விரையும் இயல்பின
நன்னில மத்தியில் நடந்தே வந்தனள்
அடுத்ததில் ஒன்றில் அலுவல் புரிந்தனள்
இரண்டு கெண்டிகள் இடையில் அலுவல்கள்
கண்டனள் **சீவற் துண்டினைத் தரையில்
தரையிலே யிருந்து சீவலை எடுத்தனள்.

அதனைப் பார்த்தனள் அதனைத் திருப்பினள்:
'இதிலே யிருந்து எதனைச் செய்யலாம்
அழகு படைத்த அரிவையின் கைகளில்
கன்னிநல் லாளின் கைவிரல் நுனியில்
இளமைப் பெண்ணாள் எழிற்கரம் கொடுத்தால்
கன்னிநல் லாளின் கைவிரல் நுனியில்? '

தனது கரங்களில் தானதைப் பெற்றாள்
கன்னிநல் லாளின் கைவிரல் நுனியில்
நல்லிளம் பெண்ணாள் உள்ளங் கைகளால்
தேய்த்தனள் தனது திகழ்இரு கரத்தால்
தேய்த்தனள் தனது செழுமிகு தொடைகளில்
கிளர்பொன் மார்புக் கீரியொன் றுதித்தது.

வந்தகீ ரிக்கு வழிமுறை சொன்னாள்
அனாதைப் பிள்ளைக் கறிவுரை சொன்னாள்:
'எனதுநற் கீரியே என்னிளம் பறவையை
அழகிய கம்பளி அருமைத் தோலே
நான்புகல் இடத்து நனிவிரைந் தேகு
இயம்பிஆ ணையிடும் இடத்தே விரைவாய்
பழுப்புக் கரடியின் பாறைக் குகைக்கு
காட்டுக் கரடியின் தோட்ட வெளிக்கு
கரடிகள் பொருதும் காட்டகத் தாங்கே
கொடிய கரடிகள் கூடிவா ழிடத்தே;
**புரையைநின் காலில் போய்நீ எடுத்து
கால்களில் புளித்த மாவுறை சேர்த்து
அரிவையின் கைகளில் அவற்றினை வைப்பாய்
ஒஸ்மோ மகளின் ஒளிர்தோள் சேர்ப்பாய்.'

கீரிக்(கு) இப்போ(து) ஓடத் தெரிந்தது
பொன் மார்புக்குப் போகத் தெரிந்தது
விரைந்து கடந்தது விரிநீள் பாதை
செய்து முடித்தது சேர்தொலைப் பயணம்
ஒருநதி நீந்தி மறுநதி கடந்தது
கடந்தது குறுக்கே கவின்மூன் றாம்நதி
பழுப்புக் கரடியின் பாறைக் குகைக்கு
கரடிகள் இருக்கும் கற்குகை யதற்கு
கரடிகள் பொருதும் காட்டகத் தாங்கே

கொடிய கரடிகள் கூடிவா ழிடத்தே
இரும்பினா லான இருங்குன் றதற்கு
உருக்கினா லான உயர்மலை யதற்கு.

கரடியின் வாயில் கனநுரை வழிந்தது
கொடிய கரடிவாய்க் கனபுரை இருந்தது
கைகளில் சற்றே காண்நுரை யெடுத்தது
பாதத் **திலும்பின் படிபுரை சேர்த்தது
அரிவையின் கைகளில் அவற்றினை வைத்தது
கன்னிநல் லாளின் கைவிரல் நுனியில்.

ஒஸ்மோ மகளும் உடன்தன் 'பீரி'ல்
வடித்தபா னத்தில் வந்ததை யிட்டனள்
ஆயினும் புளித்தெழ வில்லை யப்'பீரே'
மனிதனின் பானம் வரவி(ல்)லை நுரைத்தே.

ஒஸ்மோ வின்மகள், உயர்'பீர்' வடிப்பவள்,
பாவையே பானம் பக்குவம் செய்பவள்,
சிந்தனை பின்னர் செய்தனள் தொடர்ந்து:
'இதற்கு இன்னும் எதனைச் சேர்க்கலாம்
புளிக்க வைத்திடப் புதுப்'பீர்'ப் பானம்
வடித்த மதுவை வைத்திட நுரைக்க? '

கலேவா வின்மகள் கவினுறு நங்கை,
மனோகர மென்மை மங்கையின் விரல்கள்
என்றும் பாங்காய் அசையும் இயல்பின
காலணி என்றும் கனதி குறைந்தவை
தரையின் பரப்பில் விரையும் இயல்பின
நன்னில மத்தியில் நடந்தே வந்தனள்
அடுத்ததில் ஒன்றில் அலுவல் புரிந்தனள்
இரண்டு கெண்டிகள் இடையில் அலுவல்கள்
பயற்றம் **நாற்றைப் படிதரைக் கண்டனள்
நாற்றை எடுத்தனள் நற்றரை யிருந்தே.

அதனைப் பார்த்தனள் அதனைத் திருப்பினள்:
'இதிலே யிருந்து எதனைச் செய்யலாம்
அழகு படைத்த அரிவையின் கைகளில்
கன்னிநல் லாளின் கைவிரல் நுனியில்
இளமைப் பெண்ணாள் எழிற்கரம் கொடுத்தால்
கன்னிநல் லாளின் கைவிரல் நுனியில்? '

தனது கரங்களில் தானதைப் பெற்றாள்
கன்னிநல் லாளின் கைவிரல் நுனியில்
நல்லிளம் பெண்ணாள் உள்ளங் கைகளால்
தேய்த்தனள் தனது திகழ்இரு கரத்தால்
தேய்த்தனள் தனது செழுமிகு தொடைகளில்
அதிலே பிறந்ததோர் அழகிய வண்டு.

தன்பற வைக்குச் சாற்றினள் வழிமுறை
தன்வண் டுக்குச் சாற்றினள் அறிவுரை:

'வண்டே, வண்டே, வான்விரை பறவையே!
புதுப்பசும் புல்நிலப் பூக்களின் அரசே!
நான்புகல் இடத்தே நனிவிரைந் தேகுக!
இயம்பிஆ ணையிடும் இடத்தே விரைவாய்!
இகல்விரி கடலில் இருக்கும் தீவகம்
கிளர்கடல் நடுவே கிடக்கும் பாறை
ஒருபெண் ஆங்கே உறக்கத் திருப்பாள்
செப்பிடைப் பட்டி தெரியும் கழன்று
தேன்புல் அவளது செறிமருங் கிருக்கும்
திகழ்உடை ஓரம் தேன்புல் இருக்கும்
கொஞ்சத் தேனைக் கொணர்வாய் சிறகில்
ஆடையில் தேனை அள்ளி வருவாய்
ஒளிரும் புல்லின் உயர்நுனி யிருந்து
இனிய பொன்மலர் இதழினி லிருந்து
அரிவையின் கைகளில் அவற்றினை வைப்பாய்
ஒஸ்மோ மகளின் ஒளிர்தோள் சேர்ப்பாய்.'

அந்த வண்டு அதிவிரை பறவை
சென்றது பறந்து சென்றது விரைந்து
விரைந்து கடந்தது மிகுசிறு தூரம்
குறுகியே வந்தது கொண்டநீள் தூரம்
குறுக்கே ஒருகடல் குறுக்கே மறுகடல்
கடந்தது மூன்றாம் கடலையும் குறுக்கே
எறிகடற் பரப்பில் இருந்ததீ வுக்கு
கிளர்கடல் நடுவே கிடந்தபா றைக்கு
நற்துயில் புரிந்த நாரியைக் கண்டது
ஈய மார்பினள் வாடிக் கிடந்தனள்
புனைபெய ரில்லா புல்மே டொன்றில்
வளர்நறை நிறைந்த வயலின் அருகில்
அம்பொற் புற்கள் அவளது இடையில்
வெள்ளிப் புற்கள் மிளிர்ந்தன பட்டியில்.

சிறகை வண்டு தேனில் தோய்த்தது
உருகும் நறையில் சிறகைத் தோய்த்தது
ஒளிரும் புல்நுனி ஒன்றின் மேலே
பைம்பொன் மலரின் படர்முனை ஒன்றில்
மங்கையின் கைகளில் வைத்தது கொணர்ந்து
கன்னிநல் லாளின் கைவிரல் நுனியில்.

ஒஸ்மோ வின்மகள் உடன்தன் 'பீரி'ல்
வடித்தபா னத்தில் மற்றதைப் போட்டனள்
புளித்து வந்தது புதுப்பீர் இப்போ(து)
நுரைத்து எழுந்தது நுவல்இளம் பானம்
குணப்புது மரத்தில் குடைந்த சாடியில்
தேவதா ருமரத் திகழ்நற் றொட்டியில்
பொங்கி எழுந்தது புனைகைப் பிடிவரை
நுரைத்து நின்றது நுரைவாய் விளிம்பில்
உயர்தரை வழிந்து ஓடிடப் பார்த்தது
படர்நிலம் சிந்திப் பாய்ந்திடப் பார்த்தது.

காலம் சற்றுக் கரைந்துசென் றிட்டது
கணநே ரம்சில கடந்தே முடிந்தது
குடிக்க மனிதர்கள் கூட்டமாய் வந்தனர்
பெற்றனன் முதலிடம் பேர்லெ(ம்)மின் கைனனே
குடித்தனன் அஹ்தி, கொள்தூர நெஞ்சினன்,
குடித்தனன் செந்நிறக் கன்னத்துப் போக்கிரி
வளர்ஒஸ் மோமகள் வடித்தவப் 'பீரை'யே
கலேவா வின்மகள் காய்ச்சிய மதுவை.

ஒஸ்மோ வின்மகள், உயர்'பீர்' வடிப்பவள்,
பாவையே பானம் பக்குவம் செய்பவள்,
இந்தச் சொற்களில் இயம்பினள் அவளே:
'ஓ,அபாக் கியள்எனக் குரியவிந் நாட்கள்
தீயஇப் 'பீர்'நான் தேர்ந்தே வடிக்கையில்
நான்செய்த போதுவிந் நனிகெடும் பானம்
தொட்டியின் வாய்வரை தொடர்துயர்ந் தெழும்பி
நுரைத்தே வழிந்து நிலத்திடைப் போனதே! '

பாடிற்று மரத்திலோர் பவளச்செங் குருவி
கூரையின் மரத்திலே கூறிற்றோர் குருவி:
'தீயதன் மையில்அது திகழ்'பீ ர'ல்ல
அதுநல் வகையாம் அருமந்த பானம்
பீப்பாவி லூற்றியே பிறிதுவைத் திடலாம்
களஞ்சிய அறைதம்மில் கனமாய்வைத் திடலாம்
சிந்துரக் கலயம் சேர்த்துவைத் திடலாம்
வைக்கலாம் செப்பான வளையச்சா டிக்குள்.'

'பீர்'தான் பிறப்புப் பெற்றதிவ் விதமாம்
கலேவாவின் வடிப்பின் கதையினா ரம்பமாம்
அவ்விதம் நல்லதோர் அரும்பெயர் பெற்றது
புகழொடு மதிப்பும் பொருந்திடப் பெற்றது
நல்லதாம் வகையென நற்பெயர் பெற்றது
உயர்ந்தநல் மனிதரின் உயர்பான மானது
நாரியர் களைமது நகைத்திட வைத்தது
நல்மன நிலையினை நல்கிய தாடவர்க்(கு)
உயர்ந்தநல் மானிடர்க் குவகையைத் தந்தது
மயங்கியே பிதற்றினர் மடையர்கள் போதையில்."

அந்த வடநிலத் தலைவியும் அதன்பின்
'பீரி'ன் பிறப்பைப் பெரிதும் கேட்டதும்
தூநீர் பெரிய தொட்டியில் நிறைத்து
வைத்ததன் அருகே மரப்புதுச் சாடி
போதிய பார்லியைப் போட்டதன் உள்ளே
சேர்த்துப் போதைச் செடித்தழை நிறைய
மதுப்'பீர்' காய்ச்சி வடிக்கத் தொடங்கினள்
கனபல நீரைக் கலக்கத் தொடங்கினள்
கவின்புது மரத்துக் கலயம் ஒன்றிலே
மிலாறு மரத்தொரு விரிசா டியிலே.

கற்கள்பல் திங்கள் கடுஞ்சூ டேற்றி

கோடை முழுவதும் கொள்நீர் காய்ச்சி
காடு காடாய்க் கனமர மெரித்து
கிணறு கிணறாய் கிளர்நீர் கொணர்ந்தாள்;
மரங்கள் குறைந்து வந்தன காட்டில்
அருவியில் நீரும் அருகியே வந்தது
வனப்'பீர்' வடித்து வந்தவே ளையிலே
மயக்கப் பானம் வடித்தவே ளையிலே
வடநிலப் பெரிய வருவிருந் துக்கு
மாந்தி மகிழநல் மானிடர் களுக்கு.

தீவு முழுவதும் செறிபுகை படிந்தது
மேட்டு நிலத்தில் செந்தீ எரிந்தது
தடித்த புகையும் சார்ந்துயர்ந் தெழுந்தது
நீராவி பரந்து நெடுங்கால் கலந்தது
கனன்று எரிந்த கனலினி லிருந்து
பெரிதாய் எரிந்த பெருநெருப் பிருந்து
வடநிலத் தையது மறைத்தது பாதி
இருளைக் கரேலியா முழுதும் நிறைத்தது.

முற்றும் பார்த்தனர் முழுமாந் தர்களும்
அறிய விரும்பினர் அதையெலாம் பார்த்தோர்:
"இப்புகை வருகிற தெங்கே யிருந்து
காற்றில்நீ ராவி கலந்தது எவ்விதம்?
இகல்போர்ப் புகையெனில் இதுமிகச் சிறிது
இடையரின் தீயெனில் இதுமிகப் பெரிது."

லெம்மின் கைனனின் அன்னையிப் போது
காலைப் பொழுததி காலைவே ளையிலே
புனல்பெற வேண்டிப் போனாள் அருவி
கண்டனள் எங்கணும் கனத்த புகையினை
வடக்கு நிலத்தின் வான்மீ தினிலே
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"போரினால் மூண்டு எழுந்த புகைஅது
அமரினால் மூண்டு அனலும் நெருப்பது."

அவனே அஹ்தி அத்தீ **வருமகன்
தோன்றுமவ் வழகுறு தூர நெஞ்சினன்
செலுத்தினான் பார்வை திரும்பினான் சுற்றி
சிந்தனை செய்தான் சீருற நினைத்தான்:
"நானே சென்று நனிநேர் பார்க்கலாம்
பக்கத்து நின்று பார்த்து அறியலாம்
எங்கிருந் தென்று இப்புகை வருவது
காற்றில்நீ ராவி கலந்ததெவ் விதமென
போரினால் மூண்ட புகையா என்பதை
அமரினால் எரியும் அனலா என்பதை."

தூர நெஞ்சினன் நேரிலே போனான்
எழும்புகை பிறந்த இடத்தினை அடைந்தான்
போரினால் மூண்ட புகையே யல்ல
அமரினால் எரியும் அனலுமே யல்ல

இனியபீர் வடிக்கும் இடத்தின் நெருப்பு
போதைப் பானம் காய்ச்சும் தீயது
நிமிர்சரி யொலாவின் நீரிணை வாயிலில்
மேட்டு நிலத்தின் மிகுவளை முனையில்.

தூர நெஞ்சினன் தொடர்தங்(கு) பார்த்தான்
ஒருவிழி சுழன்றது உயர்அவன் தலையில்
அவ்விழி சுழல அடுத்தது சாய்ந்தது
வாயும் சற்றே வளைந்தே நெளிந்தது
பார்த்தவன் பின்னர் பகர்ந்திட லானான்
நீரிணைக் கப்பால் நின்றே உசாவினன்:
"ஓ,என் அன்புக் குரியநல் மாமி!
வடபால் நிலத்தின் மாண்புறு தலைவி!
சிறந்த 'பீரை'ச் சீராய் வடித்தெடு!
போதைப் பானம் நேராய்க் காய்ச்சு!
மாபெரும் கூட்டம் மகிழக் குடித்து!
வாகாய் லெம்மின் கைனனும் மாந்திட!
திகழ்தன் சொந்தத் திருமண நாளில்,
வளருநின் இளமை மகளவ ளுடனே!"

தயாராய் வந்தது தக்க'பீர்'ப் பானம்
வந்தது முடிவு(க்கு) மனிதரின் இரசம்
வடிந்தே வந்தது மகிழ்செம் 'பீரே'
வந்தது போதை மதுநன் றாக
திணிநிலத் தடியில் சேர்த்தே வைக்கலாம்
கல்லில் அமைந்த களஞ்சிய அறையில்
வைக்கலாம் மிலாறு மரத்துச் சாடியில்
வைக்கலாம் செப்பு வன்முளைப் பீப்பா(வில்).

அந்த வடநிலத் தலைவியும் அதன்பின்
வெந்த உணவை வெப்பமா யாக்கி
கெண்டிகள் அனைத்திலும் கிளர்**குமிழ் எழுப்பி
சட்டிகள் அனைத்தையும் **சலசலப் பாக்கினள்
பின்னர் சுட்டனள் பெரிய ரொட்டிகள்
தட்டி எடுத்தனள் தகுபணி யாரம்
உறும்நல் மனிதரை உபசா ரம்செய
உயர்பெரும் குழுவிற் குணவு அளிக்க
வடக்கில் நிகழும் மாபெரும் விருந்தில்
சரியொலாப் பகுதி சார்குடிப் போர்க்கு!

ரொட்டிகள் நன்றே சுட்டு முடிந்தன
தட்டி முடிந்தன தகுபணி யாரம்
காலம் சற்றுக் கரைந்துசென் றிட்டது
கணநேர ரம்சில கடந்தே முடிந்தது
சாடியி லே'பீர்' தனிக்கொதித் தெழுந்தது
களஞ்சிய அறையில் கதித்து நுரைத்தது:
"இப்போ(து) குடிப்பவன் இங்கே வரலாம்
வருதலும் கூடும் மதுச்சுவை மனிதன்
குயிலாய்க் கூவும் குணச்சிறப் பதிதி
பகருமென் சரியாம் பாடகன் வருவான்."

பாடகன் ஒருவனைத் தேடித் திரிந்தனர்
பொருத்தம தானதோர் புகழ்ப்பா டகனை
குயிலாய்க் கூவும் குணச்சிறப் பிசைஞனை
நவஅழ குடைய நல்லபா டகனை;
பாட வஞ்சிர மீனை யழைத்தனர்
கோலாச்சி நீனைப் போட்டிக் கழைத்தனர்
ஆயினும் வஞ்சிரம் அதுபா டாது
கோலாச் சிக்கது கூடி வராது
வஞ்சிர மீனின் வாயோ கோணல்
பகர்கோ லாச்சிமீன் பற்களில் நீக்கல்.

பாடகன் ஒருவனைத் தேடித் திரிந்தனர்
பொருத்தம தானதோர் புகழ்பா டகனை
குயிலாய்க் கூவும் குணச்சிறப் பிசைஞனை
நவஅழ குடைய நல்ல பாடகனை;
பாலகன் ஒருவனைப் பாட அழைத்தனர்
பாடல் போட்டியில் பையனை அழைத்தனர்;
ஆயினும் பாலகன் அவன்பா டுகிலான்
கூவா(து) எச்சில் வழியும் குழந்தை
குழந்தையின் நாக்கோ கொண்டது கீச்சிடல்
அடிநாக் கதுவோ அமைந்தது விறைப்பாய்.

பொங்கி யெழுந்தது பொருசெம் 'பீரே'
தனியிளம் பானம் சபிக்க வந்தது
தகுசிந் துரமரச் சாடியி லிருந்து
செப்பினால் அமைந்த தொட்டியி லிருந்து:
"ஒருபா டகனை உடன்கொண ராவிடில்
பண்புறு முகந்த பாடகன் ஒருவனை
குயிற்குரற் சிறப்புக் கொண்டபா டகனை
நவஎழில் நிறைந்த நல்ல பாடகனை
உதைத்துத் தள்ளுவேன் உள்ளநல் வளையம்
விரைந்தடி உடைத்து வெளியே வருவேன்."

அந்த வடநிலத் தலைவியப் போது
அழைப்பை வெளியே அகல விட்டனள்
அனுப்பினள் வெளியே அவள்தூ துவரை
இந்தச் சொற்களில் இயம்பினன் அவளே:
"ஏய்,என் சிறிய இளமைப் பெண்களே!
அகலா நித்திய அடிமை யாளரே!
ஒன்றாய் அழைப்பீர் உடனெலாச் சனத்தையும்
குடிக்கும் மாந்தரைக் கூப்பிட்டு வாரீர்
இழிஞரை அழைப்பீர் எளியரை அழைப்பீர்
குருடரி னோடு குணக்கே டரையும்
வண்டி முடவர்கள் நொண்டிகள் தமையும்;
குருடரைத் தோணி கொண்டே(ற்றி) வருவீர்
நொண்டியைப் புரவி கொண்டே(ற்றி) வருவீர்
வண்டியில் இழுத்து வருவீர் முடவரை.

வடநிலத் தனைத்து மக்களை அழைப்பீர்

கலேவாச் சந்ததி கள்ளெலாம் வரட்டும்
முதிய வைனா மொயினனை அழைப்பீர்
சிறந்தபா டகனாய்த் திகழ்ந்தே யிருக்க,
ஆயினும் வேண்டாம் தூர நெஞ்சினன்
தீயஅஹ் தியெனும் தீவினன் வேண்டாம்."

அப்போ(து) சிறிய அந்தப் பெண்ணவள்
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"தூரநெஞ் சினற்குத் தொட(ர்)அழைப் பேனி(ல்)லை
அஹ்தி என்னும் அத்தீ வினற்கு?"

அந்த வடநிலத் தலைவியப் போது
மறுமொழி யாக வழங்கினள் ஒருசொல்:
"அத்து(ா)ர நெஞ்சற் கழைப்பிலை இதனால்
குறும்பன் லெம்மின் கைனன் தனக்கு
கொள்ளுமெவ் வழியிலும் குழப்பம் செய்பவன்
சண்டை என்றால் சடுதிமுன் நிற்பவன்
திருமண வீட்டில் செய்வோன் அவமதிப்(பு)
பெரிய குற்றம் புரிபவன் விழாவில்
கற்புமா தர்க்குக் களங்கம் விளைப்பவன்
அவர்கள் புனிதமாம் ஆடையி லிருப்பினும்."

அப்போ(து) அந்த அருஞ்சிறு பெண்ணவள்
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"எவ்விதம் அறிவது இகல்து(ா)ர நெஞ்சனை
அவனை மட்டும் அழையா திருக்க
அஹ்தியின் இல்லம் அறியேன் நானே
தூர நெஞ்சினன் தோட்டமு மறியேன்."

வடநிலத் தலைவி வருமா றுரைத்தாள்
இயம்பினள் அவளே இயம்பினள் இவ்விதம்:
"தூர நெஞ்சினனைத் தீரநன் கறியலாம்
அஹ்தி என்னும் அகல்தீ வின்மகன்
அஹ்தி என்பவன் அத்தீ வுறைபவன்
பொருநீர்க் கரையிலப் போக்கிரி உள்ளான்
படர்ந்தகல் வளைகுடாப் பகுதியின் முடிவில்
காண்தொலைக் குடாவதன் கைவளைப் பரப்பில்."

அந்தச் சிறிய அரிவையும் அங்கே
குற்றே வல்செ(ய்)யக் கூலிக்கு வந்தவள்
ஆறு வழிகளில் அழைப்பு விடுத்தனள்
எட்டு வழிகளில் ஏகினள் அழைக்க
வடநில அனைத்து மக்கள் தம்மையும்
கலேவாச் சந்ததிக் குலமக் களையும்
குடில்வாழ் ஏழைக் குலநலிந் தோரையும்
இறுகிய ஆடை ஏவலர் தமையும்;
அஹ்தி என்னுமப் பையனைத் தவிர
அவனை மட்டுமே அழைக்கா திருந்தனள்.

கலேவலா

பாடல் 21 - திருமணக் கொண்டாட்டம்

அடிகள் 1-226 : மணமகனையும் அவன் கூட்டத்தினரையும் வட நாட்டில் வரவேற்றல்.

அடிகள் 227-252 : விருந்தாளிகளுக்கு நிறைய உணவும் பானமும் கொடுத்து உபசரித்தல்.

அடிகள் 253-438 : வைனாமொயினன் அந்நாட்டு மக்களைப் பாடிப் புகழுதல்.

அந்த வடநிலத் தலைவியப் போது
சரியொ லாவின் முதுநல் மனைவி
வெளியிலே நின்றாள் மிகச்சிறு நேரம்
வீட்டு வேலையில் நாட்டமுற் றிருந்தாள்
சதுப்பு நிலத்தில் சாட்டையின் ஒலியும்
உறுகரை வண்டியின் ஓசையும் கேட்டது
செலுத்தினள் பார்வை திகழ்வட மேற்திசை
செங்கதி ரோன்கீழ் சென்னியைத் திருப்பினள்
சிந்தனை செய்தாள் சீருற நினைத்தாள்:
"இங்கே எதற்காய் இவ்வள வாட்களும்
ஏழைஎன் னுடைய இகல்கடற் கரைகளில்
போருக்கு வந்த பொருபெரும் படைகளோ?"

வெளியே வந்தாள் விபரம் பார்த்திட
அண்மையில் சென்றாள் ஆராய்ந் தறிய
அதுபோர்க் கெழுந்த அதிபெரும் படைய(ல்)ல
விவாக வீட்டு விருந்தினர் கூட்டம்
மருமகன் அவர்களின் மத்தியில் இருப்பவர்
நாட்டு மக்களின் நடுவிலே உள்ளார்.
அவளே வடநிலத் தலைவியப் போது
சரியொ லாவின் முதுநல் மனைவி
தனது மருமகன் தான்வரல் உணர்ந்ததும்
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"காற்றடிக் கிறதெனக் கடிதே நினைத்தேன்
காட்டிலோர் பகுதிக் கரைசரி கிறதென
கடலின் ஓரம் இரைகிற தோவென
கூழாங் கற்கள் குலைந்துருள் கிறதென;
வெளியே வந்தேன் விபரம் பார்த்திட
அண்மையில் சென்றேன் ஆராய்ந் தறிய
அங்கே காற்று அடிக்கவு மில்லை
காட்டிலோர் பகுதிக் கரைசரிந் திலது
கடலின் ஓரம் இரையவும் இல்லை
கூழாங் கற்கள் குலைந்துருண் டிலது:
மருமகன் குழுவினர் வந்தனர் அங்கே
இருநூறு மக்கள் இப்புறம் வந்தனர்.

அருமரு மகனைநான் அறிவது எங்ஙனம்
இம்மனுத் திரளில் என்மரு மகனை?

மருமகன் தனையே மக்களுள் அறியலாம்
சிறுபழச் செடிபோல் திகழ்மர மத்தியில்
சிறுசெடி மத்தியில் சிந்துர மரம்போல்
வானத்து மீன்களில் வண்ண நிலவுபோல்.

மருமகன் வருகிறார் வன்கரும் புரவியில்
இரைதேர் (ஓ)நாயில் இவர்வது போல
இலக்குதே **டண்டங் காக்கைமேல் வரல்போல்
வான்ஊர் **மாயக் கழுகுமேல் வரல்போல்;
ஆறு பொன்னிற அம்புள் ஆங்கே
இசைத்தன வண்டியின் ஏர்க்கால் மேலே,
ஏழு நீல இருங்குயில் போல்மணி
ஒலித்தன வண்டியின் உறுசட் டத்தே."

எழுந்தது சத்தம் எங்கும் பாதையில்
கிணற்று வழிமிசை ஒலித்தது ஏர்க்கால்
முன்றிலின் முன்னே வந்தார் மருமகன்
தோட்டம் சேர்த்தனர் தொடர்ந்துடன் வந்தோர்
மக்கள் மத்தியில் மருமகன் நின்றார்
நல்ல மக்களின் நடுவினில் நின்றார்
மக்கள் குழுமுன் வரிசையில் இல்லை
ஆயினும் பின்புறத் தப்புறத் தில்லை.

"வீரரே, இளைஞரே, வெளியே செல்வீர்!
உயரந்த மனிதர்காள், உறுகமுற் றத்தே!
நெஞ்சப் பட்டியை நேராய்க் கழற்ற
கடிவா ளத்தைப் பிடித்தே நிறுத்த
ஏர்க்கால் நுகத்தை இறக்கக் கீழே
மருமக னாரை வரஉள் அழைக்க!"

மருமகனின் குதிரை வந்தது ஓடி
அலங்கார வண்டி அதிகதி வந்தது
மாமனார் வீட்டின் வண்ணமுன் றில்முன்;
வடநிலத் தலைவி வருமா றுரைத்தாள்:
"ஏய்,அடி மைகளே, ஏவுகூ லியரே!
கிராமத் தழகிய கிளர்தொழி லாளரே!
மருமக னாரின் மாபரி பிடிப்பீர்
நெற்றிச் சுட்டி நிமிர்பரி எடுப்பீர்
செப்பினால் இழைத்த திகழ்அணி யிருந்து
ஈயநெஞ் சத்து **இயைவார் இருந்து
தோலிலாம் நற்கடி வாளத் திருந்து
இளமை மரத்து ஏர்க்கா லிருந்து;
மருமகன் பரியை வழிநடத் துங்கள்
அதிமிகக் கவனமாய் அதைநடத் துங்கள்
பட்டிலாம் நற்கடி வாளம் பற்றி
தனிவெள் ளியிலாம் தலையணி தொட்டு
உருண்டு புரண்டிட உயர்மெது விடத்தே
சமதரை யுள்ள தகுசிறப் பிடத்தே
புதிதாய்ப் பனிமழை பொழிந்தநல் லிடத்தே
பால்போல் வெளுத்து படிவிளங் கிடத்தே!

மருமகன் பரிக்கு வளநீ ரூட்டுக
அண்மையில் இருக்கும் அருவியொன் றினிலே
உறைந்துபோ காது உறுநல் லருவியில்
நீர்நனி சொட்டுநல் நீரரு வியிலே
அழகிய தாருவின் அகல்வேர டியில்
தளிர்க்கும் தேவ தாருவின் அருகில்!
மருமகன் பரிக்கு மகிழ்ந்துண வூட்டுக
கொழும்பொன் னிழைத்த கூடையி லிருந்து
செப்பினால் செய்த பெட்டியி லிருந்து
கழுவிய பார்லியை, கனவெண் ரொட்டியை,
கோடைக் கோதுமை கொ(ண்)டுஅட்ட **உணவை,
கோடைத் **தானியக் கொழுநொருக் குணவை.

மருமகன் பரியை வழிநடத் துங்கள்
வளமிகு சிறந்த வைக்கோற் போரிடை
மிகவும் சிறந்து விளங்குமோ ரிடத்தே
தோட்டத் துள்ளே தொலைவிடத் துக்கு;
அருமரு மகன்பரி அங்கே கட்டுக
பொன்னினால் செய்த புதுவளை யத்தால்
இரும்பினால் செய்த எழில்வளை யத்தால்
வளைந்த மிலாறு மரத்தம் பத்தில்;
மருமகன் பரிக்கு வழங்குக இவ்விதம்
புதிதாய் ஒரு**படிப் **புல்லரி சிமணி
அடுத்தது மென்மையாய் அமைந்தநல் வைக்கோல்
மூன்றாவ தரிந்து முடித்தவைக் கோல்தீன்.

வாருவீர் பின்னர் மருகனின் பரியை
கடற்பரி எலும்பின் கவினார் சீப்பினால்
உரோமம் எதுவும் உதிரா திருக்க
நீண்ட உரோமம் நீங்கா திருக்க;
இவ்வாறு மருகனின் எழிற்பரி போர்ப்பீர்
வெள்ளி விளிம்பு விளங்குபோர் வையினால்
தங்கத் திழைத்த தனிப்பாய் அதனால்
செப்பினால் செய்த திகழ்துணி யதனால்.

கவின்ஊர் இளைஞரே, கனிவுறு மக்களே!
வாருங்கள் அழைத்து மருகனை உள்ளே
தலைமயி(ரில்) தொப்பி தரித்திலா நிலையில்
கையுறை எதுவும் கரத்தில்இல் லாமல்.

பார்க்கிறேன் பொறுங்கள் படர்மரு கனைநான்
'நுவல்மரு கன்உள் நுழைவரா' என்று
கதவு இங்கே கழற்றப் படாமல்
பெருங்கத வின்நிலை பிடுங்கப் படாமல்
உறுமேல் உத்தரம் உயர்த்தப் படாமல்
படிவா யிற்படி பணிக்கப் படாமல்
இணைமூ லைச்சுவர் இடிக்கப் படாமல்
நற்சுவர் விட்டம் நகர்த்தப் படாமல்.
அல்ல, மருகன் அவர்புக முடியா(து)

நற்பரி சாமவர் நனிகூ ரையின்கீழ்
கதவு இங்கே கழற்றப் படாமல்
பெருங்கத வின்நிலை பிடுங்கப் படாமல்
உறுமேல் உத்தரம் உயர்த்தப் படாமல்
படிவா யிற்படி பணிக்கப் படாமல்
இணைமூ லைச்சுவர் இடிக்கப் படாமல்
நற்சுவர் விட்டம் நகர்த்தப் படாமல்
ஏனெனில் மருகனின் எழிற்சிர முயர்ந்தது
உறுசெவி அளவும் உயரமே யானது.

உறுமேல் உத்தரம் உயரத் தூக்குக!
தலையின் தொப்பி தட்டா திருக்கும்,
பணிப்பீர் வாயிற் படியினைக் கீழே!
இருக்கும் முட்டா தியைகா லணிக்குதி,
கதவு நிலைகளைக் கழற்றிவை யுங்கள்!
திகழ்கத வகலத் திறந்து வையுங்கள்!
மருமகன் உள்ளே வந்திடும் வேளை,
அதியுயர்ந் தோர்உள் அடியிடும் வேளை.

அழகுத் தெய்வமே, அர்ப்பணம் நன்றிகள்!
மருகனார் உள்ளே மகிழ்வொடே வந்தார்
பொறுப்பீர் ஒருகணம், புகும்இல் பார்க்கலாம்,
விழிகளைச் சற்று வீட்டுட் செலுத்தலாம்
இங்குள மேசைகள் எல்லாம் கழுவி
**நெடுவாங் கெல்லாம் நீரினால் அலசி
உறுமென் பலகைகள் மறுவறத் துடைத்து
தொடர்தரைப் பலகைகள் சுத்தமோ வென்று.

இப்போ(து) பார்க்கிறேன் இந்தஇல் லத்தை
எனக்கோ சரியாய் எதுவும் தெரிந்தில(து)
எந்த மரத்தால் இவ்வில் ஆனது
இக்குடில் வந்தது எங்கே யிருந்து
எதனால் சுவர்கள் இவ்வித முள்ளன
எப்படித் தரையும் இப்படி யுள்ளது?

பக்கச் சுவர்முட் பன்றியின் எலும்பால்
கலைமான் எலும்பினால் காண்பிற் புறச்சுவர்
சேர்கத வுறுசுவர் **கீரியின் எலும்பால்
ஆனது கதவுமேல் நிலைஆட் டெலும்பால்.

அப்பிள் மரத்தினால் ஆனமேல் உத்தரம்
வளைந்த மிலாறு மரத்திலாம் தூண்கள்
அடுக்களைப் பக்க அமைப்புநீ ராம்பலால்
**கெண்டைமீன் செதில்களைக் கொண்டமை கூரையாம்.

ஆசனம் அனைத்தும் ஆனவை இரும்பால்
*சக்ஸாப் பலகையால் சமைத்தநல் வாங்குகள்
அலங்கார(ம்) மேசைக் கமைந்தது பொன்னினால்
படிமிசை விரித்தவை பட்டிலாம் கம்பளம்.

அடுப்புகள் செம்பினால் ஆனவை இருந்தன
அடுப்பின் அடித்தளம் அமைந்தது கல்லினால்
அலைகடற் பாறையால் ஆனதீக் கற்களாம்
அடுப்பின்வா **யாசனம் அதுகலே வாமரம்.

நல்மண மகனும் இல்லுள் வந்தார்
வியன்கூ ரையின்கீழ் மெதுவாய் நடந்தார்
உரைத்தார் ஒருசொல் உரைத்தார் இவ்விதம்:
"இறைவனே, நின்னருள் இங்கும் தருக!
புகழுறு கூரைப் புணர்தம் பக்கீழ்
குறைவிலாக் கீர்த்திசேர் கூரையின் கீழே!"

வடநிலத் தலைவி வருமா றுரைத்தாள்:
"நம்பி,நின் வருகை நல்வர வாகுக!
இந்தச் சிறிய இல்லதன் உள்ளே, தாழ்ந்திடும் இந்தத் தனிக்குடில் உள்ளே,
அரும்பசு மரத்தின் அறையதன் உள்ளே,
கொழுந்தேவ தாருவின் கூடதன் உள்ளே!

ஏய்,சிறு பெண்ணே, எனது அடிமையே!
கூலிக்கு வந்த குறும்ஊ ரவளே!
மிலாறுப் பட்டையில் விளைதீக் கொணர்வாய்
**கீல்மர நுனியில் கிளர்சுடர் ஏற்று
மருமக னாரை வடிவாய்ப் பார்க்க
மணமகன் விழிகளை வாஞ்சையாய் நோக்க
நெடும்அவர் கண்கள் நீலமா சிவப்பா
அல்லது துணிபோல் வெள்ளை நிறத்ததா!"

சிறியவள் அந்தச் சிறுஅடி மைப்பெண்
குறும்ஊ ரிருந்து கூலியாய் வந்தவள்
மிலாறுப் பட்டையில் மிளிர்தீக் கொணர்ந்தாள்
கீல்மர நுனியில் கிளர்சுடர் ஏற்றினாள்.

"மிகுசட சடத்தெழும் மிலாறு மரத்தீ
கிளர்கரும் புகைஎழும் கீல்மரச் சுடரில்
மருகனின் விழிகளில் கறைஅது ஆக்கும்
எழிலுறும் தோற்றம் இருளதாய்ப் போகும்
மெழுகுவர்த் தியிலே மிளிர்தீக் கொணர்வாய்
மெழுகினால் செய்ததில் மிகுசுடர் கொணர்வாய்."

சிறியவள் அந்தச் சிறுஅடி மைப்பெண்
குறும்ஊ ரிருந்து கூலியாய் வந்தவள்
மெழுகு வர்த்தியில் மிளிர்தீக் கொணர்ந்தாள்
மெழுகினால் செய்ததில் மிகுசுடர் கொணர்ந்தாள்.

மெழுகிலே யிருந்து வெண்புகை எழுந்தது
மெழுகுவர்த் தியிலே மிகவொளிர் தீச்சுடர்
மருமகன் விழிகளில் வரச்செய்த தொளியை
மருமகன் வதனம் மலர்ந்தொளி தந்தது.

"இப்போ(து) மருமகன் எழில்விழி பார்க்கிறேன்

நிறம்சிவப் பதுவோ நீலமோ அல்ல
நோர்துணி வெள்ளை நிறத்தது மல்ல
மிகுகடல் நுரைபோல வெளுத்த நிறமவை
படர்கடல் நாணல்போல் பழுத்த நிறமவை
**கடற்செடி போலக் கவின்படைத் தனவே.

கவின்ஊர் இளைஞரே, கனிவுறு மக்களே!
அழைத்து வருவீர் அருமரு மகனை
உயர்ந்த ஆசனம் ஒன்றினுக் கிங்கே
சிறப்பா யிருக்கும் திருவிட மீதில்
முதுகுப் புறம்நீல் சுவரோ டிருக்க
செந்நிற மேசை முன்புற மிருக்க
அழைத்த அதிதியை அவரெதிர் நோக்கிட
நாட்டு மக்களின் நடுஅம ரட்டும்."

அந்த வடநிலத் தலைவியும் அதன்பின்
கொடுத்தாள் விருந்தினர்க் குணவும் பானமும்
உருகிய வெண்ணெயை ஊட்டினாள் வாயில்
பால(ா)டைப் பணிய(ா)ரம் பகிர்ந்தனள் நிறைய
அழைத்த விருந்தரை அவள்உப சரித்தாள்
தந்தனள் முதலிடம் தம்மரு மகற்கு.

வடிவுறும் தட்டில் வஞ்சிர மீனும்
படர்அவற் றருகில் பன்றி இறைச்சியும்
நிறைந்து வழிந்தன நெடுங்கிண் ணமெலாம்
நிறைந்து பெருகின நீள்கல யங்களில்
விருந்துக் குவந்தோர் மிகஉண் பதற்காய்
விசேடமாய் உண்ண வியன்மரு மகனும்.

வடநிலத் தலைவி வருமா ரைத்தாள்:
"ஏய்,நீ சிறிய எமதடி மகளே!
சாடி நிறையப் 'பீரை'க் கொணர்வாய்
இரண்டு கைப்பிடி இருக்கும் சாடியில்
அழைத்த விருந்தினர் அருந்துதற் காக
முதலிடம் தருவாய் முறைமரு மகற்கு."

அப்போ(து) சிறிய அடிமைப் பெண்ணவள்
கூலிக்கு வந்து குற்றேவல் புரிவோள்
சாடிகள் நிறையத் தான்பரி மாறினள்
சுற்றிவந் திட்டதைம் பட்டிச் சாடிகள்
பானத் தனைத்துத் தாடியும் நனைந்தன
தாடிகள் வெண்நிற மாயின நுரையால்
அழைத்த விருந்தினர் அனைவரும் ஆங்கே,
முதலிடம் பெற்றார் முறைமரு மகனார்.

இப்போ(து) 'பீரு'ம் எதனைச் செய்யும்
தளம்புமைம் பட்டிச் சாடியின் பானம்
பாடகன் ஒருவன் பக்கத் திருக்கையில்
கைதேர் பாவலன் கலந்தாங் கிருக்கையில்?
முதிய வைனா மொயினன் இருந்தான்

அழிவிலாப் பாடலின் ஆத(ா)ரத் **தூணவன்
பாடகர் தம்முளே பகர்தரப் பாடகன்
மந்திரப் பாடலில் வல்லவன் பாடிட.

முதலில் கொஞ்சம் மொய்ம்'பீர்' எடுத்தான்
பின்வரும் சொற்களில் பின்அவன் சொன்னான்:
"அன்பார்(ந்த) பானமே, அருமைப் 'பீரே'
மனிதர்கள் குடித்து மயங்குதல் தகாது
மனிதரைப் பாட வைப்பாய் பாடல்கள்
கூவ வைத்திடுவாய் கொழும்பொன் வாயால்
வீட்டின் தலைவர்கள் வியப்படை யட்டும்
இல்லத் தலைவிகள் இனிதெண் ணிடட்டும்:
சற்றுப் பாடல்கள் தாம்இசை மாறினால்
மகிழும் நாக்குகள் வழிதிசை மாறினால்
அல்லது தாழ்ந்து அமை'பீர்' கொடுத்தால்
பானம் தரக்குறை வானது கொடுத்தால்
எமது பாடகர் இசைக்கவே மாட்டார்
இன்னிசை யாளர் இருந்தே பாடிடார்
அரிய விருந்தினர் அரும்பாட் டிசையார்
மகிழ்ச்சிக் குயில்கள் மகிழ்வுடன் பாடா.

இங்கே இன்னிசை இசைப்பது எவரோ
நாவால் பாடல்கள் நவில்வது எவரோ
இங்கே வடநிலத் திந்த விழாவில்
சரியோ லாவின் களியாட் **டயர்வில்?
இங்குள **வாங்கோ இசைத்திட மாட்டா
வாங்கிலே இருப்போர் வாய் திறவாமல்,
நிலமும் இங்கே நவிலமாட் டாது
நன்னிலம் நடப்போர் நாவசை யாமல்,
சாளரம் இங்கே தான்மகி ழாது
சாளரத் ததிபர்கள் தாம்மகி ழாமல்
மேழையின் விளிம்புகள் பேசமாட் டாது
மேளையின் அருகுவீற் றிருப்பவ ரின்றி,
உயர்புகைக் கூண்டும் ஓசை தராது
அதன்கீழ் இருப்போர் அமர்ந்திசை யாமல்."

ஆங்கொரு பிள்ளை அகலத் திருந்தது
அடுப்பா சனத்தில் அமர்ந்தபால் தாடி
பெருநிலத் திருந்த பிள்ளை சொன்னது
அடுப்பா சனத்து அமர்பயல் கூறினான்:
"நானோ வயதில் நனிமுதிர்ந் தோனலன்
வளர்ந்து உயர்ந்த வலியவன் அல்லன்
இப்படி இங்ஙனம் இருந்தபோ தினிலும்
ஏனைய கொழுத்தோர் இசையா நேரம்
பருத்த மனிதர்கள் பாடா(த) வேளை
இரத்தம் நிறைந்தோர் இசைக்காப் போதில்
பாடுவேன் நானொரு பையன் மெலிந்தோன்
வலியிலாப் பையன் வகையாய்க் கூவுவன்
பாடுவேன் தளர்ந்த பலமிலாத் தசையோன்
சிறிய இடுப்பைச் சேர்ந்தோன் பாடுவேன்

மாலைப் பொழுதிதை மகிழ்வாக் கிடவே
மதிப்பாக் கிடஇம் மாபுகழ் நாளை."

அடுப்பிலே முதியதோர் ஆடவன் இருந்தான்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"பிள்ளைகள் பாடலில் பெறுபயன் இல்லை
எளியவர் கூவலில் எதுவுமே யில்லை
பிள்ளைகள் பாடல் பெரும்பொய் நிறைந்தவை
சிறுமியர் பாடலோ வெறுமையே யானவை;
முழங்குக பாடல் முதல்எவ் வறிஞரும்
இன்னிசை வழங்குக இருக்குமா சனத்தோர்."

முதிய வைனா மொயினனப் போது
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"இங்கே இருக்கும் இளைஞர்கள் மத்தியில்
மாபெரும் சுற்ற மக்கள் அனைத்திலும்
கரத்தொடு கரத்தைக் கனிவாய்க் கோர்த்து
ஒருவர் கரத்தொடு ஒருவர்கை சேர்த்து
வளர்பாட் டிசைக்க வல்லவர் உண்டா
இன்னிசை எழுப்ப இயன்றவர் உண்டா
இந்நாள் முடிவை இனிதாய்க் கழிக்க
மாபுகழ் மாலையை மதிப்புள தாக்க?"

அடுப்பிலே அமர்முது ஆடவன் சொன்னான்:
"இதுவரை அறிந்ததே இல்லைஇப் படியே
இல்லையே பார்த்ததும் இல்லையே அறிந்ததும்
வளருமிவ் வுலகின் வாழ்நாள் என்றும்
பண்மிகச் சிறந்த பாடகன் ஒருவனை
கைதேர் தரமுறும் கவிவலோன் ஒருவனை
என்றனை யும்விட என்கூ வலைவிட
பாடல்கள் பிள்ளைப் பருவத் திசைத்தேன்
விரிகுடாக் கடல்நீர் மீதிலும் பாடினேன்
மிகுபுல் வெளியதன் மீதிலும் பாடினேன்
வண்தேவ தாருவின் மரத்திலும் பாடினேன்
நெடுங்கான் வெளியின் நிலத்திலும் பாடினேன்.
என்குரல் உயர்ந்து இனிமையாய் இருந்தது
என்னிசை யமைப்பு எழிலாய் அமைந்தது
ஆறொன்று ஓடி அசைந்த பாங்குபோல்
அருவியில் பாய்ந்து ஓடிய நீரைப்போல்
தண்பனிக் கட்டிமேல் சறுக்கணி போல
நீரலை மேற்செல் நெடுநா வாய்போல்;
இப்போ(து) என்னால் இயம்புதற் கியலா
ஒழுங்காய் என்னால் உணரவும் முடியா
உயர்ந்தஎன் குரற்கு விளைந்தது எதுவென
இனியஎன் குரலோ இறங்கிய தேனென;
ஆறொன்று இப்போது ஓடிய வாறிலை
அலைகளில் எழும்பும் குமிழ்களைப் போலிலை
முளைநிலத் திழுத்த **பரம்புப் பலகைபோல்
இறுகிய பனியில் எழில்தேவ தாருபோல்
சாகரக் கரைமணற் சறுக்கணி போல

காய்ந்த பாறையிற் கடிதூர் படகுபோல்."

முதிய வைனா மொயினனப் போது
இந்த சொற்களில் இயம்பினன் அவனே:
"எழுந்து யாருமே இவ்விடம் வந்து
என்னுடன் சேர்ந்து இசைத்திடாப் போது
தனியனாய் நின்று சமைப்பேன் கவிதைகள்
ஒருவனாய் நின்று உயர்கவி பாடுவேன்
பாடக னாகநான் படைக்கப் பட்டதால்
பாடுவோன் மந்திரப் பாடல்கள் என்பதால்
மற்றொருத் தனிடம் வழிவகை கேளேன்
அன்னியன் உதவியால் அரும்பா முடியேன்."

முதிய வைனா மொயினன் பின்னர்
அழிவிலாப் பாடலின் ஆத(ா)ரத் தூணவன்
ஆனந்த வேலைக்கு அமைந்தனன் ஆங்கே
அர்ப்பணித் தான்தனை அருஇசைத் தொழிற்கு
பக்கத்து மகிழ்வுறும் பாடலை வைத்து
அழகுறும் சொற்களில் ஆயத்த மாயினன்.

முதியவ வைனா மொயினன் பாடினன்
நற்பா பாடினன் ஞானம் காட்டினன்
சொற்களில் சொற்குத் துளிபஞ் சமி(ல்)லை
புகன்றிடும் ஆற்றலும் அகன்றதே யில்லை
கனமலைக் கற்கள் காணா தொழிந்தன
அருவிநீ ராம்பல் அகன்றதே போனது.

வைனா மொயினன் மகிழ்ந்தாங் கிசைத்தனன்
மாலைப் பொழுதெலாம் மகிழ்வுடன் பாடினன்;
பூவையர் யாவரும் புன்னகை பூத்தனர்
ஆடவர் நல்ல அகநிலை பெற்றனர்
அமைதியாய்க் கேட்டனர் அதிசயப் பட்டனர்
வைனா மொயினனின் வளச்சொல் கண்டு
அற்புதம் என்றனர் அவைகேட் டோரெலாம்
அதிசயப் பட்டனர் அங்குளர் அனைவரும்.

முதிய வைனா மொயினன் கூறினன்
பாடலின் முடிவில் பகர்ந்தனன் இவ்விதம்:
"எனது வசத்தினில் என்னப்பா உள்ளது
பாடகன், மந்திரப் பணிவ(ல்)லன் என்பதால்;
என்னால் ஆவது எதுவுமிங் கில்லை
எனது ஆற்றலால் இயல்வது ஒன்றிலை;
படைத்தவன் பாரினில் பாடலைப் பாடினால்
இனியநல் வாயினால் இசைப்பா பாடினால்
படைத்தவன் பாடுவான் பண்ணுறும் பாடலை
வழங்குவான் பாடலை மந்திர மியற்றுவான்.

வாரிதி தேனாய் மாறிடப் பாடுவான்
கடற்குழாங் கற்களை காண்*பய றாகவும்
மறிகடல் மண்ணையே **மாவூற லாகவும்

கடற்பரற் கற்களைக் கரிக்கும்உப் பாகவும்
உயர்ந்தடர் சோலைகள் ரொட்டியின் வயல்களாய்
வெட்டிய வனங்களை விளைகூல வயல்களாய்
தொடர்உயர் குன்றுகள் சுவைப்பணி யாரமாய்
பாறையைக் கோழியின் பருமு(ட்)டை யாக்குவான்.

வழங்குவான் பாடலை மந்திர மியற்றுவான்
மந்திரம் பாடுவான் மகத்துவம் ஆற்றுவான்
விழங்குமிவ் வில்லத்து மீதிலும் பாடுவான்
துன்னுகால் நடைநிறை தொழுவம் பாடுவான்
பாதையில் நிறைந்திடும் பணைக்கோட்(டுத்) **தலைகளை
பரந்தநல் வெளிகளின் பால்தரு வோர்களை
கனமுறு கொம்புகொள் கால்நடை நூறினை
பாடுவான் ஆயிரம் பால்மடி கொணர்(டே)வ(ா)ரை.

வழங்குவான் பாடலை மந்திர மியற்றுவான்
மந்திரம் பாடுவான் மகத்துவம் ஆற்றுவான்
மேலாடை தலைவர்க்(கு) மிளிர்**சிவிங்(கி) உரோமத்தில்
தலைவியர்(க்கு) மேலாடை **தனித்தகல் துணிகளில்
கவர்ச்சியே மிக்கதாய்க் காலணி மகளிர்க்(கு)
மிளிருசெந் நிறத்தமை மேற்சட்டை மைந்தர்க்கு.

இறைவனே, எங்கட்(கு) என்றும் வழங்குவீர்!
மெய்யாம் கர்த்தரே, மீண்டும்(நீர்) வழங்குவீர்!
இதுபோல் யாவரும் இனிதாய் வாழ
இனியும் இவ்விதம் இயற்றியே முடிக்க
வடபால் நிலத்தின் வகையுறு விழாவில்
சரியொலாப் பகுதிக் களியாட்(ட) விருந்தில்;
'பீரெ'னும் பானம் பெருகும் ஆறென
நறையது(ம்) பாய்ந்திடும் நல்தூ(ய) அருவிபோல்
வடபுல நிலத்தின் வதிவிடம் யாவும்
சரியொலாப் பகுதித் தகுமில் யாவும்
இனியஅந் நாளிலும் இன்னிசை யிசைப்போம்
மாலைப் பொழுதை மகிழ்வொடு கழிப்போம்
அரியஇத் தலைவன் அனைத்துநாட் களுமே
வனிதைஇத் தலைவி வாழ்நாள் முழுதுமே.

மிகுவலித் தேவே வெகுமதி தருக!
ஆண்டவா, ஆசி(யும்) அருளும் அளியும்!
விருந்தில் தலைவராய் விளங்குப வர்க்கு
களஞ்சியக் கூடக் கவின்தலை வியர்க்கும்
மீன்பிடித் துவரும் விறல்மைந் தர்க்கும்
கைத்தறி அமர்ந்த கன்னியர் தமக்கும்
வாழ்நா ளெலாமவர் வருந்தா திருக்க!
தொடர்மறு ஆண்டிலும் துயரிலா(து) வாழிய
பெரிதாய் நிகழ்ந்தவிப் பெருவிழா வதனால்
கலந்த பெருஜனக் களியாட்(ட) விருந்தால்.

கலேவலா
பாடல் 22 - மணமகளின் பிரிவுத்துயர்

அடிகள் 1 - 124 : மணமகள் பயணத்துக்கு ஆயத்தமாகிறாள். அவள் தனது கடந்த வாழ்க்கையையும் இனி வரப்போகிற எதிர்கால வாழ்க்கையையும் எண்ணிப் பார்க்கிறாள்.

அடிகள் 125 - 184 : மணமகள் கவலைப்படுகிறாள்.

அடிகள் 185 - 382 : மணமகள் அழ வைக்கப்படுகிறாள்.

அடிகள் 383 - 448 : மணமகள் அழுகிறாள்.

அடிகள் 449 - 522 : மணமகளுக்கு மற்றவர்கள் ஆறுதல் கூறுகின்றனர்.

நற்றிரு மணஇல் நன்கே குடித்து
விழாவும் முடிந்து விருந்தும் முடிகையில்
வடபால் நிலத்து வதிவிடங் களிலே
இருண்ட பூமியின் இனிய விருந்தில்
வடநிலத் தலைவி வருமா றுரைத்தாள்
இல்மரி னன்எனும் இளமரு மகற்கு:
"இருப்பது எதற்கு, இனிதுயர் பிறப்பே?
எதிர்பார்ப் பதெது, எம்நிலச் சிறப்பே?
இருப்பது தந்தையின் இனிமைக் காகவா?
அல்லது அன்னையின் அன்புக் காகவா?
இல்லிட மதற்கு எழிலைக் கூட்டவா?
திருமண வீட்டை அருமழ குறுத்தவா?

இருப்பது தந்தையின் இனிமைக் கல்ல
அன்னையின் அன்புக் காகவு மல்ல
இல்லிடத் துக்கெழில் ஏற்றவு மல்ல
அரும்மண வீட்டின் அழகுக் கல்ல;
இந்தக் கன்னியின் இனிமைக் காகவும்
அழகிளம் பெண்ணின் அன்புக் காகவும்
விரும்பிய வனிதையின் வியன்வனப் புக்கும்
இயைகுழல் தலையாள் எழிற்கும் இருக்கிறீர்.

அருமண மகனே, அன்புச் சோதர!
பொறுத்தீர் வெகுநாள் பொறுப்பீர் இனியும்
இல்லைஆ யத்தம் இனியநின் காதலி
வாழ்நாள் துணைவி வரத்தயா ரில்லை
பெண்குழற் பாதிதான் பின்னி முடிந்தது
இன்னுமோர் பாதி பின்னா துள்ளது.

அருமண மகனே, அன்புச் சோதர!
பொறுத்தீர் வெகுநாள் பொறுப்பீர் இனியும்
இல்லைஆ யத்தம் இனியநின் காதலி
வாழ்நாள் துணைவி வரத்தயா ரில்லை
சட்டை(க்)கை மடிப்பு பாதிதான் முடிந்தது
மறுபாதி இன்னும் முடியா துள்ளது.

அருமண மகனே, அன்புச் சோதர!
பொறுத்தீர் வெகுநாள் பொறுப்பீர் இனியும்
இல்லைஆ யத்தம் இனியநின் காதலி
வாழ்நாள் துணைவி வரத்தயா ரில்லை
பாதணி தரிப்பது பாதிதான் நடந்தது
மறுபாதி இன்னும் தரியா துள்ளது.

அருமண மகனே, அன்புச் சோதர!
பொறுத்தீர் வெகுநாள் பொறுப்பீர் இனியும்
இல்லைஆ யத்தம் இனியநின் காதலி
வாழ்நாள் துணைவி வரத்தயா ரில்லை
அணிவது கையுறை அரைதான் முடிந்தது
அரைவாசி இன்னும் அணியா துள்ளது.

அருமண மகனே, அன்புச் சோதர!
பொறுத்தீர் வெகுநாள் பொறுத்தீர் சலிப்பற
ஆயத்தம் இப்போ ஆகினள் காதலி
தயாரா யுள்ளனர் தக்கநின் வாத்து.

விலையான பெண்ணே, விரைவாய், இப்போ(து)!
விரைவாய், அவருடன் விலைப்படு கோழியே!
அருகினில் வந்ததுன் அரியதாம் காலம்
புறப்படும் நேரம் புக்கது பக்கம்
உன்னுடைத் தலைவர் உன்னுடன் உள்ளார்
உள்ளார் வாயிலில் உனதன் பாளர்
கடித்து நிற்கிறது கடிவளம் புரவி
சறுக்கு வண்டிபெண் தனையெதிர் பார்க்கிற(து).

பணமெனில் உனக்குப் பாரிய விருப்பம்
உன்கரம் விரைவாய் முன்புறம் நீட்டி
தேடி ஆர்வமாய்த் திருமணப் பொருத்தம்
பெற்றாய் வண்ணமாய் பெறலரும் விரலணி
வனிதையே இப்போ(து) வண்டியில் ஏறு
படரொளி வண்டியில் பாங்குடன் ஏறு
கிராமம் நோக்கிக் கிளர்கனி வுடன்செல்
நல்ல பெண்போல் நலமுடன் செல்வாய்.

பருவப் பெண்ணே பார்த்திலை எண்ணிநீ
இருபக் கமும்நீ இனிதுசிந் தித்திலை
தலையில் நினைத்துநீ தானே உணர்ந்திலை
செய்தனை காரியம் சிந்தை வருந்துதற்(கு)
முழுவாழ் நாளும் அழுவதற் கென்று
ஆண்டாண்டு காலம் அழுவதற் கென்று
தந்தையின் இல்லம் தனைநீங்கு வதால்
பிறந்த இடத்தைநீ பிரிவத னாலே
அன்னையின் அன்பைநீ அகல்வத னாலே
சுமந்தவள் தோட்டத் தொடர்பறுப் பதனால்.

எவ்விதம் இருந்தது இயைந்தநின் வாழ்வு

உனது தந்தைக் குரியஇல் லங்களில்
வளர்ந்தாய் பாதையில் மலர்ந்தபூப் போல
படர்கான் **சிறுசெடிப் பழமாய் மலர்ந்தாய்
விழிதுயின் றெழுந்ததும் வெண்ணெயை யுண்டாய்
படுக்கைவிட் டெழுந்ததும் பாலைக் குடித்தாய்
ரொட்டி இருந்தது உன்கரம்நீள் தொலை
அருகிலே தட்டில் ஆம்புது வெண்ணெய்
வெண்ணையை உண்ண விரும்பா(த) நேரம்
பன்றி இறைச்சிப் பலதுண் டமைத்தாய்.

வருந்த உனக்கிங்(கு) வகையெது மில்லை
சிந்தனை செய்யச் செயலெது மில்லை
விட்டாய் மனத்துயர் விரிபசு மரங்களில்
வேலிக்கம் பத்தில் விதைத்தாய் சிந்தனை
துயரினைச் சதுப்புத் தொல்தேவ தாருவில்
புதரிலே வளர்ந்த பூர்ச்ச மரத்தில்
பசும்இலை எனநீ பறந்த அந்நேரம்
வண்ணத்துப் பூச்சியாய் வளர்சிற கடிக்கையில்
ஒருசிறு பழம்போல் **அமைந்தாய் மண்ணில்
சிவந்த **பழம்போல் உயர்பெரு வெளியில்.

இப்போ திந்த இல்லம் பிரிகிறாய்
இன்னொரு மனையில் இனிப்புகப் போகிறாய்
அடுத்தொரு தாயின் ஆட்சியில் இருப்பாய்
அடைவாய் அன்னியம் ஆனதோர் குடும்பம்;
அங்கே ஒன்று இங்குமற் றொன்று
வெவ்வேறு வீட்டில் வெவ்வேறு விதமாம்
ஆங்கா யர்குழல் அன்னிய மானது
கதவு கிறீச்சிடும் கடிதுமற் றொருவிதம்
வாயிற் சத்தமும் வேறாய்க் கேட்டும்
இரும்புப் பிணைச்சலில் எழும்ஒலி மாறும்.

கதவு வழியால் நுழைவது சிரமம்
கதவின் வழியால் **கனவாய் வழியால்
வீட்டில் பழகிய மெல்லியள் போல;
முனைந்துதீ ஊதிநீ மூட்டவே யறிவாய்
வெப்பத்தை யாக்கும் விதமுமே யறியாய்
வீட்டு மனிதரின் விருப்புக் கிணங்க.

இளமைப் பெண்ணே, எண்ணிய துண்டா?
எண்ணிய துண்டா, இருந்தறிந் தனையா?
இரவு வேளையில் எழுந்தே சென்று
மறுநாள் திரும்பி வருவதாய் நினைப்போ?
நீஎழுந் தேகுதல் ஓர்நிசிக் கல்ல
ஓர்நிசிக் கல்ல ஈர்நிசிக் கல்ல
நீள்பெருங் காலம் நீயங் கிருப்பாய்
பலநாள் மாதம் விழிபடா தகல்வாய்
பெருவாழ் நாளெலாம் பிதாஇல் லிருந்து
என்றென் றைக்கும்அன் னையிட மிருந்து;
தோட்டத்து முற்றம் நீண்டிடும் ஓரடி

ஒருமரம் உயர்ந்திடும் உறுகளஞ் சியவறை
மற்றிங்கு மீண்டுநீ வருகை தருகையில்
ஒருமுறை நீயும் திரும்பி வருகையில்."

ஏழை பெண்ணவள் எறிந்தாள் நெடுமூச்(சு)
நெடுமூச் செறிந்து நெஞ்சம் துவண்டாள்
இன்னல் வந்து இறங்கிற் றிதயம்
கண்ணீர் வந்து கண்களை நிறைத்தது
இந்தச் சொற்களில் இயம்பினள் அவளே:
"அப்படித் தெரியும் அப்படி நினைத்தேன்
அப்படி உணர்ந்தேன் ஆனஎன் (வாழ்)நாட்களில்
மொழிந்தேன் வளர்ந்த முழுக்கா லமுமே:
பெண்ணே முடியா(து) பெண்ணா யிருப்பது
தங்கிச் சொந்தத் தாய்தந் தையரில்
தந்தையின் சொந்தத் தரையதன் மீது
உன்னுடை முதிய அன்னையின் வீட்டில்;
வளருமோர் பெண்ணாய் மட்டும்நீ யிருப்பது
கணவரின் வீட்டில் காலடி வைக்கையில்,
ஒரடி களஞ்சிய ஒளிர்அறை வைத்துநீ
மறுவடி மணமகன் வண்டியில் வைக்கையில்,
உன்சிர மப்பொழு துயரமா யிருந்திடும்
உன்செவி கூடவே உயரமாய்த் தெரிந்திடும்.

இதனையே வாழ்நாள் எல்லாம் விரும்பினேன்
எதிர்பார்த்(த) திதுவே என்வளர் நாட்களில்
நலம்தரும் வருடம் நான்பார்த் திருந்தேன்
கோடையின் வருகை குறித்தெதிர் பார்த்தேன்;
எதிர்பார்த் திருந்தது இன்றுமெய் யானது
புறப்படு நேரம் விரைந்தரு கணைந்தது
ஓரடி களஞ்சிய ஒளிர்அறை இருக்க
மறுவடி மணமகன் வண்டியில் இருக்க.
எனக்கு விளங்கவே யில்லை ஆயினும்
மனத்தின் நிலமையை மாற்றிய தெதுவென:
மனத்திலே நிறைவுடன் புறப்பட வில்லை
மகிழ்ச்சியாய்ப் பிரிந்து வழிச்செல வில்லை
வாய்த்த அருமை வாழ்விடத் திருந்து
இளமையில் இருந்த இவ்விட மிருந்து
வளர்ந்தஇத் தோட்ட மதிலே யிருந்து
தந்தையார் அமைத்த தகுமனை யிருந்து;
இளைத்தவள் அகல்கிறேன் இன்னல்க ளோடு
வெவ்வருத் தத்தொடு விலகிச் செல்கிறேன்
இலையுதிர் காலத் திரவதன் அணைப்பில்
வசந்தகா லத்து வழுக்கும் பனியில்
பாதத்தின் பதிவு பனியில் அமையா(து)
நிலத்தில் வராது நெடுமடிச் சுவடு.

ஏனையோர் நினைவு எப்படி யிருக்கும்?
மற்றய மணமகள் மனநிலை யென்ன?
மற்றையோர் நிச்சயம் வருந்தமாட் டார்கள்
சுமக்கமாட் டார்கள் துயரத்தை நெஞ்சில்

துர்ப்பாக் கியநான் சுமப்பது போல
கருமைத் துயரைநான் கட்டிச் சுமத்தல்போல்
அடுப்புக்கரி போல் ஆனதென் னிதயம்
கரிய நிறமாய் அதுமா றிற்று.

இவ்விதம் அதிர்ஷ்ட இயல்பினர் எண்ணுவர்
ஆசியைப் பெற்ற அவர்இவ்வா றுணருவர்
புதுவசந் தத்துப் புலரியைப் போலவும்
காலை வசந்தக் கதிரவன் போலவும்;
என்மன உணர்வுகள் எத்திறத் தனவோ
என்மன ஆழத்து இருள்எவ் வகையோ?
நீர்நிலை ஒன்றின் நேர்சமக் கரையென
கார்க்கண மொன்றின் கறுத்த விளிம்பென
இலையுதிர் காலத் திருண்ட இரவென
படிகுளிர் காலத்துப் பகலென உள்ளது
இவைகளைக் காட்டிலும் இன்னும் இருண்டது
இலையுதிர் காலத் திரவிலும் இருண்டது."

இருந்தனள் முதியள் இல்லத்து வேலையள்
எப்போதும் அந்த இல்லிலே வாழ்பவள்
இந்தச் சொற்களில் இயம்பினள் அவளே:
"பருவப் பெண்ணே பார்இப் பொழுது
இயம்பிய துநான் இல்லையா நினைவில்?
கூறினேன் நூற்றுக் கணக்காம் தடவை:
மணமகன் கண்டுநீ மையல்கொள் ளாதே
மணமகன் வாயில் மயக்க முறாதே
கண்களைக் கண்டுநீ நம்பி விடாதே
நலமுறும் கால்களில் நாட்ட முறாதே!
வாயினை அவனும் வனப்பாய் வைத்து
விழிகளைத் திருப்புவன் அழகா யாயினும்
அவனது தாடையில் அமர்வது பிசாசம்
வாயிலே வாழ்ந்து வருவது மரணமாம்.

மகளிர்க்கெப் போதும் வழங்கினேன் அறிவுரை
அவர்கட் கிவ்விதம் அளித்தேன் வழிமுறை:
'மதிப்புறு மணவார் வந்திடும் போதில்
நாட்டு மணவ(ா)ளர் நன்மண மக்கள்
அவர்க்கு நேரில் அறைவீர் இவ்விதம்
உங்கள் சார்பிலே உரைப்பீர் நீரே
இவ்வித வார்த்தையில் இயம்புவீர் இப்படி
இந்த மொழிகளில் இவ்விதம் மொழிவீர்:
'என்னிடம் இருப்பது எதுவுமே யில்லை
எதுவுமே யில்லை இயல்பொடு மில்லை
மருமக ளாக வருமுறை கொள்ள
அடிமையாய் என்னை அழைத்துச் செல்ல
என்னைப் போல இயல்புறு மொருபெண்
அடிமையாய் வாழ அறிந்தவ ளல்ல,
நினைப்பவ ளல்ல நேராய்ச் சென்று
ஆடவன் பெருவிரல் ஆட்சியில் வாழ;
என்னிடம் அடுத்தவன் இயம்பிடில் ஒருசொல்

இருசொலில் அவற்கு இயம்புவேன் உத்தரம்,
படருமென் குழலவன் பற்றிட வந்தால்
கவின்குழல் அள்ளிக் கைக்கொள வந்தால்
அம்குழ லிருந்து அகற்றுவேன் தூர
அழகத் திருந்து அகற்றி விரட்டுவேன்.'

இவற்றை நீயும் ஏற்கா திருந்தாய்
கூறுமென் வார்த்தை கேட்கா திருந்தாய்
தெரிந்து கொண்டே தீயிலே நடந்தாய்
கனகொதிக் **கீலில் காலடி வைத்தாய்
வருநரிச் சறுக்கு வண்டியில் முட்டினாய்
ஏகினாய் கரடி வண்டியேற் காலில்
இளநரி வண்டியில் இழுத்துச் செல்ல
கரடி தொலைவுனைக் கடத்திச் செல்ல
எசமான் அடிமையாய் என்றும் இருக்க
ஆயுள் அடிமையாய் மாமிக் கிருக்க.

இல்லத் திருந்து பள்ளி(க்கு)ச் சென்றாய்
துயர்பெறச் சென்றாய் பிதாதோட் டத்தால்;
பள்ளியின் அனுபவம் அல்லலாய் இருக்கும்
நீணடதாய் இருக்கும் தாங்கும் துயரமும்:
வாங்கி யாயிற்று நாணயக் கயிறங்(கு)
சிறைக்குக் கம்பிகள் நிறுத்தி யாயிற்று
அவைகள்யா ருக்கும் ஆகவும் அல்ல
ஏழைப் பெண்ணே, எல்லா முனக்காய்.
பேதையே விரைவில் பெறுவாய் துயரம்
விதியிலாப் பெண்ணே மிகுதுயர் பெறுவாய்
மாமனின் எலும்பு வாய்க்கடை யிருந்து
மாமியின் கல்போல் வன்னா விருந்து
மைத்துனன் கொடிய வார்த்தையி லிருந்து
மைத்துனி தலையின் வருஅசைப் பிருந்து.

நான்புகல் வதனை நனிகேள் பெண்ணே!
நான்புகல் வதனை, நான்மொழி வதனை!
மனையிலே நீயொரு மலர்போ லிருந்தாய்
தந்தையின் முன்றிலில் தனிமகிழ் வடைந்தாய்
தண்ணிலா வொளியெனத் தந்தை அழைத்தார்
ஆதவன் கதிரென அன்னையு மழைத்தாள்
தண்ணீர் ஒளியெனச் சகோதரன் சொன்னான்
'அகன்றநீ லத்துணி' புகன்றாள் சகோதரி;
இன்னொரு இல்லம் இப்போ தேகிறாய்
அன்னிய அன்னையின் ஆட்சியின் கீழே:
என்றும் அன்னைக் கீடிலர் அன்னியர்
பிறிதொரு பெண்ணோ பெற்றவ ளாகாள்;
இனிமையாய் அன்னியர் ஏசுதல் அரிது
ஒழுங்காய் அறிவுரை உரைத்தலு மரிது;
மாமனார் உன்னை **மரக்கிளை என்பார்
மாமியார் உன்னை **மான்வண்டி யென்பாள்
'வாயிற் **படிக்கல்' மைத்துன னுரைப்பான்
தீயவள் என்றுனைச் செப்புவள் மைத்துனி.

உனக்கு நன்மையாய் உருப்பெறு நேரமும்
உனக்கு அமையும் உகந்தநற் பொழுதும்
புகார்போல் வெளியே போகும் வேளைதான்
புகைபோற் தோட்டத் துலவும் வேளைதான்
இலைபோற் சுழன்று அகலும் வேளைதான்
பொறியாய் விரைந்து பரவும் வேளைதான்.

ஆயினும் பறவையே அல்லநீ பறக்க
இலையுமே யல்லநீ இடம்சுழன் றேக
பொறியுமே யல்லநீ புறம்பரந் தோட
புகையுமே யல்லநீ போய்த்தோட்ட முறவே!

ஓ,என் பெண்ணே, உடமைச் சோதரி!
இப்போ(து) மாற்றினாய், எதற்கெதை மாற்றினாய்?
தனியன் புறுநின் தந்தையை மாற்றினாய்
வலியதீக் குணமுறு மாமனார் தனக்கு,
அன்புக் கினியநின் அன்னையை மாற்றினாய்
வல்லகங் காரமார் மாமியார் தனக்கு,
கண்ணிய மான கவின்சகோ தரனையும்
வளைந்த கழுத்து மைத்துனன் தனக்கு,
துன்னுபண் புறுநின் சோதரி தனையும்
கண்பழு தான கடியமைத் துனிக்கு,
கவின்சணல் விரிப்புக் கட்டிலை மாற்றினாய்
புகைபடி அடுப்பின் புன்தளத் துக்கு,
தெளிந்த வெண்மைத் திகழ்நீர் மாற்றினாய்
செறிந்த அழுக்குடைச் சேற்றுநீ ருக்கு,
நிதம்மணல் நிறைந்த நீர்க்கரை தன்னையும்
அகல்கரும் சேற்று அடித்தள மாக்கினாய்,
வெட்டித் திருத்திய விரிவன வெளியை
படர்புற் புதர்நிறை பற்றைக ளாக்கினாய்,
சிறுபழம் நிறைந்த சின்மலை யாவையும்
அடல்எரி கருக்கிய அடிமரம் ஆக்கினாய்.

எண்ணிய **துண்டா? இளமெழிற் பெண்ணே!
உண்மையாய் நீயொரு ஒளிர்வளர் கோழியாய்,
அன்பா தரவு அலுவல்கள் அனைத்துமே
விளைந்த இம்மாலை விருந்துடன் முடிந்ததை?
அமளிக்கு உன்னை அழைத்துச் செல்வார்
இன்துயி லுக்கங் கேகுவாய் என்பதை?

ஆயினு முனக்கங் கமளியு மில்லை
நிம்மதி கொள்ளும் நித்திரை யில்லை
தூக்கமே யின்றித் தொடர்ந்துகண் விழித்து
கருமம் யாவையும் கவனத் தெடுத்து
சிந்தனை செய்தே சித்தம் குழம்பி
மனநிலை கெட்டு மறுகவும் செய்வர்.

தலைத்துணி யின்றி தனிநீ திரிகையில்
இன்னல்க ளின்றி இனிதே திரிந்தனை;

முகத்திரை யின்றி முன்நீ உலாவையில்
மனத்துய ரின்றி மகிழ்வா யுலாவினை;
தலைத்துணி யிப்போ(து) தரும்மிகு துன்பம்
முகத்திரை யிப்போ(து) மனத்துய ரேற்றும்
அளவிலா இன்னலை ஆக்கும்முக் காடு
சணல்துணி முடிவில்லாச் சஞ்சல மாக்கும்.

எங்ஙனம் அரிவைதன் இல்லத் திருப்பாள்?
தந்தையார் வீட்டில் தையலாள் வசிப்பாள்?
மன்னனின் கோட்டையில் மன்னனைப் போல
வாள்மட்டும் அவளது வயமிலா திருக்கும்.
ஏழை மருமகள் நிலையென்ன வாகும்?
கணவனின் வீட்டில் காரிகை நிலையும்?
திகழ்ரஷ்ய நாட்டின் சிறைக்கைதி போலாம்
ஆள்மட்டும் காவலுக் கமைந்திடா திருக்கும்.

வேலைநே ரத்தில் வேலைகள் செய்வாள்
தோள்களும் துவண்டு சோர்ந்து தளர்வுறும்
மேனி முழுவதும் வியர்வையில் ஊறும்
நுதலதும் வெண்மையாய் நுரைத்தே மாறும்;
இவ்வா றுருப் பெறும் இன்னொரு வேளை
வெங்கனல் மூட்டியே வேலைகள் செய்ய
அடுப்பொழுங் காக்கி அலுவல்கள் செய்ய
அனைத்தையும் ஒருத்தியின் அங்கையால் முடிக்க.

அப்போ தவட்கு ஆகும்இப் படித்தான்
ஏழைப் பெண்ணுக் கிப்படித் தான்ஆம்
**வஞ்சிர நெஞ்சும் **(நன்)னீர்மீன் நாவும்
குளத்திலே **வாழ்மீன் கொண்ட சிந்தனையும்
**வெள்ளிமீன் வாயும் **வெண்மீன் வயிறும்
**கடல்வாத் தறிவும் காணும்உண் டாகி.

ஒருவரும் அறிய உறுவாய்ப் பில்லை
ஒன்பது பேரும் உற்றறி யார்கள்
தாயார் பெற்ற தையலர் மத்தியில்
பெற்றவர் பேணிய பெண்களி டத்தே
எங்கே பிறப்பார் உண்பவர் என்பதை
**எங்குபோய்க் கடிப்பவர் இவர்வளர் வாரென
இறைச்சி உண்பவர் எலும்பு கடிப்பவர்
அம்குழல் காற்றில் அலைந்திட விடுபவர்
விரித்துக் கூந்தலைப் பரப்பி வைப்பவர்
கொடுப்பவர் இரைதான் குளிர்காற் றுக்கு.

அழுவாய், அழுவாய், அழகிளம் பெண்ணே!
அழுவாய் நன்றாய் அழும்போ தேநீ,
அழுவாய் கண்ணீர் அங்கே நிறைய
உள்ளங் கைநிறைந் தொழுகநீர் வரட்டும்
தந்தைதோட் டத்துக் கண்துளி விழட்டும்
விழிநீர் குளமாய் மிகட்டும் பிதாநிலம்
அழுவாய் வெள்ளம் அறைகளில் ஓட

தரையிலே பரந்து திரைகள் எழட்டும்.
அழச்செய்(த) இப்போ அழாதே போனால்
இனித்திரும் புகையில் இன்னலுற் றழுவாய்
தந்தையின் வீடு தனித்திரும் புகையில்
வயோதிபத் தந்தையை வந்துநீ காண்கையில்
இருப்பார் புகைசூழ் சவுனா அறையில்
இருக்கும் காய்ந்த இலைப்பிடி கைகளில்.

அழுவாய், அழுவாய், அழகிளம் பெண்ணே!
அழுவாய் நன்றாய் அழும்போ தேநீ,
அழச்செய்(த) இப்போ அழாதே போனால்
இனித்திரும் புகையில் இன்னலுற் றழுவாய்
அன்னையின் இல்லுக் கடுத்து வருகையில்
வயோதிப அன்னையை வந்துநீ காண்கையில்
மாட்டுத் தொழுவில் மூச்சடைத் திருப்பாள்
வைக்கோற் கட்டுடன் மாண்டே கிடப்பாள்.

அழுவாய், அழுவாய், அழகிளம் பெண்ணே!
அழுவாய் நன்றாய் அழும்போ தேநீ,
அழச்செய்(த) இப்போ தழாதே போனால்
இனித்திரும் புகையில் இன்னலுற் றழுவாய்
இந்தவீட் டுக்கு இனிவரும் போது
காண்பாய் செந்நிறத் தனிச்சகோ தரனை
வழியிலே காண்பாய் மயங்கிவீழ்ந் திருக்க
தோட்ட(த்து) முற்றம் துவண்டுவீழ்ந் திருக்க.

அழுவாய், அழுவாய், அழகிளம் பெண்ணே!
அழுவாய் நன்றாய் அழும்போ தேநீ,
அழச்செய்(த) இப்போ அழாதே போனால்
இனித்திரும் புகையில் இன்னலுற் றழுவாய்
இந்தவீட் டுக்கு இனிவரும் போது
அன்புச் சகோதரி அவளையும் காண்பாய்
துணிதோய் பாதையில் தனிப்புதைந் திருப்பாள்
ஒருதுணி **யடித்தடி உறுகரத் திருக்கும்."

பேதைப் பெண்ணவள் பெருமூச் செறிந்தாள்
பெருமூச் செறிந்து பெருந்துயர் கொண்டாள்
அப்போ தவளே அழவும் தொடங்கினள்
கண்ணீர் பெருக்கிக் கலங்கி யழுதாள்.

அழுதாள் கண்ணீர் அம்கை நிறைந்தெழ
உள்ளங் கைநிறைந் தொழுகிய(து) விழிநீர்
தந்தையின் கழுவிய தகுவசிப் பிடத்தில்
பிதாவின் நிலத்தில் குளமாய் அழுதாள்
பின்வரும் சொற்களில் பின்அவள் சொன்னாள்
உரைத்தே அவள்தான் உரைசெய லாயினள்:
"ஓ,சகோ தரிகாள், உறுமென் **குருவிகாள்!
என்வாழ் நாளின் முன்னாள் தோழிகாள்!
என்னுடன் வளர்ந்த எலாச்சிநே கிதிகாள்!
இங்குநான் உரைப்பதை எல்லிரும் கேட்பீர்:

ஆனஎன் அறிவுக் கப்பால் உள்ளது
எனக்கு நடந்தது என்னதான் என்பது
இத்தனை இன்னல் எப்படி வந்தது
இத்தனை சுமையும் எதற்காய் என்பது
இந்தத் துயரை எதுதான் கொணர்ந்தது
இத்துணை துன்பம் எங்ஙனம் வந்தது?

வேறாய் உணர்ந்தேன் வேறாய் அறிந்தேன்
வாழ்நாள் வேறாய் வருமென நினைத்தேன்
குயில்போற் சென்று உலவவும் எண்ணி
குன்றிலே நின்று கூவவும் நினைத்தேன்
இந்த நாட்களே வந்தநே ரத்தில்
இந்த நினைவுகள் இயைந்தவே ளையிலே;
ஆயினும் குயிலாய் அடைந்தே இப்போ(து)
குன்றிலே நின்று கூவவும் மாட்டேன்
அலையின் நடுவில் அலையும் வாத்துநான்
அகன்ற குடாக்கடல் அலைதா ராநான்
நிறைகுளிர் நீரில் நீந்தி வருகிறேன்
பனிக்கட்டி நீரில் பதறி நிற்கிறேன்.

ஐயகோ, எனது அன்னையே, தந்தையே!
ஐயகோ, எனது அரியபெற் றோரே!
எதற்காய் என்னை இங்கே படைத்தீர்
பேதை யென்றனைப் பெற்றது எதற்கு
இத்தனை இன்னலில் இருந்தழு வதற்காய்
இத்தனை சுமையையும் ஏற்பதற் காக
அடையா இத்துயர் அடைவதற் காக
இத்துணை துன்பம் இதுபெறற் காக!

ஏழையம் மா,முன் இதுசெய் திருக்கலாம்,
எனைத்தாங் கழகியே, இதுசெய் திருக்கலாம்,
பாலூட்(டி) வளர்த்த பரிவுறும் அன்னாய்!
ஆளாக்கி எடுத்த(என்) அன்புக் கினியளே!
கட்டையைத் துணியால் சுற்றிவைத் திருக்கலாம்
கற்கள் சிறியவை கழுவிவைத் திருக்கலாம்
இம்மகள் கழுவி எடுத்தநே ரத்தில்
சுற்றிய நேரம் துணியில்நின் அழகி
இத்துணை துயரை இதுகொணர்ந் ததுவே
மனநிலை கெட்டு மறுகி மடிந்ததே!

பல்வே றிடங்களில் பலரிதைச் சொல்வார்
இன்னும் பற்பலர் இப்படி நினைப்பார்:
அறிவிலா மூடர்க் கக்கறை யில்லை
என்றுமே கவலை இல்லையே யென்று;
நல்ல மனிதரே, சொல்லீர் அவ்விதம்!
சொல்லீர் என்றுமே, சொல்லீர் அவ்விதம்!
ஏனெனில் அக்கறை எந்தனுக் குண்டு
கனநீர் வீழ்ச்சிக் கற்களைக் காட்டிலும்
தீய நிலத்துச் செடிகளைப் பார்க்கிலும்
படர்புதர் முளைத்த பற்றையைப் பார்க்கிலும்

இகல்பரி யொன்று இழுக்க மாட்டாது
இரும்புக் கழுத்து இகல்பரி இழாது
உறும்ஏர்க் கால்மேல் உயர்த்தப் படாமல்
ஏர்க்கால் சற்றும் அசைக்கப் படாமல்,
மெலிந்தவ ளாயினும் மனத்துய ரடைந்தேன்
கருமையாய் இவ்விதம் கடுந்துய ரடைந்தேன்."

படிமிசை யிருந்து பாடிற் றோர்சிசு
புகன்றதிவ் விதம்புகை போக்கியில் வளர்வது:
"அரிவை இப்படி அழுவது என்ன
மாபெரும் துயரும் வந்தது என்ன?
படுதுயர் அனைத்தும் பரிக்குக் கொடுங்கள்
கறுத்தவாத் துக்குக் கடுந்துயர் கொடுங்கள்
இரும்புவா யதனை இரங்க விடுங்கள்
விடுங்கள் புலம்பலை வியன்பெருந் தலைக்கு;
சிறந்த சென்னிகள் திகழ்பரிக் குண்டு
பல்சீர்த் தலைகளும் பலமுறு மெலும்பும்
வளைந்த கழுத்தது வல்லது சுமக்க
உடலம் முழுவதும் உறுதியா யுடையது.

ஏதுக்கள் இங்கு இல்லை அழுதிட
கடுந்துயர் கொள்ளக் காரண மில்லை
உனைக்கொடு செல்லார் உறுசேற் றுநிலம்
உனைக்கொடு செல்லார் ஒருபாழ்ங் குழிக்கு
இத்தா னியமேட் டிருந்துனைப் பெற்று
இன்னும் சிறந்த இடத்தே போவார்
'பீர்'அருந் தும்மிப் பெருவீ டிருந்து
இகல்மதுப் பெருகும் இடத்தே போவார்.

விலாப்புறம் திரும்பி விரும்பிநீ பார்த்தால்
வலது பக்கமாய் மகிழ்ந்துநீ பார்த்தால்
மாப்பிளை இருப்பார் காப்பதற் காக
செந்நிற மனிதர் சேர்ந்தரு கிருப்பார்
ஒருநல் மனிதன் ஒருநற் குதிரை
வீடு நிறைய வேண்டிய துண்டு
காட்டுக் கோழிகள் கடுகதி பறந்து
வண்டிஏர்க் காலில் மகிழ்ந்திசை பயிலும்
**குருவி யினங்கள் குதூகலங் கொண்டு
நுகத்தடி மரத்தில் மகிழ்பாட் டிசைக்கும்
ஆறு பொன்னிறத் தம்குயில் போல்மணி
பரியின் கழுத்துப் பட்டியில் துள்ளும்
ஏழு நீல எழிற்புள் மணிகள்
ஓசை வண்டியின் ஒளிர்நுகத் தெழுப்பும்.
எனவே கவலை எதற்கு முறாதே
எதற்குமே வேண்டாம் **இனிதாய் மகளே
எதுவுமே தீமை இனியுனைத் தொடாது
நண்ணும் யாவுமே நன்மையாய் முடியும்
உழவன்உன் கணவன் உறுமவ னருகில்
விவசாயி அவனது மெல்லா டையின்கீழ்
உணவுக்கு உழைப்பவன் ஒளிர்தாடை யின்கீழ்

மீனவன் அவனது வியன்கை யணைப்பிலே
உயர்மான் சறுக்கி ஓட்டுவோன் துணையில்
கரடி பிடிப்பவன் கவின்சவு னாவில்.

உயர்ந்தோன் கணவரில் உனக்குக் கிடைத்தான்
மிகவும் மேன்மை மிக்கவன் மனிதரில்
சோம்பி யிராது தொடும்அவன் குறுக்குவில்
அம்புக் கூட்டிலே அம்புகள் தங்கா
வீட்டிலே நாய்கள் தூக்கம் கொள்ளா
குட்டிகள் ஓய்ந்து வைக்கலில் கிடவா.

முகிழ்ந்தவிவ் வசந்தம் மூன்று தடவைகள்
புலரும் காலைப் பொழுததி காலையில்
எரிதீ யெதிரே எழுந்தே நின்றனன்
சுள்ளிப் படுக்கைத் துயில்விட் டெழுந்தான்;
முகிழ்ந்தவிவ் வசந்தம் மூன்று தடவைகள்
துளிப்பனி அவனது விழிக்கடை வீழ்ந்தது
தடவின அவனது தலையைச் சுள்ளிகள்
கணுக்கள் அவனது கவினுடல் வருடின.

வளர்ப்பவன் அந்த மனிதனோ கால்நடை
வளர்த்துப் பெருக வைப்பவன் கால்நடை
இங்கே வந்த எம்மண மகனிடம்
வனத்திலே நடக்கும் மந்தைகள் உண்டு
மணல்மேட் டினிலே மந்தைகள் திரியும்
பள்ளத் தாக்கிலே பரந்தே உலாவிடும்
கோட்டு விலங்குகள் நூற்றுக் கணக்கிலே
மடியுள விலங்குகள் மற்றாயிர வகை;
வைக்கோல் பட்டடை மிக்குறும் வெளிகளில்,
கரைகளில் தானியக் களஞ்சியம் அருவியின்,
பூர்ச்சந் தோப்புகள் பொதுவயல் ஆகின
பள்ளப் பரப்பினில் பார்லிநன் னிலங்கள்
புல்நல் லரிசிப் புனம்பா றைப்புறம்
ஆற்றங் கரைகளில் கோதுமை வயல்கள்
கூழாங் கற்கள் **கொள்பண நாணயம்
சிறுகற் களெலாம் சில்லறை நாணயம்."

கலேவலா
பாடல் 23 - மணமகளுக்கு அறிவுரைகள்

அடிகள் 1 - 478 : கணவனின் வீட்டில் எவ்விதம் வாழ வேண்டும் எவ்விதம் ஒழுக வேண்டும் என்று மணமகளுக்கு அறிவுரை கூறுதல்.

அடிகள் 479 - 850 : ஒரு வயோதிபப் பெண் தான் பெற்றோருக்கு மகளாகவும் கணவனுக்கு மனைவியாகவும் கணவனைப் பிரிந்த பின் தனியாகவும் வாழ்ந்த அனுபவங்களைக் கூறுதல்.

அரிவைக்(கு) இப்போ தறிவுரை தேவை
மணமக ளுக்கு வழிமுறை தேவை
அரிவைக் கறிவுரை யளிப்பவ ரெவரோ?
பாவைக்குப் புத்தி பகர்பவர் யாரோ?

ஒஸ்மோ மகளெனும் ஒண்செழிப் பரிவை
கலேவா மகளெனும் கவினுறு நங்கை
அவள்தான் பெண்ணுக் கறிவுரை சொல்வாள்
அனாதைக் கவளே அளிப்பாள் வழிமுறை
விவேகமாய் வாழ்ந்திடும் விதம்எது என்பதை
மாசில்லா தெங்ஙனம் வாழ்வது என்பதை
விவேகமாய்க் கணவனின் வீட்டிலும் எங்ஙனம்
மாசில்லா தெங்ஙனம் மாமியார் வீட்டிலும்.

இனிவரும் சொற்களில் இவ்விதம் சொன்னாள்
இந்த மொழிகளில் இவ்விதம் மொழிந்தாள்:
"அருமண மகளென் அன்புச் சோதரி!
இதயம் நிறைந்த இனியளே, அன்பே!
நான்மொழி கையிலே நன்குநீ கேட்பாய்
வெவ்வேறு விதமாய் விளம்ப நீகேட்பாய்.

மலரேயிப் போது மனைவிட் டகில்கிறாய்
சிறியசெம் **பழம்நீ செல்லப் போகிறாய்
தடித்த துணிநீ தான்நகர் கின்றனை
**'வெல்வெட்' துணியே வெகுதொலை போகிறாய்
எழில்புகழ் பெற்றஇவ் வில்லத் திருந்து
தொல்லெழில் வாய்ந்தஇத் தோட்டத் திருந்து;
இன்னோ ரிடத்து இல்லம் வருகிறாய்
அன்னிய மானதோர் அகல்இல் வருகிறாய்
மாறு பட்டதோர் மனைக்குநீ வருகிறாய்
மற்றவர் மத்தியில் **மறாளாய் வருகிறாய்;
சிந்தித் தடியிடல் சீரா யிருக்கும்
கவனமாய் அங்குநீ கருமம் செய்வாய்,
அப்பாவின் நிலத்தில் அமைந்தது போல(ல்)ல
உரிமைத் தாயின் தரைபோ லிருக்கா(து)
பள்ளத் தாக்கிலே பாட்டுகள் பாடியும்
வழிகளில் கூவியும் வாழ்வது அரிது.

இந்த வீட்டி லிருந்துநீ போகையில்

உனது பொருள்கள் அனைத்தையு மெடுப்பாய்
ஆயினும் வீட்டில்விட் டகல்கவிம் மூன்றையும்
பகலிலே தூங்கும் பழக்கமஃ தொன்று,
அன்புறு மன்னையின் அறிவுரை, அடுத்தது
சுத்தமாய் கடைந்த சுவையுறும் வெண்ணெய்.

ஆனஇல் லப்பொருள் அனைத்தையும் நினைவாய்
எனினும் துயிலதை எளிதினில் மறப்பாய்
இருக்கட் டுமது இல்வாழ் மகளிர்க்(கு)
இருக்க(ட்டும்) அடுக்களை இதமூ லையிலே;
பாடல்கள் ஆசனப் பலகைதங் கட்டும்
இருக்க(ட்டும்) சாளரத் தினியநற் கதைகள்
தூரிகைப் பிடியிலே **ஆர்கசின் னவள்இயல்(பு)
கேலியும் கிண்டலும் போர்வையின் விளிம்பிலே
ஆன தீப் பழக்கமே அடுக்களைப் பீடமாம்
உனதுசோம் பலைநிலத் துறும்படி விட்டுவை
அல்லது திருமணத் தோழிக்(கு) அளித்திடு
அவளது கைகளில் அவற்றையே சுமத்திடு
புற்றரை மேட்டிடைப் போகட்டு(ம்) கொண்டவள்
புதருக்குச் செல்கையில் கோக(ட்டும்) கூடவே.

நற்புது முறைகளை நனிகொளல் வேண்டும்
பழையன யாவையும் களைதலும் வேண்டும்
அப்பாவின் அன்பை அகற்றிடல் நன்று
மாமனின் அன்பை மனங்கொளல் நன்று
பழக்கத்தில் வேண்டும் பணிவுறு நடத்தை
பரிவுறு மொழிகளைப் பகருதல் வேண்டும்.

நற்புது முறைகளை நனிகொளல் வேண்டும்
பழையன யாவையும் களைதலும் வேண்டும்
அன்னையின் அன்பை அகற்றிடல் நன்று
மாமியின் அன்பை மனங்கொளல் நன்று
பழக்கத்தில் வேண்டும் பணிவுறு நடத்தை
பரிவுறு மொழிகளைப் பகருதல் வேண்டும்.

நற்புது முறைகளை நனிகொளல் வேண்டும்
பழையன யாவையும் களைதலும் வேண்டும்
சகோதரன் அன்பைத் தள்ளிடல் நன்று
மைத்துனன் அன்பை மனங்கொளல் நன்று
பழக்கத்தில் வேண்டும் பணிவுறு நடத்தை
பரிவுறு மொழிகளைப் பகருதல் வேண்டும்.

நற்புது முறைகளை நனிகொளல் வேண்டும்
பழையன யாவையும் களைதலும் வேண்டும்
சகோதரி அன்பைத் தள்ளிடல் நன்று
மைத்துனி அன்பை மனங்கொளல் நன்று
பழக்கத்தில் வேண்டும் பணிவுறு நடத்தை
பரிவுறு மொழிகளைப் பகருதல் வேண்டும்.

உன்வாழ் நாளில் என்றுமே வேண்டாம்

பொன்னிலாத் திகழும் பொற்பொழு தெல்லாம்
பொல்லா நினைவுடன் புக்ககம் செல்லுதல்
திறமை இல்லையேல் திருமணம் வேண்டாம்.
இல்லத்து வாழ்ந்திட இனியவை தேவை
நலமுறு வீட்டில் நன்பண்பு தேவை
கணவனாய் வந்தவன் கடிதுசோ திப்பான்
அறிவுடைக் கணவனும் அங்ஙனம் செய்வான்;
அறிவும் கவனமும் அவசியம் நினக்கு
நீபுகும் வீடு நிலையிலா திருந்தால்,
வலியும் விவேகமும் வரனுலக் கவசியம்
தரங்கெட்ட கணவன் தன்திசை மாறின்.

மூலைஓ நாய்போல் முதியவன் இருப்பினும்
மொய்புதர்க் கரடிபோல் முதியவள் இருப்பினும்
அரவுபோல் களஞ்சிய அறையில் மைத்துனன்
மைத்துனி தோட்டத்து நத்தையா யிருப்பினும்
சமமதிப் பினைநீ சளைக்கா தேகொடு
பணிவான நடத்தை பழக்கத்து வேண்டும்
அம்மா விடத்தில் அமைந்ததைப் பார்க்கிலும்
அப்பாவின் வீட்டில் அமைந்ததைப் பார்க்கிலும்
பிதாவிடம் காட்டிய பணிவைப் பார்க்கிலும்
மாதாவுக் கீந்த மதிப்பைப் பார்க்கிலும்.

எப்போது முனக்கு இவையிவை தேவை
தெளிவுறு தலையும் திகழ்தர அறிவும்
நிதானம் கண்டிப்பு நிறைந்தசிந் தனையும்
விளம்பலைச் செயலை **விளங்கும் ஆற்றலும்,
மாலையில் கூர்மை மலர்விழிக் கவசியம்
மனையிலே விளக்கு மங்கா திருக்க,
காலையில் செவியில் கவனமும் அவசியம்
சத்தமாய்ச் சேவலின் தனிக்குரல் கேட்க;
சேவல் முதல்முறை கூவிய பின்னர்
சேவலின் அடுத்த கூவலின் முன்னர்
இளையவர்க் கதுவே துயிலெழும் நேரம்
முதியவர்க் கதுவே ஓய்வுகொள் நேரம்.

சேவலும் ஒருநாள் கூவா திருந்தால்
தலைவனின் பறவை ஒலிதரா விட்டால்
திங்களை உந்தன் சேவலாய்க் கருது
தாரகைக் குலம்வழி காட்டியா யாக்கு
வெளியே அடிக்கடி விரைந்தெழுந் தேகி
சந்திரன் திகழ்வதைச் சரியாய்ப் பார்ப்பாய்
வழிவகை தாரகை வண்குலத் தறிவாய்
விண்மீ னிடத்தே விதிமுறை கற்பாய்.

**விண்மீன் குலமும் விளக்கமாய்த் தெரிந்து
அவற்றின் கொம்புகள் அவைதெற் கமைந்து
வடதிசை பார்த்து வாலும் இருந்தால்
உனக்கது துயிலெழ உகந்தநல் நேரம்
இளமண வாளன் இனிதரு கிருந்து

செந்நிறத் தோனின் திகழ்அரு கிருந்து
சாம்பரைக் கிளறித் தகிஅனல் மூட்ட
தீக்கற் பெட்டியில் தீப்பொறி யாக்க
ஊதி விறகில் உறுகனல் மூட்ட
பக்கம் நெருப்பும் பரவா தமைப்பாய்.

சாம்பரில் நெருப்புத் தானிலா திருந்தால்
பெட்டியி லிருந்தும் பெயரா விடிற்பொறி
அன்புறு கணவனை அன்புடன் கேட்பாய்
எழிலுறும் கணவனை இவ்விதம் கேட்பாய்:
'அன்புக்(கு) உரியரே, அழல்சிறி தருளிரோ,
செஞ்சிறு பழமே, செந்தீ தாரிரோ?'

சிறியதீக் கல்லைப் பெறுவையப் போது
தீக்கல் மிகமிகச் சிறியதைப் பெறுவாய்
தேய்த்துப் பொறியை ஆக்குதீக் கல்லில்
காய்ந்த குச்சியில் கனலதை மூட்டு
வெளியில் சென்று தொழுவதும் பெருக்கு
உணவைக் கால்நடை உண்ண அளித்திடு;
பக்கம் மாமியின் பசுவொன் றலறும்
கவின்மா மன்பரி கனைக்கு(ம்)முன் னின்று
மைத்துனன் பசுவும் வந்த லறும்முன்
மெதுவாய் மைத்துனி பசுக்கன் றலறும்
மென்மைவைக் கோலை வீசவை கட்கு
அள்ளிச் சற்றே **மணப்புல் நீகொடு

பாதையில் சற்றுப் பணிவுடன் சென்று
நுழைந்து கால்நடைத் தொழுவிற் குனிந்து
பசுவுக்(கு) உணவைப் பதமாய் வைத்து
ஆட்டுக் குணவை அன்பா யூட்டு;
சரியாய் வைக்கோல் தந்தா வுக்கு
மெலிந்தகன் றுக்கும் மிதநீர் கொடுத்து
தெரிந்த வைக்கோல் பரிக்குட் டிக்கும்
இடுவாய் செம்மறிக் குட்டிக் கிதப்புல்;
ஏனக் குழாத்தை ஏசுதல் கூடா(து)
வராகக் குட்டியை உதைத்தலும் ஆகா(து)
பதவுண் தொட்டியைப் பன்றிக்(கு) ஈந்து
குட்டிக் குணவுத் தட்டத்தைத் தருவாய்.

ஓய்தல் தகாது கால்நடைத் தொழுவில்
சோம்பலும் தகாது செம்மறித் தொழுவில்
கால்நடைத் தொழுவில் கருமம் முடிந்ததும்
அனைத்து மந்தையின் அலுவல் முடிந்ததும்
அவ்விடம் விட்டு அகன்றுநீ செல்வாய்
பனிப்புயல் போலே படர்வாய் வீட்டுள்
அங்கொரு பிள்ளை அழுதுகொண் டிருக்கும்
போர்வையின் உட்சிறு பிள்ளை யிருக்கும்
பேதைக் குழந்தை பேச வராது
நாவாற் சொல்லும் நயம்தெரி யாது
கூறா(து) குளிரெனக் கூறா(து) பசியென

அல்லது வேறென்ன சொல்லா தெதனையும்
பழகிய யாரும் பக்கம் வரும்வரை
தாயின் குரலும் காதில் விழும்வரை.

நேரே இல்லுள் நீவரும் போது
உறுநாற் பொருளில் ஒன்றென வருவாய்
நீர்நிறை வாளி நின்கரத் திருக்கும்
குளியற் **தூரிகை கக்கத் திருக்கும்
எயிற்றின் இடையினில் இருக்கும்தீக் குச்சி
நான்காம் பொருளென நனிநீ யிருப்பாய்.

பெருநிலம் அடுத்துப் பெருக்கிக் கூட்டி
நிலத்துப் பலகையை நீசுத் தம்செய்;
தண்ணீர் அள்ளித் தரையிலே வீசு
குழந்தையின் தலையில் கொட்டி விடாதே;
குளிர்தரை நீயொரு குழந்தையைக் கண்டால்
மைத்துனி பெற்ற மழலையஃ தாயினும்
பிள்ளையைத் தூக்கிப் பீடத் திருத்தி
கண்களைக் கழுவிக் காண்தலை வருடி
குழந்தைக்கு ரொட்டி கொடுத்துக் கையில்
கொஞ்சம் ரொட்டிமேல் கொழுவெ(ண்)ணெய் பூசு
இல்லத்து ரொட்டியும் இல்லாது போனால்
மரக்குச்சி யொன்றை மழலைகை வைப்பாய்.

வீட்டில் கழுவுதல் மேசைகள் என்றால்
கூடிய காலம் வாரத் தொருநாள்,
கழுவு மேசையைக் கரையையும் நினைவாய்
கழுவவும் வேண்டும் கால்மறக் காமல்;
ஆசனப் பலகையை நீரினாற் கழுவு
சுவரெல்லாம் துடைத்துச் சுத்தமாய்ச் செய்து
ஆசனப் பலகையின் அருகெலாம் கழுவி
கழுவு சுவரையும் காண்சுவர் மூலையும்

மேசையின் மேலே தூசுகள் படிந்தால்
சாளர மேலே சார்அழுக் குறைந்தால்
துடைப்பத் தோகையால் துப்புர வாக்கி
ஈரத் துணிகொண் டெடுப்பாய் அழுக்கை
அப்போ தழுக்குகள் அயற்புறம் போகா
தூசுகள் பறந்து கூரையிற் படியா.

கூரையில் சேர்ந்த குப்பையைக் கூட்டி
அடுப்பங் கரையின் அசுத்தம் நீக்கு
கதவின் நிலைகளில் கவனம் வைத்திரு
உத்தரம் யாவையும் நித்தமும் நினைவாய்
அப்போ(து) குடிவாழ் குடிலா யதுவரும்
வாழத் தகுந்த வதிவிட மாய்வரும்.

நான்மொழி கையிலே நங்கைநீ கேட்பாய்
நான்மொழி கையிலும் நான்உரைக் கையிலும்!
வெளியா டையிலா(து) வெளிச்செல் லாதே

மேலாடை யின்றி வெளியலை யாதே
எங்கும் **கைத்துணி யின்றியே காதே
காலணி யின்றிக் காலாற நடந்திடேல்:
மாப்பிள்ளை பார்த்தால் மகாசினம் கொள்வார்
இளமைக் கணவர் எதுவெனும் சொல்வார்.
அந்தச் செடிகளில் அதிகவ னம்வை
பெருந்தோட் டம்வளர் **பேரிச் செடிகளில்;
தோட்டத் துப்பேரி தூய்மையே யானது
பேரியின் கிளைகள் பெரிதும் புனிதம்
கிளைகளின் இலைகளும் உளமிகப் புனிதம்
அதன் சிறுகனிகளே அனைத்திலும் புனிதம்,
இளங்கொடி அறிவது இவற்றினால் எதுவெனில்
இருப்பவள் அனாதைபோல் எதுகற்ப தோவெனில்
வருமிளங் கணவனை மகிழச்செய் வகையதே
மணமகன் உளமதை மகள்தொடு விதமதே.

செவியிலே வேண்டும் எலியதன் கூர்மை
பாதத்தில் வேண்டும் முயற்பரி சுத்தம்:
பருவக் கழுத்துப் பணிந்து பின்புறம்
வனப்புறும் கழுத்து வளைதலும் நன்று
சிலிர்ப்பொடு முளைவிடு **செடிசூ ரையைப்போல்
பசுமை வளர்சிறு பழச்செடி யைப்போல்.

விழிப்புணர் வுனக்கு வேண்டும் வழக்கில்
கணந்தோறும் விழிப்புணர் கவனமும் வேண்டும்
ஆசனம் பொழுதெலாம் அமர்தலும் வேண்டாம்
பலகையில் நீளப் படுத்தலும் வேண்டாம்
போர்வையுள் சதாநீ புதைதலும் வேண்டாம்
படுக்கைநா டிப்புறப் படலதும் வேண்டாம்.

வருவான் உழுதலை மைத்துனன் முடித்தபின்
வருவார் வேலியை மாமன்கட் டியபின்
வெளிப்புற மிருந்துன் கொழுநன் வருவார்
அடர்கான் திருத்திஉன் அழகனும் வருவார்;
கலயம் ஒன்றிலே புனலினைக் கொணர்வாய்
கைத்துணி ஒன்றையும் அத்துடன் கொணர்வாய்
தலையைச் சிறிது தாழ்த்தியே பணிந்து
அன்புறும் சொற்களை அருமையாய்க் கூறு.
மாமியார் களஞ்சியக் கூடத்தால் வருவார்
அரைத்தமாக் கூடை இருக்கும் கக்கம்
மாமியை எதிர்கொள ஓடுமுற் றத்தே
தலையைச் சற்றுத் தாழ்த்திப் பணிந்து
கேட்டுநீ கக்கக் கூடையை வாங்கு
இல்லத்தின் உள்ளே எடுத்ததை ஏகு.

ஊகிக்கச் சிந்திக்க உனக்கிய லாவிடில்
சுத்தமாய் விளங்குதல் மெத்தவும் சிரமமேல்
எந்தெந்தப் பணியை எப்போது செய்வது
எதையெதைத் தொடங்கி இனிதியற் றுதலென
வீட்டின் முதியளை வினயமாய்க் கேட்பாய்:

'ஓ,என் அன்பு உடைய மாமியே!
எங்ஙனம் வேலைகள் இங்கே நடப்பது
எவ்விதம் முடிவெடுத்(து) இயற்றுதல் ஒழுங்காய்?'

முதியவள் இங்ஙனம் மொழிவாள் மறுமொழி
மாமியார் இவ்விதம் மறுமொழி சொல்வாள்:
'இப்படித் தான்செயல் இங்கே நடப்பது
இவ்விதம் முடிவெடுத்(து) இயற்றுதல் ஒழுங்காய்
இடித்தல் குத்துதல் அரைத்தல்இங் குண்டு
கல்லின் திரிகையைக் கைகளால் சுற்றலும்
அத்துடன் தண்ணீர் அள்ளி வருதலும்
பசையாய் மாவைப் பிசைதலும் இங்குள;
விறகை எடுத்து வீட்டுட் கொ(ண்)டுசெலல்
அடுப்பை மூட்டி அனலையுண் டாக்கல்,
அடுத்து ரொட்டிகள் அடுப்பில் சுடலுள
கனமாம் பெரிய பணிய(ா)ரம் சுடலுள
கலயம் சட்டிகள் கழுவும் செயலுள
ஊண்மரத் தட்டை உடனலம் பலுமுள.'

முதியவ ளிடத்தே முயற்சிகள் கேட்டதும்
ஒழுங்காய் மாமியார் உரைத்தலும் அலுவலை
காய்ந்த தானியம் கணப்பில்நீ யெடுத்து
அரைக்கும் குடிற்கு அவசரம் ஏகுவாய்;
அந்த இடத்தைநீ சென்று அடைந்தபின்
அரைக்கும் குடிற்கு அவசரம் வந்தபின்
குயிற்குர லெடுத்துக் கூவுதல் கூடா
கண்டக் குரலால் கத்தலும் ஆகா
கூவலைத் திரிகைக் கைப்பிடிக் களித்திடு;
பாடலைத் திரிகைக் கைப்பிடிக் களித்திடு;
பலமிகும் ஒலியில் புலம்பலும் கூடா(து)
திரிகைக் கல்மேல் சேர்ந்தூத லாகா(து)
ஏனெனில் மாமனார் நினையா(து) இருக்க
இவ்விதம் மாமியும் எண்ணா(து) இருக்க
பலமாய்ச் சினங்கொடு புலம்பினாய் நீயென
நெஞ்சம் வெறுப்பொடு நெட்டுயிர்த் தாயென.

அரைத்த மாவை அரித்தெடுத் தருமையாய்
தட்டிலே வைத்து வீட்டுள் கொணர்வாய்,
மென்மை ரொட்டிகள் மெதுவாய்ச் சுடுவாய்
கவனமாய்ப் பிசைந்தமாக் களியிலே யிருந்து,
அங்கிங்கு கட்டிமா அமைதல்கூ டாது
புளித்தமாச் சேராது போகலா காது.

சரிந்ததோர் தொட்டியாங் கிருந்திடக் காண்பாய்
தொட்டியைத் தூக்கியுன் தோளிலே வைத்து
கைவாளி யொன்றைக் கக்கத் தெடுத்து
புனலள் ளிவரப் போதுறை நோக்கி
தொட்டியை யழகாய்த் தோளில்நீ சுமப்பாய்
கொளுவிநீ சுமந்தாய் கொண்டோர் **காத்தடி
வாயுபோல் விரைந்துநீ வீடு திரும்புவாய்

குளிர்ருதுக் காற்றெனக் குறுகுவாய் கடிதில்
சற்றும் சோம்புதல் நீர்த்துறைக் கூடா(து)
அத்துடன் ஓய்வுறல் ஆகா(து) கிணற்றடி
ஏனெனில் மாமனார் நினையா(து) இருக்க
இவ்விதம் மாமியும் எண்ணா(து) இருக்க
உன்மத்த மாயினாய் உன்னுருப் பார்த்தென
உன்னையே பார்த்துநீ உளமகிழ்ந் தனையென
உன்செந் நிறத்து உருவம் தண்புனல்
மருண்டனை கிணற்றிலுன் வளர்எழில் கண்டென.

நீள்விற கடுக்கில் நீபோய் நிற்கையில்
விறகை யெடுக்க விரும்புமவ் வேளையில்
நிந்தையாய் விறகை நீநோக் காதே
**அரசம் விறகை அளவொடு நீபெறு
விறகை மெதுவாய் வீழ்த்திடு மண்ணில்
ஓசைகடுமையாய் ஒன்றும் வராமலே
ஏனெனில் மாமனார் நினையா(து) இருக்க
இவ்விதம் மாமியும் எண்ணா(து) இருக்க
வெறுப்பினால் விறகதை விட்டெறிந் தாயென
கடுஞ்சின மதாலெழுங் கடுமொலி யதுவென.

நெடுங்களஞ் சியவறை நீசெ(ல்)ல நேர்ந்தால்
அரைத்தமா அள்ளிநீ அயல்வரப் போனால்
களஞ்சியத் தில்வீண் காலம்போக் காதே
களஞ்சியப் பாதையில் கழியேல் வெகுகணம்
ஏனெனில் மாமனார் நினையா(து) இருக்க
இவ்விதம் மாமியும் எண்ணா(து) இருக்க
பலருக்கு மாவைநீ பங்கிட் டாயென
கொடுத்தனை கிராமக் கோதையர்க் கேயென.

சமையல் பாத்திரம் சரியாய்க் கழுவையில்
மரத்தட் டுகளை மற்றுநீ யலம்பையில்
கழுவிடு குடுக்கைகள் கைபிடி யதனொடே
கலய(த்து)க் குழிவிழும் கரையையும் கழுவுநீ
மறவா(மல்) சாடியின் மறுபுறம் கழுவுநீ
கைபிடி நினைவில்வை கரண்டிக ளாகிடில்.

கரண்டிகள் தொகையைக் கவனத்(து) இருத்துக
எண்ணிடு பாத்திரம் எல்லாம் பக்குவம்
அல்லது நாயெடுத் தவைசெல வழியுள
பூனையும் சிலதைப் புறங்கொடு போகலாம்
குருவிகள் பறவைகள் கொடுசெல வாய்ப்புள
நிலத்திலே பரப்பியே நீக்கலாம் பிள்ளைகள்
இருக்கிறார் கிராமம் ஏர(ா)ளம் பிள்ளைகள்
சிறுதலை படைத்திட்ட சிறுவர்ஏ ராளம்
சிறுவர் சாடிகொடு செல்வராங் கிருந்து
அச்சிறார் எடுத்தெறிந் தகப்பைகள் பரப்புவார்.

நீராவிக் குளியல் நேரமா லையிலே
சுத்தநீ ரிறைத்துத் **தூரிகை கொணர்ந்து

அவைமெது வாக்கி ஆயத்த மாக்கி,
புகைவெளி யேற்றிப் பொருந்தும் பதமதை,
நீள்கணம் சவுனா(வில்) நிற்றலும் கூடா(து)
அதற்கா யாங்கிருந் தகல்தலு மாகா(து)
ஏனெனில் மாமனார் நினையா(து) இருக்க
இவ்விதம் மாமியும் எண்ணா(து) இருக்க
சவுனாப் பலகையில் சாய்நதிருந் தாயென
குதித்துப் பலகையில் **கும்மலித் தாயென.

மீண்டுநீ அங்கிருந்(து) வீட்டுள் வந்ததும்
மாமனார் குளிக்க மனமுவந் துரைப்பாய்:
'ஓ,என் அன்புடை உயர்மா மாவே!
ஆவிக் குளிப்பறை ஆயத்த முள்ளது
தூயநீ ரிறைத்துத் தூரிகை வைத்துள்ளேன்
பலகைகள் யாவையும் பாங்காய்ப் பெருக்கினேன்
மனம்நிறை யும்வரை மகிழ்வாய்க் குளிப்பீர்
நினைப்புபோல் நிறைவாய் நீரா டுங்கள்
நீராவி இயக்கம் நேர் கவனிப்பேன்
நீள்மே டையின்கீழ் நின்றே இயக்குவேன்.'

நிதம்நூல் நூற்கும் நேரம் வந்திடில்
நெய்தல்வே லைக்கு நேரம் வந்திடில்
கிராமம் வென்று கேளேல் கருத்து
அறிவுரை வேண்டி **அகழ்கடந் தேகேல்
அடுத்தவர் வீட்டுக் கதுகேட் டேகேல்
**பாவுநூல் கேட்டுப் படரேல் புதுவிடம்.

நூற்றெடுப் பாய்நீ நூலை உனக்காய்
நெசவு(ப்)பா வுநூலை நீஉன் விரல்களால்
சற்று(ப்)பா வுநூலைத் தளர்ச்சியாய் நூற்று
இறுக்கமாய் இழைநூல் என்றும் பின்னு;
உறுதியாய்ப் பந்துபோல் உடன்அதைச் சுற்றிநீ
உருளையில் பலமாய் உடனதைச் சேர்த்து
திருகு விட்டத்தில் திடமிணைத் ததனை
நெய்யும் கருவியில் நேராய்ப் பூட்டுவாய்; கைத்தறிச் சட்டம் கனபலத் தியக்கி
ஊடிழைக் **கயிற்றை உடன்மெது விழுப்பாய்
அடுத்ததாய் இ(ல்)லப்பல் லாடைகள் நெய்வாய்
கம்பளித் துணியிலே கவின்பா வாடைசெய்
அவ்வா றோராட்டு உரோமத்(தால்) ஆக்குவாய்
ஒருகுளிர் ருதுஆட்(டு) உரோமத் திருந்து
வசந்தச் செம்மறி மணிக்குட்(டி) இருந்து
வளர்கோ(டைச்) செம்மறி மறியாட் டிருந்து.

நான்கூ றுகையில்நீ நனியிவை கேட்பாய்
இன்னமும் சொல்வதை இப்போ(து) கேட்பாய்
பார்லி(த்)தா னியத்திலே 'பீர்'நீ வடிப்பாய்
பகர்சுவை மாவூ(றற்) பானம் வடிப்பாய்
ஒருமணிப் பார்லியாம் அரிசியி லிருந்து
பாதியாம் மரமதன் படுவிற கெரித்து.

பார்லிப் பானம் பக்குவம் செய்கையில்
மாவூ(றற்) பானம் வளர்சுவை யாக்கையில்
கொளுவியால் நீயதைக் கிளறுதல் ஆகா(து)
குச்சியால் கிளறுதல் கூடா(து) நீயதை
உன்கை முட்டியால் கிளறுதல் வேண்டும்
கிண்டுதல் வேண்டும் கொண்டுள் ளங்கை;
அடிக்கடி ஆவிக் குளிப்பறை செல்வாய்
முளைத்த முளையெதும் மழுங்கா தமைப்பாய்
அமர்தல் பூனைகள் ஆகா(து) முளைமேல்
கூடா(து) பூனையின் குட்டிகள் படுத்தல்
ஓடியே வந்திடும் ஓநாயென் றஞ்சிடேல்
பயப்பட வேண்டாம் பருவிலங் குறுமென
நீராவிக் குளிப்பறை நீசெல்லும் போது
நடுச்சாமத் தினிலும் நடக்குமட போதுநீ.

வெளியார் எவரும் வீட்டுக்கு வந்தால்
வெளியாரை என்றும் வெறுத்த லாகாது
எப்போதும் நலமுடை இல்லத் துளது
வரவேற்க வெளியார் வகையாம் பொருட்கள்
இறைச்சித் துண்டுகள் இருக்கும்ஏ ராளம்
எழிலார் பலக(ா)ரம் இருக்கும்எவ் வளவோ.

அன்னியர் வந்தால் அடுத்தம ரச்சொல்
அவரோ டமைதியாய் உரையா டிடுவாய்
சுவையா(க) யூட்டு சொற்கள்வந் தவர்க்கு
ஊண்ரசம் தயாராய் உற்றிறக் கும்வரை.

அவர்பின் இல்விட் டகலும் வேளை
எழுந்து 'போய் வருவேன்' எனப்பிரி நேரம்
வந்தவர் பின்போய் வழியனுப் பாதே
வெளிப்பட வேண்டாம் வழிவாய் நுழைந்து
ஆத்திரம் கொள்வார் அரியஉன் கணவர்
அழகுறும் உன்னவர் அருவருப் பாரதை.

சிலகணம் நின்மணம் சித்தமா யானால்
எங்கெனும் பக்கத் தேகவேண் டுமென
பரிவொடு போக விடையது கேட்பாய்
அயல்வீட்(டில்) உரையசெய அனுமதி கேட்பாய்;
அவ்வா றுரையசெய அயல்வீ டேகினால்
கவனமாய்ப் பொருளு(ள்)ள கதைகளைச் சொல்வாய்
உள்ளகக் குறைகுற்றம் உரைத்தல்ஆ காது
இறக்கமாய் மாமியை இயம்பல்ஆ காது.
வளம்நீ போம்இல் மருகியார் கேட்பார்
கேட்பார்கள் எவரெனும் கிராமமங் கையர்கள்;
'உனக்கிங் கீவாளா உயர்வெ(ண்)ணெய் மாமி
உன்இல் முன்நாள் அன்னையைப் போல?'

ஒருக்காலும் இவ்வாறு உரைக்கா தேபதில்:
'மாமியார் எனக்குங்(கு) வழங்கார் வெண்ணெய்!'
அவளுனக் கென்றும் அளிப்பளே என்பாய்

அகப்பையில் நிறைவாய் அளிப்பளே என்பாய்
ஒருகால் கிடைத்திடும் உயர்கோ டையிலே
குளிர்நாளி **லிருந்தது கூடவே இருமை.

இன்னும் நான்சொல இவைநீ கேட்பாய்
இனியும் சொல்வதை இப்போ(து) கேட்பாய்
இந்தஇல் லகத்திலே யிருந்துநீ ஏகி
மற்றொரு வீடு வரும்போ தினிலே
உனையீன் அன்னையை ஒருகா(லும்) மறவேல்
தாயவள் உள்ளம் தளரவை யாதே;
உனைவளர்த் தெடுத்தவள் உனதுதா யன்றோ
முலையால் இனிதாம் அமிழ்துதந் துயர்த்தினள்
தரமாம் உடலால் தனையே தந்தாள்
வெள்ளையாம் உடலால் விரும்பிய தீந்தாள்;
இரவுகள் எத்தனை உறங்காக் கழித்தாள்
எத்தனை நாள்ஊணை எடுத்துண மறந்தாள்
தனித்ததொட் டிலில்உனைத் தாலாட்டு கையில்
சீராட்டி வளர்க்கையில் சிசுவாய்த் தானும்.

தத்தம் அன்னையை தாம்எவர் மறப்பரோ
தாயவள் இதயம் தளர்வுறச் செய்வரோ
மரண உலகவர் புகாதிருக் கட்டும்
தூயநன் நெஞ்சோடு துவோனியின் உலகு:
மரண உலகம் கடும்விலை கொடுக்கும்
துவோனியின் உலகு கொடும்பரி சளிக்கும்
தாயினை மறந்த தரங்கெட் டோர்க்கு
தாய்தளர்ந் திடச்செய் தீமனி தர்க்கு;
துவோனியின் மகளார் சொலிலிகழ்ந் தேசுவார்
கன்னியர் சாப்புவிக் கலகஞ்செய் திடுவர்:
'அன்னையை மறத்தலும் எங்ஙனம் ஆனது?
தன்தாயை எவ்வாறு தளரவிட லானது?
அன்னையே உழன்றாள் அளவிலாத் துன்பம்
பெற்றவள் பட்டது பெருந்துய ரன்றோ
நீராவி யறையில் நீண்(டு)சய னித்தாள்
பரப்பிவைக் கோலைப் படுத்தாள் அதன்மேல்
அப்போ துனையீன் றளித்தவந் நாளில்
எளிய பிறவியே எடுத்துனைச் சுமக்கையில்!' "

முன்நிலத் தங்கோர் முதியோள் இருந்தாள்
மேலா டைதரி(த்த) வியன்முது கிழவி
கிராமக் களஞ்சியம் திரிந்து வருபவள்
அந்தவூர் வீதி அலைந்தே திரிபவள்
இந்தச் சொற்களில் இயம்பினள் அவளே
இயம்பினள் அவளே இயம்பினள் இவ்விதம்:
"சேவலொன் றினியதன் சோடிக் குரைத்தது
கோழியின் குஞ்சுதன் அழகுக் குரைத்தது
காகம் **பங்குனி மாதம் கரைந்தது
இனிய வசந்தத் திசைத்துப் பறந்தது;
பாடலை நானே பாடுதல் வேண்டும்
அடுத்தவர் பாடலை நிறுத்தலும் வேண்டும்:

அன்புளோர் உண்டு அவரவர் வீட்டில்
அன்புளோர் அவரவர் அருகிலே யுள்ளார்
எனக்கிலை அன்புளோர் இல்லமு மில்லை
என்றுமே அன்புளோர் இல்லா துள்ளேன்.

நீகேள் சோதரி நான்கூ றுகையில்
கணவனின் இல்நீ கால்வைக் கையிலே
ஏற்று நடந்திடேல் எண்ணம் கணவனின்
நான்பேதை ஏற்று நடந்ததைப் போல
**வானம் பாடிநா மணாளனின் எண்ணம்
என்பெருங் கணவனின் இதய மதுவே.

என்வாழ் நாளில் இருந்தேன் மலர்போல்
பற்றையில் வளர்ந்த பசும்புலா யிருந்தேன்
முன்வெடித் தெழும்பிய முளையா யிருந்தேன்
முகைத்து நீண்ட மொட்டா யிருந்தேன்
**தேன்சிறு பழமெனச் செப்பிடப் பட்டேன்
பொன்னெனப் பெருமையாய்ப் புகன்றிடப் பட்டேன்
தந்தையார் தோட்டக் காட்டுவாத் தானேன்
தாரா வாய்த்திரிந் தேன்தாய் நிலத்தில்
சகோதரன் அருகுநீர்ப் பறவையா யானேன்
சகோதரி பக்கம் தனில்சிறு **புள்நான்;
பாதையின் வழியில் பூவாய் நடந்தேன்
வயல்வெளி களிற்சிறு பழமா யிருந்தேன்
தொடர்நீர்க் கரைமணல் துள்ளித் திரிந்தேன்
மலர்நிறை மேடெலாம் மகிழ்ந்தா டிட்டேன்
பள்ளத் தாக்கிலே பாடித் திரிந்தேன்
ஒவ்வொரு குன்றிலும் உயர்ந்திசை பாடினேன்
வளமுறு சோலைகள் விளையாட் டிடமாய்
மகிழ்ச்சியின் இடமாய் மாறின தோப்புகள்.
தன்வா யாலே தான்நரி வீழ்ந்தது
கீரிதன் நாக்கால் கெட்டகப் பட்டது
கணவனின் வீட்டைக் காரிகை எண்ணினள்
மற்றொரு இ(ல்)லிற்கு வழிமுறை தேடினள்:

ஆதலால் மகளிர்க் காம்இயல் நெறியிது
மகளாய்ப் பிறந்தவள் மாறியே மனம்பின்
மணாளன் வீட்டிலே மருமக ளாவதும்
அடிமையாய் மாமியார் அகத்துக்(கு) ஏகலும்.

விழுந்தேனொர் அந்நிய வியன்நிலம் பழமென
மற்றொரு சிறுபழ மாய்ப்புனற் கிடந்தேன்
தண்செம் **பழம்நான் சஞ்சலங் கொண்டேன்
நிலநலப் **பழம்நான் நிந்தனை கண்டேன்
ஒவ்வொரு மரமும் உடனெனைக் கடிக்கும்
இன்னொரு **வகைமரம் என்னையே கிழிக்கும்
மிலாறு மரமது மிகஎனை வருத்தும்
**அரசெனைப் பார்த்து அதிரக் குரைக்கும்.

மணந்தபின் மாப்பி(ள்)ளை மனைக்குச் சென்றேன்

மாமியின் மனைக்கு மகிழ்ந்துகொண் டேகினர்
இங்ஙனம் அப்போ தெனக்குக் கூறினர்
மணந்தபின் அங்கே மணப்பெண் சென்றால்
ஆறாம் தேவதா ரமைத்தநல் வீடுகள்
அறைகளின் தொகையோ அதிலிரு மடங்காம்
காட்டின் எல்லையில் களஞ்சியக் கூடம்
பாதையின் மருங்கில் பன்மலர் மேடை
பள்ளத் தரையில் பார்லி வயல்கள்
புல்வெளி யருகினில் **புல்லரி சிப்புனம்
தொட்டிகள் நிறையத் தூற்றிய தானியம்
தூற்றாத் தானியத் தொட்டிகள் அனேகமாம்
கிடைத்த **காசுகள் இதுவரை நூறாம்
இனிவரப் போவன இன்னொரு நூறாம்.

பேதைநான் சென்றதும் பெற்றது பலவகை
ஏழைநான் கையினில் எடுத்தது ஒருவகை:
அகமதைத் தாங்கிய தாறே தூண்கள்
ஏழு மரங்களில் இல்லம் இருந்தது
கருணையில் லாமை காட்டில் இருந்தது
அன்புஇல் லாமை அமைந்தது தோட்டம்
பாவியென் பேணலில் பாதைகள் இருந்தன
தீய நினைவுகள் சோலைகள் அனைத்திலும்
தொட்டிகள் நிறையத் துயர்தரும் தொல்லைகள்
துயர்தரப் போகும் தொட்டிகள் அனேகம்
இகழ்வாம் சொற்கள் இதுவரை நூறாம்
இனிவரப் போவன இன்னொரு நூறாம்.

எதையுமே பொருட்டாய் எண்ணிய தில்லைநான்
மாசில்லா வாழ்வை வாழமுற் பட்டேன்
முழுமதிப் பைப்பெற முயன்றனன் அங்கே
விரும்பினேன் அன்பை வென்றிட இவ்விதம்
வீட்டுள்ளே தீயினால் வெப்பமுண் டாக்கினேன்
விறகுச் சுள்ளிகள் சிராய்கள் பொறுக்கினேன்
நெற்றியைக் கதவில் நெட்டி முட்டினேன்
தலையைக் கதவு நிலையில் மோதினேன்;
அக்கத வம்வழி அன்னிய விழிகள்
நெருப்பிட மூலையில் நெருக்குறு நோக்கு
கூடத்து மத்தியில் கூர்கடை விழிநோக்(கு)
வெளியிலே இருப்பதோ வெறுப்பு நிறைந்தது;
வாயிலே வெந்தீ வரும்வெளி வீச்சு
நாக்கின் அடியிலே தீச்சுடர் பறக்கும்
கொடிய தலைவனின் தடிவா யிருந்து
அன்பிலா நாவின் அடிப்புற மிருந்து.

எதையும் பொருட்டாய் எண்ணிய திலைநான்
எப்படி யாயினும் ஒப்பேற்ற முயன்றேன்
அவர்களின் மத்தியில் அன்பாய் வாழ்ந்திட
சாந்தமாய் சுத்தமாய் தாழ்மையாய் வாழ்ந்திட;
முயலின் பாதமாய் முன்குதித் தோடினேன்
கீரியின் பாத நேர்சுவட் டேகினேன்

வெகுபொழு தாகி வீழ்ந்தேன் படுக்கையில்
இயைவை கறையில் எழுந்தேன் விழித்து;
ஆயினும் பேதைக் கங்கிலை மதிப்பு
ஏழைநான் அன்பை எங்கும் கண்டிலேன்
ஒருமலை பெயர்த்து உருட்டி யிருக்கலாம்
உயர்கல் இரண்டாய் உடைத்து மிருக்கலாம்.

வீணாய் ப் போனது நான்மா வரைத்தது
தானியம் கொழித்தது போனது பயனற
ஆங்கா ரங்கொள் மாமியின் ஊணாய்
கனலாம் தொண்டையால் கடித்தே விழுங்க
நீண்டமே சையிலே நேர்தலை யிடத்தே
தங்க விளிம்புத் தகுகிண் ணங்களில்;
பாவ மருமகள் யானோ உண்டது
திருகைக் கல்லில் சிதறிய மாவிலே
அடுப்படிப் பலகையே ஆனஎன் மேசை
மரத்தின் அகப்பைதான் வனப்புறென் கரண்டி.

எழுந்தது அடிக்கடி இன்னல் மனதிலே
மணாளன் வீட்டில் மருமக ளானதில்
படர்சதுப் புநிலப் பாசியை எடுத்தேன்
அவற்றில் ரொட்டியை அமைத்தேன் எனக்கு
கிணற்று நீரைக் கொணர்ந்தேன் வாளியில்
அதையே பானமாய் அருந்தினேன் நானும்;
பேதைநான் உண்டது தசைமீன் மட்டுமே
ஒருவகை **மீனையே உண்டேன் அபலையங்(கு)
மீன்வலை மீதுநான் மெதுவாய்ச் சாய்கையில்
நடுவில் தோணியில் நான்தள் ளாடையில்;
என்றும் பெற்றதே இல்லையோர் மீனும்
மாமியார் எனக்கு வழங்கிய உணவில்
ஒருநாள் தேவைக் குகந்த மீனினையோ
ஒருபொழு துணவுக் குகந்த மீனினையோ.

கோடையில் கால்நடைக் குணவு தேடினேன்
குளிரில் **கவர்க்கோல் கொடுதொழி லாற்றி
ஊதியம் பெற்றிடும் ஊழியர் போலவும்
கூலிக்கு வந்தகொத் தடிமையைப் போலவும்;
என்றும் மாமியின் இல்லக மதனிலே
எனக்குக் கிடைத்தவை இவையிவை அலுவல்கள்
சூடடிக் களம்மிகப் பெரியசூ டடிக்கோல்
சவுனா(வில்) கிடைத்தது தனிக்கன நெம்புகோல்
கடற்கரை வேலைக்(குக்) கடினமாய் ஒருதடி
பண்ணைமுற் றத்திலோர் பரும்எரு வாரி
நான்சோர் களைப்பை நம்பினோர் இலையே
இளைத்தி(ன்)னற் பட்டதை எண்ணினோர் இலையே
வீரர்கள் களைத்து விறலறச் சோர்ந்துளர்
பரிக்குட் டிகளும் படுவதுண் டிளைத்தி(ன்)னல்.

ஏழைப்பெண்நான் இங்ஙனம் நாள்தொறும்
வேலைநே ரத்தில் வேலைகள் செய்துளேன்

தோளால் யாவையும் தூக்கிச் சுமந்துளேன்;
அக்கா லம்போய் அடுத்து வந்தது
தகிஅனற் கிடங்கெனைத் தள்ளினர் இப்போ(து)
தீயதன் கரங்களில் திணித்தனர் இப்போ(து).

ஆத(ா)ரம் இன்றி அலம்பும் கதைகள்
இகழும் கதைகள் இசைத்தனர் நாவால்
ஒழுங்குறும் எனது பழக்கத் தெதிராய்
வாகார் புகழ்கொளென் மதிப்பிற் கெதிராய்;
தலையில் வார்த்தை மழையாய்ப் பொழிந்தன
மொழியொடு பேச்சும் கதையாய் வளர்ந்தன
கொடிய நெருப்பின் கொழுங்கனற் பொறிபோல்
இரும்புறை விண்மழை பொழிந்தது போல.

ஆயினும் எனையிது அறமாற் றிலது
இப்படிச் சென்று என்நாள் கழிந்திடும்
ஆங்கா ரங்கொள் அக்கிழத் துதவியாய்
அனல்தொண் டைக்கு ஆனகூட் டாளியாய்;
ஆயினும் எனக்கின்னல் ஆனது இவ்விதம்
பெருந்துயர் வந்து பெருகிய திவ்விதம்
மணாளர் எனக்கு(ஓ) நாயாய் மாறினார்
கவினுறும் என்னவர் கரடியாய் மாறினார்
புறங்காட்(டித்) துயின்றார் அருகிலே அயின்றார்
புறங்காட்(டிச்) செய்தனர் புரியும் செயலெலாம்.

இதையே எண்ணிநான் இருந்தழு தரற்றினேன்
களஞ்சிய அறையில் கடிதுசிந் தித்தேன்
நடந்த நாட்களை நான்நினைந் திட்டேன்
இளமைப் பொழுதெலாம் எண்ணிப் பார்த்தேன்
தந்தையின் நீண்ட முன்றில் பரப்பினில்
அன்புறும் அன்னையின் அகத்து வெளியினில்.

இவ்வா றடுத்து இயம்பத் தொடங்கினேன்
நானே கூறினேன் நனியிஃ துரைத்தேன்
'எனது அன்னை என்பவள் அறிவாள்
அப்பிளை எங்ஙனம் அடைவது என்பதை
வளர்ப்பது எங்ஙனம் வளர்முளை என்பதை,
ஆயினும் செடிநட அவளோ அறியாள்:
எழிலுறும் முளையை இவ்விதம் நட்டனள்
தீமை நிறைந்த தீய இடங்களில்
கொடுமை நிறைந்த கொடிய இடங்களில்
மிலாறு வேர்விட்ட மிகக்கடு மிடங்களில்
ஆயுள் முழுவதும் அழுவதற் காக
புணர்வாழ் நாளெலாம் புலம்புதற் காக.

என்தகு திக்கு இருக்கலாம் ஒழுங்கொடு
நன்மை நிறைந்த நல்ல இடங்களில்
பரந்தமுற் றத்துப் படர்நீள் வெளிகளில்
அகன்று விரிந்த அணிநிலத் தரைகளில்
சீரியர் ஒருவரின் சிறந்த துணையாய்

சென்னிறங் கொண்டவர் சீருறும் துணையாய்;
எனினும் மந்தர் இவருட னிணைந்தேன்
கொழுத்துப் பருத்த கொழுநரைச் சேர்ந்தேன்:
காணும் இவருடல் காகம் போன்றது
அண்டங் காக அகல்மூக் குடையவர்
ஓடிஇரைக் கலை ஓநாய் போன்றவர்
புறத்தோற் றமெலாம் கரடியைப் போன்றது.

பெற்றிருப் பேனே இப்படியொ ருவரை
ஆனகுன் றினிலே அலைந்து திரிந்து
தேவ தாருவைத் தெருவினில் எடுத்து
பூர்ச்சங் கட்டையைத் தோப்பினில் எடுத்து
ஒருபிடி புல்லால் உறுமுகம் செய்து
தாடியை அழுகிய பாசியால் படைத்து
பாறையால் வாயும் பதக்களித் தலையும்
கனலின் கரியினால் கண்களும் அமைத்து
மிலாறுவின் கணுக்களால் மிளிர்செவி செய்து
**மரக்கவர்க் கால்களும் அமைத்திருந் தாலே.'

இத்துணை துன்பத் திவ்விதம் பாடினேன்
பெருந்துயர் வந்ததால் பெருமூச் செறிந்தேன்
எழிலார் என்னவர் இதுகேட்க நேர்ந்தது
சுவரின் அருகிலே அவர்நிற் கையிலே;
அவ்விட மிருந்து அவர்வரும் வேளை
கூடத்துப் படிகளில் காலடி வைக்கையில்
அறிவேன் வருபவர் அவரே என்பதை
காலடி ஒலிஅடை யாளம் தெரியும்:
காற்றில் லாமலே கலைந்தது கேசம்
குழல்காற் றோட்ட மின்றி(யே) குலைந்தது
படர்சின முற்றதால் பல்லீறு தெரிந்தது
வெகுளியால் வெளியே விழிகள் வெறித்தன
கரத்திலே ஒருசிறு மரக்குச் சிருந்தது
வளைந்தகோ லொன்று மறுகக் கத்திலே
அதனால் என்னை அடிக்க விரைந்தனர்
தலையில் ஓங்கித் தந்து முடித்தனர்.
அந்திப் பொழுது அடுத்தே வந்தது
படுக்கைக் கென்னவர் படர்ந்தபோ தினிலே
கூடவே சாட்டையைக் கொண்டே சென்றார்
கொளுக்கி லிருந்த கொழுந்தோற் சாட்டையை
அதுவேறு யார்க்கு ஆகவு மல்ல
ஏழைப் பெண்ணாள் எனக்குத் தானது.

படுக்கைக் கியானும் படர்ந்தேன் பின்னர்
சென்றேன் உறக்கம் அந்தியில் வேண்டி
படுத்தேன் மணாளர் படுக்கையில் அருகில்
எனது மருங்கிலே என்னவர் படுத்தார்
முழங்கையால் எனக்கு முழுமையும் தந்தார்
வெறுப்புறும் கைகளால் வெகுவாய்த் தந்தார்
கொடிச்செடிக் குச்சியால் கொடுத்தார்எவ் வளவோ
கடற்பசு எலும்பின் கைப்பிடிச் சவுக்கிலும்.

படுகுளிர் அவரது பக்கத் தெழுந்தேன்
இருங்குளிர்ப் படுக்கையி லிருந்தே எழுந்தேன்
மணாளர் துரத்தி வந்தார் எனையே
வைதே விரட்டினர் வாயிலில் வெளியே
குறுகிக் கரங்களென் கூந்தலுள் நுழைந்தன
கையால் கூந்தலைக் கலைத்துத் துளாவினார்
குலைத்தனர் அலையக் கூந்தலைக் காற்றில்
பரந்து வளியிலே விரிந்திடச் செய்தனர்.

இதன்பின் செய்வது எவ்வழி முறைநான்
எவ்வறி வுரையினை ஏற்று நடப்பது?
உருக்கின் காலணி உண்டென் னிடத்திலே
இருந்தது செப்பினால் இயைந்த பட்டியும்
அவ்வீட் டின்சுவர் அருகினில் நின்றேன்
பாதை எல்லையின் ஓசையைக் கேட்டேன்
கோபம் சிலகணம் குறைந்திடு மென்றும்
ஆத்திரம் அடங்கிடும் அவர்க்கென எண்ணினேன்
ஆயினும் அவர்சினம் அடங்கவே யில்லை
அமைதியோர் காலும் அடைந்ததே யில்லை.

கடையில் என்னைக் கடுங்குளிர் பிடித்தது
வெறுப்பு வந்து வேகமாய்ச் சேர்ந்தது
அவ்வீட் டின்சுவர் அருகில்நான் நிற்கையில்
கதவின் அருகிலே காத்துநிற் கையிலே;
சிந்தனை செய்தேன் சீருற நினைத்தேன்:
இங்ஙனம் பொறுத்து இருப்பது சிரமம்
கடினம் சுமப்பது காலநீள் வெறுப்பை
இகல்நீள் கால இகழ்ச்சியை ஏற்பது
இந்தப் பிசாச எதிர்க்கண மத்தியில்
அரக்கர்கள் வாழ அமைந்தஇக் கூட்டினில்.

எழிலுறும் எனதுஇல்ல(த்)தை விட்டேன்
அருமையில் லத்தை அகன்று விலகினேன்
பலமிலா நிலையிலும் அலையத் தொடங்கினேன்
அலைந்தேன் சேற்றிலும் அலைந்தேன் நிலத்திலும்
பரந்தஆ ழத்து புனலிலும் அலைந்தேன்
சென்றேன் சகோதரன் செறிவயல் எல்லையும்;
காய்ந்த மரங்களும் கூவின அங்கே
இசைத்தது முடியுடை எழில்தேவ தாரு
காகங்கள் எல்லாம் கரைந்தன கூடி
**பறவைகள் கூடிப் பண்ணொடு பாடின:
'இங்கே இருப்பதுன் இல்லமே யல்ல
இங்கே இருப்பதுன் பிறப்பிடம் அல்ல.'

எனக்குஅக்கறை இவைகளில் இல்லை
அண்மினேன் சகோதரன் அழகில்(ல) முற்றம்;
வீட்டின் வாயில் விளம்ப லாயிற்று
முற்றமும் என்னிடம் முறைப்பா டுரைத்தது:
'இல்ல(த்)தை நோக்கி எதற்காய் வந்தனை

எளிய பிறப்பே எதுகேட் டிவர்ந்தனை?
நின்(தந்)தை யிறந்து நெடுநா ளானது
உனைச்சுமந் தழகிபோய் ஓய்ந்ததே பலநாள்
நினக்கோர் அந்நியன் நிகர்த்தவன் சோதரன்
அவன்மனை(வி) ரஷ்ஷியா நாட்டாள் அனையளே.'

எனக்கு அக்கறை இவைகளில் இல்லை
வாயில் வழியாய் வந்தேன் வீட்டினுள்
கதவின் கைப்பிடி கடிதே பற்றினேன்
கைபிடி எனக்குக் கனகுளி ரானது.
வாயிலின் வழியாய் வந்ததும் வீட்டினுள்
கதவின் பக்கமாய் காத்துநின் றேன்கணம்;
வீட்டின் தலைவி மிகுகர் வத்தாள்
அருகெனை வந்து அணைக்கவு மில்லை
வரவேற் றுக்கரம் வழங்கவு மில்லை;
நானும் அவள்போல் நல்லகர் வத்தாள்
அருகுநான் அவளை அணைக்கவு மில்லை
கைகொடுத் தவளைக் கணிக்கவு மில்லை;
அடுப்பின் மீது அங்கைகள் வைத்தேன்
அடுப்பின் கற்கள் அனைத்தும் குளிர்ந்தன
திருப்பினேன் கைகள் நெருப்பின் பக்கமாய்
நெருப்பின் கரிகள் நேராய்க் குளிர்ந்தன.

வாங்கிலே சகோதரன் சோம்பி யிருந்தான்
அடுப்பின் பீடம் வெறித்துப் பார்த்தான்
பணைத்தோள் கரித்துகள் பலவடி யுயரம்
பருவுடல் இருந்ததோ பலசாண் அளவு
உயர்தலைச் தூசு ஒருமுழத் தளவு
கரிப்புகைப் படிவு அரையடி யளவு.

சகோதரன் அதிதி தன்னையே கேட்டான்
என்னையே புதிதாய் எழுந்ததாய்க் கேட்டான்:
'அன்னியர் எங்கிருந்து அலைகடந் தெழுகிறார்?'

அதற்குநான் உத்தரம் அளித்தேன் இவ்விதம்:
'தெரிந்தில தோவுடன் பிறந்தசோ தரியை
அறிந்திலை யோஉன் அன்னைபெற் றவளை?
ஒருதாய் வயிற்றுப் பிறந்தபிள் ளைகள்நாம்
ஒருபுள்(தா) லாட்டில் உயர்ந்தவர் நாங்கள்
ஒருவாத் தடைகாத் துதித்தகுஞ் சுகள்நாம்
ஒருகான் கோழியின் குடம்பையில் வளர்ந்தவர்.'
அப்போ(து) சோதரன் அழுதனன் இரங்கி
கண்களில் பெருகிக் கண்ணீர் வடிந்தது.

சகோதரன் பின்னர் தன்மனைக் குரைத்தான்
இனியதன் மனைவிக் கிவ்வா றியம்பினன்:
'என்சகோ தரிக்கு எடுத்துவா உணவெதும்!'
ஏளன விழியுடன் எடுத்துவந் தாள்மனை(வி)
அடுக்களை யிருந்து **இலைக்கறி ரசத்தை
ரசத்துக் கொழுப்பைச் சுவைத்திருந் ததுநாய்

நாயொன்று உப்பை நக்கி யிருந்தது
கறுப்புநாய் உணவை ருசிபார்த் திருந்தது.

சகோதரன் பின்னர் தன்மனைக் குரைத்தான்
இனியதன் மனைவிக் கிவ்வா றியம்பினன்:
'விருந்தா ளிக்கு அருந்து'பீர்' கொண்டுவா!'
ஏளன விழியுடன் எடுத்துவந் தாள்மனை(வி)
விருந்தா ளிக்கு வெறும்நீர் மாத்திரம்
அதுவும் சுத்தமாய் அமைந்திட வில்லை
கண்களைச் சகோதரி கழுவிய நீரது
அரியமைத் துனிமுகம் அலம்பிய நீரது.

சகோதரன் இல்லம் தனிலிருந் தகன்றேன்
பிறந்தகம் விட்டுப் பிறிதிட மலைந்தேன்
பேதைநான் நடந்து பிறநிலந் திரிந்தேன்
அலைதலும் திரிதலும் அதுபே தைக்காம்
நீர்க்கரை யோரம் ஏழைநான் நடந்தேன்
ஏழைநான் அலைந்து என்றும் திரிந்தேன்
என்றும் அன்னியர் இல்லத்து வாயிலில்
வெளியார் வாயிலின் வெளிக்கத வருகில்
எதிர்க்கரை வாழும் ஏழைப் பிள்ளையாய்
கிராமமா தரிக்கும் கீழ்நிலைப் பேதையாய்.

இப்போ(து) பலரைநான் என்கணாற் பார்க்கிறேன்
எத்தனை யோபேர் இவ்வித முள்ளனர்
வெறுப்புறும் குரலிலே வீசுவோர் வார்த்தைகள்
கொடிய குரலினைக் கொண்டு தாக்குவர்;
ஆயினும் இல்லையே அதிகபேர் என்னிடம்
அன்புறும் சொற்களை அளிக்கும் மானுடர்
இனியநல் வாயால் இதமாய்ப் பேசுவார்
அடுக்களை யதற்கே அன்பா யழைப்பவர்
மழையிலே நனைந்துநான் வந்திடும் வேளை
கொடிய குளிரில்நான் கொடுகிய நேரம்
ஆடையை உறைபனி மூடிய போது
பனிமழை ஆடையில் படிந்திட்ட காலை.

இளமையாய் ஒருகால் இருந்தநாட் களிலே
இப்படி வருமென இருந்திலேன் நம்பி
நூறுபேர் ஒன்றாய்க் கூறிய போதிலும்
நாக்குகள் ஆயிரம் நவின்றிட்ட போதிலும்
இத்துணை துயரம் ஏற்படும் எனக்கென
இந்தநாட் களிலே இப்படி வருமென
எனினும் வீழ்ந்தது என்தலை வீழ்ந்ததே
சுமைகளை என்கரம் சுமந்தது சுமந்ததே."

கலேவலா

பாடல் 24 - மணமகனும் மணமகளும் புறப்படுதல்.

அடிகள் 1 - 264 : மணமகன் மணமகளை எவ்விதம் நடத்த வேண்டும் என்றும் அவளைக் கொடுமைப் படுத்தக் கூடாது என்றும் மணமகனுக்கு அறிவுரை கூறுதல்.

அடிகள் 265 - 296 : ஒரு முதியவன் தனது மனைவியை, தன்னை விரும்பும்படி எப்படி மாற்றினான் என்ற அனுபவத்தைக் கூறுதல்.

அடிகள் 297 - 462 : மணமகள் தனது பிறந்தகத்தை விட்டு நிரந்தரமாகப் பிரிவதை உணர்ந்து அனைவரிடமும் கண்ணீருடன் விடை பெறுகிறாள்.

அடிகள் 463 - 528 : இல்மரினன் மணமகளைச் சறுக்கு வண்டியில் ஏற்றிப் பயணித்து மூன்றாம் நாள் மாலை வீட்டை அடைகிறான்.

அரிவைக் கிப்போ(து) அறிவுரை கிடைத்தது
மணமகள் தனக்கு வழிமுறை கிடைத்தது;
அரியஎன் சோதரற் கடுத்துநான் சொல்வேன்
வாயினால் எனது மாப்பிளைக் குரைப்பேன்:
"மாப்பிள்ளை யாரே, மதிப்புள சோதர!
சோதர னைவிடத் தூயசீ ருடையரே!
அன்னையின் மக்களில் அன்புமிக் குடையரே!
பிதாபெற்ற மகவில் பெரும்பண்பு உடையரே!
நான்மொழி கையிலே நன்குநீர் கேட்பீர்,
நான்மொழி கையிலும் நான்உரைக் கையிலும், 10
இசைபாடு மிச்சிறு **இளம்புள் பற்றி,
கொண்ட நின்சிறிய கோழியைப் பற்றி.

நவிலுக மாப்பிளாய், நன்றிநின் அதிர்ஷ்டத்(துக்கு)
நல்லதோர் பேற்றின் நலம்கிடைத் ததற்கு
நன்றி புகல்கையில் நன்கதைக் கூறும்:
நலத்தையே பெற்றீர் நலம்சந் தித்தீர்
படைத்தவன் உமக்குப் பயனுள தளித்தான்
இரக்கமுற் றிடுமவன் இனியதொன் றீந்தான்!
மனையாள் பிதா(வு)க்கு மனம்நிறை நன்றிசொல்(க)
அதற்கும்மே லாக அன்னைக்கு நன்றிசொல்(க) 20
பெண்ணையித் தகையளாய்ப் பேணிய செயற்கு
மணப்பெண்இத் தகையளாய் மாண்பொடீன் றதற்கு.

இருப்பவள் அருகில் இளம்புனி தப்பெண்
உம்முடன் இணைந்தவள் உள்ளொளி நிறைந்தவள்
வாய்த்தவள் உமக்கு வண்ணமாம் வெண்மையள்
அழகுளாள் நும்காவ லதனுளே வந்தவள்
உன்மருங் கிருப்பவள் உறுதிமிக் குடையவள்
காரிகை நின்அயல் கன்னமே சிவந்தவள்
போரடி களத்திலே புதுப்பலப் பாவையள்
வைக்கோல்தூற் றிடவ(ல்)ல வனப்பான வனிதையள் 30
துணிமணி அலம்பலில் துடிப்பான தையலாள்

துணிகளை வெண்மையாய்த் தோய்த்திடும் திறனுளாள்
நூல்நூற்றல் நுட்பமே மேலாகக் கற்றுளாள்
கருமமாம் துணிநெய்தல் தரமிகச் செயவலள்.

கைத்தறி அச்சொலி கனதொலை ஒலிக்கும்
குயிலொன்று மலையுச்சி கூவிடும் ஒலிபோல்;
நுவல்மகள் கைத்தறி நூனாழி கலவெனும்
காட்டுளே ஒருகீரி கலகலத் திடல்போல்;
நூல்சுற்றும் சில்சுற்றி நுட்பமாய்ச் சுழலும்
அணில்வாயில் சுழல்கின்ற **கூம்புக்காய் அதுபோல்;
அக்கிரா மத்தோர் அமைதியாய்த் துயின்றிலர்
நாட்டின் மாந்தர்கள் நன்றாய்த் துயின்றிலர்
சட்டம்கைத் தறியினில் சடசட ஒலியினால்
நுவல்மகள் கைத்தறி நூனாழி ஓசையால்.

மாப்பிள்ளை யாரே, வளர்இள மையரே!
கணவரா னவரில் கவினுடை யவரே!
அரிவாள் கூர்மையாய் ஆக்குவீர் உருக்கில்
சிறப்புமிக் கொருபிடி யதற்கிணைத் திடுவீர்
வைப்பீர் செதுக்கி வாயிற் புறமதை
மரத்துக் கட்டையில் அடித்திறுக் கிடுவீர்;
பகலொளி வந்து பட்டொளிர் நேரம்
புற்றரை நிலத்துப் போவீர் மாதுடன்
பார்ப்பீர் அங்கே படபடக் கும்புல்
கடின வைக்கோல் கலகலப் பதனை
கிளர்கோ ரைப்புல் கிலுகிலுப் பதனை
**காரப் பூண்டுகள் கவின்மெது வசைவதை
மேட்டு நிலங்கள் மிகுமட்ட முறலை
நாற்றுச் செடிகள் நனிமுறி படலை.

மற்றொரு நாளிவ் வாறே வந்ததும்
நல்ல நூனாழி நங்கைக் களிப்பீர்
அடர்பா(வு) பலகையும் அளிப்பீர் பொருத்தமாய்
தரப்பா வோடுஞ் சட்டமும் தருவீர்
மெல்லநற் செதுக்கிய மிதிக்கும் பலகையும்
கைத்தறிக் கான கனபொருள் தருவீர்
பூவையைக் கைத்தறிப் பொறியிலே நிறுத்தி
பாவோடு பலகையைப் பைங்கரத் தளிப்பீர்:
அப்போநூ னாழி அசையும் ஒலியெழும்
கைத்தறிப் பொறியும் கடகடத் தோடும்
கிராமம் கைத்தறிச் சத்தம் கேட்கும்
அதையும் மிஞ்சும்நூ னாழியின் ஓசை.

வயதுறும் பெண்கள் வியப்பாய் நினைப்பர்
கிராமப் பெண்கள் கேட்பர்இவ் வாறு:
'நேராய் யார்துணி நெய்வ(து) இப்போது?'
தகுந்ததோர் பதிலைத் தருவிர்அப் போது:
'சொந்தஎன் அன்பவள் துணிகள் நெய்கிறாள்
இதயத் தினியவள் எழுப்புவள் ஓசை;
எங்கெனும் துணியில் இயைஒழுங் கிலதா

அசைவில்நூ னாழி இழைதப் பியதா?'
'இல்லை துணியில் ஒழுங்கழிந் திலது
அசைவில்நூ னாழி இழைதப் பியதிலை:
நேர்நிலா மகளார் நெய்தது போல
பெருங்கதிர் மகளார் பின்னிய வாறு
**தாரகைக் குலத்தின் தரமார் கைத்திறன்
விண்மீன் மகளின் மிகுவனப் புச்செயல்.'

மாப்பிள்ளை யாரே, மதிப்புளச் சோதர!
கணவரா னவரில் கவின்படைத் தவரே!
இப்போ திங்கிருந்(து) எழப்போ கின்றீர்
இப்போ திங்கிருந்(து) எழுகிறீர் பயணம்
உமக்கு வாய்த்த ஒளிரிளம் பெண்ணுடன்
அழகு படைத்த அருங்கோ ழியுடன்

**சிட்டுக் குருவியை விட்டிடீர் அலைய
இசைபாடு மிந்த இன்சிறு **பறவையை
நன்நீர்க் கரைவழி நகரவிடாதீர்
வேலி மூலையில் விடாதீர் செல்ல
அடிமரக் கட்டைகள் அமைந்த இடத்திலும்
பாறை நிலத்திலும் படர விடாதீர்.
என்றுமே தந்தையின் இல்லத்தி லில்லை
தொடரன் பன்னையின் தோப்பிலும் இல்லை
நவில்நீர்க் கரைவழி நகர்ந்ததே யில்லை
வேலியின் மூலைக் கேகிய தில்லை
அடிமரக் கட்டைகள் அமைந்த இடத்திலும்
பாறை நிலத்திலும் படர்ந்ததே யில்லை.

மாப்பிள்ளை யாரே, மதிப்புள சோதர!
கணவரா னவரில் கவின்படைத் தவரே!
இப்பெண் உமதவள் ஏகவி டாதீர்
அன்புக் குரியளை அகலவி டாதீர்
திகழ்கோடி மூலையில் திரியவி டாதீர்
அமைகோடி மூலையில் அலைய விடாதீர்.

என்றுமே தந்தையின் இல்லத்தி லில்லை
முந்திய அன்னையின் இல்லத்தி லில்லை
திகழ்மூலை கோடியில் திரிந்ததே யில்லை
அமைகோடி மூலையில் அலைந்ததே யில்லை;
இருப்பாள் சாளரப் பீடம்மெப் போதும்
இருப்பாள் நிலத்தில் எழில்தரை மத்தியில்
மாலை தந்தையின் மகிழ்ச்சி வடிவாய்
அதிகாலை அன்னை அன்புமா யிருப்பாள்.

அதிர்ஷ்டமில் கணவ அனுதினம் வேண்டாம்
இந்தக் கோழியை என்றும் அனுப்புதல்
**சேம்பங் கிழங்கு தேர்ந்திடிக் கும்உரல்
மரப்பட்டை ரொட்டிக் கரைக்கும் மடைத்தொழில்
**வைக்கோல் அரைத்துமா ரொட்டி சுடற்கு
இடித்திடத் தேவ தாரெழிற் பட்டை.

என்றுமே தந்தையின் இல்லத்தி லில்லை
தொடரன் பன்னையின் தோப்பிலும் இல்லை
சேம்பங் கிழங்கு தேர்ந்திடிக் கும்உரல்
மரப்பட்டை ரொட்டிக் கரைக்கும் மடைத்தொழில்
வைக்கோல் அரைத்துமா ரொட்டி சுடற்கு
பட்டைத்தா ரிடிக்கவும் படர்ந்தன ளேயிலை.

ஆயினும் நீரிக் கோழியை அனுப்பலாம்
குவியலாய்த் தானியம் குவிந்துள்ள மேடு
ஒருகொள் கலத்தை வெறுமையாக் கற்கும்
தானியக் கலத்தில் தானியம் பெறற்கும்
பருமனாய் ரொட்டி பலசுட் டெடுக்கவும்
தானியப் பானம் தரமாய் வடிக்கவும்
தட்டிமாக் கோதுமை ரொட்டிகள் சுடவும்
உணவுக்கு மாப்பசை அமைக்கவு மனுப்பலாம்.

மாப்பிள்ளை யாரே, மதிப்புள சோதர!
இக்கோ ழிக்கு இந்நிலை வேண்டாம்
எங்கள்இவ் வாத்துக் கிந்நிலை வேண்டாம்
ஏங்கித் துயருற் றிவளழ வேண்டாம்
ஒருக்கால் துயருறும் ஒருநிலை வந்தால்
வனிதைக் கேக்கமும் வருத்தமும் வந்தால்
புகல்பழுப் புப்பரி பூட்டுமேர்க் காலில்
அல்லது வெள்ளைக் கலங்கா ரம்செய்(க)
தந்தையின் இல்லம் தையலைக் கொணர்க
அவளே பழகிய அன்னையின் இல்லம்.

இக்கோ ழிக்கு இந்நிலை வேண்டாம்
இசைபாடு **பறவைக் கெப்போதும் வேண்டாம்
நீர்பெறும் அடிமையாய் நினைக்கவும் வேண்டாம்
கூலிக்கு வந்தளாய்க் கொள்ளவும் வேண்டாம்
தடைபோட வேண்டாம் களஞ்சியக் கூடம்
பூட்டவும் வேண்டாம் புறவெளி நிறுத்தி!
என்றுமே தந்தையின் இல்லத்தி லில்லை
தொடரன் பன்னையின் தோப்பிலும் இல்லை
தம்முடை அடிமையென் றெண்ணிய தில்லை
கூலிக்கு வந்ததாய்க் கொண்டது மில்லை
தடைபோட்ட தில்லைக் களஞ்சியக் கூடம்
பூட்டவு மில்லைப் புறவெளி நிறுத்தி.

கோதுமை ரொட்டியைக் கொள்துண் டாக்குவள்
கோழிமுட் டைகளைத் தேடிப் பொறுக்குவள்
பாற்கலங் களையெலாம் பார்த்தே அத்துடன்
கலங்களில் மதுவையும் கண்கா ணிப்பாள்
காலையில் திறபடும் களஞ்சியக் கூடம்
மாலையில் பூட்டுதல் மட்டுமே வழக்கமாம்.

மாப்பிள்ளை யாரே, மதிப்புள சோதர!
கணவரா னவரில் கவின்படைத் தவரே!

பக்குவ மாகவே பார்த்தால் பெண்ணைநீர்
நினைவில்அவ் வளவும் நிற்கும் நன்மையாய்:
மாமனார் வீடு நீர்வரும் வேளையில்
அன்பு மாமியின் அகம்வரு வேளையில்
உண்டிடச் சிறந்த உணவுகள் கிடைக்கும்
உண்டிட உணவுடன் அருந்திடப் பானமும்
ஆனஉம் குதிரைக் கவிழ்த்தலங் காரம்
தொழுவம் அதனைத் தொட்டே கொணர்ந்து
உண்ணவும் அருந்தவும் உகந்தெலா மீந்து
**உதவலாம் கூலப்புல் லரிசியோர் பெட்டியும்.

எங்கள் பெண் பற்றி இவ்விதம் சொ(ல்)லாதீர்
இசைபாடு மெம்சிறு **பறவையைப் பற்றி
உறவினர் அவட்கு உற்றிலர் எ(ன்)னாதீர்
உயர்சுற் றத்தார் இலர்என் றுரையீர்;
எமதிப் பெண்மணிக் கிருக்கிறா ரனைவரும்
உயர்சுற் றத்தார் உறுபெரு மினசனம்
**ஒருபடி **யவரை உயர்விதை விதைத்தால்
ஒருவர் பெறுவது ஒருமணி மட்டுமே!
ஒருபடி சணல்விதை உவந்தே விதைத்தால்
ஒருவர் பெறுவது ஒருநார் மட்டுமே!

அதிர்ஷ்டமில் மணாள, அறவே வேண்டாம்!
சுந்தரி இவளைத் துன்புறுத் தாதீர்
அடிமைச் சவுக்கால் அறிவுரை வேண்டாம்
தோற்சவுக் காலிவள் தேம்பிட வேண்டாம்
ஐந்துசாட் டைகளால் அழவிட வேண்டாம்
குடிசையின் வாசலில் குழறவைக் காதீர்
என்றுமே இவளுக் கிவ்விதம் நேர்ந்ததில(து)
தாதையின் வீட்டிலோர் போதுமே நிகழ்ந்தில(து)
அடிமைச் சவுக்கால் அறிவுரை புகன்றிலர்
தோற்சவுக் காலிவள் தேம்பிட வைத்திலர்
ஐந்துசாட் டைகளால் அழவும் வைத்திலர்
குடிசையின் வாசலில் குழறவும் வைத்திலர்.

அவளின் முன்னால் சுவர்போல் நிற்பீர்
நிற்பீர் கதவின் நிலைபோல் அவள்முன்
அடிக்கும் மாமியின் அல்லல்வை யாதீர்
மாமனார் ஏச்சால் மலங்கவைக் காதீர்
வேறெவ ராலும் வெறுக்கச்செய் யாதீர்
அயல்வீட் டார்குறை கூறவை யாதீர்!
அடிக்கலாம் என்று அறைந்தனர் வீட்டார்
துன்புறுத் தலாமெனச் சொல்லினர் மறுசிலர்
ஆயினும் பெண்ணைநீர் அடிக்கவே முடியா
ஏழையாள் துன்புற இதயம்நீர் தாங்கீர்
ஆண்டொரு மூன்று அவட்காய் இருந்தீர்
வெகுநாள் அவளை விரும்(பி)எதிர் பார்த்தீர்.

மங்கைக் கறிவுரை வழங்குக, மாப்பிள்ளாய்!
**அப்பிள் பழம்போல் அவள்கற் பிப்பீர்

அரிவைக் கமளி(யில்)ஆ லோசனை புகல்வீர்
கதவின் பின்புறம் கற்பிப் பீர்பெண்
ஓராண்(டு) காலம் ஓரிடம் பயிற்றுவீர்
வாய்ச்சொலால் முதலாம் ஆண்டுகற் பிப்பீர்
இரண்டாம் ஆண்டுகண் சிமிட்டால் புகட்டுவீர்
மூன்றில் கால்நிலத் தூன்றிப் பயிற்றுவீர்.

காரிகை இனைத்தையும் கவன மெடாமல்
அவதான மின்றி அசட்டை செய் திட்டால்
**கோரை இனத்திலோர் கொழும்புல் பறிப்பீர்
**பரிவால் ஒன்றைப் பற்றையில் ஒடிப்பீர்
அதைக்கொண் டவளுக் கறிவுரை புகல்வீர்
நான்காம் வருடம் நாரிக் கோதுவீர்
பரிவால் கொண்டு பைய அடிக்கலாம்
குற்றுவீர் மங்கையைக் கோரையின் நுனியால்
ஆயினும் சவுக்கால் அடித்த லாகாது
கோல்கொ(ண்)டு திருத்துதல் கூடா தரிவையை.

காரிகை இன்னும் கவன மெடாமல்
அவதானம் சற்றும் அவள்கொளா திருந்தால்
பற்றையில் ஒருசிறு குச்சியை ஒடிப்பீர்
மிலாறுவை ஒடிப்பீர் வெங்கான் பள்ளம்
மடிப்பில்மேற் சட்டையில் மறைத்ததைக் கொண்டு
அயல்இல் மனிதர் அறியா(து) வருவீர்;
நச்சினாள் பார்க்கவே குச்சியைக் காட்டுவீர்
ஆசைத்துக் காட்டுவீர் அடித்தல் ஆகாது.

காரிகை இன்னும் கவன மெடாமல்
அவதானம் சற்றும் அவள்கொளா திருந்தால்
கோல்கொண் டவட்கு கூறுவீர் அறிவுரை
மிலாறுவின் கிளையால் நடத்துவீர் பாடம்
நான்கு சுவர்களின் நடுவில் நடத்துவீர்
கூறுவீர் பாசியால் **மூடிய அறையிலே
அடித்திடல் புற்றரை மேட்டி லாகாது
அகல்வயற் காட்டிலும் அடித்த லாகாது:
சத்தமும் கிராமம் சாரும் அவ்விதம்
பக்கவீட் டுக்குப் படர்ந்திடும் கலகம்
அரிவையின் அழுகை அயல்வீ டடையும்
குழப்பம் பெரிதாய்க் கொழுங்கா டார்ந்திடும்.

என்றும் தோள்களில் வெப்பம் ஏற்றிடும்
மெல்லியள் பின்புறம் மென்மையா கட்டும்
கண்ணிலோர் போதும் தண்டனை ஆகா(து)
அவ்விதம் காதிலும் அறைதலா காது:
திரட்சியாய் ஏதெனும் புருவத் தேற்படில்
கண்களில் நீலமாய்க் கட்டிகள் வந்தால்
மைத்துனர் அதனை வந்தாய்ந் திடுவார்
மாமனார் ஏதெனும் மனத்தெண் ணிடுவார்
கிராமத் துழவோர் இருகண்(ணால்) பார்ப்பார்
நங்கையர் கிராமத்(தில்) நகைப்பரிவ் விதமே:

'சண்டைக் கிவளெங் கேனும் போனளோ
போரில் சமரில் போய்ப்பங் கேற்றளோ
அல்லது ஓநாய் அருகுபோய்க் கிழித்ததோ
அல்லது கரடியும் அறைந்ததோ காட்டில்
அல்லது கீறிய ஓனாய் கணவனோ
கணவனே காட்டிக் கரடியா யினனோ?' "

அடுப்பிலே முதியதோர் ஆடவன் இருந்தான்
இருந்தான் தேசாந் திரியவன் கணப்பில்
அடுப்படி முதியவன் அங்கே சொன்னான்
சொன்னான் தேசாந் திரியவன் கணப்பில்:
"ஏழைமாப் பிள்ளாய், இவ்விதம் செய்யேல்,
மாதவள் கருத்து மதிப்புத் தராதீர்
மகளிரின் கருத்து **முகிற்புள் நாக்கு
அதிர்ஷ்டமில் பயல்நான் முடித்ததைப் போல!

வாங்கினேன் இறைச்சி வாங்கினேன் ரொட்டி
வாங்கினேன் வெண்ணெய் வாங்கினேன் 'பீரு'ம்
எல்லா வகையாம் நல்மீன் வாங்கினேன்
பலபல சுவையுறும் பல்பொருள் வாங்கினேன்
சொந்தஎன் நாட்டில் தோன்றிய 'பீரு'ம்
அயல்நாட்(டுக்) கோதுமை அதையும் வாங்கினேன்.

ஆயினும் நன்மை(யாய்) ஆனதொன் றில்லை
பயனுள கருமம் செயலெதும் நிகழ்ந்தில;
அரிவையும் வீட்டின் அகப்புறம் வந்திடில்
புரிகுழல் பிய்ப்பவள் போல வருவளே
வதனம் மாற்றி மறுவடி வாக்குவள்
உருட்டி விழிகளைத் திரட்டியே நோக்குவள்
ஏசுவள் ஆத்திரம் எப்போதும் கொ(ண்)டே
வெறுப்புறும் வார்த்தைகள் புறப்படும் அக்கணம்
உடலால் பருத்த உலுத்தனென் றழைத்தாள்
மரமண் டையென வார்த்தையால் குரைத்தாள்.

முறையொன்(று) புதிதாய் மூண்டது மனத்தில்
வகையுறக் கண்டனன் மறுவழி யொன்றை:
மிலாறுக் கிளையை முறித்தஅவ் வேளை
அருமாப் பறவையென் றணைத்திட வந்தாள்;
சூரைச் செடியின் தொடுமுடி யொடிக்கையில்
அன்பே யென்று அவள்தலை குனிந்தாள்;
அலரிச் செடியின் தடியினால் வைக்கையில்
கழுத்தை யணைத்தாள் கட்டி பிடித்தாள்."

பேதையிப் போது பெருமூச்செறிந்தாள்
கடுமூச் செறிந்து களைத்துச் சோர்ந்தாள்
அவள்பின் அழுது விழிநீர் விட்டாள்
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"மற்றயோர் புறப்படும் மணிப்பொழு தணைந்தது
மற்றயோர் காலமும் நேரமும் வந்தது
என்புறப் பாட்டு இரும்பொழு தணைந்தது

என்கால நேரம் இங்குவந் தடுத்தது
பிரிந்து புறப்படல் பெருந்துய ராயினும்
விடைபெற் றேகுமிவ் வேளையும் நேரமும்
கீர்த்திகொள் இந்தக் கிராமத் திருந்து
அழகாய் அமைந்தஇவ் வகல்தோப் பிருந்து
வனப்பாய் நானும் வளர்ந்தவிவ் விடத்தில்
இனிப்பாய்ச் சிறப்பாய் எழுந்தவிவ் விடத்தில்
வளர்ந்து வந்தஎன் வாழ்நாள் முழுவதும்
குழந்தைப் பருவம் கழித்தநாள் முழுவதும்.

இதற்குமுன் என்றுமே எண்ணிய தில்லை
என்றும்என் வாழ்நாள் நம்பிய தில்லை
இனிவிடை பெறுவனென் றெண்ணிய தில்லை
பிரிந்துபோ வேனெனத் தெரிந்துநம் பியதிலை
அரியஇக் கோட்டையின் அயற்புறத் திருந்து
பரந்த இம்மேட்டின் படர்புயத் திருந்து;
இப்போ நினைக்கிறேன் என்விடை பெறலை
இப்போ(து) பிரிந்து ஏகல்நம் புகிறேன்
வெறுமையா யினபிரி யாவிடைச் சாடிகள்
விடைபெறும் 'பீரு'ம் முடிந்தது குடித்து
வண்டியும் விரைவில் வழிதிரும் பிடலாம்
முன்புறம், வெளியே பின்புறம் வீட்டே
ஒருபுறம் தந்தையின் உயர்களஞ் சியவறை
மறுபுறம் தொழுவம் வழிபார்த் திருக்கும்.

இப்போ(து) பிரிந்துநான் எதைக்கொண் டேகுவேன்
பேதைப் பெண்நான் பிரிவிடைச் செல்கையில்
தாய்ப்பால் விலைக்குத் தருவது எதைநான்
அத்துடன் தந்தையார் ஆற்றுநன் மைக்கெலாம்
சகோதரன் அன்புக்(கு) தருவது எதுகொல்
சகோதரி காட்டிய கனிந்த பண்புக்கு?

தந்தாய், உமக்குச் சாற்றுவேன் நன்றி
முன்னாள்(என்) வாழ்வு முழுதும் மகிழ்ந்ததால்
சென்றநாட் களில்நான் உண்டஊண் அதற்கு
சிறப்பாய்க் கிடைத்த சிற்றுண்(டி) வகைக்கு.
தாயே, உமக்குச் சாற்றுவேன் நன்றி
இளமைதா லாட்டில் எனைவளர்த் ததற்கு
ஏந்தியே சிறுநாள் எனைவளர்த் ததற்கு
முலைப்பா லூட்டி முன்வளர்த் ததற்கு.

சோதரா, அடுத்துநான் சொல்லுவேன் நன்றி
என்னருஞ் சோதரா, என்னருஞ் சோதரி,
குடும்பத் தோர்க்கெலாம் கொடுப்பேன் திருப்பி
என்னோடு வளர்ந்த எல்லா ருக்கும்
என்னோடு வாழ்ந்த எல்லா ருக்கும்
வாழ்வில் கூடிநான் வளர்ந்தஎல் லார்க்கும்.

என்இன் தந்தையே இப்போ(து) வேண்டாம்
என்அன் பன்னையே இப்போ(து) வேண்டாம்

என்பெருஞ் சுற்றத்து எவருஞ்செய் யாதீர்
இரும்புகழ் பெற்றஎன் இனசனக் கணத்தில்
மனதிலே யாருமே வருத்தம் கொள்ளாதீர்
இனிப்பெரும் துயருக்கு இடம்கொடுக் காதீர்
வேறொரு நாடுநான் ஏகவிருப் பினும்
பிரிந்து புறப்பட்டுப் போக விருப்பினும்!

இயற்றியோன் பருதி என்றுமே ஒளிரும்
இயற்றியோன் மதியும் என்றுமே திகழும்
சுவர்க்கத்து விண்மீன் சுடரும்எப் போதும்
விரிந்தெங்கும் பரவும் விண்மீனின் கூட்டம்
விண்ணின்வே றேயோர் விரிபக் கத்திலும்
வையத்தின் வேறோர் வளர்பக் கத்திலும்
தந்தையார் முற்றம் தனில் மட்டுமல்ல
வளர்ந்தஎன் தோட்டம் மட்டுமே யல்ல.

இப்போ(து) புறப்பட் டிங்கிருந் தகல்வேன்
அன்பாய்நே சித்த அகத்தினி லிருந்து
தந்தையார் அமைத்தவித் தனியகத் திருந்து
கருணையன் னையின்நிறை களஞ்சியத் திருந்து;
என்சதுப் புத்தரை எழில்நிலம் விடுகிறேன்
என்புற் றரைமேட் டியைபுவி விடுகிறேன்
என்வெண் புனல்விட் டிங்கே பிரிகின்றேன்
மணல்நிறை என்புனல் வளர்கரை விடுகிறேன்
கிராம மதில்வாழ் கிழவிகள் குளித்திட
மந்தைமேய்த் திடுமிடை மாந்தர்கள் சிந்திட.

சதுப்பு நிலத்தை மிதித்திடு வோர்க்கும்
அலைந்திடு வோர்க்கும் நிலங்கள் விடுகிறேன்
இளைப்பாறி ஏகுவோர்க் கிரும்**பூர்ச்ச மரங்களை
உலாவித் திரிவோர்க் குயர்பைம் புற்றரை
அடிவைத்(துத்) திரிவோர்க் ககல்வே லிப்புறம்
பயணித்துச் செல்வோர்க்(கு) பாதைமூ லைகளை
நடந்தோடிச் செல்வோர்க்(கு) நல்லநீள் முற்றம்
நெடுஞ்சுவர்ப் பக்கம் நிற்போர்க்(கும்) விடுகிறேன்
சுத்தம்செய் வோர்க்கு நிலத்தடிப் பலகையை
பெருக்கிவைப் போர்க்கு பெருந்தரைப் பகுதியை
கலைமான் ஓட வயல்களை விடுகிறேன்
**சிவிங்கிகள் திரியத் திகழ்வனப் பகுதிகள்
வாத்துகள் வாழ வளமார் புல்வெளி
பறவைகள் ஓய்வுறப் பாங்குள சோலைகள்.

இப்போ(து) புறப்பட் டிங்கிருந் தகல்வேன்
புறப்பட் டேகும் பிறிதொரு துணையொடு
இலையுதிர் கால இரவணைப் புக்கு
பசிய வசந்தப் பனித்திண் பரப்பு(க்கு)
பனித்திண் மத்திலே படிசுவ டெதுமிரா(து)
பாதைப் பரப்பினில் பாதச் சுவடிரா(து)
பாவாடை நூலிழை பனித்துளி களிலிரா(து)
ஆடைக் கரைச்சுவ(டு) அப்பனி யிலேயிரா(து).

பின்னர்நான் திரும்பிப் பிறந்தஇல் வருகையில்
விருந்தாளி யாயென் வீடு வருகையில்
என்தாய்க் குக்குரல் எதுவுமே கேளா(து)
அழுமொலி தந்தை அறியவும் வாய்ப்பிலை
மூலையில் நின்றுநான் முனகிப் புலம்பினும்
அவர்களின் தலைமுன் னாலே பாடினும்;
இளையபுல் மேடு எழுந்துயர்ந் திருக்கும்
சூரையின் நாற்று துளிர்த்துயர்ந் திருக்கும்
எனைவளர்த் தவளின் இதவுடல் தோலிலே
எனைச்சுமந் தவளின் எழில்முகப் பரப்பிலே.

பின்னர்நா னிங்கு பெயர்ந்திடும் வேளை
மிகநீண் டகன்று விரிந்தவிம் முன்றிலில்
அடுத்தவர்க் கென்னை அறிமுக மிராது
ஆயினும் என்னையே அறியுமிவ் விருபொருள்
ஒன்று வேலியில் தாழ்வரிச் சுமரம்
வயல்வெளித் தூர(வேலி) மரம்மற் றொன்று
சிறுமியாய் இருக்கையில் சீராய் நட்டவை
கன்னிகை யானபின் கைபட நட்டவை.

வளர்த்தனள் அன்னை மலட்டுஆ அறியும்
அதற்குநீர் இளமைப் பருவத் **தருத்தினேன்
கன்றா யிருக்கையில் கவனமாய் வளர்ந்துளேன்
கண்டால் கிட்டக் கதறியோ டிவரும்
குப்பை நிறைந்த தோப்பின் மேட்டில்
குளிர்அடர்ந் திருந்த குளிர்கால நிலத்தில்
அப்பசு வெனையே அறியு மெப்போதும்
இந்தவில் லத்திலே இருந்ததோர் மகளென.

தந்தையின் கிழட்டுத் தனிப்பொலிக் குதிரை
உணவதற் கூட்டிய(து) உண்டிள வயதில்
அளித்துளேன் புல்ஊண் அரிவையா யானபின்
கண்டால் அருகே கனைத்தோடி யேவரும்
குப்பை நிறைந்த தோப்பின் மேட்டில்
குளிர்அடர்ந் திருந்த குளிர்கால நிலத்தில்
என்றுமப் பரிதான் எனையே அறியும்
இந்தவில் லத்திலே இருந்ததோர் மகளென.

நித்திய வயதில் நற்சோதரன்நாய்
ஊட்டிவந் ததுவூண் உண்டிளம் பருவம்
கற்பித்த துண்டு கன்னிகை யானபின்
கண்டால் குரைக்கும் கடிதிலே யருகுறும்
குப்பை நிறைந்த தோப்பின் மேட்டில்
குளிர்அடர்ந் திருந்த குளிர்கால நிலத்தில்
அந்தநாய் எனையே அறியு மெப்போதும்
இந்தவில் லத்திலே இருந்ததோர் மகளென.

ஏனைய எவையும் எனையறி யாவே
திரும்பிநான் என்இல் சேரும்வே ளையிலே

தோணிகள் கரைபுகும் தொல்லிட மாயினும்
முன்னர்நான் வாழ்ந்தஇந் நன்னிட மாயினும்
வெண்ணிற மீனினம் விளையாடி யேவரும்
பலவலை விரியும் பரந்தநல் இடத்திலும்.

விடைபெறு கின்றேன், வீடே, போய்வர!
பலகைகள் கூரை பரப்பிய இல்லமே!
மீண்டிங்கு வருதல் மிகநல மாகும்
நடைது(ள்)ளிப் பயிலல் நற்றிறச் செயலாம்.
வாயிற் கூடமே, போய்வர விடைதா!
பலகைகள் பரப்பிப் பதித்தமண் டபமே!
மீண்டிங்கு வருதல் மிகநல மாகும்
நடைது(ள்)ளிப் பயிலல் நற்றிறச் செயலாம்.

முன்றிலே, போய்வர முழுவிடை பெறுகிறேன்,
நிறைந்த பேரி வளர்ந்துள முன்றிலே!
மீண்டிங்கு வருதல் மிகநல மாகும்
நடைது(ள்)ளிப் பயிலல் நற்றிறச் செயலாம்.

அனைவரும் நல்விடை அருளினீர் போய்வர,
நிலத்தும், சிறுபழம் நிறைவனத் திருந்தும்
மலர்ந்திடும் பூக்கள் வழிகரை யிருந்தும்
பசும்புல் வளர்புதர்ப் பற்றையி லிருந்தும்
நூறுபல் தீவுகொள் ஏரிகளி லிருந்தும்
நிதம்வெண் மீனுலா நீரிணை யிருந்தும்
ஊசி யிலைமர உயர்மே டிருந்தும்
மிலாறுவின் தழைகிளை முழுதிலு மிருந்தும்!"

அப்போ(து) கொல்லன் அவன்இல் மரினன்
வனிதையைப் பற்றினன் வண்டியி லேற்றினன்
சாட்டையால் குதிரையைச் சாடி யடித்தனன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"ஏரிக் கரைகளே, இதோவிடை பெற்றேன்!
ஏரிக் கரைகளே, எழில்வயல் எல்லைகாள்!
உயர்மலை வளர்ந்த ஊசி(யி)லை மரங்காள்!
தாருவின் தோட்டத்து நீடிய மரங்களே!
வீட்டின் பின்**சிறு மிகுபழச் செடிகளே!
பாதைக் கிணற்றடிச் சூரைச் செடிகளே!
தரையெலாம் பரந்த சிறுபழக் காம்புகாள்!
சிறுபழக் காம்புகள் திகழ்புல் தாள்களே!
அலரிப் புதர்களே, அலர்தாரு வேர்களே!
பூர்ச்சந் தழைகளே, பொன்மிலா றுரிகளே!"

அதன்பின் கொல்லன் அவன்இல் மரினன்
வடபால் முற்ற மதைவிட் டகன்றான்
பிள்ளைகள் நின்று பிரிபாட் டிசைத்தனர்
சிறார்கள் இசைத்துச் செப்பினர் இவ்விதம்:
"இனியதோர் கரும்புள் இவ்வழிப் பறந்தது
வியன்வனத் தூடாய் விரைந்தே பறந்தது
வாத்தையெம் மிடத்தால் மயக்கிப் பிரித்தது

வளர்சிறு பழத்தினை மருட்டிப் பறித்தது
அப்பிளை எம்மைவிட் டதுஎடுத் தகன்றது
புனல்மீ னெடுத்தது போட்டது தரையிலே
சிறுபணம் காட்டி அவளைஏ மாற்றிய(து)
வெள்ளிப் பணத்தினால் வஞ்சக மிழைத்தது;
யாரெமை யிப்போ(து) நீர்க்கொண் டேகுவார்?
ஆற்றிடைப் படுத்த ஆர்தான் இங்குளார்?
தண்ணீர்க் கலயம் தாம்ஓய்ந் திருக்குமே
**காவுதண் டங்கள் சோர்வடைந் திருக்குமே
பலகைகள் துடைக்கப் படாதங் கிருக்குமே
நிலம் பெருக்காமல் நலமற் றிருக்குமே
**குவளை விளிம்புகள் அழுக்கடைந் திருக்குமே
கைப்பிடிச் சாடியில் கறைபடிந் திருக்குமே!"

அவனே கொல்லன் அவ்வில் மரினன்
தன்பரு வத்துத் தையல் தன்னுடன்
தனது வழியில் தான்விரைந் தேகினன்
வடபால் நிலத்து வளர்கரைப் பாதையில்
நறைபோல் இனிய நிறைநீ ரிணைவழி
மணல்நிறை மேட்டை வாகாய்க் கடந்து;
சிறுகல் சலசல மணல் கலகலக்க
வண்டி உருண்டது வளர்வழி ஒளிர்ந்தது
பரியதன் இரும்புப் பட்டி ஒலித்தது
மிலாறுவின் சறுக்கு வில்கட கடத்தது
வளைந்த சலாகை மரம் படபடத்தது
பழமரப் பட்டம் முழுதா யசைந்தது
சாட்டையின் சுழற்சியில் சதாஒலி எழுந்தது
செப்பிலாம் வளையம் சேர்ந்தே யசைந்தது
உயர்குலப் புரவி ஓடிய போதினில்
வெண்சுட்டிப் புரவி விரைந்தவே ளையிலே.

ஒருநாள் சென்றனன் இருநாள் சென்றனன்
மூன்றாம் நாளும் முன்விரைந் தேகினன்
கையொன் றுபரிக் கடிவ(ா)ளம் பிடித்தது
மறுகை மங்கையின் மருங்கினை யணைத்தது
ஒருகால் வண்டியின் ஒருபுறத் திருந்தது
தளவிரிப் பின்கீழ் மறுகால் இருந்தது
பரியும் விரைந்தது பயணம் தொடர்ந்தது
நீள்நாள் கழிந்தது நெடுந்தொலை குறைந்தது
மூன்றா வதுநாள் முன்வரும் போதினில்
சூரியன் கீழே தொடர்ந்துசெல் நேரம்
கொல்லனின் இல்லம் நல்விழித் தெரிந்தது
*இல்மா(வின்) இல்லமும் எதிர்த்தோன் றியது:
நூலிழை போல மேலெழுந் ததுபுகை
தடித்த புகையும் தான்வெளிப் போந்தது
இல்லதன் உட்புறத் திருந்தே வந்தது
மேகத்தை நோக்கி மேலெழுந் ததுவே.

கலேவலா

பாடல் 25 - மணமகனும் மணமகளும் வீட்டில் வரவேற்கப்படுதல்

அடிகள் 1 - 382 : மணமகனையும் மணமகளையும் அவர்களுடன் சேர்ந்து வந்தவர்களையும் இல்மரினனின் வீட்டில் வரவேற்றல்.

அடிகள் 383 - 672 : கூட்டத்தினரைச் சிறப்பாக உபசரித்து உணவும் பானமும் வழங்குதல்; தலைவன், தலைவி, விருந்து நிகழ்ச்சிய தலைவன், மணமகளின் தோழி, விவாகத்தில் கலந்து கொண்டோர் ஆகியோரைப் புகழ்ந்து வைனாமொயினன் பாடுகிறான்.

அடிகள் 673 - 738 : விவாகத்தில் கலந்துவிட்டுத் திரும்பும்போது வைனாமொயினனின் சறுக்கு வண்டி உடைகிறது; அதைத் திருத்திக் கொண்டு அவன் வீடு திரும்புகிறான்.

காத்தே யிருந்தனர் கனநீள் நேரமாய்
காத்தே யிருந்தெதிர் பார்த்தே யிருந்தனர்
பாவையோ டிணைந்த பரிவ(ா)ர வரவை
கொல்லன்இல் மரினனின் இல்லம தற்கு:
முதியவர் விழிகள் அருவிகள் ஆகின
சாளரத் தருகே தரித்தவ ரிருந்தால்,
இளைஞரின் முழங்கால் இறங்கிப் பணிந்தன
வாயி லவரெதிர் பார்த்தே யிருந்ததால்,

குழந்தைகள் கால்கள் குளிரில் விறைத்தன
சுவரின் அருகில் அவர்கள்நின் றிருந்ததால், 10
காண்நடு வயதினர் காலணி சிதைந்தன
நீர்க்கரை யதிலே நெடிதலைந் திட்டதால்.
அடுத்தடுத் தணைந்த தினத்திலோர் காலை
அடுத்தடுத் தணைந்த தினத்திலோர் பகலில்
மரக்காட் டிருந்து வந்ததோர் சத்தம்
வண்டியின் ஓசை வந்தது புல்வெளி.

கவின்*லொக் காவெனும் கருணைத் தலைவி
கலேவா மகளெனும் அழகார் மனையாள்
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"மகனின் சறுக்கு வண்டியே அதுதான் 20
வடநா டிருந்து வருகிறா னென்மகன்
தன்இள மனையாம் பெண்ணவ ளுடனே.

இந்நாடு நோக்கி இப்போ(து) வருகிறான்
இத்தோட் டத்து எழில்வெளி நோக்கி
தந்தையார் அமைத்த தனிவசிப் பிடத்தே
பெற்றவர் கட்டிய பெருவாழ் விடத்தே."

அந்தக் கொல்லன் அவ்வில் மரினன்
விரைந்தே வந்து வீட்டினை யடைந்தான்
தந்தையார் அமைத்த தனிவசிப் பிடத்தை
பெற்றவர் கட்டிய பெருவாழ் விடத்தை; 30

வனக்கோழி வடிவ மணிகள் ஒலித்தன
இளமரத் தியைந்த ஏர்க்கால் தம்மிலே,
இன்குயில் வடிவில் இசைத்தன மணிகள்
மின்னும் வண்டியின் முன்னணி யத்தில்,
செதுக்கிய அணில்கள் திரிந்தன துள்ளி
**'மாப்பிள்' மரத்து வண்டியின் நுகத்தில்.

கவின்லொக் காவெனும் கருணைத் தலைவி
கலேவா மகளெனும் அழகார் மனையாள்
இந்தச் சொற்களில் இயம்பினள் அவளே
இயம்பினள் அவளே இயம்பினள் இவ்விதம்:
"ஊர்காத் திருந்தது ஒளிர்புது மதிக்கு
இளையோர் சூரிய உதய மதற்கு
பிள்ளைகள் **சிறுபழச் செடியார் தரைக்கு
நீர்காத் திருந்தது கீல்பட குக்கு;
அரைச்சந் திரற்கும் அதைநான் காத்திலேன்
அல்லது பானுவை அறவெதிர் பார்த்திலேன்
எனதுசோ தரனை எதிர்பார்த் திருந்தேன்
எனதுசோ தரனையும் என்மரு மகளையும்
காலையில் பார்த்தேன் மாலையில் பார்த்தேன்
எப்படி மறைந்தான் என்பதை யறியேன்,
வளர்சிறு பிள்ளையை வளர்க்கின் றானா
அல்லது மெலிந்ததைக் கொழுப்பாக் குவனா
எப்படியும் அவன் இங்குமீ ளாததால்
அவனும் உண்மையாய் அளித்துவாக் ககன்றான்
காண்அடிச் சுவடுகள் கலையுமுன் வருவதாய்
குளிர்ந்த சுவடுகள் அழியுமுன் வருவதாய்.

எப்போதும் காலையில் இருந்தேன் வழிபார்த்(து)
பலநாள் நெஞ்சில் நினைவா யிருந்தேன்
சகோதரன் வண்டி தான்உரு ளாததால்
சகோதரன் வண்டி தான்ஒலிக் காததால்
இந்தச் சிறிய முன்றிலின் பரப்பில்
இந்தத் தோட்டத் தியைகுறு வெளியில்;
வைக்கோல் ஆனதோர் வனப்பரி இருப்பினும்
வலியஈர்ச் சட்ட வண்டியா யிடினும்
ஒருவண்டி யென்றே உரைப்பன்நான் அதையும்
சறுக்குவண் டியெனச் சாற்றுவேன் உயர்வாய்
என்சோ தரனையஃ திங்கு கொணருமேல்
என்அழ கனையஃ தில்லம் கொணருமேல்.

எதிர்பார்த் திருந்தேன் எல்லாக் காலமும்
பகற்பொழு தெல்லாம் பார்த்துநா னிருந்தேன்
எதிர்பார்த் திருந்தேன் என்தலை சாய்வரை
தளர்குழற் குடுமி சரிந்து விழும்வரை
நேர்பார் வைவிழி சோர்வாம் வரையும்
என்சகோ தரன்வரு மெனநம் புகிறேன்
இச்சிறு முற்ற எழிற்பரப் புக்கு
இத்தோட் டத்து இயல்குறு வெளிக்கு;
இங்குவந் தவனும் இறுதியில் சேர்ந்தான்

இறுதியில் ஒருதரம் இதைச்செய் திட்டான்
செந்நிற முகத்தாள் சேர்ந்தரு குள்ளாள்
சிவந்தகன் னத்தாள் திகழ்ந்தரு குள்ளாள்.

மாப்பிள்ளை யாரே, மதிப்புள சோதர!
நுதற்சு(ட்)டிப் புரவியை இதம்செ(ல்)ல விடுவீர்
நல்லினப் பரியதைச் செல்லவிட் டிடுவீர்
பழக்கம் அதற்குள பதவைக் கோற்கு
தகுமதன் வழக்குடைத் **தானியத் துக்கு;
பொருந்தடுத் தெமக்கு விருந்தொன் றளிப்பீர்
ஏனையோர்க் களியும் எமக்கும் தாரும்
அனைத்துக் கிராமத் தவர்க்கும் தாரும்.

விருந்தெலாம் தந்து விரைந்து முடிந்தபின்
உரைப்பீர் எங்களுக் குமது கதைகளை
பகர்வதற் கொன்றிலாப் பயணம் முடிந்ததா
நலமாய்ச் சுகமாய் நடந்ததா வழிச்செலல்?
மாமியார் அவளிடம் போய்ச்சேர் கையிலே,
விரிபுகழ் மாமனார் வீடடை கையிலே?
அரிவையை யடைந்திரா? ஆட்சியைப் பிடித்திரா?
போர்க்குவந் தவரைப் புறம்கண் டீரா?
பலகைக் கோட்டையைப் பணிய வைத்தீரா?
எதிர்எழும் சுவரை இடித்துவீழ்த் தினீரா?
மாமியார் இடத்தடி வைத்தேகி னீரா?
எசமானன் இடத்தில்நீர் இருந்துகொண் டீரா?

இல்லாது வினாவல் இப்போ(து) பார்க்கிறேன்
உசாவல் இன்றியே உளத்தில் உணர்கிறேன்
நலமாய்ச் சுகமாய் நடந்தது வழிச்செலல்
சிறப்பாய் இனிப்பாய் செலவவர்க் கானது
பெற்றனர் வாத்துப் பிடித்தனர் ஆட்சி
போர்க்குவந் தவரைப் புறம்கண் டிட்டார்
பலகைக் கோட்டையைப் பணியவும் வைத்தார்
**பலகைச் சுவரைப் படியில் விழுத்தினார்
மாமியா ரிடத்தினிலே மகிழ்ந்திருக் கையிலே
இணையிலா மாமனார் இல்லத் திருக்கையில்;
பொன்னாம் வாத்துப் போந்தரு கிருந்தாள்
கோழிகக் கத்துக் கொள்அணைப் பிருந்தாள்
அருகிலே தூய அரிவையு மிருந்தாள்
அவனுடை ஆட்சியில் அமர்ந்தள்வெண் ணிறத்தாள்.

இப்பொ(ய்)யை இங்கு எவர்எடுத் தடுத்தார்?
கொடிய செய்தியைக் கொணர்ந்ததா ரப்பா?
மாப்பி(ள்)ளை வெறுங்கையாய் வருகிறார் என்று,
பொலிப்பரி அங்கே போனது வீணென?
மாப்பி(ள்)ளை வெறுங்கையாய் வரவி(ல்)லை யிங்கு
பொலிப்பரி அங்கே போந்தில துவீண்:
ஏதோஇருக் கிறது இழுத்துவ ரப்பரி
**'சணற்சடை' அசைவில் தரித்துள தர்த்தம்
ஏனெனில் வியர்த்து இருக்கிற து(நற்)பரி

நுரைத்துநிற் கிறது தரப்பரிக் குட்டி
**அளகுக் குஞ்சையிங் கழைத்துவந் ததனால்
இரத்த நிறத்தளை இழுத்துவந் ததனால்.

இப்போது வண்டியி லிருந்தெழு, அழகே!
தரமிகு பரிசே, சறுக்குவண் டியிலிருந்(து)!
நீயாய் எழுவாய் நினைக்கரம் தொடாமல்
எழுவாய் உதவிநீ இல்லா தெதுவும்
இளங்கண வன்உனை ஏந்திட வரலாம்
இரும்சிறப் புன்னவன் எழுப்பிட வரலாம்.

சறுக்குவண் டியின்மேல் தான்நீ யெழுந்து
வியன்புற வழியாய் வெளியே றுகையில்
பழுப்பு நிறத்துப் பாதையில் அடிவை
ஈரல் நிறத்துப் பூமியில் கால்வை
பன்றியின் நடையால் மென்மையாம் தரையில்
பன்றிக் கணங்கள் பதம்மிதி பூமியில்
ஆட்டுக் குழுதிரிந் தமைந்தமென் நிலத்தில்
திகழ்பரிப் பிடர்மயிர் தேய்படு பூமியில்.

தாரா அடிபோல் தரைமிசை அடிவை
வாத்தின் பதம்போல் வைப்பாய் வெளிகால்
முழுமையாய்க் கழுவிய முற்றப் பரப்பிலே
மட்டமாய்ப் பரந்தஇவ் வன்னமாம் நிலத்தில்
மாமனார் செய்தவிவ் வன்முற்றப் பரப்பிலே
மாமியார் படைத்தே வைத்தஇவ் விடங்களில்
சகோதரன் செதுக்கிய தன்தொழில் தலத்திலே
சகோதரி நீலத் தண்பசும் புல்நிலம்;
பாதம் மெதுவாய்ப் படிமிசை வைப்பாய்
மண்டபப் பலகைக்(கு) மாற்றுவாய் அதைப்பின்
மண்டபத் தூடே மற்றுநீ மேற்செல்
அங்கிருந் துள்ளே அதன்பின் இடம்பெயர்
புகழ்பெறும் கூரைப் புணர்தம் பக்கீழ்
இல்லத் தழகாய் இயைகூ ரையின்கீழ்.

இப்போது நிகழும் இகல்குளிர்க் காலம்
நிகழ்ந்து முடிந்த நேர்கோடை நாட்கள்
தாரா எலும்பால் தரையெலாம் மிசைத்தது
ஆரேனும் வந்தவ் வகல்தரை நிற்க,
ஒலித்தது பொன்இயை பொலிமனைக் கூரை
யாரேனும் வந்து நடப்பதற் கதன்கீழ்,
சாளரம் யாவுமே தனிமகிழ் வுற்றன
ஆரேனும் வந்து அமர்வதற் கவற்றில்.

இப்போது நிகழும் இகல்குளிர்க் காலம்
நிகழ்ந்து முடிந்த நேர்கோடை நாட்கள்
கதவில் கிறீச்சென கைப்பிடி ஒலித்தது
மோதிரக் கையினால் மூடப் படற்கு,
களஞ்சியக் கூடத்தும் கனவொலி எழுந்தது
சிறந்தமே லங்கி திகழழ **காட்கு,

என்றும் கதவுகள் இருந்தன திறந்தே
வருபவர் திறந்திட, வரவெதிர் பார்த்தே!

இப்போது நிகழும் இகல்குளிர்க் காலம்
நிகழ்ந்து முடிந்த நேர்கோடை நாட்கள்
சுழல்காற்று இவ்வறை சுழன்றுவீ சியது
யாரேனும் வந்தே நனிதுகள் துடைக்க,
கூடம் இடமொதுக்கி ஆயத்தம் கொண்டது
யாரேனும் வந்து நேரிற்சுத் தம்செய,
புத்தில்லக் குடில் புலம்பித் தவித்தன
யாரேனும் வந்தே நன்றாய்ப் பெருக்கிட.
இப்போது நிகழும் இகல்குளிர்க் காலம்
நிகழ்ந்து முடிந்த நேர்கோடை நாட்கள்
மறைவாய் முன்றில்கள் மாறிவந் தனவிடம்
யாரேனும் வந்து நனிதுகள் பொறுக்கிட,
மாடங்கள் தாமாய் வந்தன கீழே
யாரேனும் வந்து நனியுள் நுழைய,
உயர்வளை வளைந்தது உத்தரம் பதிந்தது
இளம்மனை ஒருத்தியின் எழில்உடை களுக்கு.

இப்போது நிகழும் இகல்குளிர்க் காலம்
நிகழ்ந்து முடிந்த நேர்கோடை நாட்கள்
ஒழுங்கைசந் தெல்லாம் ஒலிசெய் தழைத்தன
யாரேனும் வந்து நடந்திடத் தம்மேல்,
மாட்டுத் தொழுவுகள் வந்தன நெருங்கி
யாரேனும் வந்து நற்சுத் தம்செய,
களஞ்சிய முற்றம் நகர்ந்து பின்போனது
வாத்தொன்று வந்து ஆற்றிடஅதில் தொழில்.

இன்றைக் கிங்கே இப்பகற் பொழுதில்
நேற்றும்அத் தோடு நேற்று முழுவதும்
வேளைகத் தியது வியன்பசு மாடு
காலையூண் கொடுப்போர் களைஎதிர் பார்த்து,
குதிரையின் குட்டிகள் குரல்கொடு கனைத்தன
யாரேனும் வந்து வீசிட வைக்கோல்,
வசந்தத்து ஆடு வலிதுகத் தியது
எதிர்பார்த்து மென்மேல் இரைவைப் போரை.

இன்றைக் கிங்கே இப்பகற் பொழுதில்
நேற்றும்அத் தோடு நேற்று முழுவதும்
அமர்ந்தனர் சாளரத் தனைத்து முதியரும்
காண்பிள் ளைகள்நீர்க் கரைகளில் திரிந்தனர்
அரிவைய ரோசுவர் அருகினில் நின்றனர்
நின்றனர் பையன்கள் நெடுங்கடை வாயிலில்
வருமிளம் மனைவியின் வரவினை நோக்கி
மணப்பெண் ஒருத்தியை மகிழ்ந்தெதிர் பார்த்து.

இப்போ(து) முன்றிலில் இருப்போர்(க்கு) வாழ்த்துக்கள்!
வெளியில் நிற்கும் வீரர்கள் யா(வ)ர்க்கும்!
உனக்கும் குடிசையே, உளோர்க்கும் வாழ்த்துக்கள்!

குடிற்கும், தங்கிக் கொண்டஅன் னியர்க்கும்!
கூடமே, உனக்கும்நீ கொண்டுளோர் தமக்கும்!
மிலாறுரிக் கூரை(க்கும்), மிகக்கீ முளோர்க்கும்!
மாடமே, உனக்குமுள் வாழ்வோர்(க்கும்) வாழ்த்துக்கள்!
பலகைநூ றி(ல்லிற்கும், படிந்துளசிறார்க்கும்!
வான்நிலா வாழ்த்துக்கள், மன்னனே வாழ்த்துக்கள்!
இளையநற் பரிவ(ா)ரம் எல்லோர்க்கும் வாழ்த்துக்கள்
ஒருபோ தும்முன் இருந்தில திங்கே
இருந்தில முன்னும் இருந்தில நேற்றும்
இவ்வித மொருகுழாம் இங்கிருப் பவர்போல்
எழிலுறும் மனிதர்கள் இங்கிருப் பவர்போல்.

மாப்பிள்ளை யாரே, மதிப்புள சோதர!
சிவப்புச் சிறுதுணி அவிழ்த்துப் போடுக
பட்டு முகத்திரை அப்பால் நீக்குக
கிளருமும் அன்புடைக் **கீரியைக் காட்டுக
காத்திருந் தீர்இதற் காயைந் தாண்டுகள்
எட்டாண்டு விரும்பி எதிர்பார்த் திருந்தீர்.

நீர்முயன் றிருந்தபொற் காரிகை கொணர்ந்திரா?
குயிலாள் ஒருத்தியைக் கொணர முயன்றிரே!
நீள்புவி வெள்ளை நிறத்தளைத் தெரிந்திரே!
சிவந்தகன் னத்தளை புனற்பெற இருந்திரே!

எவ்வினா வும்மிலா திப்போ பார்க்கிறேன்
கேள்வியே யிலாது கிளர்மனத் துணர்கிறேன்
குயிலாள் ஒருத்தியை கொணர்ந்தீர் உம்முடன்
நீலநல் தாரா நிதமும் காப்பினில்
உச்சியில் தளிர்த்தநற் புத்தம் புதுத்தளிர்
பலபசுந் தளிரதில் ஒரேயிளம் தளிரதை
சிறுபழச் **செடியிலே மிகப்புதுத் தழையதை
பலபுதுச் செடிகளில் ஒருபுதுச் **செடியதை."

அங்கொரு பிள்ளை அகல்தரை யிருந்தது
தரையிலே யிருந்தஅப் பிள்ளைசாற் றியது:
"இழுத்துவந்(த) தென்னநீ இனியஓ, சோதர!
அழகில்கீல் பூசிய அடிமரக் கட்டையாம்
தார்ப்பீப்(பா) பாதியதாம் சரிநீ ளத்தினில்
நூனாழி அளவாம் நுதலிய உயரம்.

அப்படி யப்படி அப்பாவி மாப்பிளாய்
இதைக்காத் திருந்தீர் இந்நாள் முழுதும்
தெரிவேன் நூறுபெண் சமன்என் றீரே
கொணர்வேன் ஆயிரத் தொருத்தி யென்றீரே;
நூறிலே நல்லளாய் நுவலஒன் றடைந்தீர்
அவலட் சணம்சமம் ஆயிரம் பெற்றீர்
காண்சதுப் புநிலக் **காகம் போலவும்
வேலியி லிருந்திடும் வெறும்**புள் போலவும்
வயல்களில் வைத்திடும் வெருளியைப் போலவும்
தருசி நிலக்கரிக் குருவியைப் போலவும்.

இத்தனை நாட்களும் என்னசெய் தாளவள்
கடந்தகோ டையிலே நடந்தது தானெது?
வன்னக்கை யுறையெதும் பின்னா திருந்திடில்
தூயகா லுறையெதும் தொடங்கா திருந்திடில்.
வெறுங்கையை வீசியே வீடு வருகிறாள்
நவில்மாமன் **இற்கு நற்பரி சின்றியே
அவள்கூடைச் சுண்டெலி சலசலத் தோடுதாம்
**'பெருஞ்செவி' பெட்டியுள் பரபரத் தோடுதாம்."

கவின்லொக் காவெனும் கருணைத் தலைவி
கலேவா மகளெனும் அழகிய மனையாள்
அதிசய மாம்இக் கதையது கேட்டு
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"என்னநீ சொன்னாய்? ஈனப் பிள்ளையே!
பிதற்றிய தென்ன? பதரெனும் பிறப்பே!
அறியலாம் பிறரது அதிசயச் செய்தி
இகழ்வுறும் செய்தியும் எங்கும் பரவலாம்
எனினுமொன் றரிவையாம் இவள்சார் பில்லையே
பகர்இவ்வில் வாழ்பவர் பற்றியும் இல்லையே.

தீயதோர் வார்த்தையை செப்பினாய் இப்போ(து)
வார்த்தையும் இப்போ(தே) வந்தது கொடியதாய்
ஒருநிசி வயதுறும் ஒருகன் றின்வாய்
ஒருபகல் வயதுறும் ஒருகுட் டியின்தலை;
மாப்பிள்ளை பெற்றது வன்னநல் நங்கையே
நனி**விழு நாட்டினால் கொணரப் பட்டவள்
பாதியே பழுத்த **சிறுபழம் போன்றவள்
ஒருகுன் றுதித்த **சிறுபழம் அனையவள்
அல்லது மரத்திலே அமர்ந்துள குயிலவள்
**பேரியில் தங்கிடும் ஒருசிறு புள்ளவள்
மிலாறுவின் எழிலுறும் வியன்சிறைப் பறவையாம்
'மாப்பிள்' மரத்தமர் ஒளிர்மார் புடையவள்.

ஜெர்மனி நாட்டிலும் எவரும் பெறவொணா
எஸ்தோனி யாவுக் கப்பால்(உம்) பெறவொணா
இந்த அரிவையின் இத்தனை அழகையும்
இந்த வாத்ததின் இனிமையின் தன்மையை
இந்த வதனத்து இதுபோல் எழிலினை
இந்தத் தோற்றத்தில் தெரிகின்ற மகிமையை
இந்தக் கரங்களில் இருக்கும் வெண்மையை
மென்மைக் கழுத்தில் வியப்பமை வளைவினை.

அத்துடன் வெறுங்கையாய் அரிவையும் வந்திலள்
கம்பளித் துணிகள் நம்புவிக் கொணர்ந்தவை
மேலங்கி வகைகளும் மிக்கன அவற்றுடன்
அகல்விரிப் புகளும் மிகச்சுமந் துற்றனள்.

பெண்ணுக்கு இங்கே திண்ணமாய் நிறைந்துள
சொந்தத் தறியின் தொழிலாம் பொருட்களும்

சொந்தராட் டினத்தில் விந்தைநெய் துணிகளும்
சொந்த விரல்நுனித் தோன்றிய வகைகளும்
வெள்ளை நிறத்தில் மிகுவகை ஆடைகள்
குளிர்கா லத்தில் கழுவிய உடைகளும்
வசந்த வெய்யிலில் வைத்துலர் துணிகள்
கோடை நிலவிலே காய்ந்தது முள்ளன:
நலமார் விரிப்புகள் சலசலத் தசையும்
தடித்த தலையணை பிடித்தநல் மென்மை
பட்டுத் துணிகள் பளபளத் தாடும்
கம்பளி யாடைகள் பைம்பொனா யொளிரும்.

நல்ல நங்கையே, நவிலெழி லணங்கே!
அழகிய செந்நிற அரிவையே, கேளாய்!
இல்லில்நீ நிறைவாய் புகழோ டிருந்தவள்
பிதாவின் வீட்டிலே மகளா யிருக்கையில்,
நிறைவாம் புகழோடு நிலைப்பாய் வாழ்வெலாம்
மருமக ளாக மணாளனின் மனையிலே.
துன்பப் படுதலைத் தொடங்கவும் வேண்டாம்
தொல்லைகள் வருமெனத் துணியவும் வேண்டாம்
அழைத்துனை வந்தது சதுப்புத் தரைக்கல
படர்ந்துனைக் கொணர்ந்தது படுகுழிக் கல்ல,
தானிய மேடிருந்(து) தனிக்கொணர் பட்டனை
இன்னுமோர் அதிகமாய் இருக்கும்தா னியவிடம்,
நீகொணர் பட்டனை 'பீரு'ள வீடிருந்(து)
'பீர்'இன்னும் மிக்குள வீடொன்று நோக்கியே.

நல்ல நங்கையே, நவிலெழி லணங்கே!
இப்போ துன்னிடம் இவ்விதம் கேட்கிறேன்:
இங்குநீ வருகையில் இதுகண் டனைகொல்
கதிர்த்தா னியத்திரள் கட்டிவைத் திருந்ததை
செறிகனக் கதிர்களைத் திரட்டிவைத் திருந்ததை?
அவையனைத் தும்மிவ் வகத்தையே சேர்ந்தவை
உயர்ந்தஇம் மாப்பிளை உழுததால் வந்தவை
உழுததால் வந்தவை விதைத்ததால் விளைந்தவை.
பாவையே, இளமைப் பருவப் பெண்ணே!
இப்போ துனக்கு இதனைக் கூறுவேன்:
இம்மனை நீவர எவ்வா றறிந்தையோ
அதுபோல் பழகலும் அறிந்தே யுள்ளாய்
இங்கே ஒருபெண் இருப்பது நல்லது
மருமகள் இங்கே வளர்வதும் நல்லது
**நிறைதயிர்ச் சட்டி நின்கரத் துள்ளது
வெண்ணெய்க் கிண்ண மெலாமுன துடமை.

ஒருபெண் ணிங்கே உறைவது நல்லது
ஒருகோழி யிங்கே வளர்வதும் நல்லது
சவுனாப் பலகையிங் ககலமா யானவை
அகத்தரைப் பலகைகள் அமைவன விசாலம்
தலைவர்கள் இனியர்நின் தந்தையைப் போல
தலைவிகள் இனியர்நின் தாயார் போல
புத்திரர் நல்லவர் போலநின் சோதரர்

நல்லவர் புதல்விகள் நின்சகோ தரிபோல்.

ஏதெனும் முனக்கு ஆசையேற் பட்டால்
வந்தால்ஏ தெனும் மனதில் விருப்பம்
உந்தை பிடிக்கும் உயர்மீன் போலோ
வேட்டைச் சோதரன் காட்டுக் கோழியோ
அதைமைத் துனரிடம் அடுத்துப் பேசேல்
மாமனா ரிடம்போய் மற்றதைக் கேளேல்
மாப்பிள்ளை யிடத்தே வந்துநே ராய்க்கேள்
உனைக்கொணர்ந் தவரிடம் உகந்ததைப் பெறுவாய்.
எதுவுமே இல்லையே இருக்குமக் காட்டில்
நான்குகால் களிலே நனிவிரை பிராணிகள்,
வானப் பறவைகள் மற்றெதும் இல்லையே
வியன்சிறை இரண்டினை விசிறிப் பறப்பவை,
அத்துடன் நீரிலும் மற்றெது மில்லையே
மிகவும் சிறந்திடு மீன்கணக் கூட்டம்,
உன்னைப் பிடித்தவர் பிடிக்கொணா ஒன்று
பிடித்தவர் பிடியா(தது) கொணர்ந்தவர் கொணரா(தது).

இங்கொரு மங்கை இருப்பது நல்லது
ஒருகோழி யிங்கே வளர்வதும் நல்லது
திரிகைக் கற்கிங் கவசர மில்லை
உரலைப் பெறற்கும் ஒருகவ லையிலை
தண்ணீர் கோதுமை தனையிங் கரைத்திடும்
நீர்வீழ்ச்சி நன்கே **தானியம் கலக்கிடும்
பாத்திரங் களைஅலை பதமாய்க் கழுவிடும்
அவற்றைக் கடல்நுரை ஆக்கிடும் வெளுக்க.

ஓ,நீ அன்புடை உயரிய கிராமமே!
விரிந்தஎன் நாட்டில் மிகச்சிறப் பிடமே!
கீழே புற்றரை மேலே வயல்நிலம்
இடைநடு வினிலே இருப்பது கிராமம்
இயல்கிரா மக்கீழ் இனிதாம் நீர்க்கரை
அந்தநீர்க் கரையில் அருமைநீ ருளது
வாத்துக்கள் நீந்த வளமிகு பொருத்தம்
விரிநீர்ப் பறவைகள் விளையாட் டயர்தலம்."

வந்தோர்க் குப்பின் வழங்கினர் பானம்
வழங்கினர் உணவு வழங்கினர் பானம்
ஏர(ா)ள மிருந்தன இறைச்சித் துண்டுகள்
அத்தொடு பணிய(ா)ர அழகிய வகைகள்
பார்லியில் வடித்த 'பீரு'ம் இருந்தது
கோதுமை யூறற் பானமு மிருந்தது.

புத்தாக்க உணவு போதிய திருந்தது
போதிய உணவும் போதிய பானமும்
தயங்கு செந்நிறச் சாடிகள் பலவிலும்
அழகிய கிண்ணம் அவைகள் பலவிலும்
நனிபிய்த் துண்ணப் பணியா ரங்கள்
விரும்பிக் கடிக்க வெண்ணெய்க் கட்டிகள்

வெட்டி யெடுக்க வெண்ணிற மீன்கள்,
துண்டு துண்டாக்க வஞ்சிர மீன்கள்
வெள்ளியில் அமைந்த வெட்டுக் கத்தியால்
தங்கத் தமைந்த தனியுறைக் கத்தியால்.

வாங்கப் படாத'பீர்' வழிந்தோ டிற்று
செலுத்தா **மர்க்காத் தேன்பெரு கிற்று
உத்தர உச்சி(யி)ருந் தோடிற் றுப்'பீர்'
பீப்பாவு ளிருந்து பெருகிற் றுத்தேன்
அருந்து'பீர்' இருந்தது அதரங்க ளூற
தேனங் கிருந்தது சேர்ந்துள மயங்க.

இங்கே குயில்போல் இனிதுயார் பாடுவார்?
பொருத்தம தான பொற்பா டகன்யார்?
நிலைபெறும் முதிய வைனா மொயினன்
என்றுமே நிலைத்த இசைப்பா டகனவன்
பாடல்கள் அங்கே பாடத் தொடங்கினன்
பாடல்கள் யாத்துப் பாடத் தொடங்கினன்
இனிவரும் சொற்களில் இவ்விதம் சொன்னான்
இந்த மொழிகளில் இவ்விதம் மொழிந்தான்:
"அன்புடைச் சோதர, அரியஎன் சோதர!
என்னொடு இணைந்த இனியசொல் வல்லவ!
நாவன்மை படைத்தவென் நல்லதோ ழர்களே
இப்போநான் புகல்வதை இனிதுகே ளுங்கள்
வாத்துக்கள் சேர்வது **வாய்க்குவாய் அரிது
கண்ணொடு சோதரி கண்ணைநோக் குதலும்
அருகரு கிருப்பதுவும் அரிதுசோ தரர்கள்
தோளொடு **தோள்தாய்த் தோன்றல்கள் நிற்பதும்
வறிதாய் வீணே மயங்கிடும் எல்லையில்
தெரியும் வடபால் செழிப்பிலா நிலத்தில்.

பாடல்கள் இவ்விதம் பாடத் தொடங்கவா?
பாடல்கள் யாத்துப் பாடத் தொடங்கவா?
பாடல்கள் பாடலே பாடகர் தொழிலாம்
கூவுதல் வசந்தக் குயிலின் தொழிலாம்
**நீலமா தர்க்குச் சாயம் அழுத்தலும்
**தறியமர் மகளிர்க்(கு) நெய்தலும் தொழிலாம்.

லாப்பில்வாழ் பிள்ளைக ளெலாம்பா டிடுவர்
வைக்கோற் காலணி மாந்தரு மிசைப்பர்
இரும்காட் டருமெரு திறைச்சியுண் நேரம்
சிறுகலை மான்ஊன் தின்றிடும் நேரம்;
நானுமே னிங்கு பாடா திருக்கிறேன்
எமது பிள்ளைகள் ஏன்பா டுகிலர்
உயர்தா னியத்தில்நல் உணவுண் நேரம்
வாய்நிறை உணவை மகிழ்ந்துண் கையிலே?

லாப்பில்வாழ் பிள்ளைக ளெலாம்பா டிடுவர்
வைக்கோற் காலணி மாந்தரு மிசைப்பர்
ஒருகிண் ணம்நீர் உவந்தருந் துகையில்

**மரப்பட்டை ரொட்டி மகிழ்ந்துமெல் லுகையில்;
நானுமே னிங்கு பாடா திருக்கிறேன்
எமது பிள்ளைகள் ஏன்பா டுகிலர்
தானியம் வடித்த பானம் பருகையில்
பார்லியில் செய்த 'பீர்'அருந் துகையில்?

லாப்பில்வாழ் பிள்ளைக ளெலாம்பா டிடுவர்
வைக்கோற் காலணி மாந்தரு மிசைப்பர்
வெளியே புகைபடி கூடார ஒளியில்
படிந்த கறைநிறை படுக்கை யதிலே;
நானுமே னிங்கு பாடா திருக்கிறேன்
எமது பிள்ளைகள் ஏன்பா டுகிலர்
உயர்புக முடையஇவ் உத்தரத் தின்கீழ்
குறையா அழகுக் கூரையின் கீழே?

ஆடவர் இங்கே அமர்தல்நன் றாகும்
இனியபெண் மணிகள் இருப்பதும் நன்றாம்
'பீர்'நிறைந் திருக்குமிப் பீப்பாப் பக்கம்
தேன்நிறைந் திருக்குமிச் சாடியைச் சூழ்ந்து
எங்கள் அருகில்வெண் மீனின் நீரிணை
அருகில்வஞ் சிரத்தின் அகல்வலை வீச்சிடம்
உண்கையில் உணவெதும் ஒழிந்துபோ னதேயிலை
பபானம் பருகையில் பற்றா நிலையிலை.

ஆடவர் இங்கே அமர்தல்நன் றாகும்
இனியபெண் மணிகள் இருப்பதும் நன்றாம்
உறுதுய ரோடிங்(கு) உணல்கிடை யாது
கவனிப்(பு) ஒன்றிலாக் கழியும் வாழ்விலை;
உறுதுயர் இன்றியே உண்ணுதல் இங்குள
கவனிப்பு நிறைந்த கவின்வாழ் விங்குள
இந்தத் தலைவனின் எல்லாக் காலமும்
இந்தத் தலைவியின் இன்வாழ் நாளெலாம்.

இங்கே முதலில் எவரைப் புகழ்வேன்?
தலைவர் இவரையா தலைவி இவளையா?
வீரர் வழமையாய் மிகுமுன் பொழுதெலாம்
தலைவரைப் புகழ்ந்தே தனிமதித் தார்முதல்
தலைவர் அமைத்தவர் சதுப்பில் வசிப்பிடம்
வனத்தி லிருந்தொரு வசிப்பிட மமைத்தவர்
அகல்பெரு ஊசி(யி)லை அடிமரம் கொணர்ந்தார்
தாருவைத் துணித்துத் தலையுடன் கொணர்ந்தார்
அவற்றைநல் லிடத்தில் அமைவுடன் வைத்தார்
அவற்றை உறுதியாய் ஆங்காங்கு நிறுத்தி
உயர்ந்த குடிக்கு உயர்பெரும் வசிப்பிடம்
அழகுறும் தோட்டத் தமைத்தனர் வீட்டை;
கட்டினார் சுவர்மரக் காட்டினி லிருந்து
உத்தரம் பயங்கரக் குன்றிலுண் டானது
பல்குறுக் குமரம் பாறை நிலத்திலும்
சிறந்தசட் டமெலாம் சிறுபழப் புதரிலும்
**சிறுபழச் செடியுள திடரினில் பட்டையும்

உறைந்திடாச் சேற்றினில் பாசியும் பெற்றனர்.

வாழ்விடம் சரியாம் வகைகட் டியதும்
இருப்பிடம் சரியாம் இடத்தில் அமைந்தது
சுவர்வே லைக்குத் தோற்றினர் நூற்றுவர்
இல்லக் கூரையில் இருந்தனர் ஆயிரம்
இந்தவாழ் விடமதை இனிதாய் அமைத்திட
பகருமிந் நிலத்தைப் பரப்பி யமைத்திட.

ஆயினும் இவ்வா றமைந்தஇத் தலைவர்
வாழ்விடம் அமைத்து வருகையில் இவ்விதம்
கண்டது இவர்சிகை காற்றுப் பலதினை
கொடுங்கால நிலையைக் குழலும் கண்டது
அடிக்கடி இந்தநல் லழகிய தலைவரின்
கையுறை பாறைக் கல்லில் இருந்தது
தாருவின் கிளையில் தரித்தது தொப்பி
சேற்றில் காலுறை திணிந்து கிடந்தது.

அடிக்கடி இந்த அழகுநல் தலைவர்
காலையில் மிகஅதி காலைவே ளையிலே
மற்றைய மனிதர் வளர்துயி லெழுமுன்
கிராமச் சனங்கள் கேட்பதன் முன்னர்
அனல்வெப்ப மருங்கு அகல்வார் துயிலால்
குச்சியால் கட்டிய குடிசையில் எழுவார்
துரிகைகொண்டு வாரித் தலையை
பனித்துளி யால்விழி பாங்காய்க் கழுவுவார்.

அதன்பின் இந்த அழகுநல் தலைவர்
அறிந்த மனிதரை அகத்துள் கொணர்வார்
பாடகர் வாங்கில் பலர்மிக் கிருப்பர்
திளைப்போர் களிப்பில் திகழ்வர்சா ளரத்தே
மந்திரம் சொல்பவர் வன்னிலப் பலகையில்
மூலையில் இருப்பர் மாயம் செய்பவர்
சுவரின் பக்கம் தொடர்ந்து நிற்போரும்
வேலியோ ரத்தை மிதித்தகல் வோரும்
முன்றிலில் நீடு நடந்துசெல் வோரும்
நாட்டின் குறுக்கே நனிபய ணிப்பரும்.

தலைவரை முதலில் தனிப்புகழ்ந் திசைத்தேன்
தருணமிஃ தன்புத் தலைவியைப் புகழ்வேன்
தயாராய் உணவைச் சமைத்துவைத் ததற்கு
நீண்ட மேசையை நிறைத்து வைத்ததற்கு.

தடித்த ரொட்டிகள் படைத்தவள் அவளே
தகுபெரு மாப்பசை தட்டி யெடுத்தவள்
உவந்தவள் விரையும் உள்ளங் கைகளால்
அவளது வளைந்த ஐயிரு விரல்களால்
ரொட்டிகள் மெதுவாய்ச் சுட்டே எடுப்பாள்
விருந்தா ளிகளை விரைந்துப சரிப்பாள்
பன்றி இறைச்சியும் பலதொகை சேர்த்து

அத்துடன் மீன்பணி யாரமும் கலந்து;
கத்தியின் அலகுகள் மெத்த நழுவிடும்
உறைக்கத்தி முனையும் உடனாய் வழுவும்
வஞ்சிர மீனின் வன்தலை துணிக்கையில்
கோலாச்சி மீனின் கொழுந்தலை அறுக்கையில்.

அடிக்கடி இந்த அழகுநல் தலைவி
கவனம் மிகுமிக் கவின்அக மனையாள்
சேவல்இல் லாமலே தெரிந்தவள் துயிலெழ
கோழிக் குஞ்சுக் குரலிலா தேகுவாள்
உகந்தஇவ் வதுவை ஒழுங்காம் காலம்
பணியா ரம்பல பலசுடப் பட்டன
புளித்த மாவுறை முழுப்பதப் பட்டது
'பீரு'ம் வடித்துப் புர்த்தியா யிருந்தது.

சிறப்புறும் இந்தத் திகழ்நல் தலைவி
கவனம் மிகுமிக் கவினக மனையாள்
அறிவாள் 'பீரை' அரும்பதம் வடிக்க
பெருகவே விடுவாள் பெருஞ்சுவைப் பானம்
நுரைக்கும் முளைகள் நுண்தளிர் இருந்து
கூலத் தினிக்கும் ஊறலி லிருந்து
கவின்மர அகப்பையால் கலக்கவும் மாட்டாள்
கிடைத்தகாத் **தண்டினால் கிளறவும் மாட்டாள்
கைமுட்டி கொண்டு தானே கலக்குவாள்
தொட்டதன் கரங்களால் மட்டும் கிளறுவாள்
கவினார் புகையில்லாச் சவுனா வறையில்
சுத்தமாய்ப் பெருக்கித் துடைத்த பலகையில்.

இந்தநல் தலைவி என்றுமே செய்யாள்
கவனம் மிகுமிக் கவினக மனையாள்
அடித்து முளைகள்கூ ழாக்கவும் மாட்டாள்
கூலமா வூறலைக் கொட்டாள் நிலத்தில்
ஆயினும் சவுனா அடிக்கடி செல்வாள்
நடுநிசி நேரமும் நனிதனிச் செல்வாள்
ஓநாய் பற்றி உறாளாம் அச்சம்
வனவிலங் கெதற்கும் மனத்துப் பயப்படாள்.

இப்போ(து) புகழந்து இசைத்தேன் தலைவியை
பொறுங்கள் என் சிறந்த மனிதரைப் புகழுவேன்!
சிறந்த மனிதராய்த் திகழ்ந்தவர் எவரோ?
இன்றைய காட்சியின் இயக்குனர் யாரோ?
சிறந்தவர் கிராமச் சிறந்த மனிதராம்
காட்சியை நடாத்தும் பாக்கியம் பெற்றவர்.

எங்களின் சிறந்த இவரைப் பார்ப்பீர்
அகன்ற துணிமே லாடையில் இருக்கிறார்
அவ்வுடை கைக்கீழ் அளவா யுள்ளது
இடுப்பின் பரப்பில் இறுக்கமா யுள்ளது.

எங்களின் சிறந்த இவரைப் பார்ப்பீர்

ஒடுங்கிய நீண்ட உடையி லிருக்கிறார்
ஆடையின் விளிம்பு அதுமண் தொடுமாம்
ஆடையின் பின்புறம் அதுநிலம் படியும்.

மேற்சட்டை சிறிது வெளித்தெரி கிறது
எட்டிப் பார்க்கிற ததிற்சிறு பகுதி
நிலவின் மகளவள் நெய்ததைப் போன்று
ஈயத்து நெஞ்சாள் இயற்றிய தைப்போல்.

எங்களின் சிறந்த இவரைப் பார்ப்பீர்
அரையினில் கம்பளி அமைந்தநற் பட்டி
ஆதவன் மகளவள் அமைத்தநற் பட்டி
மிளிர்நக முடையவள் மினுக்கிய பட்டி
தீயில் லாத காலம் நடந்தது
நெருப்பையே அறியா நேரம் நடந்தது.

எங்களின் சிறந்த இவரைப் பார்ப்பீர்
கவின்பட் டிழைத்த காலுறை கால்களில்
காலுறைப் பட்டியும் கவின்பட் டானது
காலதன் பட்டிஒண் கவின்பட் டானது
எழிற்பொன் னாலிவை இழைக்கப் பட்டன
அலங்க(ா)ரம் வெள்ளியால் ஆக்கப் பட்டன.

எங்களின் சிறந்த இவரைப் பார்ப்பீர்
கவினார் ஜேர்மனிக் காலணி கால்களில்
ஆற்றிலே அன்னம் அழகாய் மிதத்தல்போல்
வாத்துக் கரைகளில் வந்துநீந் துதல்போல்
தாராக் கிளைகளில் தரித்திருப் பதுபோல்
மரம்வீழ் காட்டில் இடம்பெயர் புட்போல்.

எங்களின் சிறந்த இவரைப் பார்ப்பீர்
பொன்னிறத் தினிலே மென்சுருள் தலைமயிர்
தங்கப் பின்னலாய்த் தான்மிளிர் தாடி,
தலையில் மிலைந்த தனிநீள் தொப்பியோ
முகிலைத் துளைத்து முன்உயர்ந் திருந்தது
காடுகள் அனைத்தும் கவினொளி விதைத்தது
கொடுத்தும் நூறு கொள்ளவே முடியா
**மர்க்காஆ யிரத்திலும் வாங்கிட முடியா.

இப்போ புகழ்ந்தேன் என்சீர் மனிதரை
பொறுங்கள், மணமகள் தோழியைப் புகழ்வேன்!
மணமகள் தோழி வந்தளெங் கிருந்து
அதிர்ஷ்டக் காரியை அடைந்ததெங் கிருந்து?
மணமகள் தோழி வந்தளங் கிருந்து
அதிர்ஷ்டக் காரியை அடைந்ததங் கிருந்து
*தனிக்காக் கோட்டைத் தன்பின் புறத்தால்
*புதிய கோட்டைப் புணர்வெளிப் புறத்தால்.

அங்கிருந் தாயினும் அவளைப் பெற்றிலர்
அங்ஙனம் பெறற்கு ஆதாரம் சற்றிலை

மணமகள் தோழி வந்தளங் கிருந்து
அதிர்ஷ்டக் காரியை அடைந்ததங் கிருந்து
*வெண்கட லிருக்கும் வியன் நீரிருந்து
விரிந்து அகன்ற வியநீர்ப் பரப்பிருந்(து).

அங்கிருந் தாயினும் அவளைப் பெற்றிலர்
அங்ஙனம் பெறறற்கு ஆதாரம் சற்றிலை
திகழ்தரை **சிறுபழச் செடியொன்(று) வளர்ந்தது
படர்புதர் செந்நிறப் பழந்தரு **மொருசெடி
வளர்ந்தது ஒருபுல் வயலில் ஒளியொடு
பூத்தது பொன்னிறத் தொருபூ காட்டிலே
மணமகள் தோழி வந்தள்அங் கிருந்து
அதிர்ஷ்டக் காரியை அங்கிருந் தெடுத்தனர்.

மணப்பெண் தோழியின் வாய்அழ கானது
நுவல்பின் லாந்தின் **நூனாழி போன்றது,
உயர்மணத் தோழியின் உயிர்ப்புள விழிகள்
விண்ணகத் தொளிரும் விண்மீ னனையவை,
மணப்பெண் தோழியின் வளப்புகழ்ப் புருவம்
கடல்மேற் திகழும் கவின்நிலாப் போன்றவை.

தோன்றுமெம் மணப்பெண் தோழியைக் காண்பீர்
பூக்கழுத் தில்நிறை பொன்னிறச் சுருள்கள்
சென்னியில் நிறைய பொன்னிறக் கூந்தல்
தங்க வளையல்கள் தளிர்க் கரங்களிலே
பொன்னினால் மோதிரம் பூவிரல் களிலே
பொன்னினால் அமைந்த பொன்மணி காதிலே
தங்கநூல் முடிச்சுகள் துங்கவிற் புருவம்
முத்தலங் காரம் வித்தகக் கண்ணிமை.

நனிமதி திகழ்வதாய் நானும் எண்ணினேன்
பொன்னின் வளையம் மின்னிய போதினில்;
எல்லவன் ஒளிர்வதாய் எண்ணினேன் நானும்
சட்டையின் கழுத்துப் பட்டி ஒளிர்கையில்;
நாவாய் ஒன்று நகர்வதா யெண்ணினேன்
தலையில் தொப்பி தளர்ந்தசை கையிலே.

மணப்பெண் தோழியை வானாய்ப் புகழ்ந்தேன்
பார்க்க விடுங்கள் நோக்குமெல் லோரையும்
அனைவரும் இங்கே அழகா னவரா
முதியோர் எல்லாம் அதிமதிப் பினரா
இளைஞர்கள் எல்லாம் எழிலா னவரா
கூட்டத்தில் அனைவரும் கொள்சிறப் பினரா!

மற்றஎல் லோரையும் இப்போது பார்த்தேன்
அனேகமாய் அனைவரும் அறிந்தவர் தாமே
இங்கிப் படிமுன் னிருந்தது மில்லை
இருக்கப் போவது மிலையினி நிச்சயம்
கூட்டத்தில் அனைவரும் கொள்சிறப் பினராய்
அனைவரும் இங்கே அழகா னவராய்

முதியோர் எல்லாம் அதிமதிப் பினராய்
இளைஞர்கள் எல்லாம் எழிலான வராய்;
வெளுப்புறு முடையில் முழுப்பே ருமுளர்
உறைபனி மூடிய உயர்காட் டினைப்போல
கீழ்ப்புறம் எல்லாம் கிளர்புல ரொளிபோல்
மேற்பபுற மெல்லாம் மிளிர்வை கறைபோல்.

வெள்ளிக் காசுகள் மிகமலிந் திருந்தன
பொற்காசு விருந்தில் பொலிந்து கிடந்தன
முழுக்கா சுப்பை முன்றிலில் கிடந்தன
பணப்பை பாதையில் பரவிக் கிடந்தன
அழைக்கப் பட்ட அயல்விருந் தினர்க்காய்
அழைத்த விருந்தினர் அதிபெரு மைக்காய்."

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
அழிவிலாப் பாடலின் ஆத(ா)ரத் தூணவன்
வண்டியில் இதன்பின் வந்தே யேறினன்
திகழ்அகம் நோக்கிச் செய்தனன் பயணம்;
தன்கதை பற்பல தாழ்விலா திசைத்தான்
மந்திரப் பாடல்கள் மாண்புறப் பயின்றான்
ஒருகதை பாடினான் இருகதை பாடினான்
மூன்றாம் கதையும் முடிவுறும் போது
மோதிற்று பாறையில் முன்வண்டி விற்கால்
முட்டிற் றடிமரக் குற்றியில் ஏர்க்கால்
நொருங்கிச் சிதைந்தது பெருங்கவி வண்டி
பாடகன் விற்கால் ஊடிற்று வீழ்ந்தது
ஏர்க்கால் வெடித்து இற்றுப் பறந்தது
பலகைகள் கழன்று பரவின பெயர்ந்து.

முதிய வைனா மொயினன் மொழிந்தான்
உரைத்தான் அவனே உரைத்தான் இவ்விதம்:
"இங்கே இருக்கும் இளைஞர்கள் மததியில்
வளர்ந்திடும் தேசிய மக்களின் மத்தியில்
அல்லது முதுமை அடைந்துளார் மத்தியில்
தளர்ந்தரு கிவரும் சந்ததி மத்தியில்
துவோனலா ஏகுவார் எவரெனு முளரோ
சாவுல குக்குப் போவார் உளரோ
துவோனலா விருந்து துறப்பணம் கொணர
தொல்சா வுலகினால் துளைப்பான் கொணர
சறுக்கு வண்டியைச் சமைக்கப் புதிதாய்
வண்டியைத் திருத்தி வருபுதி தமைக்க?"

இளைஞரும் அத்துடன் இவ்விதம் கூறினர்
முதுமையுற் றோரும் மறுமோழி கூறினர்:
"இல்லை யிங்குள இளைஞரின் மத்தியில்
இல்லை முதியவர் எவரிலும் நிச்சயம்
உயர்குடி மக்களில் ஒருவரு மில்லை
வீரம் நிறைந்த வீரரில் இல்லை
வல்லவன் துவோனலா செல்லுதற் கொருவர்
இறப்புல குக்கு எழுவோர் ஒருவர்

துவோனலா விருந்து துறப்பணம் கொணர
தொல்சா வுலகினால் துளைப்பான் கொணர
சறுக்கு வண்டியைச் சமைக்கப் புதிதாய்
வண்டியைத் திருத்தி வருபுதி தமைக்க."

முதிய வைனா மொயினன் பின்னர்
என்றுமே நிலைத்த இசைப்பா டகனவன்
தானே மீண்டும் போனான் துவோனலா
படுமாய் வுலகு பயணம் செய்தான்
துவோனலா விருந்து துறப்பணம் கொணர்ந்தான்
தொல்சா வுலகினால் துளைப்பான் கொணர்ந்தான்.

முதிய வைனா மொயினன் அதன்பின்
நீல நிறவனம் நிமிர்ந்தெழப் பாடினான்
அரியசிந் தூரம் அதிலெழப் பாடினான்
உகந்ததாய்ப் பேரி உயர்ந்தெழப் பாடினான்
அவற்றிலே யிருந்து அமைத்தான் வண்டி
அவற்றில் விற்கால் அமைத்தான் வகையாய்
ஏர்க்கால் அவற்றில் எடுத்தான் பின்னர்
நுகமரம் எல்லாம் இயற்றி முடித்தான்
சறுக்கு வண்டி திருத்தினான் இவ்விதம்
அப்புது வண்டியை அமைத்து முடித்தான்
புரவிக் குட்டியை அலங்கா ரித்தான்
மண்ணிறப் புரவி வண்டிமுன் நின்றது
ஏறிச் சறுக்கு வண்டியில் இருந்தனன்
ஏறி வண்டியில் இருந்து கொண்டனன்;
சாட்டைவீ சாமல் தனிப்பரி விரைந்தது
**மணிஅடி யிலாமலே வளர்பரி விரைந்தது
பழகிய சதுப்பு படர்நிலம் விரைந்தது
இரையுள்ள இடத்தே எழிற்பரி விரைந்தது
முதிய வைனா மொயினனைக் கொணர்ந்தது
என்றுமே நிலைத்த இசைப்பா டகனை
அவனது சொந்த அகல்கடை வாயில்
சொந்தக் களஞ்சிய முன்றிலின் முன்னே.

கலேவலா

பாடல் 26 - லெம்மின்கைனனின் ஆபத்தான பிரயாணம்

அடிகள் 1 - 382 : தன்னைத் திருமணத்துக்கு அழைக்காத காரணத்தால் ஆத்திரம் கொண்ட லெம்மின்கைனன் வடநாட்டுக்குப் புறப்படுகிறான். அங்கு அவனுக்கு ஏற்படக்கூடிய அபாயங்கள் பற்றியும் முன்னர் அங்கு ஏற்பட்ட மரணங்கள் பற்றியும் கூறித் தாய் தடுத்தும்கூடக் கோளாமல் பயணத்தை மேற்கொள்கிறான்.

அடிகள் 383 - 776 : அவனுடைய பயணத்தின்போது பல ஆபத்தான இடங்களைக் கடக்க நேர்ந்தது. ஆனால் அதிர்ஷ்டவசமாகத் தனது மந்திர அறிவினால் எல்லாவற்றிலும் வெற்றி காண்கிறான்.

அஹ்தி என்பான் அகல்தீ வுறைபவன்
பரந்தகல் வளைகுடாப் பகுதியின் முடிவில்
உழுதுகொண் டிருந்தான் ஒருவயல் அவனே
உழுது புரட்டினான் ஒருவய லையவன்
அவனது செவிகள் அதிநுண் தகையன
கேட்கும் சக்தியும் கிளர்கூர் மையது.

கேட்டதோர் கூச்சல் கிராமத் திருந்து
ஏரிக்கு அப்பால் எழுந்தது சத்தம்
பனிக்கட்டி மீதில் பாதம் ஊன்றொலி
சமபுற் றரைமேல் சறுக்குவண் டியினொலி;
அவனுக் கொருநினை வப்போ துதித்தது
நெஞ்சிலோர் சிந்தனை நேரா யெழுந்தது;
வடபால் நிலம்திரு மணம்நடந் ததுவோ
எழும்குடி மனிதரின் இரகசியக் கூட்டமோ!
தன்வாய் கோணித் தலையைத் திருப்பினன்
கறுத்தத் தாடியைக் கையால் முறுக்கினன்
குருதியும் வடிந்து கொடிதிறங் கிற்று
காண்அபாக் கியவான் கன்னத் திருந்து;
உடனே தனது உழவினை நிறுத்தினான்
புரட்டலைப் பாதிப் புன்வயல் நிறுத்தினான்
எழில்நிலத் திருந்து ஏறினான் குதிரையில்
புறப்பட் டான்இல் போவதற் காக
அன்பு நிறைந்த அன்னையின் அருகே
பெரும்புக முறுதன் பெற்றோர் பக்கம்.

சென்றதும் அவ்விடம் செப்பினன் இங்ஙனம்
வந்து சேர்ந்ததும் வருமா றுரைத்தனன்:
"ஓ,என் அன்னையே, உயர்வய தினளே!
உணவினை விரைவாய் உடனெடுத் திடுவாய்
இங்கொரு பசியுளோன் இருக்கிறான் உண்ண
ஒருகடி கடிக்க உளம்கொள் பவற்கு;
அதேகணம் சூட்டை ஆக்கிடு சவுனா
அறையில்தீ மூட்டி ஆக்கிடு வெப்பம்
மனிதனைச் சுத்தமாய் மாற்றுமவ் விடத்தில்
தனிவிறல் வீரனைத் தயார்செயு மிடத்தில்."

அப்போது லெம்மின் கைனனின் அன்னை
உணவினைக் கொஞ்சம் உடன்விரைந் தெடுத்தாள்
பசியுறு மனிதன் பார்த்துண் பதற்காய்
ஒருகடி கடிக்க உளம்கொளு பவற்காய்
குளியல் குடிசையும் கொண்டது தயார்நிலை
ஆயத்த மானது அச்சவு னாவறை.

குறும்பன் லெம்மின் கைனன் பின்னர்
உணவினைக் கொஞ்சம் உடன்விரைந் தெடுத்தான்
அந்நே ரத்தே அடைந்தான் சவுனா
குளியல் அறையுளும் குறுகினன் அங்ஙனம்;
அங்கொரு **பறவை அலசிக் கொண்டது
செய்தது சுத்தம் திகழ்**பனிப் பறவை
தலையை ஒருபிடி சணலைப் போலவும்
கழுத்தையும் வெளுப்பாய்க் கழுவிக் கொண்டது.

வீட்டினுள் சவுனா விருந்தவன் சென்றான்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"ஓ, என் அன்னையே, உயர்வய தினளே!
குன்றத் திருக்கும் குடிற்கே விரைவாய்
அங்கிருந் தெடுத்துவா அழகிய உடைகளை
மாசிலா ஆடைகள் வாகாய்ச் சுமந்துவா
நானே அவற்றை நன்கணி வதற்கு
என்னுடல் அவற்றை எடுத்துத் தரிக்க!"

விரைந்து அன்னையும் வினவுதல் செய்தாள்
மிகுவய துப்பெண் விசாரணை செய்தாள்:
"எங்கே செல்கிறாய் எந்தன் மகனே
**சிவிங்கிவேட் டைக்கா செல்லப் போகிறாய்
அல்லது காட்டெரு ததன்பின் சறுக்கவா
அல்லது எண்ணமா அணிலதை எய்ய?"

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்
எழிலார் தூர நெஞ்சினன் இயம்பினன்:
"ஓ,என் அன்னாய், உழன்றெனைச் சுமந்தாய்!
சிவிங்கிவேட் டைக்குச் செல்லுதற் கில்லை
சறுக்கவு மில்லைத் தனிக்காட் டெருதுபின்
அல்லது இல்லை அணிலையும் எய்தல்:
வடநாட்(டு) விருந்து புறப்படப் போகிறேன்
இரகசியக் குடியர் இடம்போ கின்றேன்;
எழிலார் உடைகளை என்னிடம் கொணர்வாய்
கொணர்வாய் என்னிடம் குறைவிலா ஆடை
கடிமண வீட்டில் காட்சியா யிருக்க
விருந்து நிகழ்ச்சிக் கணிந்து நான்செல்ல."

தனது மைந்தனைத் தடுத்தாள் அன்னை
தனது மனிதனைத் தடுத்தாள் பெண்ணவள்
வேண்டாம் என்றனர் விளங்கிரு பெண்கள்
தடுத்தனர் இயற்கையின் தையலர் மூவர்

புறப்ப(ட்)டு லெம்மின் கைனன் போவதை
நிகழ்நல் வடபால் நிலவிருந் துக்கு.

மாதா இவ்விதம் மகனுக் குரைத்தாள்
பெருவய தினள்தன் பிள்ளைக் குரைத்தாள்:
"அன்பின் மகனே, அகலுதல் வேண்டாம்!
நேசமார் மகனே, தூரநெஞ் சினனே!
வைபவ விருந்து வடநாட் டுக்கு
குழுவினர் பலபேர் குடிக்கும் வைபவம்!
அங்கே நீயும் அழைக்கப் பட்டிலை
நீயோ அங்கே தேவைப் பட்டிலை."

குறும்பன் லெம்மின் கைனனப் போது
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"அழைப்புக் கேகுவர் அதிஇழிந் தவர்கள்
அழைப் பில்லாமல் அரியோர் துள்ளுவர்;
அழைக்கப் பட்டவர் அம்நிலா வயதினர்
ஓய்வே இல்லா உயர்தூ துவராம்
தீப்பொறி சிந்தும் திகழ்வாள் அலகில்
குவிந்தொளி சிதறும் கூரிய முனையில்."

லெம்மின் கைனனின் அன்னையப் போது
தடுக்க முயன்றாள் தனையனை இன்னும்:
"வேண்டாம் வேண்டாம் விறல்என் மதலாய்!
வடபுல விருந்தில் வலிந்தே செல்லல்!
பயணத் தறிவாய் பற்பல அற்புதம்
மாபெரும் அதிசயம் வந்திடும் வழியில்
வன்கொடு மூன்று மரணம் நேர்ந்திடும்
மனிதனின் இறப்பும் வந்திடும் மூன்று."

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்
எழிலார் தூர நெஞ்சினன் இயம்பினன்:
"வயோதிப மாதர்க்(கு) மரணம்என் றும்தான்
எல்லா இடத்திலும் இவர்க்கிறப் புத்தான்
இவைசார் அக்கறை இல்லைவீ ரர்க்கு
இவைபற்றி கவனமும் இல்லைஅ வர்க்கு
ஆயினும் அவைஅவை அங்ஙனம் நிகழ்க,
என்றன் காதில்நீ இயம்புவாய் கேட்க
எந்த மரணம் இனிமுதல் நிகழ்வது
முதலில் நிகழ்வதும் முடிவில் நிகழ்வதும்?"

லெம்மின் கைனனின் அன்னை மொழிந்தனள்
முதிய மாதவள் மொழிந்தாள் மறுமொழி:
"மரணம் பற்றி வழுத்துவேன் உள்ளதை
மனிதன் விருப்புபோல் மரணம் நிகழா
முதல்வரப் போகும் மரணம் மொழிவேன்
மரணம் இதுவே வருமுதல் மரணம்
சிறிதுதூ ரம்நீ செல்வாய் பாதையில்
பாதையில் ஒருநாள் பயணம் முடிப்பாய்
அப்போ(து) நெருப்பு ஆறொன் றெதிர்ப்படும்

அந்தஆ றுன்னெதிர் வந்தே அடுக்கும்
ஆற்றில்தீ வீழ்ச்சி அங்கே தோன்றிடும்
படர்தீ வீழ்ச்சியில் பாறைத்தீ வொன்(று)
பாறைத் தீவிலே பதிந்ததோர் தீமுடி
தீமுடி யதிலே தீக்கழு கொன்று
இரவில் அலகை எடுத்திடும் தீட்டி
பகலில் நகத்தைப் படுகூ ராக்கிடும்
அவ்வழி வந்திடும் அந்நிய மனிதர்க்(கு)
தன்வழி வந்திடும் தனிநபர் ஒருவர்க்(கு)."

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்
எழிலார் தூர நெஞ்சினன் இயம்பினன்:
"இந்த மரணம் அரிவையர் மரணம்
வல்வீ ரன்தன் மரணமே அல்ல
நல்லது அதற்கோர் நல்வழி காண்பேன்
ஏதெனும் நல்லதாய் எண்ணுவேன் கருமம்:
பரியொன்று தோன்றநான் பாடுவேன் **'அல்டரி'ல்
'அல்டரி'ல் மனிதனும் அமையநான் பாடுவேன்
என்னுடைய பக்கத் தேகுதற் காக
என்றன் முன்புறம் இனிதுற நடக்க;
தாரா போல்நான் மூழ்குவேன் அப்போ
அடியில் வாத்தாய் ஆழத் தேகுவேன்
கழுகின் கூரிய உகிர்களின் கீழாய்
**இராட்சசக் கழுகின் இகல்விரற் கீழாய்;
"ஓ,என் அன்னாய், உழன்றெனைச் சுமந்தோய்!
இடையில்வந் தெய்தும் இறப்பினை நவில்க!"

லெம்மின் கைனனின் அன்னை கூறினள்:
"இந்த மரணம் இரண்டாம் மரணம்
சிறிதுதூ ரம்நீ செல்வாய் பாதையில்
பயணம் முடிப்பாய் பகரிரண் டாம்நாள்
நெருப்புக் கணவாய் நேர்ப்படும் அப்போ
அதுஉன் பாதையில் அணுகும் குறுக்கே
வெகுதொலை கிழக்கில் மிக்குநீண் டிருக்கும்
வடமேல் எல்லையும் முடிவற் றிருக்கும்
கொதிக்கும் கற்களைக் கொண்டது நிறைய
எரியும் பாறைகள் இருக்கும் அதனுள்;
அதனுட் சென்ற ஆட்கள்பல் நூற்றுவர்
அதனுள் நிறைந்தவர் ஆயிரக் கணக்காம்
வாள்விற லார்எ(ண்)ணில் வரும்ஒரு நூறுபேர்
இரும்புப் பரிகள் இருக்குமோ ராயிரம்."

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்
எழிலார் தூர நெஞ்சினன் இயம்பினன்:
"அதுவொரு மனிதனின் மரணமே அல்ல
அதுவொரு வீரனின் அழிவுமே யல்ல
ந(ல்)லது அதற்கொரு நனிசூழ் வெண்ணினேன்
நினைத்தேன் சூழ்ச்சியை நேர்வழி கண்டேன்
பாடுவேன் தோன்றிடப் பனித்திரள் மனிதன்
மிகுபலப் பனித்திரள் வீரனைப் பாடுவேன்

அனலின் நடுவிலே அவனைத் தள்ளுவேன்
அழுத்துவேன் பலமாய் அவனை நெருப்பில்
கொதிசவு னாவில் குளிப்பதற் காக
அத்துடன் செப்பில் அமைந்த தூரிகை;
மாறியப் போதே மறுபுறம் செல்வேன்
எரியின்ஊ டாக எனைக்கொடு போவேன்
எனது தாடியாங் கெரியா திருந்திடும்
சுருளுறும் தலைமுடி கருகா திருந்திடும்
ஓ,என் அன்னாய், உழன்றெனைச் சுமந்தோய்!
இறுதிவந் தெய்தும் இறப்பினைப் பகர்வாய்!"

லெம்மின் கைனனின் அன்னை கூறினள்:
"மொழியுமிம் மரணம் மூன்றாம் மரணம்
செல்லுவாய் இன்னும் சிறுதொலை பாதையில்
முடிந்திடும் இன்னொரு முழுநாள் இதிலிருந்(து)
வடபால் நிலத்து வாயிலை நோக்கியே
அந்தமா நிலத்து அமைகுறும் பாதையில்
உன்மீ தப்போ ஓரோநாய் பாய்ந்திடும்
அடுத்ததாய்க் கரடியும் அடித்திடும் உன்னை
வடபால் நிலத்து வாயில் தலத்தினில்
மிகவும் குறுகிய மிகச்சிறு ஒழுங்கையில்;
உண்டது இதுவரை ஒருநூற் றுவராம்
அழிந்து போனவர் ஆயிரம் வீரராம்
உனைஏன் அவையும் உண்டிட மாட்டா
காப்பில்லா உனைஏன் கடிதழித் திடாவாம்?"

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்
எழிலார் தூர நெஞ்சினன் இயம்பினன்:
"செம்மறி யாட்டுக் குட்டியைத் தின்னலாம்
பச்சையாய்க் கிழித்துப் பலதுண் டாக்கலாம்
ஆயினும் முடியா அதுபல வீனரை
அல்லது சோம்பேறி யானவீ ரரையும்!
மனிதனின் பட்டிநான் நனிபூட் டியுளேன்
நனிபொருத் தியுளேன் மனிதனின் ஊசிகள்
வலிதுகட் டியுளேன் மறவரின் வளையம்
ஆதலால் நானும் வீழவே மாட்டேன்
*உந்தமோ என்பான் ஓநாய் வாய்களில்
பெரிதே சபிப்புறு பிராணியின் அலகில்.

இப்போ தோநாய்க்(கு) எண்ணினேன் சூழ்ச்சியொன்(று)
கரடிக்கும் கூடக் கண்டுளேன் ஓர்வழி
ஓநாய் வாய்க்கட் டுண்டிட விசைப்பேன்
கரடிக்கு இரும்புக் கட்டுறப் பாடுவேன்
தரைமட்ட மாக்கித் தரிபத ராக்குவேன்
சுளகிலே சலித்துப் துகளாக மாற்றுவேன்
இங்ஙனம் விடுவித் தென்னையே கொள்வேன்
இங்ஙனம் பயணத் தெல்லையை அடைவேன்."

லெம்மின் கைனனின் அன்னை கூறினள்:
"எல்லையை இன்னும்நீ எய்தவே யில்லை!

அப்படிப் பயணித் தகலும் காலை
மாபெரும் அற்புதம் வரும்பய ணத்தில்
துயர அதிசயம் தோன்றிடும் மூன்று
மனிதச் சாவுக்கு வந்திடும் முவ்வழி;
அவ்விடத் தைநீ அடைந்திடும் நேரம்
நேர்ந்திடும் இன்னும் நெடுந்துயர்ச் சம்பவம்:
பயணித் தொருகுறும் பாதையில் செல்வாய்
வடநாட்டு முற்றம் வந்துநீ சேர்வாய்
அங்கொரு வேலி அமைந்திடும் இரும்பால்
அடைப்பு உருக்கினால் ஆனதும் வந்திடும்
நிலத்தினி லிருந்து நீள்வான் வரையிலும்
விண்ணிலே யிருந்து வியன்புவி வரையிலும்
ஈட்டிகள் செருகி இருந்திடும் அதனில்
வரிச்சுகள் நெளியும் புழுக்களால் ஆனவை
பிணைப்புண் டிருந்தன பெரும்பாம் பிணைத்து
கனபல்லிக் **கணத்தால் கட்டிய வேலியாம்;
வால்கள் இருப்பது வளைந்தசைந் திருக்க
மொட்டந் தலைகள் முழுதசைந் தாட
மண்டை ஓடுகள் வாய்உமிழ்ந் திருக்க
வாலெலாம் உள்ளே வருதலை வெளியே.

பூமியில் இருந்தவை புழுக்கள்வெவ் வேறாம்
வரிசையாய்ச் சர்ப்பம் விரியன் பாம்புகள்
மேலே நாக்குகள் சீறிக் கிடப்பன
கீழே வால்கள் ஆடிக் கிடப்பன;
அனைத்திலும் பயங்கர மான ஒன்றுளது
குறுக்கே வாயிலில் படுத்துக் கிடப்பது
நீண்டது வசிப்பிட மரத்திலும் நெடியதாய்
ஒழுங்கைக் கதவத் துயர்தூண் பருப்பம்
மேலே நாவினால் சீறிக் கிடக்கும்
மேலே வாயினால் மிகஇரைந் திருக்கும்
எதிர்பார்த் தல்ல எவரையும் வேறு
ஏழை உனையே எதிர் பார்த்தங்கு."

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்
எழிலார் தூர நெஞ்சினன் இயம்பினன்:
"அந்த மரணம் அதுகுழந் தையின்சா
அதுவொரு வீரனின் மரணமே யல்ல;
அனலை வசியப் படுத்தவும் அறிவேன்
தணலை அணைத்துத் தணிக்கவும் அறிவேன்
தடுத்துப் புழுக்களை நிறுத்தவும் அறிவேன்
அரவைத் திருப்பி அனுப்பவும் அறிவேன்;
நேற்றுத் தானே நிகழ்ந்த திச்சம்பவம்
விரியன் பாம்பு விளைநிலம் உழுதேன்
பாம்புப் பூமியைப் பாங்காய்ப் புரட்டினேன்
விளங்கிய எனது வெற்றுக் கைகளால்
விரியன் பாம்புகள் விரல்நகத் தெடுத்தேன்
தூக்கினேன் பாம்புகள் துணிந்தென் கைகளால்
பத்து விரியன் பாம்புகள் கொன்றேன்
அழித்தேன் நூறு கறுத்தப் புழுக்களை

ஆயினும் விரியனின் இரத்தமென் உகிர்களில்
பாம்பின் கொழுப்புப் படிந்தது கைகளில்;
ஆதலால் எனக்கு அதுநிக ழாது
என்றுமே இனிமேல் ஏற்பட மாட்டா
இராட்சசப் புழுவின் வாய்க்குண வாக
பாம்பொன் றின்வாய்ப் படுமிரை யாக:
நீசப் பிராணிகள் நீள்கரத் தெடுப்பேன்
கழுத்துக்கள் அனைத்தையும் முறுக்கிப் பிழிவேன்
விரியன் பாம்பினை வீழ்த்துவேன் ஆழம்
இழுப்பேன் தெருவின் ஓரம் புழுக்களை
வடநில முன்றிலால் வைப்பேன் அடிகளை
செல்வேன் முன்னே இல்லத் துள்ளே."

லெம்மின் கைனின் அன்னை கூறினள்:
"வேண்டாம், எனது வியன்மகன் வேண்டாம்!
வடபுல வசிப்பிட வழிச்செலல் வேண்டாம்!
வேண்டாம் சரியொலா வில்அமை வீட்டினுக்(கு)!

வன்**வார் வாளுறு மனிதர் அங்குளார்
போரின் படைக்கல வீரர்கள் அங்குளார்
குடித்துன் மத்தம் பிடித்த மனிதர்கள்
அதிகம் குடித்து அறக் கெட்டவர்கள்
ஏழையே உன்னை இனிச்சபித் திசைப்பார்
கூரிய அலகுறும் கொடுவாள் களுக்கு;
பாடப் பட்டனர் பலசீர் மனிதர்முன்
வெல்லப் பட்டனர் மிகவுயர் மனிதரும்."

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்
எழிலார் தூர நெஞ்சினன் இயம்பினன்:
"நான்அங்கு முன்னர் நனிசென் றுள்ளேன்
வாபால் நிலத்து வசிப்பிடத் தாங்கே
எனைப்பா டினரிலை லாப்பியர் எவரும்
என்னைச்சா டினரிலை எத்துர்யா மனிதரும்
நானே பாடுவேன் நவில்லாப் பியரை
சாடுவேன் துர்யா மனிதர்கள் தம்மையும்
அவர்கள் தோள்ஊடாய் அங்குநான் பாடுவேன்
தாடையின் ஊடாய்ச் சரியாய்ப் பேசுவேன்
சட்டைக் கழுத்து சரியிரண் டாம்வரை
மார்பு எலும்புகள் வலிதுடை படும்வரை."

லெம்மின் கைனனின் அன்னை கூறினள்:
"ஓ,என் மைந்தா, அபாக்கிய வானே!
முன்னைய நிகழ்ச்சியை இன்னமும் நினைவாய்
பழையதைப் பற்றிப் புழுகியே நிற்கிறாய்
நீயங்கு சென்றது நிசம்தான் முன்னர்
வடபால் நிலத்து வசிப்பிடத் தாங்கே
தேங்கிய குளங்களில் நீந்திய துண்டுதான் பயின்றாய் **முட்செடி பலவுள குளங்களில்
இரையுநீர் வீழ்ச்சியில் இறங்கி விழுந்தாய்
பொங்கிப் பாயும் புதுநீ ரோட்டம்
துவோனிநீர் வீழ்ச்சியைத் தொட்டே அறிந்தாய்

அளந்தாய் மரண அகிலத் தருவியை
இன்றும் அங்குதான் இருந்திருப் பாய்நீ
ஆயினும் ஏழையுன் அன்னையால் தப்பினாய்.

நெஞ்சில்வை யப்பா நினக்குநான் மொழிவதை
வருகிறாய் நீயே வடபுல வசிப்பிடம்
உண்டு கழுமரம் குன்றுகள் நிறைய
முன்றில்கள் நிறைய முழுத்தூண் உள்ளன
நிறைய மனிதரின் தலைகள் அவற்றிலே
கழுமர மொன்றுதான் தலையிலா துளது
அக்கழு மரத்தின் அருங்கூர் முனைக்கு
உன்தலை கொய்தே உடனெடுக் கப்படும்."

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்
எழிலார் தூர நெஞ்சினன் இயம்பினன்:
"மடையன் அவற்றால் மனத்துயர் கொள்வான்
தகுதியற் றவன்தான் தான்கவ னிப்பான்
ஐந்து ஆறுபோ ராட்டஆண் டுகளில்
கொடும்ஏழ் யுத்தக் கோடைகா லத்தில்
மறவன் அவற்றை மனதில் கொள்ளான்
தவிர்க்கவ<ம் செய்யான் தான்குறைந் தளவு;
என்போ ராடை எடுத்துக் கொணர்வாய்
பழைய போராடையைப் பாங்காய்க் கொணர்வாய்!
எந்தையின் வாளை இனிநான் எடுக்கிறேன்
அப்பா வின்வாள் அலகைத் தேடுவேன்;
அதுவும் வெகுநாள் அருங்குளிர்க் கிடந்தது
இருந்தது மறைவாய் இயைபல் லாண்டு
அங்கே இதுவரை அழுதுகொண் டிருந்தது
தரிப்போன் ஒருவனை எதிர்பார்த் திருந்தது."

அங்ஙனம் யுத்த ஆடையைப் பெற்றனன்
படுபழம் போரின் உடையைப் பெற்றனன்
தந்தையின் நித்தியத் தனிவாள் எடுத்தனன்
தாதையின் போரின் தோழனைக் கொண்டனன்
பலகையில் அதனைப் பலமாய்க் குத்தினான்
நிலத்தில் குத்தி அலகைத் திணித்தான்:
திருப்பி வாளினைச் செங்கைப் பிடித்தான்
பழச்செடி முடியில் ஒருபுதுப் பறவைபோல்
அல்லது வளர்**சூ ரைச்செடி போல;
குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்:
"வடபால் நிலத்து மனைகளில் அரிது
சரியொலாப் பகுதியின் தங்ககத் தரிது
அரியஇவ் வாளினை அளக்க முடிந்தவன்
இகல்வாள் அலகை எதிர்க்க முடிந்தவன்."

உருவினன் குறுக்குவில் உறும்சுவ ரிருந்து
உரமுறு கொளுவியில் இருந்தே ஒருவில்
இனிவரும் சொற்களில் இவ்விதம் சொன்னான்
இந்த மொழிகளில் இவ்விதம் மொழிந்தான்:
"நானொரு மனிதனாய் நவில்வேன் அவனையே

நானொரு வீரனாய் நம்புவேன் அவனையே
எந்தன் குறுக்குவில் இழுப்பவன் தன்னை
வளைந்தஎன் வில்லை வளைப்பவன் தன்னை
வடபால் நிலத்து வசிப்பிடத் தாங்கே
அந்தச் சரியொலா அமையகங் களிலே."

குறும்பன் லெம்மின் கைனன் பின்னர்
எழிலார் தூர நெஞ்சினன் என்போன்
அமர்க்காம் உடைகளை அணிந்து கொண்டனன்
சமர்க்காம் உடைகளைத் தரித்துக் கொண்டனன்
தன்அடி மைக்குச் சாற்றினான் இவ்விதம்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"அறவிலைக் கெடுத்த அடிமையே கேள்நீ!
காசுக்குப் பெற்ற கூலியே, கேள்நீ!
அமர்க்காம் குதிரையை ஆயத்தம் செய்வாய்
போர்ப்பரிக் குட்டிக்குப் பூட்டு அணிகலன்
நான்விருந் துக்கு நலமுடன் செல்ல
கூளிக் குடியரின் கூட்டத் தேக!"

அந்த அடிமை அமைபணிச் சேவகன்
முன்னோர் விரைந்து முன்றிலை யடைந்து
அம்பரிக் குட்டிக் கணிகலன் பூட்டி
தீச்செந் நிறத்ததை ஏர்க்கால் பூட்டி
அங்கே யிருந்து அவன்வந் தியம்பினான்:
"என்வே லையைநான் இனிதே முடித்தேன்
ஆயத்த மாக்கினேன் அரியநும் பரியை
நற்பரிக் குட்டியை நன்கலங் கரித்தேன்."

குறும்பன் லெம்மின் கைனன் பின்னர்
புறப்பட் டேகப் புணர்ந்தது நேரம்
ஒருகை இணங்க மறுகை பிணங்க
நரம்புள விரல்பல வந்தம் செய்தன;
நினைத்தவா றவனே நேர்புறப் பட்டான்
அவதான மிலாதே அவன்புறப் பட்டனன்.

சேய்க்குத் தாயவள் செய்தாள் போதனை
மூத்தோள் பிள்ளையை முன்னெச் சரித்தாள்
உத்தரத் தின்கீழ் உயர்கத வருகே
கலயமும் கெண்டியும் கலந்தவைப் பிடத்தில்:
"எந்தன் மகனே, இணையிலா தவனே!
எனது குழந்தாய், இகலுரப் பிள்ளாய்!
நிதக்குடிக் குழுவிடம் நீசெல நேர்ந்தால்
எங்கே யாயினும் அங்ஙனம் நிகழ்ந்தால்
சாடியில் உள்ளதில் பாதியை அருந்து
கலயப் பாதியே கவனமா யருந்து
பெறட்டும் மற்றவன் அடுத்துள பாதியை
தீயமா னிடர்க்காம் தீதுறும் பாதி
சாடியின் அடியிலே சார்ந்துள புழுக்கள்
ஆழக் கலயத் தமைவன கிருமி."

போதனை இன்னம் புரிந்தாள் மகற்கு
தன்பிள் ளைக்குச் சாற்றினள் உறுதியாய்
தூரத்து வயல்கள் தொடுமுடி விடத்தில்
கடைசி வாயிற் கதவத னருகில்;
"நிதக்குடிக் குழுவிடம் நீசெல நேர்ந்தால்
எங்கே யாயினும் அங்ஙனம் நிகழ்ந்தால்
இருக்கையில் பாதி இருக்கையி லிருப்பாய்
அடியிடும் போது அரையடி வைப்பாய்
பெறட்டும் மற்றவன் அடுத்துள பாதியை
தீயமா னிடர்க்காம் தீதுறும் பாதி
அவ்விதம் வருவாய் அருமனி தனாய்நீ
நீமா றிடுவாய் நிகரிலா வீரனாய்
மக்கள்மன் றங்கள் மற்றுநீ செலலாம்
வழக்குகள் ஆய்ந்து வழங்கலாம் சமரசம்
வீரர்கள் நிறைந்த வியன்குழு மத்தியில்
மனிதர்கள் நிறைந்த கணங்களின் மத்தியில்."

பின்புறப் பட்டான் லெம்மின் கைனன்
அரும்பரி வண்டியில் அமர்ந்தவ னாக
சாட்டையை ஓங்கிச் சாடினான் பரியை
மணிமுனைச் சவுக்கால் மற்றதை அடித்தான்:
இகல்பரி வண்டியை இழுத்துச் சென்றது
உயர்பரி விரைந்து ஓடிச் சென்றது.

சற்றுநே ரம்மவன் சவாரியே செய்தான்
நற்சிறு பொழுதே நடத்தினன் பயணம்
பாதையில் கோழிப் பல்கணம் கண்டனன்
காட்டுக் கோழியின் கூட்டம் பறந்தது
பறவைகள் கூட்டமும் பறந்தே வந்தது
ஓடிச் சென்ற உயர்பரி முன்னே.

சிறுதொகை மட்டுமே இறகுகள் இருந்தன
காட்டுக் கோழியின் கவின்சிறை வழியில்
எடுத்தனன் லெம்மின் கைனனே அவற்றை
சேர்த்தே வைத்தனன் சிறுபை யொன்றிலே;
என்ன வருமென எவருமே யறியார்
பயணத் தென்ன நிகழுமென் றுணரார்
பயிலகத் தெதுவும் பயனுள தாகலாம்
அவசர தேவைக் கவைநலம் தரலாம்.

சிறிதே இன்னமும் செய்தனன் சவாரி
பாதையிற் கொஞ்சம் பயணம் செய்தனன்
அப்போ குதிரை நிமிர்த்திற் றதன்செவி
தழைத்ததன் செவிதாம் பரபரப் பாயின.
குறும்பன் லெம்மின் கைனன் அவனே
அவன்தான் குறும்பன் தூர நெஞ்சினன்
சறுக்கு வண்டியில் தானே எழுந்து
சற்றே சரிந்து எட்டிப் பார்த்தனன்:
அன்னை சொன்னது அதுபோ லிருந்தது
சொந்தப் பெற்றவள் சொல்போ லிருந்தது

நிசமாய் அங்கொரு நெருப்பா றிருந்தது
குதிரையின் முன்னே குறுக்காய் எழுந்தது
ஆற்றிலே நெருப்பு வீழ்ச்சிதோன் றிற்று
பாய்வீழ்ச் சியில்தீப் பாறைத் தீவு
பாறைத் தீவிலே படியும் தீமுடி
நெருப்பு முடியிலோர் நெருப்புக் கழுகு
கழுகின் தொண்டையில் கனலே மூண்டது
வாயிலே தீவெளி வந்தது சீறி
இறகுகள் அனலாய் எங்கும் ஒளிர்ந்தன
தீப்பொறி சிதறி திசையெலாம் பறந்தது.

தூரநெஞ் சினனை தொலைவிற் கண்டது
லெம்மின் கைனனை நெடுந்தொலை கண்டது:
"எங்கப்பா பயணம் ஏ,தூர நெஞ்சின?
லெம்பியின் மைந்தனே, எங்கே எழுந்தனை?"

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்
எழிலார் தூர நெஞ்சினன் இயம்பினன்:
"வடபுல விருந்து, வழிப்புறப் பட்டேன்,
குடிக்கும் இரகசியக் குழுவிடம் போகிறேன்;
சற்று அப்பால் தள்ளியே நிற்பாய்
வழியினை விட்டே விலகியே நிற்பாய்
பயணியைப் போகப் பாங்குடன் விடுவாய்
லெம்மின் கைனனை விடுவாய் சிறப்பாய்
கடந்துசெல் தற்கு கடுகிநின் புறமாய்
உனக்கப் பாலே உடன்நடந் தேக!"

இவ்விதம் கழுகால் இயம்ப முடிந்தது
வியன்தீத் தொண்டையால் மெதுவாய்ச் சொன்னது:
"நானொரு பயணியை நனிசெல விடுவேன்
நிசமதிற் சிறப்பாய் லெம்மின் கைனனை
என்வா யுடா யேகுவ தற்கு
தொண்டையின் ஊடாய்த் தொடர்செல வுக்கு
அங்குதான் உன்றன் அகல்வழி செல்லும்
அங்கிருந் ததனுடை அமைநிலத் தேக
அந்தநீள் பெரிய அருவிருந் துக்கு
நிரந்தர மானதோர் நேரமர் வுக்கு."

எதைத்தான் ஏற்றான் லெம்மின் கைனன்
அதைப்பொறுத் ததிகம் அக்கறை யில்லை
சட்டைப் பையினில் தன்கை விட்டான்
சுருக்குப் பையினில் தொடுவிரல் நுழைத்தான்
காட்டுக் கோழியின் கறுப்பிற கெடுத்தான்
சிறிதே அவற்றை மெதுவாய்த் தேய்த்தான்
தன்னிரு உள்ளங் கைகளின் நடுவே
தன்விரல் பத்தின் தனியிடத் திடையே

காட்டுக் கோழியின் கூட்டம் பிறந்தது
காட்டுக் கோழியின் கூட்டம் முழுவதும்
கழுகின் தொண்டையுள் கடிதவை திணித்தான்

பெரும் பட்சணியின் பேரல குக்குள்
கழுகின் நெருப்பு உமிழ்தொண் டைக்குள்
இரையுண் பறவையின் ஈறுகள் நடுவே;
இடுக்கணில் அன்றவன் இவ்விதம் தப்பினான்
அவன் முதல்நாளை அங்ஙனம் கடந்தான்.

சாட்டையை ஓங்கிச் சாடினான் பரியை
மணிமுனைச் சவுக்கால் மற்றதை அடித்தான்;
படர்பொலிப் புரவி பாய்ந்தே சென்றது
பரியும் துள்ளிப் பாய்ந்தே சென்றது.
சிறிதே பயணப் பாதையில் சென்றனன்
சிறிது தூரம் சென்றனன் கடந்து
அதிர்ச்சியிப் போது அடைந்தது குதிரை
பயந்து கத்திப் பாய்பரி நின்றது.

எழுந்தனன் சறுக்கு வண்டியி லிருந்து
எட்டிப் பார்க்க எடுத்தனன் கழுத்தை
அன்னை சொன்னது அதுபோ லிருந்தது
சொந்தப் பெற்றவள் சொல்போ லிருந்தது
நெருப்புக் கணவாய் நேரெதிர் வந்தது
அந்தப் பாதையில் அதுகுறுக் கிட்டது
கிழக்கில் வெகுதொலை முழுக்கநீண் டிருந்தது
வடமேல் எல்லையும் முடிவற் றிருந்தது
கொதிக்கும் கற்களும் கூடவே இருந்தன
எரியும் பாறைகள் தெரிந்தன அதனுள்.

எதைத்தான் ஏற்றான் லெம்மின் கைனன்
மானிட முதல்வனை மனதில் வணங்கினன்:
"ஓ,முது மனிதனே, உயர்மா தெய்வமே!
விண்ணுல குறையும் வியனார் தந்தையே!
வடமேற்கிருந்தொரு மஞ்சினை யெழுப்பு
இன்னொன்றை மேற்கில் இருந்தே யனுப்பு
மூன்றாவ தொன்றை முதிர்கிழக் கிருந்து
வடகிழக் கொன்றினை வாகாய் உயர்த்து
அவற்றின் கரைகளை அமைப்பாய் ஒன்றாய்
ஒன்றொடு அவற்றை ஒன்றில் மோது!
சறுக்கு மரமாழ் தண்பனி மழைபொழி
ஈட்டி ஆழம் எழட்டும் பொழிந்து
அச்செங் கனலும் அகன்ற பாறைமேல்
பற்றி எரியுமப் பாறைகள் மேலே!"

அம்முது மனிதர், அதிஉயர் தெய்வம்,
வானகம் வதியும் மாமுது தந்தை,
வடமேற் கிருந்தொரு மஞ்சினை எழுப்பினார்
இன்னொன்றை மேற்கில் இருந்தே அனுப்பினார்
கிழக்கி லிருந்தும் கிளர்முகில் படைத்தார்
வடகிழக் கிருந்து வருகாற் றுயர்த்தினார்
அவைகள் அனைத்தையும் அமைத்தார் ஒன்றாய்
ஒன்றொடு அவற்றில் ஒன்றை மோதினார்
சறுக்கு மரமாழ் தண்மழை பொழிந்தது

ஈட்டிஆ ழத்தில் எழுந்தது பொழிந்து
அச்செங் கனலும் அகன்ற பாறைமேல்
பற்றி எரியுமப் பாறைகள் மேலே;
ஒருபனி மழைக்குளம் உதித்தது ஆங்கே
உறுகுழம் பினிலேரி உருவா யிற்று.

குறும்பன் லெம்மின் கைனன் பின்னர்
பனித்திரள் பாலம் பாடினான் அதன்மேல்
பனிமழை நிறைந்த படிகுளக் குறுக்கே
ஒருகரை யிருந்து மறுகரை வரைக்கும்
அங்ஙனம் தாண்டினன் அந்தஆ பத்தை
பகர்இரண் டாம்நாட் பயணம் முடித்தான்.

சாட்டையை ஓங்கிச் சாடினான் பரியை
மணிமுனைச் சவுக்கால் மற்றதை அடித்தான்;
விரைந்து குதிரை பறந்தே சென்றது
பரியும் துள்ளிப் பாய்ந்தே சென்றது.
ஓரிரு **மைல்கல் ஓடிற் றுப்பரி
சிறந்தநாட் டுப்பரி சிறுதொலை சென்றது
சென்றபின் அப்பரி திடீரென நின்றது
அசையா(து) நின்றது அந்த இடத்திலே.

குறும்பன் லெம்மின் கைனன் அவனே
துள்ளி யெழுந்தான் துணிந்தே பார்த்தான்
வாயிலில் ஆங்கே ஓநாய் நின்றது
ஒழுங்கையில் கரடி ஒன்றெதிர் நின்றது
வடபால் நிலத்து வாயிலில் ஆங்கு
எதிர்நீள் ஒழுங்கையின் எல்லையில் ஆங்கு.

குறும்பன் லெம்மின் கைனனப் போது
அவன்தான் அழகிய தூர நெஞ்சினன்
சட்டைப் பையில் தன்கை யிட்டான்
சுருக்குப் பையில் தொடுகை நுழைத்தான்
செம்மறி உரோமம் சிறிதே யெடுத்தான்
சிறிது மென்மையாய் தேய்த்தான் அவற்றை
தன்னிரு உள்ளங் கைகளின் நடுவில்
தன்விரல் பத்தின் தனியிடத் திடையே.

உள்ளங் கையில் ஒருமுறை ஊதினான்
செம்மறி யாடுகள் திசைவிரைந் தோடின
செம்மறிக் கூட்டம் சேர்ந்தெலாம் விரைந்தது
மாபெரும் ஆட்டு மந்தைகள் ஓடின;
ஓநாய் அவ்வழி ஓடின விரைந்து
அவற்றைக் கரடிகள் தாக்கத் தொடங்கின
குறும்பன் லெம்மின் கைனன் அவன்தான்
தொடங்குதன் பயணம் தொடர்ந்தே சென்றனன்.

தன்வழி சிறுதொலை தானே சென்றதும்
அடைந்தனன் வடபால் அகல்நில முற்றம்
அங்கே வேலியும் ஆனது இரும்பால்

அடைப்பும் உருக்கால் அடைக்கப் பட்டது
அறுநூறு அடிகள் அகழ்மண் ணுள்ளே
ஆறா யிரமடி அகலவிண் ணோக்கி
ஈட்டிகள் செருகி இருந்திடும் அதனில்
வரிச்சுகள் நெளியும் புழுக்களால் ஆனவை
பிணைப்புண் டிருந்தன பெரும்பாம் பிணைத்து
பல்லிக் கணத்தால் பிணைத்த வேலியாம்;
வால்கள் இருப்பது வளைந்தசைந் திருக்க
மொட்டந் தலைகள் முழுதசைந் தாட
நவில்பெருந் தலைகள் நடுங்குதற் காக
வாலெலாம் உள்ளே வருதலை வெளியே.

குறும்பன் லெம்மின் கைனன் அவனே
தெரிந்தனன் பினனர் சிந்தனை செய்தான்:
"எந்தன் அன்னை இயம்பிய வாறிது
சுமந்தவள் என்னை, புலம்பிய வாறிது,
அத்தகை வேலி ஆங்கே யுள்ளது
மண்ணி லிருந்து விண்ணுக் கிணைத்தது
விரியன் பாம்பு இரிந்தூர் வதுகீழ்
ஆயினும் வேலி அதன்கீழ் உள்ளது
பறவை உயரப் பறக்கிற தொன்று
ஆயினும் வேலி அதன்மே லுள்ளது."

அந்த லெம்மின் கைனனப் போது
அதிகம் அக்கறை அவன்கொள வில்லை
உறையி லிருந்து உருவிக் கத்தியை
கூரிய இரும்பைக் கொண்டபை யிருந்து
வேலியை அதனால் வெட்டினான் ஆங்கே
கம்பை இரண்டாய்க் கத்தி கிழித்தபின்
இரும்பு வேலியை இழுத்துத் திறந்தான்
கலைத்தான் பாம்புக் கணத்தை ஒருபுறம்
ஐந்து தூண்இடை அகல்வெளி பெற்றான்
எடுத்தான் கம்புகள் ஏழு அகலம்
முனைந்தான் பயணம் முன்எதிர் நோக்கி
வடபால் நிலத்தின் வாயிலின் முன்னே.

பாதையில் நெளிந்தது பாம்புதா னொன்று
குறுக்கே வாயிலில் படுத்துக் கிடந்தது
வீட்டுஉத் தரத்திலும் மிகநீண் டதுஅது
கதவுத் தூணிலும் கனதடிப் பானது
ஊரும் பிராணிக்கு உளவிழி நூறு
அந்தப் பிராணிக் காயிரம் நாக்குகள்
கண்அரி தட்டின் கண்களை யொத்தவை
ஈட்டியின் அலகுபோல் இகல்நீள் நாக்கு
வைக்கோல் வாரியின் வன்பிடி போற்பல்
ஏழு தோணிகள் போல்முது களவு.

குறும்பன் லெம்மின் கைனன் அதன்பின்
துணிந்தா னில்லைத் தொடுகரம் வைக்க
நூறு விழியுள சீறும் பிராணிமேல்

ஆயிரம் நாக்குகள் உரியபாம் பதன்மேல்.

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்
எழிலார் தூர நெஞ்சினன் இயம்பினன்:
"நிலத்துள் வாழும் நீள்கரும் பாம்பே!
மரணச் சாயலை வாய்த்துள புழுவே!
காய்ந்த புல்லின் கண்நகர் பிராணியே!
பிசாச வேர்களில் வசிக்கும் பிறவியே!
புல்மே டுகளில் போய்ஊர் சீவனே!
மரவேர் களிலே மறைந்துவாழ் சன்மமே!
புற்களி லிருந்துனை பற்றினோர் எவரோ?
புல்வே ரிருந்துனைப் பிடித்தவ ரெவரோ?
புமியில் இங்ஙனம் புரள்வதற் காக?
வழியிலே இவ்விதம் நெளிவதற் காக?
உந்தன் தலையை உயர்த்திய தெவரோ?
கூறிய தெவரோ, வேறெவர் ஆணையோ?
விறைப்பாய்த் தலையை உயர்த்திய தெவரால்?
கழுத்தைப் பலமாய் நிறுத்தியது எவரால்?
உந்தன் தந்தையா, அல்லது அன்னையா?
உனக்கு முன்பிறந்த உயர்அண் ணன்களா?
அல்லது பின்வரும் அருத்தங் கைகளா?
அல்லது வேறு அமையுற வினரா?

வாயை மூடிப்போ மறைப்பாய் தலையை
உள்ளே ஒளிப்பாய் உன்சுழல் நாக்கை
சுருண்டு சுருண்டு சுருளாய்க் கிடப்பாய்
வளைந்து வளைந்து வளையமாய்ப் படுப்பாய்
பாதையைத் தருவாய் பாதிப் பாதையை
பயணியை மேலும் பயணிக்க விடுவாய்
அல்லது வழியைவிட் டகல்வாய் நீயே
இழிந்த பிறப்பே ஏகுக புதருள்
புற்பற் றைக்குள் போய்நீ மறைவாய்
பாசி நிலத்திற் படர்ந்துநீ ஒளிவாய்
கம்பிளிக் கட்டுபோல் கடுகிநீ நழுவுவாய்
அரசங் குற்றிபோல் உருண்டுநீ செல்லுவாய்
புற்புத ருள்தலை போகத் திணிப்பாய்
புற்பற் றையுளே போவாய் மறைந்து
புற்புத ருள்ளே உள்ளதுன் வீடு
புற்பற் றையுளேயுன் இல்லம துள்ளது;
நீஅங் கிருந்து நேர்தலை தூக்கினால்
இறைவன் உன்தலை இன்றே நொருக்குவான்
உருக்கு முனைகொள் ஊசிக ளாலே
இரும்பினா லான எறிகுண் டுகளால்."

அப்படிச் சொன்னான் லெம்மின் கைனன்
ஆயினும் பாம்போ அதைக்கணித் திலது
உமிழ்ந்து கொண்டே நெளிந்தது பாம்பு
நாக்கைச் சுழற்றி நனிசீ றியது
வாயை உயர்த்தி வலிதே ஒலித்தது
லெம்மின் கைனனின் சிரசிலக் கானது.

குறும்பன் லெம்மின் கைனன் பின்னர்
நிகழ்பழஞ் சொற்களை நெஞ்சிற் கொண்டான்
முதுதாய் முன்னர் மொழிந்த சொற்களை
தாயின் முந்திய போதனைச் சொற்களை;
குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்
எழிலார் தூர நெஞ்சினன் இயம்பினன்:
"இதற்கும்நீ கவனம் எடுக்கா திருந்தால்
கணிப்புக் கொஞ்சமும் காட்டா திருந்தால்
நோவால் உன்னுடல் ஊதிப் போகும்
வெந்துயர் நாட்களால் வீங்கிப் போகும்
கொடியநீ வெடிப்பாய் இரண்டாய்ப் பிளப்பாய்
நீசநீ மூன்று நெடுந்துண் டாவாய்
உன்தாய் அவளைநான் உரப்பி அழைத்தால்
அழைத்தால் உன்புகழ் அரும்பெற் றோரை;
சுருண்ட பிராணிஉன் தொல்பிறப் பறிவேன்
நிலத்தின் அழுக்குன் வளர்ப்பையு மறிவேன்
உன்அன் னைபெரும் ஊணே **உண்பவள்
உன்னைப் பெற்றவள் புனற்பெருஞ் சக்தி.

பெருமூண் உண்பவள் விரிபுனல் துப்பினாள்
எச்சிலை நீரின் எழும்அலை யிட்டனள்
காற்றுவந் ததனை ஆட்டி யசைத்தது
நீரின் சக்திதா லாட்டிச் சென்றது
ஆறு வருடமும் அதுதா லாட்டிய(து)
ஏழு கோடையும் இதுவே நிகழ்ந்தது
தெளிந்த கடலின் செறுமுய ரலைகளில்
நுரைத்து எழுந்த நுடங்கலை நடுவே;
இரும்தொலை நீரதை இழுத்துச் சென்றது
வெங்கதிர் காய்ச்சி மென்மையா யாக்கினன்
தவழ்அலை அதனைத் தரைதள் ளியது
கடலலை அதனைக் கரைவிரட் டியது.

மூவர் இயற்கைப் பாவையர் நடந்தனர்
திரையெறி கடலின் கரையில் நடந்தனர்
இரையும் கடலதன் கரைதனில் நடந்தனர்
நடந்தவர் அதனை நனிகரைக் கண்டனர்
கண்டதும் இங்ஙனம் களறினர் கன்னியர்:
'இதிலே யிருந்து எதுதான் தோன்றலாம்
கர்த்தர் சுவாசம் கடிதிதற் கீந்து
கண்களைக் கொடுத்துக் கருணையும் காட்டினால்?'

கர்த்தர்இக் கூற்றைக் கேட்கவும் நேர்ந்தது
உரைத்தார் ஒருசொல் உரைத்தார் இவ்விதம்:
"தீயதி லிருந்து தீயதே தோன்றும்
கொடியதன் உமிழ்நீர் கொடியதே ஆகும்
நானும் சுவாசம் நன்கிதற் கூட்டினால்
கண்வைத் துத்தலை கருணையும் காட்டினால்."

கெட்ட பிசாசிதைக் கேட்கவும் நேர்ந்தது

கருங்கொடு மானுடம் கவனிக்க லானது
வலிந்துதான் கர்த்தராய் மாறவும் நினைத்தது
சுவாசத்தை ஊட்டிப் பிசாசம் வைத்தது
உறுதீக் கொடியாள் உமிழ்நீ ருக்கு
இரும்ஊண் உண்பவள் எச்சில் அதற்கு
பின்னர் அதுஒரு பெரும்பாம் பானது
மாகரும் புழுவாய் மாற்றம் பெற்றது.

எங்கிருந் தந்தச் சுவாசமும் வந்தது?
பிசாசின் எரிதழற் பிறந்தே வந்தது;
எங்கிருந் திதயம் அதற்கும் வந்தது?
பெருமூண் உண்பவள் பெற்றிட்ட இதயமாம்;
கொடியவிம் மூளையும் கொண்டது எவ்விதம்?
பயங்கர அருவியின் பறிநுரை யதனில்;
வந்தது எவ்விதம் வன்கொடுங் குணங்குறி?
பெரியநீர் வீழ்ச்சியின் நுரையிலே யிருந்துதான்;
தீயஇச் சக்தியின் திகழ்தலை எதனினால்?
அதன்தலை அழுகிய பயற்றம் விதையினால்.

அதற்கு விழிகளும் ஆனது எதனினால்?
ஆனது பிசாசதன் அரிசணல் விதைகளால்;
கெட்டதன் காதுகள் கிட்டிய தெதனினால்?
பிசாசதன் மிலாறுவின் பிஞ்சிலை யவைகளால்;
எதனினால் வாயும் இதற்கமைந் திட்டது?
பேருண்டி யாள்**வார்ப் பிரிவளை யத்தினால்;
இழிந்ததன் வாய்நாக் கெவ்வித மானது?
தீயஇச் சக்தியின் தெறிஈட்டி அதனினால்;
கொடியஇப் பிராணியின் கூர்எயி றெவ்விதம்?
துவோனியின் பார்லியின் சோர்உமி அதனினால்;
தீயஇச் சக்தியின் செவ்வீறு எதனினால்?
கல்லறைக் கன்னியின் கழலீறு அதனினால்.

முதுகினைக் கட்டி முடித்தது எதனால்?
கடும்பிசா சின்தீக் கரிகளி லிருந்து;
ஆடும் வாலையும் அமைத்தது எதனால்?
பெரும்தீச் சக்தியின் பின்னிய கூந்தலால்;
குடல்களைப் பிணைத்துக் கொண்டது எதனால்?
அந்திம காலச் சங்கிலிப் பட்டியால்.

இவ்வள வேஉன் இனத்தவ ராவார்
பேர்பெறும் கௌரவப் பெருமையிவ் வளவே
நிலத்தின் கீழ்வாழ் பிலங்கரும் புழுவே
மரண(த்து) நிறம்கொள் வலிய பிராணியே
பூமியின் நிறமே, **பூண்டின் நிறமே,
வானத்து வில்லின் வர்ணம் அனைத்துமே
இப்போது பயணியின் இடம்விட் டகலு
இடம்நகர் மனிதனின் எதிர்புற மிருந்து
இப்போ பயணியை ஏக விடுவாய்
லெம்மின் கைனனை நேர்செல விடுவாய்
வியன்வட பால்நில விருந்தத னுக்கு

நற்குடிப் பிறந்தார் நல்விருந் துக்கு."

இப்போ(து) பாம்பு இடம்விட் டகன்றது
விழிநூ றுடையது விலகிச் சென்றது
தடித்த பாம்பு தான்திரும் பியது
ஓடும் பாதையில் இடம்மா றியது
பயணியை அவன்வழி படரவும் விட்டது
லெம்மின் கைனனை நேர்செல விட்டது
வியன்வட பால்நில விருந்தத னுக்கு
குடிக்கும் ரகசியக் குழுவி னிடத்தே.

கலேவலா

பாடல் 27 - வடநாட்டில் போரும் குழப்பமும்

அடிகள் 1 - 204 : வடபால் நிலத்துக்கு வந்த லெம்மின்கைனன் பல வழிகளிலும் முரட்டித்தனமாக நடக்கிறான்.

அடிகள் 205 - 282 : வடநாட்டுத் தலைவன் கோபங் கொண்டு லெம்மின்கைனனை மந்திர சக்தியால் தோற்கடிக்க முயற்சித்து, முடியாத கட்டத்தில் வாட் போருக்கு வரும்படி சவால் விடுகிறான்.

அடிகள் 283 - 420 : இந்தப் போரின்போது லெம்மின்கைனன் வடநாட்டுத் தலைவனின் தலையைச் சீவி எறிகிறான். அதனால் ஆத்திரம் கொண்ட வடநாட்டுத் தலைவி ஒரு படையைத் திரட்டி லெம்மின்கைனனை எதிர்க்கிறாள்.

கொணர்ந்தேன் இப்போ தூர நெஞ்சினனை
அஹ்தி தீவினன் அவன் வருவித்தேன்
மரணப் பற்பல வாயில்கள் கடந்து
கல்லறை நாக்கின் கனபிடி கடந்து
வடபால் நிலத்து வசிப்பிடத் தாங்கே
இரகசியக் குடியர் எலாம்கூ டிடத்தே;
இனிநான் புகலும் விடயம் எதுவெனில்
எனது நாவினால் இயம்புவ தெதுவெனில்
குறும்பன் லெம்மின் கைனன் எவ்விதம்
அவனே அழகிய தூர நெஞ்சினன்
வடபால் வசிப்பிடம் வந்தான் என்பது
சரியொலா இருப்பிடம் சார்ந்தான் என்பது
அமையும் விருந்துக் கழைப்பில் லாமல்
குடிக்கும் நிகழ்வுக் கொருதூ தின்றி.

குறும்பன் லெம்மின் கைனனப் போது
பையன் செந்நிறப் படுபோக் கிரிபின்
வந்து உடனே வசிப்பிடம் சேர்ந்ததும்
தரைமத் திக்கு அடிவைத் தேகினன்
ஆட்டம் கண்டது **அப்பல கைத்தளம்
எதிரொலி செய்தது தேவதா ரின்மனை.

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்
உரைத்தான் அவனே உரைத்தான் இவ்விதம்:
"நானிங் குற்றதால் நலமார் வாழ்த்துக்கள்
வாழ்த்துக்கள் கூறவந் தோர்க்கும் வாழ்த்துக்கள்
கேளாய், வடபுலக் கீர்த்திகொள் தலைவனே!
இங்கே இந்த இல்லத் துளதா
பாய்பரி கடிக்கப் பார்லித் தானியம்
அருந்த வோர்வீரன் அரும்'பீர்'ப் பானமும்?"

அவன்தான் வடபுல அந்நாட் டதிபன்
நீள்மே சையின்முனை நிமிர்ந்தே யிருந்தான்
அவனும் அவ்விடத் தமர்ந்தே கூறினன்

உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"எங்கெனும் இந்த இல்லத் திருக்கலாம்
குதிரை தங்க இடமும் இருக்கலாம்
இங்கே தடையெதும் இல்லை உனக்கும்
இந்த மனையில்நற் பண்போ டிருந்தால்
நற்கடை வாயிலின் பக்கமும் நிற்கலாம்
உயர்கடை வாயில் உத்தரத் தின்கீழ்
இரண்டு கலயத் திடைநடு வினிலே
மூன்று **முளைகள் முட்டும் இடமதில்."

குறும்பன் லெம்மின் கைனன் அதன்பின்
கறுத்தத் தாடியைக் கையால் முறுக்கினன்
சட்டியின் நிறத்தில் தானிருந் த(அ)தனை
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"பிசாசுதான் இந்த வசிப்பிட மடைய,ம்
நற்கடை வாயிலின் பக்கலில் நிற்க
படிந்த ஓட்டடை துடைத்திட இவ்விடம்
பெருக்கியே யெடுக்க புகைச்சுடர்க் குப்பை.
எந்தன் தந்தையும் இதைச்செயார் என்றும்
இசையுறும் எந்தன் ஈன்றவர் செய்யார்
அந்த இடத்தில் அவ்விதம் நிற்பதை
உயர்கடை வாயில் உத்தரத் தின்கீழ்
ஏனெனில் அப்போ திடமும் இருந்தது
கவினார் பரிக்குக் களஞ்சிய முன்றிலில்
கழுவிய அறைகள் வரும்மனி தர்க்கு
கையுறை வீசிடற் கமைந்தன கொளுவி
மனிதரின் கையுறை முளைகளும் இருந்தன
சுவர்களும் வாள்களைச் சொருகிட விருந்தன
எனக்கு மட்டுமே ஏனது இங்கிலை
இதன்முன் எந்தைக் கிருந்தது போலவே?"

அடுத்ததாய் மேலும் அவன்முன் னேறினான்
மேசையின் ஒருபுற வெறுமுனைக் கேகினன்
ஆசன ஓரத் தவனுட் கார்ந்தனன்
அமர்ந்தனன் தேவதா ரரும்பல கையிலே
அடிப்புறம் வெடித்த ஆசனத் தமர்ந்தான்
ஆடிய தேவரா ரதன்பல கையிலே.

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்:
"வரவேற் புடைய பெருவிருந் தலநான்
'பீர்'க்குடி பானம் நேர்க்கொண ராவிடின்
வந்து சேர்ந்தவிவ் வளவிருந் தினற்கு."

*இல்போ மகளவள் நல்லெழில் தலைவி
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"ஓஹோ பையனே உறுலெம்பி மைந்தனே
எவ்வகை விருந்தினன் இயம்புக நீயே
வந்தனை எந்தன் மண்டையை மிதிக்கநீ
எந்தன் மூளையை இழிவு படுத்தநீ;
எங்கள்'பீர்' பார்லியாய் இன்னமும் உள்ளது

சுவைப் பானம்மா வூறலா யுள்ளது
சுடப்படா துள்ளன துண்டிலாம் ரொட்டிகள்
தகுந்தமா மிசக்கறி சமையாது உள்ளன.
ஓர்நிசி முந்திநீ யுவந்துவந் திருக்கலாம்
அல்லது அடுத்தநாள் அன்றுவந் திருக்கலாம்."

குறும்பன் லெம்மின் கைனன் அதன்பின்
தன்வாய் கோணித் தலையைத் திருப்பினன்
கறுத்தத் தாடியைக் கையால் முறுக்கினன்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"ஆகவே விருந்திங் கருந்தப் பட்டது
விவாகக் குடியும் விருந்தும் நிகழ்ந்தது
பருகு'பீர்'ப் பானம் பங்கிடப் பட்டது
அருநறை மனிதர்க் களவிடப் பட்டது
சாடிகள் அனைத்தும் சரிசேர்ப் புண்டன
வைக்கப் பட்டன வன்கல யம்மெலாம்.

ஓ,நீ வடபால் உயர்நிலத் தலைவியே!
இருண்ட நாட்டின் எயிறுநீள் பெண்ணே!
பொல்லா தவருடன் புரிந்தனை திருமணம்
நாய்மதிப் புடையரை நாடியே அழைத்தனை
தொடுபெரும் ரொட்டித் துண்டுகள் சுட்டனை
பார்லி மணியில் 'பீர்'ப்பானம் வடித்தனை
ஆறு வழிகளில் அனுப்பினை அழைப்பு
அழைப்பவர் ஒன்பது அகல்வழிச் சென்றனர்
இழிஞரை அழைத்தனை ஏழையை அழைத்தனை
அழைத்தனை ஈனரை அழைத்தனை அற்பரை
குடிசைவாழ் மெலிந்த குழுவினர் தம்மையும்
நன்கிறு கியவுடை நாடோடி தம்மையும்
அழைத்தனை பலவகை ஆட்கள்எல் லோரையும்
அதிலெனை மாத்திரம் அழையாது விட்டனை.

எதற்காய் இதனை எனக்குநீ செய்தனை,
தந்துமா எந்தன் சொந்தப் பார்லியை?
அகப்பை அளவிலே அடுத்தோர் கொணர்ந்தனர்
பார்லியைக் கொட்டினர் பாத்திரத் தொருசிலர்,
**பறையிலே அளந்து பார்த்துக் கொணர்ந்தனே
அரையரை **மூடையாய் அள்ளி யெறிந்தனே
பார்லிஎன் சொந்தப் பயன்தா னியத்தை
உழுதுநான் விளைத்த உயர்தா னியத்தை.
லெம்மின் கைனன்நா னிப்போ தலவோ,
மிகுநற் பெயருடை விருந்தின னலவோ,
'பீரி'னைக் கொணராப் போனதால் இங்கு
அடுப்பில் கலயம் இடாதே போனதால்
கலயத் துள்ளே கறியு மிலாததால்
பன்றி யிறைச்சிகாற் **பங்கு மிலாததால்
நானுண் பதற்கும் நான்குடிப் பதற்கும்
நீண்டஎன் பயண நிகழ்வின் முடிவில்."

இல்போ மகளவள் நல்லெழில் தலைவி

இந்தச் சொற்களில் இயம்பினள் அவளே:
"ஏய், யா ரங்கே, இளஞ்சிறு பெண்ணே!
எந்தன் நிரந்தர இணையில் அடிமையே!
கலயத் துள்ளே கறியதை வைப்பாய்
விருந்தாளிக்கு வியன்'பீர்' கொணர்வாய்!"

சிறிய அப்பெண் வெறுமைப் பிள்ளை
கலயம் ஒழுங்கறக் கழுவி எடுப்பவள்
குறையாய் அகப்பையைத் துடைத்து வைப்பவள்
கரண்டியைச் சிறியதாய்ச் சுரண்டு கின்றவள்
கலயத்தி னுள்ளே கறியதை வைத்தாள்
மாமிச எலும்பையும் மற்றுமீன் தலையையும்
**கிழங்கின் பழைய கீழ்த்தண் டுகளையும்
தொடுகன ரொட்டியின் துண்டு துகளையும்;
சாடியில் அடுத்துப் 'பீரை'க் கொணர்ந்தனள்
தரமிலாப் பானம் தனைக்கல யத்தில்
குறும்பன் லெம்மின் கைனன் குடிக்க
பெருங்குடி கேட்டவன் பெரிதுங் குடிக்க.
இந்தச் சொற்களில் இயம்பினள் அவளே:
"உண்மையில் நீயொரு உயர்சரி மனிதனா
இப்'பீர்'ப் பானம் எடுத்தருந் துதற்கு
இம்முழுச் சாடியும் ஏற்றுக் குடிக்க?"

குறும்புப் பையன் லெமம்மின் கைனன்
அப்போ பார்த்தனன் அந்தச் சாடியுள்:
அடியா ழத்தில் கிடந்தன புழுக்கள்
பாதி வழிவரை பாம்புகள் மிதந்தன
விளிம்புப் பகுதியில் நெளிந்தன ஊர்வன
பல்லி யினங்களும் பதிந்துட னூர்ந்தன.

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்
தூர நெஞ்சினன் சொல்லினன் திடீரென
"சாடியைக் கொணர்ந்தோர் ஏகுவர் துவோனலா
கலயம் சுமந்தோர் கடுமிறப் புலகு
சந்திர உதயம் தான்வரு முன்னர்
இன்றையப் பொழுது ஏகி முடியுமுன்!"

பின்வரும் சொற்களில் பின்அவன் சொன்னான்:
"ஓ,நீ 'பீர்'எனும் உரமுள பானமே!
இங்கே வீணாய் இப்போ வந்தனை
வந்தாய் பொருளிலா வழிகள்பின் பற்ற;
வாயால் குடிப்பது வடித்த'பீர்'ப் பானம்
கழிவைப் பின்னர் எறிவது நிலத்தில்
மோதிர விரலின் முழுத்துணை கொண்டு
அத்துடன் இடது கட்டை விரலினால்."

சட்டைப் பையில் தன்கை நுழைத்தனன்
சுருக்குப் பைக்குள் துழாவிப் பார்த்தான்
தூண்டிலைப் பையினால் தூக்கி எடுத்தான்
இரும்பு கொளுவியை எடுத்தான் பையிருந்(து)

சாடிக் குள்ளே தாழ்த்தினன் அதனை
'பீர்'ப் பானத்தில் போட்டனன் தூண்டில்
தூண்டிலில் தடக்கித் தொங்கின புழுக்கள்
வெறுப்புறு விரியன் விழுந்தன ஊசியில்
பிடித்தான் தூண்டிலில் பெருநுணல் நூறு
ஓரா யிரம்கரும் ஊர்வன வந்தன
புமியில் வீசினன் புவிநலத் துக்காய்
அந்தத் தரையிலே அனைத்தையும் போட்டான்;
உருவினான் தனது ஒருகூர்க் கத்தியை
பதவுறை யிருந்த பயங்கர இரும்பை
வெட்டினான் பின்னர் வியன்புழுத் தலைகளை
முறித்தான் பாம்புகள் அனைத்தையும் கழுத்தில்
போதிய வரைக்கும் 'பீரை'க் குடித்தான்
கறுத்தத் தேனைத் தன்மனம் நிறைய
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"மிகமன முவந்துகொள் விருந்தாளி யல்லநான்
'பீர்'ப்பானம் கொணரும் பேறிலாப் படியால்
தரமான பானம் தரவும் படாமையால்
தாராள மான தரும்கரங் களினால்
இன்னமும் பெரிதாம் எழிற்கல யங்களில்
கொல்லப் படவிலை கொழும்நற் செம்மறி
வெட்டப் படவில்லை மிகப்பெரும் எருது
கொணரப் படவில்லை கொழும்எரு தில்லம்
குளம்புறும் கால்நடை விளம்பறைக் குள்ளிலை."

அவன்தான் வடபுல அந்நாட் டதிபன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"ஆதலால் எதற்குநீ அடைந்தனை இவ்விடம்
உன்னையார் அழைத்தார் உவந்துஇக் கூட்டம்?"

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்
எழிலார் தூர நெஞ்சினன் இயம்பினன்:
"அழைப்புள்ள விருந்தினன் ஆவான் சிறந்தவன்
அழைப்பிலா விருந்தினன் அவனிலும் சிறந்தவன்;
வடநில மைந்தநீ வருவிப ரம்கேள்
வடபால் நிலத்திடை வன்எச மானன்நீ
விலைக்குப் 'பீரை' விடுவைநீ வாங்க
பணத்துக்குக் கொஞ்சம் பானம் பெறுவேன்."

அப்போது வடபுல அந்நாட் டதிபன்
சினமே கொண்டான் சீற்றமும் கொண்டான்
கடுமையாய்க் கோபமும் காய்தலும் கொண்டான்
தரையிலே ஓர்குளம் தான்வரப் பாடினான்
லெம்மின் கைனனின் நேர்எதிர் ஆங்கே
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"அதோஓர் அருவி அருந்துதற் கேநீ
குளமும் ஒன்றதோ குடிக்கநீ நக்கி."

எதைத்தான் ஏற்றான் லெம்மின் கைனன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:

**"மனைவியர் வளர்த்த வளர்கன் றல்லநான்
வாலொன் றுடைய வல்லெரு தல்லநான்
அருவியில் ஓடும் அந்நீர் குடிக்க
குளத்திலே யுள்ள கொடுநீர் குடிக்க!"

பாடத் தொடங்கினன் மந்திரப் பாடல்கள்
பாடத் தொடங்கினன் அவனே பாடல்கள்
எருதொன்(று) தரையிலே ஏற்படப் பாடினான்
மாபெரும் காளை வளர்பொற் கொம்புகள்;
குளத்திலே இறங்கிக் கலக்கிக் குடித்தது
அருவியில் மனம்போல் அருந்திய ததுநீர்.

வடநிலத் தான்அம் மனிதன் உயர்ந்தவன்
வாயி லிருந்தொரு ஓநாய் **அழைத்தனன்
தரையிலே வந்தது தரிக்கப் பாடினான்
கொழுத்த காளையைக் கொல்வதற் காகவே.

குறும்புப் பையன் லெம்மின் கைனன்
வெண்ணிறத் தொருமுயல் வெளிவரப் பாடினான்
தரையிலே துள்ளித் தானது குதிக்க
அவ்வோ நாயின் அகல்வாய் முன்னால்.

வடநிலத் தான்அம் மனிதன் உயர்ந்தவன்
கோணல் அலகுறும் நாய்வரப் பாடினன்
குறித்தவம் முயலைக் கொல்வதற் காக
வாக்குக்கண் பிராணியை வாயால் கிழிக்க.

குறும்புப் பையன் லெம்மின் கைனன்
அவ்வுத் தரம்மேல் அணில்வரப் பாடினன்
உத்தரம் மீதிலே ஓடித் திரியவே
அதனைப் பார்த்து அந்தநாய் குரைக்க.

வடநிலத் தான்அம் மனிதன் உயர்ந்தவன்
பொன்னெஞ்(சுக்) கீரி புதிதெழப் பாடினன்
அந்தக் கீரிபாய்ந் தணிலைப் பிடித்தது
உத்தரம் மீது உற்றிடும் அணிலை.

குறும்புப் பையன் லெம்மின் கைனன்
நற்பழுப் புநிற நரிவரப் பாடினன்
பொன்னெஞ்(சுக்) கீரியைப் போய்ப்பிடித் துண்டது
கவினார் **உரோமம் காணா தொழிந்தது.

வடநிலத் தான்அம் மனிதன் உயர்ந்தவன்
வாயி லிருந்தொரு கோழியை **எடுத்தனன்
படர்தரைக் கோழியும் படபடத் தோடவே
அந்த நரியின் அகல்வாய் எதிரிலே.

குறும்புப் பையன் லெம்மின் கைனன்
வாயிலே பருந்து வந்திடப் பாடினன்
நாவிலே யிருந்து நனிவிரை **நகப்புள்

வந்தது கோழியை வலிப்பாய்ந் தெடுத்தது.

வடநிலத் தலைவன் வருமா றுரைத்தனன்
இயம்பினன் அவனே இயம்பினன் இவ்விதம்:
"இங்கே விருந்து நன்கமை யாது
விருந்தினர் அளவு மிகக் குறையா விடின்;
வேலைக்கு வீடு விருந்தினர் வழிக்கு
நல்ல குடியரின் நாள்நிகழ் விருந்தும்.
பேய்வெளிப் பாடே, போஇங் கிருந்துநீ!
மனித வர்க்க வருபுணர்ப் பிருந்து
நீசனே, இழிந்தோய், நின்வீட் டுக்கு!
தீயனே, உடனே செல்கநின் நாடு!"

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்
எழிலார் தூர நெஞ்சினன் இயம்பினன்:
"சபித்தலால் ஒருவனைச் சமைத்திடல் முடியா
எத்துணை தீயவன் என்றபோ திலுமே
அவனது இடந்திருந் தகற்றிட அவனை
அவனது நிலையிருந் தவனைத் துரத்திட."

அப்போது வடபுல அந்நாட் டதிபன்
சுவரி லிருந்தொரு சுடர்வாள் பெற்று
பயங்கர அலகைப் பற்றிக் கரத்தினில்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"ஓ,நீ அஹ்தி, தீவில்வாழ் பவனே!
அல்லது அழகிய தூரநெஞ் சினனே!
எங்களின் வாள்களால் எங்களை யளப்போம்
எங்களின் அலகால் எங்களைக் கணிப்போம்
என்வாள் சிறந்ததா இல்லையா என்பதை
அல்லது தீவினன் அஹ்தி வாள் என்பதை!"

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்:
"என்வாள் பற்றி இயம்புவ தானால்
எலும்புக ளதனை என்வாள் பிளந்தது
என்வாள் நொருக்கிய தெல்லா மண்டையும்!
அங்ஙனம் அதுவும் அமையும் போதிலே
இங்கே விருந்து நன்கமை யாது
ஆதலால் வாள்களால் அளப்போம் கணிப்போம்
எவரது வாள்தான் கூரிய தென்பதை!
முன்னொரு போதும் எந்தன் தந்தை
அளக்க வாளால் அஞ்சிய தில்லை
மைந்தனின் சந்ததி மாறியா போகும்
பிள்ளையின் தலைமுறை பிறவே றாகுமா?"

எடுத்தான் வாளை இரும்பை உருவினான்
அனற்பொறி சிந்தும் அலகைப் பற்றினான்
தோலினா லான தொடுமுறை யிருந்து
தோலினால் இயைந்த தொடர் பட்டியினால்;
அவர்கள் கணித்தனர் அளந்தனர் அவர்கள்
அந்த வாள்களின் **அளவுநீ ளத்தை:

சிறிதே நீளமாய்த் தெரிந்தது ஒன்று
வடபுலத் தலைவனின் வாளே அதுதான்
விரல்நக மேற்கரும் புள்ளியின் நீளம்
பாதி விரலின் பகுகணு வளவு.

தீவினன் அஹ்தி செப்பிட லாயினன்
எழிலார் தூர நெஞ்சினன் இயம்பினன்:
"உன்றன் வாள்தான் உயர மானதால்
உன்முறை வீசி உடன்முதல் அறைதல்."

அதன்பின் வடபுல அந்நாட் டதிபன்
வீசி அறைந்தனன் விறற்குறி நெருங்கினன்
குறியை நெருங்கிக் குறுகினும் தவறினன்
லெம்மின் கைனனின் நேர்தலைக் குறியை;
அடித்தனன் ஒருமுறை அங்குள உத்தரம்
கூரை மரத்தின் மீதும் மோதினன்
ஓசை யெழுப்பிய உத்தர முடைந்தது
கூரை மரமும் கூறிரண் டானது.

தீவினன் அஹ்தி செப்பிட லாயினன்
எழிலார் தூர நெஞ்சினன் இயம்பினன்:
"உத்தரம் செய்த உயர்பிழை என்ன
கூரை மரத்தின் குற்றமும் என்ன
உத்தரம் மீது ஓங்கி அறைந்தனை
கூரை மரத்தைக் குறிபார்த் தடித்தனை?

வடபால் வாழும் மைந்தனே, கேள்நீ!
வடபால் நிலத்தின் வன்தலை வன்நீ!
மிகவும் சிரமம் வீட்டினுள் பொருதலும்
முதுமா தரிடம் மிகுதுணிச் **செயலும்;
புதியஇவ் வில்லினை அதிபழு தாக்குவோம்
தரையைக் குருதியால் கறையாக் கிடுவோம்;
முற்றம் நோக்கிநாம் முன்வெளிச் செல்லலாம்
போரிட வெளியே போகலாம் வயற்புறம்
புற்திடர் நோக்கியே போகலாம் சமர்க்கு;
இருந்திடும் நன்கே இரத்தம் முன்றிலில்
அழகாய் அமைந்திடும் அயல்தோட் டவெளி
இயற்கையாய் தெரிந்திடும் இதுபனி மழைமேல்."

அவர்கள் வந்தனர் அவ்வெளி முற்றம்
பசுசுவின் ஒருதோல் நனிகொணர் பட்டது
அதுவும் முற்ற மதில்விரி பட்டது
இருவரும் அதன்மேல் இனிதுநிற் பதற்கு.

தீவினன் அஹ்தி செப்பிட லாயினன்
"வடபால் நிலத்தின் மைந்தனே கேட்பாய்!
உந்தன் வாள்தான் உயர்நெடி தானது
உந்தன் வாளே உயர்பயங் கரமாம்
ஆயினும் தேவை அதுஉனக் காகலாம்
இருவரும் நாங்கள் இங்கு பிரியுமுன்

உந்தன் கழுத்து உடைவதன் முன்னே
வடநில மைந்தா வாமுதல் வீசு!"

வடநில மைந்தன் வந்துமுன் வீசினன்
ஒருமுறை வீசினன் இருமுறை வீசினன்
அறைந்தனன் மூன்றாம் முறையும் விரைந்து
ஆயினும் இலக்கில் அறைவிழ வில்லை
அதுசீவ வில்லை அவன்சதை கூட
அதுதொட வில்லை அவன்தோல் கூட.

தீவினன் அஹ்தி செப்பிட லாயினன்
எழிலார் தூர நெஞ்சினன் இயம்பினன்:
"எனக்கொரு வாய்ப்பை இப்போ தருவாய்
இனிவரப் போவது எந்தன் முறையே!"

அப்போ(து) வடபுல அந்நாட் டதிபன்
செப்பிய மொழிக்குச் செவிசாய்த் திலனே
அறைந்தான் ஓயா தறைந்தான் மீண்டும்
குறிபார்த் தானெனில் குறிதவ றிற்று.

தீப்பொறி பயங்கர இரும்புசிந் திற்று
உருக்கின் அலகில் நெருப்பு எழுந்தது
குறும்பன் லெம்மின் கைனனின் கையில்
எழுந்து சென்றதோர் இகல்ஒளிப் பிழம்பு
நோக்கிக் கழுத்தை நுழைந்தழிப் பதற்கு
வடபால் நிலத்தின் மைந்தனின் கழுத்தை.

எழிலார் தூர நெஞ்சினன் இயம்பினன்:
"ஆஹா, வடபால் அகல்நிலத் தலைவ!
இழிந்த மனிதனே இயைந்தநின் கழுத்து
மிகச்சிவந் துளது விடியலைப் போல."

அப்போ வடபால் அகல்நில மைந்தன்
அவன்தான் வடபுல அந்நாட் டதிபன்
தனது பார்வையைத் தான்பின் திருப்பி
நோக்கினன் சொந்த நுவல்தன் கழுத்தை;
குறும்பன் லெம்மின் கைனனப் போது
அறைந்தனன் ஓங்கி விரைந்தே வாளால்
மனிதனை அங்கே வாளால் அடித்தனன்
தாக்கினன் வீசித் தன்வாள் அலகை.

அறைந்தான் பின்னர் அங்கே ஒருதரம்
பெயர்த்தான் தலையைப் பெருந்தோ ளிருந்து
மண்டையை நொருக்கினன் வன்கழுத் திருந்து
**கிழங்கின் தண்டை எழுந்தொடிப் பதுபோல்
கதிர்த் தானியத்தை அறுத்தெடுப் பதுபோல்
முழுமீன் சிறகை முன்அரி தலைப்போல்;
முன்றிலில் உருண்டு முன்தலை சென்றது
மனிதனின் மண்டை வெளித் தோட் டத்தில்
செருகணை தூக்கிச் சென்றது போல

மரத்தினால் விழுந்ததொர் மரக்கோ ழியைப்போல்.
நின்றன கழுமரம் குன்றிலே நூறு
முன்றிலில் ஆயிரம் முன்எழுந் திருந்தன
கழுவிலே நூற்றுக் கணக்காம் தலைகள்
இருந்தது தலையிலா தொருகழு மரந்தான்
அந்தக் குறும்பன் லெம்மின் கைனன்
மதிப்புறும் பையனின் வன்தலை எடுத்தான்
முன்றிலி லிருந்து மண்டையைக் கொணர்ந்தான்
அந்தக் கழுமர அருமுனை தனக்கு.

பின்னர் அஹ்தி என்னும் தீவினன்
அழகிய தூர நெஞ்சினன் அவனே
உள்ளே திரும்பி உடன்இல் வந்து
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"வெறும்புனல் கொணர்வாய், வெறுப்புறு பெண்ணே!
எனது கைகளை இங்கே கழுவிட
தீய தலைவனின் செந்நீ ரிருந்து
கொடியோன் உறைந்த குருதியி லிருந்து!"

வடநில முதியவள் மாசின முற்றனள்
சினமே கொண்டாள் சீற்றமும் கொண்டாள்
வாளுடை வீரர்கள் வரவெளிப் பாடினள்
நற்படைக் கலம் கொடு நாயகர் வெளிவர
வாள்கைக் கொண்ட மனிதர்கள் நூறுபேர்
வாள்களைச் சுமந்து வந்தபே ராயிரம்
லெம்மின் கைனனின் நிமிர்தலை குறித்து
தூர நெஞ்சினன் தொடுகழுத் ததில்விழ.

நிசமாய் இப்போ(து) நேரமும் வந்தது
சென்று கொண்டிருந்தது நிகழ்நாள் நழுவி
வருந்தத் தக்கதாய் வந்தது சூழ்நிலை
அனைத்தும் தொல்லையாய் ஆனது நிலமை
அஹ்திப் பையன் அங்கிருப் பதற்கு
தங்கி இருந்திட லெம்மின் கைனன்
வடபால் நிலத்து நடைபெறு விருந்தில்
இரகசியக் குடியரின் இகல்கூட் டத்தில்.

கலேவலா

பாடல் 28 - லெம்மின்கைனனும் அவனது அன்னையும்

அடிகள் 1 - 164 : லெம்மின்கைனன் வடநாட்டிலிருந்து விரைவாகத் திரும்பி வீட்டுக்கு வருகிறான். வடநாட்டிலிருந்து ஏராளமானோர் தன்னுடன் போருக்கு வருவதாகவும், தான் எங்கே போய் மறைந்து வாழலாம் என்றும் தாயிடம் ஆலோசனை கேட்கிறான்.

அடிகள் 165 - 294 : வடநாட்டுக்குச் சென்றதற்காக முதலில் தாய் அவனைக் கடிந்தாலும் பின்னர் மறைந்து வாழக்கூடிய பல்வேறு இடங்களைப் பற்றிக் கூறுகிறாள். கடைசியாக, ஒரு பெரிய போர் நடைபெற்ற காலத்தில் அவனுடைய தந்தை அமைதியாக வாழ்ந்த இடமான, பல கடல்களுக்கு அப்பால் உள்ள ஒரு தீவுக்குச் செல்லும்படி ஆலோசனை கூறுகிறாள்.

இப்போ(து) அஹ்தி என்னும் தீவினன்
குறும்பன் லெம்மின் கைனன் அவன்தான்
ஓரிடம் தேடினான் ஒளிந்து வாழ்ந்திட
விரைந்தே யவ்விடம் விட்டே ஓடினான்
இருள்நிறை வடபால் இயைநிலத் திருந்து
மங்கிய *சராவின் வாழ்வீ டிருந்து.

பனிப்புயல் போலவன் புறப்பட் டேகினன்
மூடு புகைபோல் முன்றிலை யடைந்தான்
தீச்செய லிருந்து சென்று விடுபட
தனதுகுற் றத்தால் தான்மறை தற்காய்.

அங்ஙனம் முன்றிலால் அவன்வரு கையிலே
செலுத்தினான் பார்வை திரும்பினான் சுற்றி
முன்னர் கொணர்ந்த மொய்ம்பரி தேடினான்
முந்திய பரியை முயன்றவன் கண்டிலன்
ஆனால் வயலிலோ அமைந்ததோர் பாறை
அலரிப் பற்றையோர் அருகினில் இருந்தது.

இப்போ(து) நல்ல தெதுவாம் உபயம்
எதைப்பின் பற்றலாம் ஏற்றநல் வழியென
செறும்அவன் தலைக்குத் தீது வாராமல்
அவன்கே சத்துக் கழிவுநே ராமல்
அல்லது எழில்மயிர் அதுவீழ்ந் திடாமல்.
இந்த வடநிலத் திருக்கும் முன்றிலில்
கிராமத் திப்போ கேட்டதோர் ஓசை
இரைச்சலும் கேட்டது எலாஅயல் இல்லிலும்
உட்கிரா மத்திலோர் ஒளிக்கீற்று மின்னல்
சாளரத் தூடாய்த் தரிசித் தனகண்.

குறும்பன் லெம்மின் கைனன் அங்கே
அவன்தான் தீவில் வாழ்பவன் அஹ்தி
மற்றெது வாகவோ வரநேர்ந் ததுவே
ஏற்றுள தன்னுரு மாற்றநே ரிட்டது:
கழுகாய் மாறிக் ககனத் தெழும்பினன்

விண்ணினை நோக்கி மேற்பறக்(க) எண்ணினன்
கன்னம் இரண்டையும் காய்ந்தது சூரியன்
புருவம் இரண்டையும் எரித்தது சந்திரன்.
குறும்பன் லெமமின் கைகனனு மங்கே
மானிட முதல்வனை மனதில் வணங்கினன்:
"ஓ,முது மனிதனே, உயர்நல் தெய்வமே!
விண்ணிலே உறையும் மெஞ்ஞா னவனே!
முழங்கும் முகில்களை முழுதாள் சக்தியே!
நீராவி அனைத்தையும் நிதமாள் பவனே!
புகாருள காலப் புதுநிலை யாக்குவாய்
சிறிது சிறிதாய் செழுமுகில் படைப்பாய்
அந்த ஒதுக்கில்நான் அகன்றுபோய்ச் சேரலாம்
எந்தன்இல் லத்தை நனிபெற முயலலாம்
மீண்டுமென் அன்புறும் மேலாம் தாயிடம்
என்றன் புகழ்சேர் ஈன்றவ ரிடத்தே."

அங்ஙனம் அவனும் அகன்றனன் பறந்து
செல்கையில் ஒருமுறை திரும்பிப் பார்த்தனன்
கலங்கிய நிறத்தொரு கருடனைக் கண்டனன்
அதனுடை விழிகள் அனலாய் எரிந்தன
வடபால் நிலத்து மைந்தனைப் போலவே
வடக்கின் முன்னால் திடத்தலை வன்போல்.

கலங்கிய நிறத்தக் கருடன் மொழிந்தது:
"ஓகோ, அஹ்தி, என் உயர்சோ தரனே!
முன்னாள் யுத்தம் நின்நினை வுளதா
சமமாய் நடந்த சமர்நினை வுளதா?"

செப்பினன் அஹ்தி என்னும் தீவினன்
எழிலார் தூர நெஞ்சினன் இயம்பினன்:
"ஓ,என் கருடனே, ஒளிருமென் பறவையே!
வீட்டினை நோக்கிநீ விரைவாய்த் திரும்பி
சென்றதும் அங்கு செப்புவாய் இங்ஙனம்
இருள்நிறை வடபால் இயைநிலத் தாங்கே:
'கழுகொன்று பிடிப்பதும் கடினம் கைகளால்
உளசிறப் பறவையை உண்பதும் உகிர்களால்.' "

விரைந்தே அவனும் வீட்டினை யடைந்தான்
அன்புறும் தாயின் அருகினில் வந்தான்
முகத்தில் கவலை முழுமையாய் இருந்தது
நெஞ்சமும் துயரம் நிறைந்தே கிடந்தது.
அன்னையின் எதிரில் அவனும் வந்தான்
ஒழுங்கையில் அவளும் உடன்நடக் கையிலே
விரைந்தடி வைக்கையில் வேலியின் அருகில்;
ஆவலாய்க் கேட்டாள் அப்போ தன்னை:
"எந்தன் மகனே, என்னிளம் மகனே!
எந்தன் பிள்ளையே, இகல்மிகும் பிள்ளையே!
மனதிலே கவலை வந்தது எதனால்
திகழ்வட நாட்டினால் திரும்பிய வேளை?
அநீதி நற்சாடி அளிக்கையில் நடந்ததா?

வடநில விருந்து வைபவம் அதிலே?
அநீதி நற்சாடி அளிக்கையில் நடந்தால்
பெருந்திறச் சாடியைப் பெறுமை நீயிங்கு
உந்தையார் போரிலே உரிமையாய்ப் பெற்றது
அமரில் பெற்றிங் கரிதே கொணர்ந்தது."

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்:
"எந்தன் அன்னையே, எனைச்சுமந் தவளே!
சாடியால் அநீதி தாமிழைப் பவர்யார்?
தலைவரைக் கூடநான் தனிஏ மாற்றுவேன்
வீரர்நூற் றுவரை ஏமாற்ற வல்லவன்
எதிர்கொள்ள முடிந்தவன் எதிர்க்குமா யிரவரை."

லெம்மின் கைனனின் அன்னை கூறினள்:
"ஆயினும் எதனால் அகத்துயர் கொண்டாய்?
பொலிப்பரி உந்தனைப் புறமுறச் செய்ததா?
அவமானம் குதிரைக் குட்டியால் ஆனதா?
பொலிப்பரி உந்தனைப் புறமுறச் செய்திடில்
சிறப்புடைப் பொலிப்பரி தேர்ந்தொன்று வாங்குவாய்
உந்தை பெற்றிட்ட உயர்பொருட் களினால்
பெற்றவர் தேடிய சொத்துக் களினால்."

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்:
"எந்தன் அன்னையே, எனைச்சுமந் தவளே
அவமதிப் பதற்கு எவருளர் பரியால்?
என்னை வெல்பவர் எவர்பரிக் குட்டியால்?
நானே தலைவரை நன்கவ மதிப்பவன்
மாபரி யோடும் மனிதரை வெல்பவன்
வலியுடை மனிதரை மற்றவர் குதிரையை
வீரரை அவரவர் விறற்பொலிப் பரியுடன்."

லெம்மின் கைனனின் அன்னை கூறினள்:
"ஆயினும் எதனால் அகத்துயர் கொண்டாய்?
நெஞ்சில் துயரமும் நிறைந்தது எதனால்?
வடநிலத் திருந்து வந்திடும் வேளை
நங்கையர் பார்த்துனை நகைத்தது முண்டா?
அல்லது கேலி அரிவைசெய் தனரா?
அங்ஙனம் உனைப்பார்த் தரிவையர் நகைத்தால்
அல்லது கேலி அரிவையர் செய்தால்
அரிவையர் மீண்டும் அதேசெயப் படுவர்
நங்கையர் பின்னர் நகைத்திடப் படுவர்."

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்:
"எந்தன் அன்னையே, எனைச்சுமந் தவளே!
எவருளர் மகளிரால் எள்ளியே நகைப்பவர்,
யாருளர் மகளிரால் கேலிசெய்(து) நகுபவர்!
நானே தலைவரை நகைப்பவன் பார்த்து
எல்லாப் பெண்ணையும் கேலியே செய்பவன்
நானே நகைப்பவன் நங்கைநூற் றுவரை
மணக்கோ லத்து மாதரா யிரவரை."

லெம்மின் கைனனின் அன்னை கூறினள்:
"என்றன் மைந்தஉன் சங்கதி என்ன?
நிசமாய் உனக்கு நேர்ந்தது என்ன
நீவட பாலாம் நிலம்சென்(ற) நேரம்,
அல்லது அதிகமாய் அயின்றதன் பின்னர்
அதிகமாய் உண்டு அருந்திய பின்னர்
நூதன மான நுவல்கனா வந்ததா
நீதுயின் றிட்ட நீள்இரா வேளை? "

குறும்பன் லெமமின் கைனனப் போது
இவ்வித வார்த்தையில் இயம்பவும் முடிந்தது:
"முதிய மாதர் அதைநினைக் கட்டும்
கார்நிசி தோன்றிய கனவுகள் பற்றி!
என்இராக் கனவுகள் இருப்பன நினைவில்
தெளிவாய் மேலும் திகழ்வது பகற்கனா;
அன்னையே, என்றன் அரும்முது பெண்ணே!
சாக்கிலா காரத் தகுபொருள் கட்டு
சணல்நூற் பையிலே உணவுகள் வைப்பாய்
துணிப்பை ஒன்றிலே கட்டுவாய் **உப்பினை
புறப்படும் வேளை புணர்ந்தது பையற்(கு)
சுயநா டகன்று பயணிக்கும் நேரம்
பொன்னெனும் இந்தப் போற்றும்இல் லிருந்து
அழகுறு தோட்ட அகல்வெளி கடந்து
வாள்களைத் தீட்டுவர் மனிதர்கள் இங்கே
சாணை பிடிக்கிறார் சமர்க்காம் ஈட்டிகள்."

அன்னையும் விரைந்து இங்ஙனம் கேட்டனள்
வருத்தம் கண்டு வாகாய் வினவினள்:
"வாள்களை எதற்கு வலிதே தீட்டுவார்
எதற்காய் ஈட்டியைப் பிடிக்கிறார் சாணை? "

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்
எழிலார் தூர நெஞ்சினன் இயம்பினன்:
"வாள்தீட்டு கின்றனர் வலிந்திதற் காக
ஈட்டியைச் சாணை இதற்காய்ப் பிடிக்கிறார்:
இல்லாப் பாக்கியன் என்தலைக் காக
இழிந்த மனிதன் என்கழுத் துக்காய்;
அங்கொரு நிகழ்ச்சி, சங்கதி நடந்தது,
அந்த வடநில அகல்முற் றங்களில்
வடபுல மைந்தனை வலிந்துநான் கொன்றேன்
அந்த வடநாட் டதிபதி அவனையே
வடநாடு போர்க்கு வரத்திரண் டெழுமால்
கலகக் காரர்கள் கடும்போர்க் கெழுகிறார்
இருந்துயர் கொண்டவன் எந்தனுக் கெதிராய்
தனியனாய் நிற்கும் தமியனைச் சுற்றி."

இந்த சொற்களில் இயம்பினள் அன்னை
முதியவள் மகற்கு மொழிந்தனள் இவ்விதம்:
"ஏலவே உனக்குநான் இயம்பிய துண்டு

இதையே நிசமாய் எச்சரித் துள்ளேன்
முயன்றேன் எவ்வளவோ முன்உனைத் தடுக்க
வடபால் நிலத்து வழிசெலல் நிறுத்த;
சரியாம் வழிநீ தான்நடந் திருக்கலாம்
தாயின் வசிப்பிடம் நீவாழ்ந் திருக்கலாம்
உரியபெற் றோர்பரா மரிப்பில்நின் றிருக்கலாம்
உன்னைச் சுமந்தோள் தன்தோட் டவெளி(யில்)
அமரென எதுவும் அடுத்திருக் காது
சண்டைசச் சரவு தான்நிகழ் திராது.

இப்போது எங்கே, அதிர்ஷ்டமில் என்மகன்,
எங்குநான் சுமந்து ஈன்றசேய் ஏழ்மையன்
நவையிழைத் தமையால் மறைவிடம் ஏகவா
தீச்செயல் புரிந்ததால் மூச்சிலா தோடவா
கேடுன் தலைக்குக் கிட்டி வராதிட
எழிலார் கழுத்தும் உடையா திருந்திட
சடைமயிர் துயரம் தான்கொளா திருக்க
உதிரா திருக்க உன்சீர்க் கேசம்?"

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்:
"எனக்கு ஓரிடமும் இன்னும் தெரிந்தில
எங்கே செல்லலாம் எங்ஙனம் செல்லலாம்
என்நவைச் செயல்களில் இருந்தே மறைய;
எந்தன் அன்னையே, எனைச்சுமந் தவளே!
எங்கே மறைந்து இருக்கலாம், சொல்வாய்? "

லெம்மின் கைனனின் அன்னை கூறினள்
இயம்பினள் அவளே இயம்பினள் இவ்விதம்:
"எங்கென்று சொல்ல, எனக்குத் தெரிந்தில,
எங்கெனச் சொல்ல, எங்கே செல்லென,
தேவநல் தாருவாய் சென்றுநில் குன்றிலே
சூரைச் செடியாய் மாறுவாய் புதரில்
ஆயினும் அங்கும் அழிவுநேர்ந் திடலாம்
துரதிர்ஷ்டம் அங்கும் துரத்தியே வருமுனை
ஏனெனில் அடிக்கடி எழில்மலைத் தாருவும்
சிறுதுண்டுப் பலகைக்குச் சிதைந்தறு படல்உள
புதருள சூரைப் பொழிற்செடி அடிக்கடி
கம்புகள் அமைக்கக் கழிப்பதுண் டழித்து.

நீயெழு மிலாறுவாய் நிலச்சதுப் பதனிடை
புர்ச்சநல் மரமெனப் பொதுப்பொழில் ஒன்றில்நில்
ஆயினும் அங்கும் அழிவுநேர்ந் திடலாம்
துரதிர்ஷ்டம் அங்கும் துரத்தியே வருமுனை
ஏனெனில் சதுப்பிலே இம்மிலா றடிக்கடி
விறகினைப் பெற்றிட வெட்டிடப் படலுள
பொதுப்பொழி லதிலுள பூர்ச்சமும் அடிக்கடி
விளைநில மாக்கவே வெட்டியும் சுடலுள.

சென்றுநீ மலைமேல் சிறுபழ மாகிநில்
பசும்புல் தரையிலே **பழமொன் றாயிரு

எழிற்செம் **பழமென இருப்பைநீ பூமியில்
நீலக் **கருங்கனி யாகுவே றிடங்களில்
ஆயினும் அங்கும் அழிவுநேர்ந் திடலாம்
துரதிர்ஷ்டம் அங்கும் துரத்தியே வருமுனை
உன்னைப் பொறுக்குவர் ஒளிரிள மங்கையர்
**ஒடித்தீய நெஞ்சத்து ஒண்டொடி எடுப்பர்.

கோலாச்சி மீனாய் குடாக்கடற் செல்லுக
மெதுவாம் நதியிலே வெள்ளைமீ னாகுக
ஆயினும் அங்கும் அழிவுநேர்ந் திடலாம்
துரதிர்ஷ்டம் அங்கும் துரத்தியே வருமுனை
புகார்போல் நிறத்தோர் புத்திளம் மனிதன்
வலைகொடு வருவான் வளர்நீர்ப் பரப்பெலாம்
கரைவலை யிளமீன் கவர்ந்திழுத் திடுவான்
மீன்வலை யால்முது மீனெலாம் பிடிப்பான்.

ஓநாய் உருவெடு உயர்வனம் சென்று
காட்டினுட் புறத்தில் கரடியாய் மாறுவாய்
ஆயினும் அங்கும் அழிவுநேர்ந் திடலாம்
துரதிர்ஷ்டம் அங்கும் துரத்தியே வருமுனை
புகார்த்தோற் றத்தோர் புத்திள மனிதன்
ஈட்டிகள் தீட்டி எடுப்பான் கூர்மையாய்
காட்டோ நாய்களைக் கடிதுகொன் றழிக்க
மிகுவனக் கரடிகள் வீழ்த்தி யொழித்திட."

குறும்பன் லெம்மின் கைனனப் போது
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"அறிவேன் பயங்கர அகலிடங் களைநான்
எனக்குத் தெரியும் எலாக்கொடும் இடங்களும்
மரணம் எங்குதன் வாய்க்கவ் வும்என
எங்கெ கொடுமுடி வேற்படும் என்று;
எந்தன் அன்னையே, எனைவளர்த் தவளே!
அம்மா, எனக்கு அரும்பா லூட்டினோய்!
எங்கே மறைந்து இருக்கச் சொல்கிறாய்
எங்ஙனம் மொழிகிறாய், எங்ஙனம் இசைக்கிறாய்?
வாயெதிர் வந்தே மரணம்நிற் கிறது
தாடிக்கு நேராய்த் தீநாள்நிற் கிறது
ஒருமனி தன்தலை தப்பஓர் நாள்உள
ஒருமுழு நாளே உளததில் தப்பிட."

லெம்மின் கைனனின் அன்னையப் போது
உரைத்தாள் அவளே உரைத்தாள் இவ்விதம்:
"நல்லதோ ரிடத்தை நானிவண் மொழிவேன்
பெருஞ்சிறப் பொருவிடம் பெயரொடு மொழிவேன்
தீச்செய லிருந்து தெரிந்திடா தொளிக்க
இழிந்த குணமுளோன் விரைந்துபோய் மறைய:
இப்போ தொருசிறு இடத்தை நினைக்கிறேன்
ஒருஇடம் பற்றி ஒருசிறி தறிவேன்
உணப்படா திருக்க, அடிபடா திருக்க
வாள்வீ ரர்களும் வந்துசே ராவிடம்,

என்றென்றும் நிலைக்க இடுவையோர் ஆணை
பொய்யும் கேலியும் புணர்ந்திடா ஆணையொன்(று)
ஆறு,பத் தாண்டு அருங்கோ டைருது
இகல்போ ருக்குஏ கேனென் றாணை
வெள்ளியை விரும்பியும் செல்லேன் அத்தோடு
பொன்வேண் டியும்நான் புகேன்என் றாணை."

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்:
"ஆணையொன் றிட்டேன் அதிபல மாய்இதோ!
கோடை முதல்வரும் காலத்தி லில்லை
அல்லது பருவம் அடுத்ததில் இல்லை
போர்பெரி துக்கும் போவதே யில்லை
மொய்ம்வாள் அவைகள் மோதிடங் களுக்கு;
காயங்கள் இன்னும் கவின்தோள் உள்ளன
ஆழத் துவாரம் அகல்மார் புளது
நடந்து முடிந்த நாட்களி யாட்டம்
கடந்த மோதல் களினால் இவைகள்
பெரும்போர் நிகழ்ந்த பெருமலை களிலே
மனிதரின் கொலைவீழ் தனிக்களங் களிலே."

லெம்மின் கைனனின் அன்னையப் போது
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"உன்றன் தந்தையின் உயர்பட கெடுப்பாய்
அங்கே சென்று அரும்மறை வேற்பாய்
ஒன்பது கடல்களில் சென்றப் பாலே
பத்தாம் கடலின் பாதியைக் கடந்து
திறந்தநீர்ப் பரப்பின் தீவகம் ஒன்றிலே
பரவையி லுள்ள பாறைத் தீவிலே
உந்தை முன்னர் ஒளித்த இடமது
ஒளித்துத் தன்னைக் காத்த ஓரிடம்
கோடைக் காலக் கொடும்போர் தம்மிலே
கடும்போர் நிகழ்ந்த கொடும்வரு டங்களில்
அவரங் கிருந்தது ஆனது நன்மையாய்
நாட்களைக் கழிப்பது நன்மையாய் யிருந்தது;

அங்கே ஒளிப்பாய் ஓர்ஈர் ஆண்டு
அகத்தினை நோக்கி ஆண்டுமூன் றினில்வா
உன்றன் பழகிய தந்தையார் மனைக்கு
பெற்றார் அமைத்த நற்பட குத்துறை."

கலேவலா

பாடல் 29 - லெம்மின்கைனனின் அஞ்ஞாத வாசமும் துணிக்கர செயல்களும்

அடிகள் 1 - 78 : லெம்மின்கைனன் தனது படகில் கடல்களின் ஊடாகப் பயணம் செய்து பாதுகாப்பாக அந்தத் தீவை அடைகிறான்.

அடிகள் 79 - 290 : லெம்மின்கைனன் அந்தத் தீவில் பருவமடைந்த மகளிருடனும் மற்றும் மாதருடனும் உல்லாசமாகக் காலம் கழிக்கிறான். போருக்குச் சென்றிருந்த ஆண்கள் திரும்பி வந்து அவனுடைய செய்கைகளைக் கண்டு ஆத்திரமடைந்து அவனைக் கொல்வதற்குச் சதித் திட்டம் வகுக்கிறார்கள்.

அடிகள் 291 - 402 : லெம்மின்கைனன் தீவைவிட்டு ஓடிப் போகிறான்; அதனால் அவனும் அவனில் பிரியம் கொண்ட பெண்களும் வருந்துகிறார்கள்.

அடிகள் 403 - 452 : லெம்மின்கைனனின் படகு ஒரு பெரும் புயலில் அகப்பட்டுச் சேதமடைகிறது. அவன்நீந்திக் கரையை அடைந்து, அங்கு ஒருபடகைப் பெற்றுத் தனது நாட்டின் கரைக்கு வந்து சேர்கிறான்.

அடிகள் 453 - 514 : லெம்மின்கைனன் தனது பழைய வீடு எரிக்கப் பட்டிருப்பதையும் எல்லா இடங்களும் அழிக்கப்பட்டிருப்பதையும் கண்டு வருந்துகிறான்; குறிப்பாகத் தனது தாயும் இறந்திருக்கலாம் என்று எண்ணி அழுகிறான்.

அடிகள் 515 - 546 : ஆனால் அவனுடைய அன்னை அப்பொழுது உயிரோடுதான் இருந்தாள்; கடுங்காட்டில் தஞ்சம் புகுந்திருந்தாள்; இதனை அறிந்த லெம்மின்கைனன் மகிழ்ச்சியடைகிறான்.

அடிகள் 547 - 602 : லெம்மின்கைனனின் தாய் வடநாட்டு மக்கள் வந்து வீடுகளை எரித்துச் சாம்பராக்கிய விபரங்களைக் கூறுகிறாள்; லெம்மின்கைனன் இன்னமும் சிறந்த வீடுகளை அமைப்பேன் என்றும் தன் தாய் பட்ட துன்பங்களுக்காக வடநாட்டைப் பழிக்குப்பழி
வாங்குவேன் என்றும் சபதம் செய்கிறான்; அத்துடன் தீவில் அஞ்ஞாதவாசம் செய்த காலத்தில் தான் மகிழ்ச்சியாக வாழ்ந்த விபரங்களையும் தாய்க்குக் கூறுகிறான்.

லெம்மின் கைனன் குறும்புப் பையன்
அவன்தான் அழகிய தூர நெஞ்சினன்
தன்உண வுப்பொருள் சாக்கிலே பெற்றான்
கோடை வெண்ணெயைக் கொண்டான் பெட்டியில்
ஒருவரு டம்மவன் உண்டிட வெண்ணெய்
அடுத்த ஆண்டில் அயிலப் பன்றியூன்;
மறைவிடம் நோக்கி மற்றவன் சென்றான்
சென்றான் அத்துடன் சென்றான் விரைந்து
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"செல்கிறேன் இப்போ செல்கிறேன் விரைந்து
முழுதாய் எதிர்கொளும் மூன்று கோடைக்கு
அடுத்தே வந்திடும் ஐந்தாண் டுக்கு
புழுக்களை விடுகிறேன் புசிக்கவிந் நாட்டை
எழிற்பொழில் **சிவிங்கி இருந்திளைப் பாற
கழனியில் புரண்டு கலையுரு ளட்டும்
வனத்து வெளிகளில் வாத்து வாழட்டும்.

என்நலத் தாயே, இதோவிடை பெற்றேன்,
வடபுல மக்கள் வந்தால் இவ்விடம்
இருண்ட பூமியின் திரண்டிடும் மக்கள்
உறும்என் தலையை உசாவிக் கொண்டு
நான்புறப் பட்டதாய் நவில்வாய் அவர்க்கு
இவ்விட மிருந்துநான் எழுந்துபோ னேனென
சுட்டுக் கொழுத்திய சுடுகானக வெளி
கதிர்களை வெட்டிக் கட்டிய பின்னர்."

படகை நீரின் பரப்பில் தள்ளினான்
கப்பலை அலைமேல் கடிதே விட்டான்
உருக்கினா லான உருளைக ளிருந்து
செப்புப் படகுத் திகழ்துறை யிருந்து
பாய்மரம் தனிலே பாயினை விரித்தான்
கம்பத் தேதுணி கட்டிப் பரத்தினான்;
அகல்பின் னணியம் அவனும் அமர்ந்தான்
ஆயத்த மானான் அவன்புறப் படற்கு
நம்பியே மிலாறு நல்முன் னணியம்
தொடர்கலம் நடத்தும் சுக்கான் துணையுடன்.

உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
உரைத்தே அவன்தான் உரைசெய லாயினன்:
"காற்றே வீசு கப்பலின் பாய்க்கு
வாயுவே விரட்டி வன்கலம் செலுத்து
விரிமரக் கலத்தை விடுவாய் ஓட
தாருவின் படகைத் தான்செல விடுவாய்
**உறுசொற் களேயிலா ஒருதீ வுக்கு
பெயரிடப் படாத பெருங்கடல் முனைக்கு.
தவழ்கால் படகைத் தாலாட் டியது
தண்கடல் நுரையும் தள்ளிச் சென்றது
திறந்து பரந்தநீர்ச் செழும்பரப் பதனில்
விரிந்த விசால வியன்கடற் புறத்தில்;
மாதம் இரண்டு தாலாட் டியது
மூன்றிலும் அங்ஙனம் முன்விரைந் திட்டது.

அவ்விடம் கடல்முனை அரிவையர் இருந்தனர்
நீலக் கடலின் நீள்கரை யோரம்
அவர்கள் பார்த்தனர் அவர்கள் திரும்பினர்
நீலக் கடற்றிசை நீந்தின கண்கள்
சகோதர னுக்காய்த் தரித்தனள் ஒருத்தி
எதிர்பார்த் திருந்தாள் வரும்தந் தையினை
ஆயினும் உண்மையில் ஒருத்தியாங் கிருந்தது
மணமகன் தனக்காய் வருவதை நோக்கி.

தொலைவில் தெரிந்தனன் தூர நெஞ்சினன்
தூரநெஞ் சினன்கலம் தொலைவிலே வந்தது
நளிர்சிறு முகிற்திடர் நகர்வதைப் போல
வயன்நீ ருக்கும் வானுக் கும்நடு.

கடல்முனை அரிவையர் கடிதுசிந் தித்தினர்
தீவின் கன்னியர் செப்பினர் இவ்விதம்:
"அதெ(ன்)னப்பா கடலிலே அபூர்வமாக தெரிவது
அலைமேல் அதிசயம் ஆனது எவ்விதம்?
எங்களைச் சார்ந்ததாய் இருந்தால் கப்பல்
தீவின் பாய்மரச் செழும்பட கானால்
இல்லத்தை நோக்கி இப்புறம் திரும்பு
தீவின் படகுத் துறையதை நோக்கி:
செய்திகள் நாங்கள் செவிமடுக் கவுளோம்
வெளிநிலப் புதினம் தெரியவு முள்ளோம்
கரையோர மாந்தர் அமைதியில் உளரா
அல்லது போரோ அவர் வாழ்வென்றே."

காற்றும் கலத்தைக் கடத்திச் சென்றது
அலையும் கப்பலை அடித்துச் சென்றது
குறும்பன் லெம்மின் கைனன் விரைவாய்
படகை ஓட்டினன் பாறை ஒன்றுக்கு
தீவினெல் லைக்குச் செலுத்தினன் கப்பல்
தீவின் கடல்முனை நுனிக்குச் சென்றனன்.

சென்றதும் அங்கு செப்பினன் இங்ஙனம்
வந்து சேர்ந்ததும் வருமா றுசாவினன்:
"இந்தத் தீவிலே இடமெது முளதோ
தீவின் தலையிடத் திருக்குமோ நிலமெதும்
கப்பல் ஒன்றினைக் கரையிலே சேர்க்க
கலத்தைக் கவிழ்க்கக் காய்ந்த மண்ணிலே?"

தீவின் கன்னியர் செப்பினர் இவ்விதம்
கடல்முனைக் கன்னியர் கூறினர் உத்தரம்:
"ஆமப்பா தீவிலே அதற்கிட முள்ளன
தீவின் தலையிடத் திருப்பன நிலங்கள்
கப்பல் ஒன்றினைக் கரையிலே சேர்த்திட
கலத்தைக் கவிழ்த்திடக் காய்ந்த மண்ணிலே:
இங்குள துறைகள் இருப்பன விசாலமாய்
கரைகளில் நிறைய உருளைகள் உள்ளன
நூறு கலங்களில் ஏறிநீ வரிலும்
ஆயிரம் மரக்கலம் அவையிங் கடையினும்."

குறும்பன் லெம்மின் கைனன் பின்னர்
கலத்தை இழுத்துக் கரையில் சேர்த்தனன்
மரத்து உருளைமேல் வடிவாய் ஏற்றினன்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"இந்தத் தீவிலே இடமெது முளதோ
தீவின் தலையிடத் திருக்குமோ நிலமெதும்
ஒருசிறு மனிதன் ஒளிப்பதற் காக
அங்கோர் மெலிந்தவன் அடைக்கலம் தேட
முழங்கும் பெரும்போர் முனைகளி லிருந்து
கூரிய வாள்களின் மோதலி லிருந்து?"

தீவின் கன்னியர் செப்பினர் இவ்விதம்

கடல்முனைக் கன்னியர் கூறினர் உத்தரம்:
"ஆமப்பா தீவிலே அதற்கிட முள்ளன
தீவின் தலையிடத் திருப்பன நிலங்கள்
ஒருசிறு மனிதன் ஒளிப்பதற் காக
அங்கோர் மெலிந்தவன் அடைக்கலம் தேட:
எம்மிடம் உண்டிங் கேற்றபல் கோட்டைகள்
வாழ்வதற் குண்டு வனப்புள தோட்டம்
வீரர்கள் வந்துற்ற போதிலும் நூற்றுவர்
ஆயிரம் மனிதர்வந் தடைந்தபோ தினிலும்."

குறும்பன் லெம்மின் கைனன் பின்னர்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"இந்தத் தீவிலே இடமெது முளதோ
தீவின் தலையிடத் திருக்குமோ நிலமெதும்
மிலாறு மரத்து வனத்திலோர் பகுதி
மற்றும் காட்டு வளர்புறத் தொருநிலம்
வெட்டிச் சுட்டது மிக்கழித் திடநான்
நல்லதோர் இடம்நான் நனிமுன் னோடியாய்?"

தீவின் கன்னியர் செப்பினர் இவ்விதம்
கடல்முனைக் கன்னியர் கூறினர் உத்தரம்:
"இந்தத் தீவிலே இடமெது மில்லை
தீவின் தலையிடத் தில்லை நிலமெதும்
இகல்உன் முதுகள விடமுமே யில்லை
நிகர்**பறை யளவு நிலமுமே யில்லை
வெட்டிச் சுட்டது மிக்கழித் திடநீ
நல்லதோர் இடம்நீ நனிமுன் னோடியாய்:
தேர்ந்தள பட்டன தீவகக் காணிகள்
வயல்கள்கோல் களினால் வகுக்கப் பட்டன
பல்காட்டு வெளிகள் பங்கிடப் பட்டன
நீதிமன் றங்களாய் நிலைத்தன புற்றரை."

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்
எழிலார் தூர நெஞ்சினன் உசாவினன்:
"இந்தத் தீவிலே இடமெது முளதோ
தீவின் தலையிடத் திருக்குமோ நிலமெதும்
எந்தன் பாடல்கள் இசைத்தே மகிழ்ந்திட
நீண்டகா வியங்களை நன்றாய்த் தொனிக்க
என்வாயி லேசொல் இனிதுரு(கு) கின்றன
முரசி லிருந்தவை முளைத்தெழு கின்றன."

தீவின் கன்னியர் செப்பினர் இவ்விதம்
கடல்முனைக் கன்னியர் கூறினர் உத்தரம்:
"ஆமப்பா தீவிலே அதற்கிட முள்ளன
தீவின் தலையிடத் திருப்பன நிலங்கள்
இனியஉன் பாடல்கள் இசைத்து மகிழ்ந்திட
நல்லகா வியங்களை நன்றாய்த் தொனித்திட
சோலைகள் உனக்குள சுகம் விளையாட
நடனங்கள் ஆடவும் நல்வெளி நிலமுள."

குறும்பன் லெம்மின் கைனன் பின்னர்
பாடலைத் தானே பாடத் தொடங்கினன்
முன்றிலில் **பேரி முளைக்கப் பாடினன்
திகழ்களஞ் சியவெளி சிந்துர மரங்கள்
சிந்துர மரத்தில் சிறப்புறு கிளைகள்
ஒவ்வொரு கிளையிலும் ஒளிரும் பழமாம்
அந்தப் பழங்களில் தங்கப் பந்துகள்
தங்கப் பந்திலே வந்தது ஓர்குயில்
குலவுமக் குயிலும் கூவிய வேளையில்
வாயிலே தங்கம் வந்தது பெருகி
அலகிலே செம்பு அருவியாய்ச் சொரிந்தது
வெள்ளியும் நுரைத்து வெளியே வந்தது
பொன்னிலே ஆன பொன்மே டொன்றிலே
வெள்ளியா லான வெண்மலை யொன்றிலே.

மேலும் பாடினன் லெம்மின் கைனன்
மற்றும் பாடினன் மந்திரப் பாடல்கள்
மணலின் துகள்களை வெண்முத் தாக்கினன்
பளிச்சொளி விடும்வரை பாறையைப் பாடினன்
வண்செஞ் சுடர்விட மரங்களைப் பாடினன்
பொன்னிறம் பெறும்வரை பூக்களைப் பாடினன்.

மேலும் பாடினன் லெம்மின் கைனன்
தோட்ட வெளிகளில் தோன்றின கிணறுகள்
அந்தக் கிணறெலாம் தங்கநல் மூடிகள்
மூடியின் மேலொரு முகிழ்பொன் வாளியாம்
சகோதரர் குடிக்கலாம் அந்தக் கிணற்றுநீர்
சோதரி கள்தம் சுழல்விழி கழுவலாம்.

தரையிலே தோன்றவும் தடாகம் பாடினன்
நீலவாத் துக்கள் நீந்தின பொய்கையில்
தங்கத்தில் நெற்றி தலைகளோ வெள்ளி
எல்லா விரல்களும் இயைந்தன செம்பினால்.

தீவகக் கன்னியர் திகைத்துப் போயினர்
கடல்முனைக் கன்னியர் கண்டதி சயித்தனர்
லெம்மின் கைனனின் நிகரில் பாடலால்
வீரன் காட்டிய மிகுதிறன் கண்டதால்.

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்
எழிலார் தூர நெஞ்சினன் இயம்பினன்:
"நலமுறு பாடலை நயத்தொடு பாடுவேன்
சிறப்புறும் பாடலைச் சீராய்ப் பாடுவேன்
ஒருகூ ரையின்கீழ் உவந்துநா னிருந்தால்
முன்நீள் மேசை முகப்பிலே யிருந்தால்;
வழங்கு வதற்கொரு வனப்பில் இலையெனில்
தருவதற் கேயொரு தரையே யிலையெனில்
தொல்கா னடைந்தென் சொற்களைப் பாடுவேன்
பற்றையி னுள்ளென் பாடலைப் போடுவேன்."

தீவகக் கன்னியர் செப்பினர் இவ்விதம்
கடல்முனைக் கோதையர் கவின்மனத் தெண்ணினர்:
"வருவதற் கெம்மிடம் வாய்ந்துள வீடுகள்
வசிப்பதற் குள்ளன வளர்பெரும் தோட்டம்
பனிக்குளி ரிருந்து பாடலைக் கொணர
வெளிப்புறத் திருந்து மிகுசொற் பெறற்கு."

குறும்பன் லெம்மின் கைனன் பின்னர்
வாழ்இல் லத்துள் வந்த கணத்தில்
பாடினன் அப்புறப் பக்கச் சளளாடிகள்
மேசையின் முனைவரை மிகநீண் டிருந்தவை,
'பீர்'பெரு கிற்றுச் சாடிகள் நிறைந்து
கலயத்து வந்தது கடிகமழ் தரத்தேன்
தகழிகள் எல்லாம் ததும்பி வழிந்தன
விளிம்பு வரைக்கும் நிறைந்தன கிண்ணம்
இருந்தது சாடிகள் நிறைந்து'பீர்'ப் பானம்
நறைகொணர்ப் பட்டது நிறையக் கலயம்
தயாராய் இருந்தது தண்ணொளிர் வெண்ணெய்
அத்துடன் பன்றி அதனூ னிருந்தது
குறும்பன் லெம்மின் கைனன் உண்டிட
தூர நெஞ்சினன் துய்ப்பதற் காக.

தூர நெஞ்சினன் இறுமாப் புற்றனன்
சுவையுண வுணணத் தொடங்கவே யில்லை
முற்றும் வெள்ளி முனைக்கத் தியிலா(து)
பொன்னில் குறுவாள் தன்கை யிலாமல்.

முற்றும் வெ(ள்)ளி முனைக்கத்தி கிடைத்தது
பொன்னில் குறுவாள் பின்வரப் பாடினன்
அதற்குப் பின்னர் அயின்றனன் நிறைய
வேண்டிய வரைக்கும் மிகு'பீர்' பருகினன்.

பின்னர் குறும்பன் லெம்மின் கைனன்
கிராமப் புறங்களில் உலாவித் திரிந்தனன்
தீவரி வையரொடு தினங்களித் திருந்தனன்
எழிலார் பினனல் இணைதலை யார்நடு
தலையை எப்புறம் தானே திருப்பினும்
அப்புறம் ஒருவாய் முத்தம் பொழிந்தது
எப்புறம் கையை எடுத்தே நீட்டினும்
அப்புறம் ஒருகை அதனைப் பிடித்தது.

இரவு முழுவதும் இருந்தனன் வெளிப்புறம்
இருண்ட கரிய இருளின் நடுவிலே
கிடந்தஅத் தீவில் கிராமமே ஒன்றிலை
இனியபத் தில்லம் இல்லாக் கிராமமாய்,
அக்கிரா மத்தில் அமைந்தவீ டொன்றிலை
ஏந்திழை பதின்மர் இல்லாஇல் லமாய்,
யாருமே மகளெனக் கூறுதற் கில்லையே
அன்னையீன் பிள்ளைகள் அங்கொருத் தியுமிலை
பக்கத் தவன்போய்ப் படுக்காப் பாவையாய்

அவன்சென் றணையா அழகுக் கரத்தளாய்.

ஆயிரம் மணப்பெண் அவனும் அறிந்தனன்
நூறு விதவையோ டோய்வுற் றிருந்தனன்
அரிவை பதின்மரில் அங்கிலை இருவரும்
முழுநூறு பேரிலே மூவரும் இல்லையே
அவன் அணைக்காத அரிவையென் றிம்ப
படுக்காத விதவைப் பாவையென் றுரைக்க.

குறும்பன் லெம்மின் கைனன் இவ்விதம்
சுகபோக வாழ்க்கை சுகித்தே நடத்தினன்
மூன்று கோடையின் முழுக்கா லத்திலும்
இருந்தஅத் தீவின் பெருங்கிரா மத்தில்,
கிராமப் பெண்களுக் கருமின் பூட்டினன்
விதவை யெலாரையும் நிறைவு படுத்தினன்;
திருப்திப் படாமல் இருந்தவள் மிஞ்சி
இழிந்தவள் ஒருத்தி முதிர்ந்ததோர் கன்னி
தீவின் நீள்தலைத் திகழ்புற மிருந்தவள்
பத்தாம் கிராமம் பாவையங் குறைபவள்.

பயணிக்க இப்போ அவனும் விரும்பினன்
உரியநா டேக உன்னினன் அவனே
வந்தாள் முதிய வன்முது கன்னி
இந்தச் சொற்களில் இயம்பினள் அவளே:
"இழிந்த தூர நெஞ்சினன் எழிலோன்
என்னை உனக்கு இல்லையேல் நினைவு
இங்கிருந் தேநீ ஏகலில் செய்வேன்
பாறையில் படகை மோதவே செய்வேன்."

துயிலெழச் சேவல் தொனிகேட் டிலது
இலை**குக் குடக்குஞ் சிலைப்புறப் பாடும்
இனபமக் காரிகைக் கினிதே தரற்கு
நாரியவ் வேழையை **நகைக்கவைத் தற்கு.

போயின பலநாள் புலர்ந்தது ஒருநாள்
பலமா லைகளில் ஒருநாள் மாலை
நிச்சயம் எழற்கோர் நேரம் குறித்தான்
சேவல் கூவற்கும் திகழ்நிலா வுக்கும்முன்.

எழுந்தான் வழமையாய் எழுநேர த்துமுன்
குறித்த பொழுதுமுன் கொள்துயி லெழுந்தான்
எழுந்ததும் உடனே புறப்பட் டேகினன்
கிராமத் தூடாய்த் திரிந்தான் அலைந்து
அந்தக் காரிகைக்கு கின்பம் தரற்காய்
நாரியவ் வேழையை நகைக்கவைத் தற்கு.

இரவுநே ரத்தில் ஏகினன் தனியாய்
கிராமத் தூடாய்ப் புறப்பட் டேகினான்
நீண்ட கடல்முனை நேர்தலை யிடத்தே
பத்தாவ தான படர்கிரா மத்துள்

அங்கொரு வீட்டையும் அவன்கண் டிலனே
மூன்று மனைகள் மூண்டுள வீட்டை
அங்கொரு மனையையும் அவன்கண் டிலனே
மூன்று மனிதர்கள் ஈண்டிவாழ் மனையை
அவன்எம் மனிதரும் அங்குகண் டிலனே
தம்தம் வாளை நன்குதீட் டார்களை
போர்க்கோ டாரியைக் கூராக் கானை
லெம்மின் கைனனின் நிமிர்தலை குறித்து. 290

குறும்பன் லெம்மின் கைனனப் போது
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"ஓகோ, அன்பே, உதித்தனன் ஆதவன்,
இனிய சூரியன் இதமாய் எழுந்தான்
எழைப் பையன் எந்தன் தலைக்கு
இழிந்தவன் எனது எழிற்கழுத் துக்கு!
பிசாசு வீரனைப் பெரிதுகாக் கட்டும்
ஒருதனி வீரனை உரிய உடையினில்
அவனது ஆடையில் அவனை வைத்திருக்க
அவனது போர்வையில் அவனைக் காக்க 300
எதிர்த்து நூற்றுவர் எழுந்திடும் போது
ஆயிரம் பேர்கள் தாக்க வருகையில்! "

அணைக்கப் படாமலே அரிவைய ரிருந்தனர்
அணைக்கப் பட்டவர் அணைபடா திருந்தனர்
படகின் உருளையைப் பார்த்தே நடந்தனன்
பாககிய மிலான்தன் படகினை நோக்கி
எரிந்து படகாங் கிருந்தது சாம்பராய்
உருந்திரிந் திருந்தது சாம்பராய் துகளாய்.

அழிவொன் றடுப்பதை அவனும் உணர்ந்தனன்
தொல்லை நாட்கள் தொடர்வதும் தெரிந்தது 310
செதுக்கத் தொடங்கினான் செம்பட கொன்றை
படகைப் புதிதாய்ப் படைக்கத் தொடங்கினன்.
மரக்கல மமைத்திட மரங்கள்தாம் வேண்டுமே
படகுசெய் வோற்குப் பலகைகள் வேண்டுமே
மரங்கள் கிடைத்தன வருமிகு கொஞ்சம்
பபலகைகள் கிடைத்தன பயனிலா அற்பம்
நூல்நூற் கும்தடி நுவல்ஐந்(து) துண்டு
இராட்டினப் பலகையில் இருமுத் துண்டு.

அவற்றினி லிருந்தே அமைத்தான் படகை
தோணியைச் செய்யத் தொடங்கினான் புதிதாய் 320
மந்திர அறிவால் மரக்கலம் கட்டினன்
ஆற்றலால் அறிவால் ஆக்கம் செய்தனன்;
ஒருமுறை அறைந்தான் ஒருபுறம் வந்தது
மறுமுறை அடித்தான் மறுபுறம் பிறந்தது
மூன்றாம் முறையும் மீண்டும் அறைந்தான்
அப்போ(து) வந்தது அகல்முழுப் படகு.

இப்போ(து) படகை இகல்நீர்த் தள்ளினான்

விட்டான் கப்பலை விரியலை களின்மேல்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்
உரைத்தே அவன்தான் உரைசெய லாயினன்:
"நீரில் படகே நீர்க்குமி ழாய்ச்செல்
அலையிலே மிதந்துசெல் அணிநீ ராம்பல்போல்
கழுகே(யுன்) இறகில் கொணர்வாய் மூன்றை
கழுகே மூன்று **காகமே இரண்டு
இச்சிறு படகின் இணைகாப் பாக
காத்திட ஏழைக் கவின்கல முன்புறம்."

கலத்தின் உள்ளே காலடி வைத்தான்
திருப்பினன் படகின் திகழ்பின் னணியம்
தாழ்ந்த தலையுடன் வீழ்ந்த மனத்துடன்
தொய்ந்து சரிந்த தொப்பியை அணிந்து
இரவிலே அங்கு இருக்கொணா ததனால்
வருபகல் அங்கு வாழொணா ததனால்
இன்பம் தீவக மகளிர்க் கீந்திட
பின்னிய கூந்தற் பெண்களோ டாட.

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்
எழிலார் தூர நெஞ்சினன் இயம்பினன்:
"பையன் புறப்படப் படர்ந்தது வேளை
இவ்வில் களிலிருந் தேகும் பாதையில்
இந்தப் பெண்ணின இன்பத் திருந்து
அழகிய மாதரின் ஆடலி லிருந்து;
ஆயினும் நான்எழுந் தப்புறம் போனபின்
நானிங் கிருந்துபோய் நடந்து முடிந்தபின்
இங்குள பெண்கள் இன்பமே யடையார்
பின்னிய கூந்தலார் பேசார் மகிழ்வுடன்
இருண்ட இந்த இல்லங் களிலே
எளியஇத் தோட்டத் தியைந்த பரப்பிலே."

அழுதனர் தீவதன் அரிவையர் இப்போ(து)
கடல்முனைக் கோதையர் கலங்கித் தவித்தனர்:
"ஏன் புறப்பட்டாய் லெம்மின் கைனனே
ஏன்பய ணித்தாய் இனியமாப் பிள்ளையே
பெண்புனி தத்தால் பெயரலுற் றனையா
அல்லது அரிவையர் அரிதென்ப தாலா?"

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்
எழிலார் தூர நெஞ்சினன் இயம்பினன்:
"பெண்புனி தத்தால் பெயர்ந்திட வில்லைநான்
அல்லது அரிவையர் அரிதென்று மல்ல
நூறு பெண்களை நான்பெறு வேனிங்(கு)
ஆயிரம் மாதரை அணைத்தெடுத் திருப்பேன்;
லெம்மின் கைனன் புறப்பட லிதற்கே
இனியமாப் பிள்ளையின் பயணம் இதற்கே
எனக்கொரு பெரிய ஏக்கம் வந்தது
சொந்த நாட்டைத் தொட்டதவ் வேக்கம்
சொந்தநாட் டினது **சிறுபழத் தெண்ணம்

உரியகுன் றோர **ஒருபழத் தாசை
சொந்தக் கடல்முனை மங்கையர் தவிப்பு
கொடும்சொந் தப்பொழிற் கோழிகள் கலக்கம்."

குறும்பன் லெம்மின் கைனன் பின்னர்
தனது கப்பலைத் தள்ளினன் வெளிப்புறம்
காற்று வந்தது கடத்திச் சென்றது
அலையும் எழுந்தது இழுத்துச் சென்றது
நீல நிறத்து நீள்கடற் பரப்பில்
விரிந்து பரந்த வியன்கடல் மடியில்;
இழிந்த பாவையர் எஞ்சினர் கரையில்
மென்மன மங்கையர் மிகுஈர்ம் பாறையில்
தீவகத் தோகையர் தேம்பினர் துயருடன்
பொன்போற் பாவையர் புலம்பித் தவித்தனர்.

தீவகப் பாவையர் தேம்பினர் துயரதால்
கடல்முனைக் கன்னியர் கலங்கிப் புலம்பினர்
பாய்மரம் பார்வையில் படிகின்(ற) வரையிலும்
இரும்பதன் இணைப்புகள் தெரிந்திடும் வரையிலும்;
பாய்மரத் துக்காய்ப் பாவையர் அழுதிலர்
இரும்பிணைப் புக்காய்ப் பெருந்துய றுற்றிலர்
பாய்மரக் கீழறும் பையனுக் கழுதனர்
சுக்கான் பீடத் தோனுக் கழுதனர்.

லெம்மின் கைனனும் நெஞ்சுற அழுதனன்
ஆனால் அழுததும் அடைகடுந் துயரும்
தீவதன் தரையே தெரிகின்ற வரைதான்
கடல்தீவு மேடுகள் காண்கிற வரைதான்;
தீவதன் தரைக்காய்த் திகைப்புற் றழுதிலன்
தீவுமேட் டுக்காய்ச் சேர்துயர் கொண்டிலன்
ஆனால் தீவதன் அரிவையர்க் கழுதனன்
மேட்டு நிலத்து வாத்துகட் கழுதனன்.

குறும்பன் லெம்மின் கைனன் பின்னர்
நீலக் கடலில் நெடுந்தொலை சென்றனன்
சென்றனன் ஒருநாள் சென்றனன் இருநாள்
மூன்றாம் நாளில் முழுமையும் சென்றனன்
அப்போ(து) காற்று அங்கார்ந் தெழுந்தது
அத்துடன் அடிவான் அதுஇடித் தார்த்தது
வலியகாற் றொன்று வடமேற் கினிலே
கடும்காற் றொன்று காண்வட கிழக்கிலே
பற்றிய தொருபுறம் பற்றிய(து) மறுபுறம்
முற்றாய்ப் படகை முடித்தது புரட்டி.

குறும்பன் லெம்மின் கைனன் பின்னர்
நீரை நோக்கி நீள்கரம் திருப்பி
வலித்துச் சென்றனன் வன்விரல் களினால்
உதைத்துச் சென்றனன் உறுதன் கால்களால்.

நேர்இரா நெடும்பகல் நீந்திச் சென்றபின்

அதிக தூரம் அவன்உதைத் தானபின்
நகர்வதைக் கண்டனன் நன்கோர் சிறுமுகில்
விரிவட மேற்கதன் விளிம்பைக் கண்டனன்
அதுபின் நிலமாய் அங்குமா றிட்டது
கடலின் முனையாய்க் காட்சியும் தந்தது.

கரையில் ஏறினன் கரையிலோர் இல்லம்
ரொட்டிகள் தலைவி சுட்டவா றிருந்தனள்
தையலர் அவற்றைத் தட்டிட லாயினர்:
"ஓ,நற் கருணைகூர் உயர்ந்த தலைவியே!
உன்னால் என்பசி உணர்ந்திட முடிந்தால்
எந்தன் நிலமையை இனிதுநீ அறிந்தால்
களஞ்சிய அறையை காணநீ ஓடு!
பனிப்புய லாய்ப்'பீர்'ப் பானத் தறைக்கு
சாடியொன் றார்'பீர்'ப் பானம் கொணர்வாய்
பன்றி யிறைச்சித் துண்டுகள் கொணர்வாய்
அவற்றைப் பின்னர் அனலில் வாட்டுவாய்
மிகைஅவை மீது வெண்ணெயைப் பூசுவாய்
இளைத்ததோர் மனிதன் எடுத்துணற் காக
நீந்திய நாயகன் சோர்ந்தவன் அருந்த
நானிராப் பகலாய் நளிர்கடல் நீந்தினன்
திறந்த கடலதன் பரந்த அலைகளில்
காற்றொவ் வொன்றையும் கருதித் தஞ்சமாய்
கடலின் அலைகளைக் கருணையாய்க் கருதி."

அப்போ(து) கருணைகூர் அந்தத் தலைவி
கவின்குன்றி லேயமை களஞ்சியம் சென்றனள்
வெண்ணெயைக் களஞ்சியத் திருந்தே வெட்டினள்
பன்றி யிறைச்சியைத் துண்டுதுண் டாக்கினள்
அவற்றை வாட்ட அனலில் போட்டனள்
பசியுறு மனிதன் புசிப்பதற் காக
சாடியொன் றினில்'பீர்'ப் பானம் கொணர்ந்தனள்
நீந்திய நாயகன் சோர்ந்தவன் அருந்த;
பின்னர் புதியதோர் பெரும்பட கீந்தனள்
தயாராய் இருந்த தக்கதோர் தோணி
மனிதன் வேறொரு நனிநா டேக
இல்லினை நோக்கி எழுந்திடப் பயணம்.

குறும்பன் லெம்மின் கைனன் பின்னர்
இல்லம் வந்து இறங்கிய போது
அறிந்தனன் நிலத்தை அறிந்தனன் கரையை
தீவுக ளோடு தெரிந்தனன் நீரிணை
தொன்நாட் படகுத் துறையையும் உணர்ந்தனன்
வழக்கமாய் வாழ்ந்த வளவிடம் உணர்ந்தனன்
குன்றையும் குன்றின் குலத்**தேவ தாருவும்
மேட்டையும் மேட்டின் வியன்**தாரு மரத்தையும்
ஆயினும் இல்லத் தடத்தை யறிந்திலன்
இல்லதன் சுவர்கள் இருந்தஅவ் விடத்தை
இல்லம் இருந்த இடத்திலிப் போது
இளம்பழச் **செடிகள் சலசலத் திருந்தன

தேவதா ரிருந்தது திகழ்மனைக் குன்றிலே
சூரைச் செடிகளாம் சுவரின் பாதையில்.

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்
எழிலார் தூர நெஞ்சினன் இயம்பினன்:
"நான்உலா வியபொழில் நன்கதோ உள்ளது
அங்கே யுளனயான் அடியிட்ட பாறைகள்
நான்விளை யாடிய நற்புற் றரையதோ
துள்ளித் திரிந்தஎன் நல்வயற் கரைஅதோ;
பழகிய என்னிலைப் பறித்தே கியதெது
அழகிய கூரையை அகற்றிய வர்யார்?
வீட்டை யெரித்ததால் சாம்பரா யானது
சாம்பரைக் காற்றும் தானடித் தகன்றது."

அங்கே அவன்பின் அழவும் தொடங்கினன்
ஒருநாள் அழுதனன் இருநாள் அழுதனன்;
அவனே அழுதது அகத்துக் கல்லவே
களஞ்சிய அறைக்காய்க் கவலையு முற்றிலன்
இ(ல்)லத்துப் பழகிய ஏந்திழைக் கழுதான்
அக்களஞ் சியவறை அன்புளாட் கழுதான்.

பறவை ஒன்று பறப்பதைக் கண்டனன்
ஓர்கழு கங்கு உயர்ந்தசைந் தகல்வதை
அதனை இவ்விதம் அவனும் வினவினன்:
"ஓ,என் கழுகே, உயர்நற் பறவையே!
உரைத்திட எனக்கு உனாலா காதா
எனது முந்திய இனியதாய் எங்கே
என்னைச் சுமந்தஅவ் வெழில்மகள் எங்கே
எனைமுலை யுட்டிய இனியவள் எங்கே? "

எதுவும் நினைவிலை ஏகிய கழுகுக்(கு)
மூடப் பறவை முற்றொன் றறியா(து)
இறந்தாள் அவளே எனக்கழு கறியும்
காணா தொழிந்ததைக் **காகமும் அறியும்
ஒருவாள் செயலால் வறிதே மறைந்தாள்
கொடும்போர்க் கோடரிக் கொலையுண் டனள்என.

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்
எழிலார் தூர நெஞ்சினன் இயம்பினன்:
"ஐயகோ எனைச்சுமந் தளித்த அழகியே!
முலையுட்டி வளர்த்த முந்தென் இனியளே!
எனைச் சுமந்தவளே, இறந்து போயினையோ?
அன்புறும் அன்னாய், அகன்று போனாயோ?
அன்னாய் தசைநிலத் தழுகி யழிந்ததோ!
தேவதா ரதன்மேல் செறிந்து முளைத்ததோ!
குதிக்கால் சூரைக் கொழும்செடி வளர்ந்ததோ!
அலரியும் விரல்நுனி அவற்றில் எழுந்ததோ!

தண்டனைக் குரியவன் தான்நான் இழியவன்
துர்பாக் கியவான் அற்பப தராதி

எந்தன் வாளை எடுத்தாங் குயர்த்தினேன்
அழகிய ஆயுதம் அதைநான் ஏந்தினேன்
அங்கே வடபால் அகல்நில முன்றிலில்
வல்லிருட் பூமியின் வயற்கரை யோரம்
சொந்த இனத்தொரு தோகையைக் கொல்ல
அன்றெனைச் சுமந்த அன்னையை இழக்க."

பார்த்தனன் திரும்பிப் பார்த்தனன் சுற்றிலும்
காற்சுவ டொன்றைக் கண்டனன் சிறிதே
காண்புல் நடுவில் கசங்கிக் கிடந்ததை
அப்பசும் புற்றரை அழிந்து கிடந்ததை;
அந்தப் பாதையில் அறிதற் கேகினன்
அவ்வழி ஏகினன் அதைஓர் வதற்காய்
அவ்வழி வனத்தின் அமைவுட் சென்றது
அவ்வழி அவனை அழைத்துச் சென்றது.

ஏகினன் ஒன்று இரண்டு**மைல் தூரம்
சிறிதே தூரம் தரையில் விரைந்தனன்
உயர்இருட் காட்டின் உள்ளே நுழைந்தனன்
வலிதடர் காட்டின் வளைவில் மூலையில்;
இரகசியச் சவுனா இருக்கக் கண்டனன்
மறைந்தொரு சிறிய மனைக்குடில் இருந்தது
இருஉயர் பாறை இடைநடு வினிலே
முத்தேவ தாரு மூலையின் கீழே
அன்புறும் அன்னையை அங்கே கண்டனன்
உயர்சிறப் புடையாள் ஒளித்தாங் கிருந்தனள்.

குறும்பன் லெம்மின் கைனன் பின்னர்
பெரிதும் மகிழ்ந்தான் பேர்களிப் படைந்தான்
இனிவரும் சொற்களில் இவ்விதம் சொன்னான்
இந்தச் சொற்களில் இவ்விதம் மொழிந்தான்:
"ஓகோ, எந்தன் உயர்வன் பன்னாய்!
தாயே, என்னைத் தனிவளர்த் தவளே!
இன்னும் உயிரோ டிருக்கிறா யம்மா!
ஈன்றநீ இன்னும் இருக்கிறாய் விழிப்பாய்
இறந்து போனதாய் இதுவரை அறிந்தேன்
எல்லா வகையிலும் இழந்ததாய் நினைத்தேன்
வாளின் வலியால் வலிதே சென்றதாய்
ஈட்டி குத்தியும் இறந்ததாய் நினைத்தேன்;
அழுதேன் இனிய அகல்விழி மறைய
அழகிய முகமும் அழிந்தே போக."

லெம்மின் கைனனின் அன்னை கூறினள்:
"இன்னும் உயிரோ டிருக்கிறேன், ஆமாம்,
அங்கிருந் தேநான் அகன்றிட நேரினும்,
மறைந்து வாழ்நிலை வந்திட்ட போதிலும்,
இந்தக் காட்டின் இருண்டவிவ் விடத்தே
அடர்ந்த காட்டின் அமைவளை மூலையில்;
ஒருபெரும் யுத்தம் வடநிலம் தொடுத்தது
போருக்கு வந்ததோர் புதுப்பெருங் கூட்டம்

இழிந்த மனிதன் எதிராய் உனக்கு
அதிர்ஷ்ட மற்றவ னாமுனக் கெதிராய்
இல்களைச் சாம்பராய் எரித்தே யாக்கினர்
எங்கள் தோட்டம் எல்லாம் வீழ்த்தினர்."

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்:
"என்றன் அன்னையே, எனைச்சுமந் தவளே!
என்றுமே இதற்காய் இனித்துயர் வேண்டாம்
அதற்காக வேனும் எதற்காக வேனும்
கவின்மனை புதிதாய்க் கட்டத் தொடங்கலாம்
இன்னும் சிறந்த இல்கள் கட்டலாம்
வடநில மீது வன்போர் தொடுபடும்
பிசாச இனத்தவர் பேரழி வுறுவர்."

பின்னர் லெம்மின் கைனனின் அன்னை
இந்தச் சொற்களில் இயம்பினள் அவளே:
"வெகுநாள் தங்கினாய் வெளியே மகனே
தூரநெஞ் சினனே தொலைவிலே வாழ்ந்தாய்
அந்த வெளிப்புற அயல்நா டுகளில்
அன்னிய மான அம்மனை வாயிலில்
பெயரிடப் படாத பெருங்கடல் முனைகளில்
**உறுசொற் களேயிலா ஒருதீ வதனில்."

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்
எழிலார் தூர நெஞ்சினன் இயம்பினன்:
"அங்குநான் வாழ்ந்தது அருமையா யிருந்தது
திரிந்து மகிழ்ந்தது தினம் இனிப்பானது
திகழுமம் மரங்கள் சிவப்பாய் மிளிர்ந்தன
மரங்களோ சிவப்பு மண்ணதோ நீலம்
ஊசி யிலைமரத் துயர்கிளை வெள்ளி
புதர்ச்செடிப் **பூக்கள் பொன்னா லானவை;
தேன்நிறை குன்றுகள் செறிந்தாங் குள்ளன.
பாறைகள் எங்ஙணும் கோழியின் முட்டைகள்
பட்ட**தா(ரு) மரமெலாம் பசுந்தேன் வடிந்தது
உழுத்திடும் **தேவதா ரூற்றிய துபால்
வேலிகள் மூலையில் வெண்ணெயாய் வழிந்தது
வேலியின் கம்பத்தில் மிகுந்த'பீ ரொ'ழுகிற்று.

அங்குநான் வாழ்ந்தது அருமையா யிருந்தது
காலம் மதுரமாய்க் கழிந்துகொண் டிருந்தது;
அங்குபின் வாழ்வது ஆனது கொடுமையாய்
அங்குநான் இருப்பது அன்னிய மானது:
அஞ்சினர் அவர்கள்தம் பெண்களைப் பற்றியே
நம்பினர் கெட்டவர் நடத்தையில், என்பதாய்,
எளிய பிறவிகள் இரும்பானை **வயிறுளார்
தீய கொழுத்த செயல்கெடும் பிறவிகள்,
தையலர் இருந்தனர் தகாத நடத்தையில்
என்னுடன் கழித்தனர் இரவுகள் பலவென;

மறையலா யினேன்நான் மங்கைய ரிடத்திருந்(து)

கவனமா யிருந்தேன் வனிதையர் மகளார்க்(கு) 600
ஓநாய் பன்றிகட் கொளிப்பதைப் போல
கிராமக்கோ ழிக்குக் கழுகு மறைதல்போல்."

கலேவலா

பாடல் 30 - லெம்மின் கைனனும் உறைபனி மனிதனும்

அடிகள் 1-122 : லெம்மின்கைனன் வடநாட்டின் மீது போர் தொடுப்பதற்கு உதவுமாறு தனது பழைய தோழனான தியேராவைக் கேட்கிறான்.

அடிகள் 123-316 : வடநிலத் தலைவி உறைபனியை உருவாக்கி கடலில் இருந்த கப்பல்களை உறையச் செய்கிறாள். உடன் இருந்த வீரர்களும் உறையப் போகும் சமயத்தில் லெம்மின்கைனன் தனது மந்திர சக்தியாலும் மாயச் செயல்களாலும் உறைபனியினால் ஏற்பட்ட அகோரத்தைத் தாங்குகிறான்

அடிகள் 317- 500 : லெம்மின்கைனன் பனிக்கட்டி மேல் நடந்து கடற்கரைக்கு வருகிறான். பின்னர் வெகுகாலம் காடுகளில் துன்பத்துடன் அலைந்து திரிந்து கடைசியில் தனது வீட்டை அடைகிறான்.

அஹ்திப் பையன் அவன்நிக ரற்றோன்
குறும்புப் பையன் லெம்மின் கைனன்
காலை ஒருநாள் வேளை வைகறை
அந்த நாளில் முன்புலர் நேரம்
படகுச் சாலையுட் பதித்தான் காலடி
நற்கப் பற்றுறை நடந்தான் நோக்கி.

அங்கே மரத்தின் அகல்பட கழுதது
புலம்பிற் றிரும்பின் துடுப்புப் பூட்டு:
"எவரோ கட்டிய எனக்கெது வுண்டு
எவரோ செதுக்கிய எளியேன் எனக்கு?
செருபோ ருக்கெனைச் செலுத்திலன் அஹ்தி
ஆறு,பத் தாண்டு அருங்கோ டைருது
வெள்ளியை அவனும் விரும்பிய தில்லை
பொன்னைத் தேடிப் போனது மில்லை."

குறும்பன் லெம்மின் கைனன் அவனே
படகினை அறைந்தான் பருகை யுறையால்
எழிலாய் மின்னும் இகத்தோ லுறையால்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"தாருவின் மிதவையே தனித்துயர் வேண்டாம்
மரத்தின் புறமே முறையிடல் வேண்டாம்
இனியும் போர்க்கெழ இருக்கும் வாய்ப்பு
சண்டைக் கேகும் சந்தர்ப் பம்வரும்:
துடுப்புக் காரரால் நிரப்பப் படுவைநீ
நாளை விடியும் நற்பொழு திருந்து."

அன்னையின் அருகே அடிவைத் தடைந்தான்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"அன்னையே இப்போ தழுவது வேண்டாம்!
பெற்றவ ளேயெனை, பெரிதும் புலம்பேல்!
எங்கா வதுதான் ஏகுவ தானால்
போர்க்களத் துக்குப் போவதா யிருந்தால்;

என்றன் மனதில் இதுதோன் றியது
எனக்கு வந்த எண்ணமு மிதுவே
வீழ்த்துதல் வேண்டும் மிகுவட நாட்டாரை
தண்டிக்க வேண்டும் தாழ்விழி மாந்தரை."

அவனைத் தடுக்க அன்னையும் முயன்றாள்
எச்சரித் தனளவ் விருமுது பெண்ணே:
"செல்லுதல் வேண்டாம், செல்வஎன் மகனே!
அந்த வடபால் அகல்நிலப் போர்க்கு!
எதிர்நோக் கிவரும் இறப்பே யங்கு
சந்திக்க நேரும் தனிநின் மரணம்."

எதைத்தான் ஏற்றான் லெம்மின் கைனன்
செல்வது என்றே தீர்மா னித்தான்
புறப்பட் டேக ஒரேமுடி வெடுத்தான்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"இன்னொரு மனிதனை எங்கே பெறலாம்
இன்னொரு மனிதனும் இன்னொரு வாளும் அஹ்தி போர்க்கே அருந்துணை யாக
உதவிக் கின்னொரு உரமுறு மனிதனை?

தெரிந்தவன் எனக்குத் *தியேரா உள்ளான்
*பனிப்பத மனிதனை பல்கால் அறிவேன்
பெறுவேன் அவனைப் பிறிதொரு மனிதனாய்
பிறிதொரு மனிதனும் பிறிதொரு வாளும்
அஹ்தி போர்க்கே அருந்துணை யாக
உதவிக் கின்னொரு உரமுறு மனிதன்.

கிராமத் தூடாய் விரைந்தவ னேகினன்
தியேரா தோட்டத் தெருக்களின் வழியாய்
அங்கவ னடைந்தது மிங்ஙனம் மொழிந்தான்
சேர்ந்ததும் வந்து செப்பினன் விவரம்:
"தியேரா, என்விசு வாசத் தோழனே!
இன்னரும் நண்பனே, இனிய மித்திரனே!
அந்தநாள் ஞாபகம் சிந்தையி லுளதா
வந்ததா அந்தநாள் வாழ்க்கையும் நினைவில்
இருவரும் ஒன்றாய் ஏகினோம் அன்று
பெரியதாய் நடந்த பேரமர்க் களங்களில்?
அப்போ கிராமம் அங்கொன் றிலையே
இல்லம் பத்தே இல்லாக் கிராமமாய்.
அப்போ தங்கொரு அகமுமே யிலையே
வீரர்கள் பதின்மர் விளங்கா இல்லமாய்,
அங்கொரு வீரனும் அப்போ தில்லையே
கணிப்புள மனிதனாய் மதிப்புள மனிதனாய்
வீரர்நா மிருவரும் வீழ்த்தா மனிதனாய்
தருக்கிநாம் வெட்டிச் சாதிக்கா மனிதனாய்."

சாளரப் பீடம் தந்தையார் இருந்தார்
பிடிஈட் டிக்குச் செதுக்கிய வாறே
அன்னையும் களஞ்சியக் கூடத் தமர்ந்தனள்
தாய்மத் தொன்றால் தயிர்கடை தன்மையில்

வாயிலில் சகோதரர் வழியினில் நின்றனர்
சறுக்கு வண்டியைப் பிணைத்த வண்ணமாய்
சோதரி முனையில் துறையதில் நின்றனர்
கழுவித் துணிகளை அலசிய வண்ணமாய்.

சாரளத் திருந்த தங்தையும் மொழிந்தார்
களஞ்சியக் கூடத் திருந்ததாய் கேட்டனள்
வாயிலில் நின்ற சகோதரர் விளித்தனர்
துறைமுனைச் சோதரி சொல்லினர் இப்படி:
"நேரமே யில்லை தியேராபோர்க் கேக
தியேரா ஈட்டி செய்சமர்க் கலக்க;
தியேராவோர் இணக்கம் செய்தனன் புகழுற
நீடுமொப் பந்தம் நேர்ந்தொன் றியற்றினன்
இளம்பெண் ஒருத்தியை இப்போ மணந்தனன்
தனக்கென உரித்தாய்த் தலைவியை ஏற்றனன்
இன்னும் விரல்படா திருப்பன முலைக்காம்(பு)
திகழ்மார் பின்னும் தேய்படா துள்ளன."

இருந்தனன் தியேரா இதஅடுப் பருகே
கணப்பின் மூலையில் பனிப்பத மனிதன்
ஒருகால ணியை அடுப்பின் அருகிலும்
மற்றதைப் பீடமேல் வைத்தனன் கணப்பில்
இடுப்பின் பட்டியை இட்டே வாயிலில்
நடைபயின் றிட்டான் நன்கே வெளிப்புறம்;
தியேரா(தன்) ஈட்டியைச் செங்கர மெடுத்தான்
பென்னம் பெரிய ஈட்டியஃ தல்ல
சின்னஞ் சிறிய ஈட்டியு மல்ல
ஆயினும் ஒருநடுத் தரமே யானது:
அதன்முனை **பரியொன் றங்கே நின்றது
அலகின் அருகிலே முயலும் குதித்தது
ஓநாய்ப் பொருத்தில் ஊளை யிட்டது
கரடி குமிழில் கனன்றுறு மியது.

அவன்தன் ஈட்டியை அங்கே சுழற்றினான்
சுழற்றினான் ஈட்டி சுற்றி விசிறினான்
ஆறடி ஈட்டியின் அலகைச் செலுத்தினான்
வயலின் களியாம் மண்ணா ழத்தில்
ஏதும் பயிரிலா இயல்பொது மண்தரை
மேடுஇல் புற்றரை மீதே நிலத்தில்.

திணித்தான் தனது ஈட்டியைத் தியேரா
அஹ்திவைத் திருந்த அவனது ஈட்டியுள்
வந்தான் பின்அவன் வந்தான் விரைவாய்
போரிலஹ் திக்குப் பொருந்தும் உறுதுணை

பின்னர் அஹ்தி பெருந்தீ வின்மகன்
இறக்கினன் தோணியை இரும்நீர்த் தள்ளி
வெளிர்புல் லுறையும் விரியன் பாம்புபோல்
அல்லது உயிருடை அரவம் போல
புறப்பட் டேகினர் புறம்வட மேற்காய்

வடபுலப் பூமியின் கடலதி லாங்கே.

அந்த வடநிலத் தலைவியைப் போது
*உறைபனி மனிதனை உருச்செய் தனுப்பினள்
வடபுலப் பூமியின் கடலதி லாங்கே
விரிந்து பரந்த வியன்கடல் மடியில்;
இந்தச் சொற்களில் இயம்பினள் அவளே
கூறினாள் இவ்விதம் கொடுத்தாள் கட்டளை:
"உறைபனி மைந்தனே ஓ,சிறு பையனே!
என்றன் சொந்த எழிலார் வளர்ப்பே!
நான்புகல் இடத்தே நீசெலல் வேண்டும்
நான்புகல் இடத்தே நன்கென் ஆணைபோல்:
துடுக்கரின் தோணியைப் படுத்துறை குளிராய்
குறும்பன் லெம்மின் கைனனின் படகை
உயர்ந்த தெளிந்த ஒளிர்கடல் மேலே
விரிந்து பரந்த வியன்கடல் மடியில்!

தலைவன் தனையே சரியாய்க் குளிர்செய்
துடுக்கனை நீரில் உறைந்து போகச்செய்
என்றும் அவன்வெளி வந்திடா திருக்க
என்றுமே விடுதலை யில்லா திருக்க
விரும்பி நானே விடுத்தால் தவிர
சென்றுநான் விடுதலை தந்தால் தவிர!"

உறைபனி யோன்எனும் நிறைதீச் சக்தி
தீய மனத்தொடு திகழுமப் பனிப்பையல்
புறப்பட் டான்கடல் நிறைகுளி ராக்க
அலைகளை நிறுத்தி அவையுறைந் திடச்செய;
அவ்வா றவனும் அவ்வழி செல்கையில்
தரையிலே நடந்து தான்செல் வேளையில்
மரங்களைக் கடித்து மரத்திலை யகற்றினான்
புற்களின் தாள்களைப் போக்கினான் அவ்விதம்.
அங்கே பின்அவன் அடைந்தநே ரத்தில்
வடபுலக் கடலின் வருவிளிம் பெல்லையில்

முடிவே யில்லாப் படிநீர்க் கரையில்
உடன்வரு முதலாம் உறுஇர வதனில்
குளிர்வித் தான்குடா, குளிர்வித் தான்குளம்,
கடலின் கரைகளைக் **கடிநம தாக்கினான்
ஆனால் இன்னும் ஆழியை ஆக்கிலன்
படிய வைத்திலன் படரலை நிறுத்தி;
ஒலிகடல் நீர்மேல் ஒருசிறு **குருவி
வளர்அலை மேலொரு **வாலாட் டிப்புள்
இன்னும் குளிர(ாக) விலையதன் நகங்கள்
குளிர்பிடித் திலதது கொள்சிறு தலையில்.

அதிலிருந் திருநிசி அங்கே கடந்தபின்
வளர்ந்தது மாபெரும் வல்லமை யுடையதாய்
ஈடுபா டுற்றது எழு**நா ணின்றியே
மிகமிகப் பயங்கர மாய்மேல் வளர்ந்தது

உள**விசை முழுதினால் உறையவே வைத்தது
உறைபனி யோன்விசை உக்கிர மானது
உதித்தது பனிக்கட்(டி) ஒருமுழத் தடிப்பில்
சறுக்கணித் தடியாழ் உறைபனி பொழிந்தது
வந்தது துடுக்கனின் வன்கலம் குளிராய்
அஹ்தியின் கப்பலும் அலைகடல் மீதே.

அஹ்தியைக் குளிர்செய அங்கவன் கருதினன்
விறைக்கவைக்(க) எண்ணினன் மிகுவீ றுடையனை
அவனுடை உகிர்களை அவன்கேட் டேகினன்
அடிமுதல் விரல்வரை அவன்தேடி யேகினன்;
லெ(ம்)மின்கைன னப்போ நெடுஞ்சினங் கொண்டனன்
பாதிப்பு முற்றனன் படுபெருஞ் சினத்தொடே
உறைபனி யோனையே உடன்அனல் இட்டனன்
தள்ளினான் இரும்பினால் தானமை சூளையுள்.

உறைபனி யோனிலே உடன்கரம் வைத்தவன்
கொடுங்கால நிலையினை கொண்டிட லாயினன்
இனிவரும் சொற்களில் இவ்விதம் சொன்னான்
இந்த மொழிகளில் இவ்விதம் மொழிந்தான்:
"உறைபனி யோனே, உயர்வாடை மைந்த!
குளிர்ப்பரு வத்துக் குளிராம் மகனே!
எனது நகங்களுக் கேற்றிடேல் குளிரை
எனது விரல்களை இனிக்கேட் காதே
எனது செவிகளை இனிநீ தொடாதே
எனது சிரத்தை இனிக்கடிக் காதே!
நீகுளி ராக்க நிறையவே யுள்ளன
குளிரூட் டுதற்குக் கோடிகள் உள்ளன
மனிதனின் தோல்தனை மாத்திரம் தவிர்த்து
அன்னைபெற் றெடுத்த அழகுடல் தவிர்த்து:
குளிரூட்(டு) சதுப்பைக் குளிரூட்(டு) நிலத்தை
குளிராம் பாறை குளிரூட் டிடுமேல்
நீர்க்கரை அலரியை நீகுளி ராக்கு
காட்டர சதனின் கணுக்களைக் குளிரச்செய்
மிலாறுவின் பட்டையைமிக்நோ கச்செய்
இளம்ஊ சி(யி)லை எழில்மர மரித்தெடு
ஆனால் வேண்டாம் அருமானுடன் தோல்
ஒருபெண் ஈன்ற உத்தமன் மயிரும்!

இதுவும் போதா தின்னமு மென்றால்
மற்றும் அதிசய மாம்பொருள் குளிர்ச்செய்
கொதிக்கும் பாறைக் கொடுங்கல் குளிர்ச்செய்
கனன்றே எரியும் கற்பா ளங்களை
இரும்பால் ஆன எழிற்குன் றுகளை
உருக்கினா லான உயர்ந்த மலைகளை
வுவோக்சியின் பயங்கர முறுநீர் வீழ்ச்சியை
கொடுமையே தானாய்க் கொள்இமாத் திராவை
நீர்ச்சுழல் தொண்டை நெடுமதன் வாயை
கொடிய பயங்கரம் கொள்நீர்ச் சுழியை!

உனதுவம் சத்தை உரைக்கவா இப்போ
உன்கௌ ரவத்தை உறவெளிப் படுத்தவா
உன்வம் சத்தின் உடைமைகள் அறிவேன்
நீவளர்ந் தவித நிசமெலா மறிவேன்:
உறைபனி யோனின் உதிப்பல ரிச்செடி
வெய்யகா லநிலை மிலாறுவின் மத்தி
வடபால் நிலத்து வசமுள இல்லுள்
இருள்சூழ் வசிப்பிட இயைஆ ழத்தில்
மாசு படிந்ததோர் வன்தந் தைக்கு
பயனில் லாததோர் பதராம் தாய்க்கு.

யார்உறை பனியனை நேர்பால் ஊட்டினர்
பெருங்கொடுங் காற்றைப் பேணி வளர்த்தவர்
அன்னை யிடம்பால் அற்றவந் நேரம்
அன்னை யிடம்முலை இல்லா நிலையில்?

விரியன்பா லூட்டிய துறைபனி யோற்கு
விரியன்பா லூட்ட ஒருபாம் பூட்டுமுண்
முனையில் லாத முலைக்காம் புகளால்
பால்அற நேர்ந்த மார்பகங் களினால்;
அவனை வாடை அங்குதா லாட்ட
அவனைக் குளிர்காற் றாராட் டிற்று
கொடிய அலரி கொள்நீ ரோடையில்
நிரம்பி வழிந்த சதுப்பு நிலங்களில்.

தீய மனத்தவன் ஆனான் சிறுபையல்
அழிக்கும் ஆற்றலை அவன்பெற் றிருந்தான்
இன்னும் அவனுக் கிடுபெய ரொன்றிலை
பயனெது மற்ற பைய னவற்கு;
தீப்பைய னுக்குச் செப்பினர் ஒருபெயர்
உறைபனி யோனென உரைத்தனர் அவனை.

வேலிகள் மீதவன் மோதிச் சென்றனன்
தண்பற் றைகளிடைச் சலசலத் திட்டனன்
கோடையில் சேற்றில் குறைவிலா துலவினன்
தனிப்பெரும் திறந்த சதுப்பு நிலங்களில்
குளிர்கா லத்தில் குதித்தான் தாருவில்
வளர்தேவ தாரு மரங்களில் இரைந்தான்
மோதித் திரிந்தான் மிலாறு மரங்களை
பூர்ச்சம் பொழிலில் புகுந்தே யாடினான்
வழுதுகள் மரங்களைக் குளிரச் செய்தனன்
மேட்டு நிலங்களை மட்டம தாக்கினன்
மரங்களைக் கடித்து மரத்திலை அகற்றினான்
புதர்ச் **செடிகளிலே பூக்களை அழித்தான்
பூர்ச்ச மரங்களில் போக்கினான் பட்டையை
ஊசி யிலைமரத் துறுசு(ள்)ளி வீழ்த்தினான்
இப்போ துநீ எடுத்தனை பேருரு
அழகாய் மிகவும் வளர்ந்தவ னானாய்
எனைக்குளி ராக்கலாம் என்றா கருதினை
என்செவி வீங்கவைத் திடுதற் கெண்ணமா

அடியிருந் தென்கால் அடையும் நினைவா
மேலிருந் தெனது விரல்நகம் கேட்கவா?

ஆனால் நீயெனை அக்குளி ராக்கிடாய்
கொடுமையா யுறையக் கூடிய தாக்கிடாய்
நெருப்பைத் திணிக்கிறேன் நிறையஎன் காலுறை
கொள்ளி களையென் குளிர்கா லணிக்குள்
தணலையென் ஆடை தம்விளிம் புகளுள்
காலணி களின்நூற் கோலநா டாக்கீழ்
உறைபனி யோனெனை உறைய வைத்திடான்
கொடுங்கால நிலையும் குறித்தெனைத் தொடாது.

உன்னைச் சபித்துநான் ஓட்டுகி றேனங்(கு)
வடபால் நிலத்தின் வளர்கோ டிக்கரை;
அந்த இடத்தைநீ அடைந்ததன் பின்னர்
உனது வீட்டைநீ ஓடி யடைந்தபின்
அனலுறும் கலயம் அறக்குளி ராக்கு
அடுப்பிலே எரியும் அந்த அனலையும்
மாப்பசை யில்லுள மங்கையர் கைகளை
பாவையர் மார்புப் பையன் களையும்
செம்மறி யாட்டின் சேர்மடிப் பாலை
குதிரையின் வயிறுறும் குதிரைக் குட்டியை!

அதற்கும் நீபணி யாதே போனால்
அதற்குமப் பாலுனைச் சபித்துத் துரத்துவேன்
அரக்கரின் மத்தியில் இருக்கும் அனலிடை
பிசாசு களின்பெரு நெருப்புச் சூளை(க்கு)
நீயே அங்குனைத் தீயில் திணிப்பாய்
கொல்லுலை தன்னிலே உன்னைக் கொடுப்பாய்
கொல்லன் சுத்தியல் கொண்டடிப் பதற்கு
சம்மட்டி யாலுனைச் சாடியே நொருக்க
சுத்திய லாலுனைத் தொடர்ந்துரத் தறைய
சம்மட்டிக் கொண்டுனைச் சரியாய் நொருக்க!

அதற்கும் நீபணி யாதே போனால்
அதைநீ சற்றும் கவனியா திருந்தால்
இன்னொரு இடத்தை எடுப்பேன் நினைவில்
மற்றொரு புறத்தை மெத்தவும் உணர்வேன்
உன்வாய் தென்திசைக் கோட்டிச் செல்வேன்
கோடைவீட் டுக்குக் கொடியவுன் நாவை
என்றும்நீ அங்கிருந் தெழுந்திட முடியா
என்றுமே விடுதலை ஏற்றிட மாட்டாய்
விரைந்துநான் வந்துனை விடுத்தலே யன்றி
நானே விடுதலை நல்கினா லன்றி."

வாடையின் மைந்தன் வருமுறை பனியோன்
உறுமழி வொன்றினை உணர்ந்தான் தானே
கருணைக் கேட்டுக் கெஞ்சத் தொடங்கினன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"இப்போ செய்யலாம் ஒப்பந்த மொன்றுநாம்

ஒருவரை யொருவர் வருத்துவ திலையென
என்றுமே வருத்துவ தில்லை நாமென
பொன்னில்லாத் திகழும் பொற்பொழு தெல்லாம்.

நான்குளி ரூட்டலாய் நீயுணர்ந் தாயேல்
திரும்பவும் தவறைச் செய்வதை யறிந்தால்
திணிப்பாய் அடுப்பில் திகழும் நெருப்பில்
புதைப்பாய் கனன்று பொங்கும் தீய்க்குள்
கொல்லன் உலையில் கொடுங்கன லுள்ளே
இல்மரி னன்னவன் கொல்லுலைக் குள்ளே
அல்லது கொண்டுசெல் அங்குதெற் கென்வாய்
கோடைவீட் டுக்குக் கொடும்என் நாக்கை
என்றுமே வெளிவரா திருப்பேன் அங்கு
என்றுமே விடுதலை யில்லா திருப்பேன்."

குறும்பன் லெம்மின் கைனன் பின்னர்
விட்டான் குளிருறக் கப்பலை யங்கே
நிற்கப் போர்க்கலம் நிலையாய் அங்கே
தானே புறப்பட் டேகிட லானான்;
இரண்டாம் ஆளாய் இணைந்தான் தியேரா
துடுக்குப் பையனின் சுவட்டின் பின்னால்.

மட்ட மாம்பனிக் கட்டிமேல் நடந்தான்
பனிக்கட்டி மென்மையில் படர்ந்தான் வழுக்கி;
ஒருநாள் நடந்தான் இருநாள் நடந்தான்
மூன்றா வதுநாள் முன்வரு போதில்
**பசிக்கடல் முனையைப் பார்க்க முடிந்தது
இழிந்த கிராமம் எட்டிற் றுவிழி(யில்).

கடல்முனைக் கோட்டையின் இடம்கீழ் வந்தனன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"இந்தக் கோட்டையில் இறைச்சியு முளதோ
மிளிருமித் தோட்டம் மீன்களு முளவோ
இளைத்துப் போன இகல்வீ ரனுக்காய்
களைத்துப் போன கவின்மனி தனுக்காய்?"
அந்தக் கோட்டையில் அமைந்தில திறைச்சி
அந்தத் தோட்டத் தங்குமீ னில்லை.

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்
எழிலார் தூர நெஞ்சினன் இயம்பினன்:
"எரிப்பாய் நெருப்பே, இம்மடக் **கோட்டையை!
எடுப்பாய் நீரே இத்தகு இடத்தைநீ!"
முன்னே றியவன் முனைந்துமுன் சென்றான்
காட்டின் உள்ளே கடுகியே சென்றான்
வசிப்பிட மில்லா வழியினில் சென்றனன்
முன்னறி யாத முனைவழிச் சென்றான்.

குறும்பன் லெம்மின் கைனன் பின்னர்
அவன்தான் அழகிய தூர நெஞ்சினன்
கம்பளி நூலைக் கற்களிற் பிடுங்கினான்

பாறை முனையில் உரோமம் கிழித்தான்
அவற்றில் செய்தனன் அழகிய கையுறை
கைக்கு அணியும் கவினுறை இயற்றினான்
குளிர்ஆ திக்கம் கொள்இடத் துக்கு
உறைபனி யோனின் உயர்கடி தாங்க.

அறியப் பாதையை அவன்மேற் சென்றனன்
சென்றான் தொடர்ந்து தெரிந்திட வழிகள்;
பாதைகள் உள்ளே படர்ந்தன காட்டில்
வழிகள் அவனை வரவேற் றேகின.

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்
எழிலார் தூர நெஞ்சினன் இயம்பினன்:
"ஓ, தியேரா, உயர்என் சோதர!
இப்போது வந்து எங்கேயோ சேர்ந்துளோம்
திங்களும் தினங்களும் திரிந்தலை தற்கு
என்றென்று மந்த அடிவான் நோக்கி."

தியேரா இந்தச் சொற்களில் சொன்னான்
இயம்பினன் அவனே இயம்பினன் இவ்விதம்:
"வஞ்சம் தீர்க்கநாம் வருமிழி பிறப்புகள்
வஞ்சம் தீர்க்கநாம் வறியபாக் கியர்கள்
பெற்றோம் ஒன்றினைப் பெரும் போராக
இருள்நிறை வடபால் இயைநிலத் தாங்கே
எங்கள் சொந்த இழப்பிற் குயிர்களை
எம்மையே என்றும் இழப்பதற் காக
தீமைகள் நிறைந்தவித் தீதா மிடங்களில்
முன்னறி யாதவிம் வன்தெருக் களிலே.
எதுவும் தெரியவே யில்லையெங் களுக்கு
தெரியவு மில்லைநாம் தேர்ந்துணர்ந் ததுமிலை
எத்தெரு அழைத்து எங்களைச் செல்லும்
எவ்வழி செல்லும் எமைவழி காட்டி
அடர்ந்த வனத்தில் இறந்துபோ தற்கு
புதரில் புற்றரையில் போய்வீழ் வதற்கு
அண்டங் காக்கையின் அவ்வில் லங்களில்
காகம் வாழும் கவின்பெரு வெளியில்.

அண்டங்கா கங்கள் அங்கிடம் மாற்றும்
கொடிய பறவைகள் கடிதெமைச் சுமக்கும்
இறைச்சி கிடைக்கும் எல்லாப் புட்கும்
காகங் களுக்குச் சூடாம் குருதி
அண்டங் காக்கையின் அலகை நனைக்க
இழிவாம் எங்கள் இரும்பிணத் திருந்து
எங்கள் எலும்பை இடும்பா றைகளில்
கற்குன் றுக்குக் கடிதுகொண் டேகும்.

இதனை அறிந்திடாள் என்தாய் பேதை
என்னைச் சுமந்தவள் இதனை உணர்ந்திடாள்
அவளது தசையெங் கசைகிற தென்பதை
அவளது குருதியெங் கதிர்ந்தோடு மென்பதை

பெரிதாய்ப் பொருதும் அமரிலா என்பதை
சமமாம் ஓர்பெரும் சமரிலா என்பதை
அல்லது பெருங்கடல் அதனிலா என்பதை
மிகுந்துயர் அலைகளின் மீதிலா என்பதை
அல்லது தாருக்குன் றலையுமா என்பதை
சிறுபற்றை வனங்களில் திரியுமா என்பதை.

என்னுடை அன்னை எதையுமே அறியாள்
அபாக்கிய மானதன் அருமகன் பற்றி
தன்மகன் இறந்ததைத் தாயவள் அறிவாள்
தூயதான் சுமந்தவன் தொலைந்தான் என்பதை;
என்றன் அன்னை இவ்விதம் அழுவாள்
புகழ்ந்தெனைப் பெற்றவள் புலம்புவாள் இவ்விதம்:
'பாக்கியம் அற்றஎன் பாலகன் அங்கே
அறியாப் பாவிஎன் ஆத(ா)ரம் அங்கே
துவோனியின் விளைவுறும் தொன்னிலம் தன்னில்
படர்கல் லறையிடம் பரவிய மண்ணில்;
இப்போ தென்றன் எழில்மகன் விடுகிறான்
பாக்கிய மற்றஎன் பாலகன் அவனே
உயர்தன் குறுக்குவில் ஓய விடுகிறான்
கடிவலு வில்லினைக் காய விடுகிறான்
பறவைகள் நன்கே பாங்குறக் கொழுக்க
காட்டின் கோழிகள் கனகுதூ கலம்பெற
சிறப்பாய்க் கரடிகள் செழிப்புடன் வாழ
வயல்களில் கலைமான் இனிதலைந் துலவ.' "

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்
எழிலார் தூர நெஞ்சினன் இயம்பினன்:
"ஆமாம், அதுசரி, அன்னை ஏழையள்,
ஆமப்பா, பாவியே, அன்றெனைச் சுமந்தாய்!
ஒருவைப்பின் கோழிகள் உவந்துநீ வளர்ந்தாய்
அன்னக் கணமென் றனைத்தையும் வளர்த்தாய்
செறிகாற் றடித்தது சிதறச் செய்தது
கலையச் செய்தது கடும்பேய் வந்தது
ஒன்று அங்கே இன்னொன் றிங்கே
மூன்றாவ தெங்கோ முன்னே போனது.

இன்றந் நாட்களை எண்ணிப் பார்க்கிறேன்
சிறந்தவப் பொழுதைச் சிந்தனைச் செய்கிறேன்
மலர்களைப் போலநாம் உலாவிய நாட்களை
உரியநம் நிலத்து உயரிய பழம்போல்;
எமதுதோற் றங்களை அனைவரும் பார்த்தனர்
உற்றுப் பார்த்தனர் உருவம் எமதை
அதுஇந் நாட்கள்போல் அறவே இல்லை
தீமைகள் நிறைந்தஇத் தீயநாட் களிலே;
காற்றொன் றேயெமக் கேற்றநட் பாயுள
தொன்னாட் கண்டதில் சூரியன் ஒன்றுதான்
முகில்கூட இப்போ மூடி விலகிட
மழையும் மறைந்து மறைந்து செல்கிறது.
எனக்கெதும் அக்கறை யிலையே இதனால்

இனிப்பெருந் துயர்ப்பட எதுவுமே இல்லை
கன்னிப் பெண்கள் களிப்புடன் வாழ்ந்தால்
மகிழ்வுடன் பின்னல் தலையினர் உலவினால்
நங்கைய ரனைவரும் நகைப்புட னிருந்தால்
வதுவை மகளிர் மனமகிழ் வடைந்தால்
ஏக்கத் தாலெழும் இன்னலை விடுத்து
தொல்லைகள் தந்திடும் துயரம் ஒழித்து.

எமையினும் மயக்கிலர் இம்மாந் திரீகரே
பார்ப்பவர் பார்வைமாந் திரீகரின் மயக்கலும்,
இந்த வழிகளில் இறந்தொழி தற்கு
பயணப் பாதையில் புதைந்துபோ தற்கு
இளம்பராய த்திலேயே உறக்கம் கொளற்கு
இரத்தச் செழிப்புடன் இறந்துவீழ் தற்கு.

மயக்குவோன் எந்தமாந் திரீகனே யாயினும்
பார்ப்பவன் எத்தகு பார்வையோன் ஆயினும்
அவன் செயல் அவனுடை அகத்திருக் கட்டும்
அவன்வசிப் பிடத்தில் அடிகோ லட்டும்;
அவர்களை யேமயக் கத்தில்ஆழ்த் தட்டும்
பாடட்டும் அவர்கள்தம் பாலர்கள் மீதே
அவர்கள்தம் இனத்தையே அழித்தொழிக் கட்டும்
தம்முற வையவர் தாம்சபிக் கட்டும்!

எந்தைமுன் என்றுமே இதுபுரிந் தாரிலை
உயர்ந்த சீர்ப்பெற்றார் ஒருக்கா லும்மிலை
மாந்திரீகன் மனதை மதித்தது மில்லை
லாப்பியற் கீந்ததும் இல்லை வெகுமதி;
இவ்வா றுரைத்தார் என்னுடைத் தந்தை
நானுமவ் விதமே நவில்கிறேன் இங்கு:
நிலைபெரும் கர்த்தரே நீரெனைக் காப்பீர்
எழிலார் தெய்வமே எனைக்காப் பாற்றுவீர்
உதவிக்கு வாரும் உமதின் கரங்களால்
நீர்பெற் றிருக்கும் மேதகு சக்தியால்
மானுடர் மனத்திலே வருவிருப் பிருந்து
எழும்முது மாதரின் எண்ணத் திருந்து
தாடிசேர் வாய்களின் தகுமொழி யிருந்து
தாடியற் றோர்கள் தம்சொல் லிருந்து!
என்றும் எமக்கே இருப்பீர் உறுதுணை
ஆகுவீர் நிலைபெறும் பாதுகா வலராய்
பிரிந்துபோ காதெப் பிள்ளையு மிருக்க
அன்னையீன் மதலை அழிந்திடா திருக்க
ஆண்டவன் படைத்த அருநெறி யிருந்து
இறைவனார் ஈந்த இவ்வழி யிருந்து!"

குறும்பன் லெம்மின் கைனன் பின்னர்
அவன்தான் அழகிய தூர நெஞ்சினன்
கவனம் அனைத்தையும் கனபரி யாக்கினான்
கவலை அனைத்தையும் கருமா வாக்கினான்
தீயநாட் களினால் சேர்ந்தது தலைக்கணி

இரகசிய வெறுப்பினால் இயைந்தது ஆசனம்;
அதன்நல் முதுகில் அவன்பாய்ந் தேறினன்
நற்சுடர் நுதலுடை மெச்சிடும் சடைமேல்
பயணம் தனது பாதையில் தொடங்கினன்
சேர்தன் தோழன் தியேரா தன்னுடன்
கடற்கரை தனிலே கலகலத் தோடினன்
சென்றனன் தொடர்ந்து திகழ்மணற் றரைமேல்
அன்பான அன்னையின் அருகே மீண்டும்
சீர்மிகும் பெற்றோர் திருமுகம் நோக்கி.

என்தூர நெஞ்சனை அங்கே விடுகிறேன்
எனதுஇக் கதையி லிருந்தே சிலகால்
தியேரா வைவழிச் செல்லவே விடுகிறேன்
அவன்இல் நோக்கி அவன்பய ணிக்க
இந்தக் கதையை இப்போ மாற்றுவேன்
மற்றொரு பாதையில் வழிச்செல விடுகிறேன்.

கலேவலா
பாடல் 31- குலப் பகையும் அடிமை வாழ்வும்

அடிகள் 1-82 : உந்தமோ தனது சகோதரன் கலர்வோ என்பவனுக்கு எதிராகப் போர்த்தொடுத்து அவனையும் அவனுடைய படையையும் அழிக்கிறான். கலர்வோவின் இனத்தில் கர்ப்பவதியான ஒரு பெண் மட்டுமே உயிர்வாழ விடப்படுகிறாள். அழைத்துச் செல்லப்படும் அந்தப் பெண்ணுக்கு உந்தமோவின் தோட்டத்தில் குல்லர்வோ என்ற மகன் பிறக்கிறான்.

அடிகள் 83-202 : குல்லர்வோ தொட்டிலில் இருக்கும் பொழுதே உந்தமோவைப் பழிக்குப்பழி வாங்கத் தீர்மானிக்கிறான். உந்தமோ குல்லர்மோவைக் கொல்லப் பலவழிகளில் முயன்றும் அம்முயற்சிகள் பலனளிக்கவில்லை.

அடிகள் 203-374 : குல்லர்வோ வளர்ந்ததும் உந்தமோவுக்குப் பலவழிகளிலும் தொல்லை தருகிறான். அலுத்துப் போன உந்தமோ குல்லர்வோவை இலமரினனுக்கு அடிமையாக விற்று விடுகிறான்.

வளர்த்தாள் கோழி வளர்குஞ் சொருதாய்
ஒருபெருங் கூட்டம் உயரன் னங்களை
கோழிக் குஞ்சுகள் வேலியில் வைத்தாள்
அன்னங் களையெடுத்(து) **ஆறு கொணர்ந்தாள்;
அங்கொரு கழுகுவந் தவற்றைப் பிடித்தது
கருடன் வந்து சிதறிடச் செய்தது
கவின்சிறைப் பறவை கலையச் செய்தது:
கடத்திய தொன்றைக் *கர்யா லாவுக்(கு)
ஒன்றைக் கொணர்ந்தது ரஷ்ய மண்ணிடை
வீட்டொடு மூன்றா வதையது விட்டது.

ரஷ்ய நாட்டுக் குடன்கொடு சென்றது
வர்த்தக மனிதனாய் வளர்ந்தது அங்கே;
கர்யலா வுக்குக் கடத்திச் சென்றது
*கலர்வோ வாக கவினுற வளர்ந்தது;
வீட்டோ டிருக்க விட்டுச் சென்றது
*உந்தமோ வாக உயர்ந்து நிமிர்ந்தது
தினமெலாம் பிதாவின் தீயவன் அவனே
அன்னையின் உளத்தை அவனே உடைப்பவன்.

உந்தமோ விரித்து உயர்வலை பரப்பினன்
மீன்களைக் கலர்வோ விரும்பிப் பிடிப்பிடம்;
வந்தவன் கலர்வோ வலைகளைக் கண்டனன்
மீன்களைத் தன்பை மிகச்சேர்த் திட்டனன்;
வீரமும் வலிமையும் மிகுந்தவன் உந்தமோ
அவன்சினங் கொண்டனன் ஆத்திரப் பட்டனன்
விரல்களி லிருந்தே விறற்போர் தொடங்கினன்
உள்ளங்கை அருகினால் உறுபோர் கேட்டனன்
மீன்குட லால்ஒரு மிகுபோர்க் கெழுந்தனன்
பொரித்தநன் னீர்மீனால் பெருத்தபோ ரொன்றுக்(கு).

செய்தனர் கலகம் செருத்துப் பார்த்தனர்
ஒருவரை ஒருவர் உறவென் றிலராம்

எவன்மற் றவனை ஓங்கி அடித்தானோ
அவனே கொடுத்ததை அதன்பதில் பெற்றனன்.

இதற்குப் பின்னர் இன்னொரு வேளை
இரண்டு மூன்றுநாள் ஏகிமுடிந்த பின்
கொஞ்சம் கலர்வோ **கூலம் விதைத்தான்
உந்தமோ வாழ்ந்த ஓரில் லின்பின்.

உந்தமோ தோட்டத் துரம்பெறும் செம்மறி
கலர்வோ தானியக் கதிரைத் தின்றது
கலர்வோ பயங்கரக் கடிநாய் அப்போ
உந்தமோ செம்மறி உடலம் கிழித்தது.

உந்தமோ பின்பய முறுத்திட லாயினன்
கலர்வோஓர் வயிற்றில் கனிந்த சோதரனை
சொன்னான் கலர்வோ சுற்றம் கொல்வதாய்
அடிப்பதாய்ப் பெரிதாய் அடிப்பதாய்ச் சிறிதாய்
அனைத்து இனத்தையும் அழிப்பதாய் மாய்ப்பதாய்
இல்களைச் சாம்பராய் எரித்து முடிப்பதாய்.

மனிதரின் பட்டியில் வாள்களைச் செருகினன்
ஆயுதம் தந்தனன் அவன்மற வோர்கரம்
சிறுவர்கள் பட்டியில் சேர்ந்தகுத் தூசிகள்
அழகிய தோள்களில் அரிபுல் வாள்களும்;
பெரிதிலும் பெரிதாம் பெரும்போர்க் கேகினர்
கூடிப் பிறந்தவர் குறையில்சோ தரனுடன்.

கலர்வோ(வின்) மருமகள் கவினுறு மொருத்தி
அமர்ந்து சாரளத் தருகினில் இருந்தனள்
சாரளத் தூடாய்த் தான்வெளிப் பார்த்தனள்
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"அங்கே தடித்த அதுவென்ன புகையாய்
அல்லது நிறத்தில் அதுகரு முகிலோ
தொலைவிலே தெரியும் தொடர்வயல் வெளிகளில்
புதிய ஒழுங்கையின் புறக்கடை முடிவினில்?"

ஆயினும் அதொன்றும் புகாரான புகாரல்ல
அல்லது தடிப்புறும் புகையுமே அல்லவாம்:
அங்ஙனம் தெரிந்தனர் உந்தமோ வீரர்கள்
புறப்பட்டு வந்தனர் போர்பெரி துக்கென.

வந்தனர் உந்தமோ என்பவன் வீரர்கள்
வாள்பட்டி யதிலுறும் மனிதர்கள் சேர்ந்தனர்
கலர்வோ(வின்) கூட்டத்தைக் கடிதுகீழ் வீழ்த்தினர்
பெரிதான இனமதைப் பெரிதுகொன் றழித்தனர்
இல்களைச் சாம்பராய் எரித்தவர் முடித்தனர்
மாற்றியே அமைத்தனர் வரவெ(ற்)று நிலமதாய்.

கலர்வோவின் ஒருத்தியே காரிகை மிஞ்சினாள்
அவளுக்கு வயிறதோ அதிகனத் திருந்தது

உந்தமோ என்பவன் உறுவீர ரப்போ(து)
தம்முடன் வீட்டிடைத் தையலைக் கொணர்ந்தனர்
சிறியதாம் ஓர்அறை செய்யவும் சுத்தமாய்
தரையினைப் பெருக்கியே தான்கூட்டி வைக்கவும்.

சிறுகாலம் மெதுவாகச் சென்றிட லானது
சிறியதோர் பையனாய் ஒருசேயும் பிறந்தது
மகிழ்ச்சியே இல்லாத மங்கையவ் வன்னைக்கு;
பெயரென்ன அவனுக்குப் பெரிதாகச் சூட்டலாம்?
குல்லர்வோ என்றன்னை குழைவாக அழைத்தனள்
ஆனாலும் உந்தமோ அமர்வீரன் என்றனன்.

சிறியஅப் பையனைச் சீராய்க் கிடத்தினர்
படுக்க அனாதைப் பிள்ளையைப் பண்ணினர்
ஆராட் டுதற்காய் அங்கோர் அமளியில்
தொட்டில் ஒன்றில்தா லாட்டுதற் காக.

ஆடும் தொட்டிலில் ஆடிற் றுச்சேய்
குழந்தை ஆடிற்று குழலும் அசைந்தது
ஆடிற் றொருநாள் ஆடிற் றிருநாள்
ஆடிற்று மூன்றாம் நாளும் விரைவாய்
அதன்பின் பையன் உதைக்கத் தொடங்கினன்
உதைக்கத் தொடங்கினன் உணர்வும் பெற்றனன்
ஆடும் பட்டியை அவன்கிழித் திட்டனன்
அகற்றி எறிந்தனன் படுக்கைத் துணிகளை
**மரத்துத் தொட்டிலை நொருக்கிப் போட்டனன்
உடுத்த துணிகளை உதறிக் கிழித்தனன்.

நன்மையாம் ஒன்றின் நற்குறி தெரிந்தது
வல்லமை மிக்கவன் வருவது தெரிந்தது;
உந்தமோ நாட்டினர் நன்கெதிர் பார்த்தனர்
இந்தப் பையன் இதிலிருந் துயர்வதை
நல்நெஞ் சுடையனாய் நல்லதோர் மனிதனாய்,
சரியான வீரனின் தன்மை யுளோனாய்
நூறு அடிமைகட்(கு) ஈடு கொடுப்பனாய்
பேரா யிரவரின் பெறுமதி மிக்கனாய்.

வளர்ந்தான் இரண்டு மாதம் மூன்று
வளர்ந்தான் மூன்றாம் மாதம் வரையும்
வளர்ந்தான் முழங்கால் வரையும் உயரம்
அதன்பின் தனக்குள் அவன்சிந் தித்தான்:
"நானும் பெரிதாய் நனிவளர் நேரம்
என்னுடல் உறுதியாய் இயைந்திடும் போதில்
தந்தையின் அடிக்குத் தகுபழி வாங்குவேன்
தாய்விழி நீர்க்கும் தகுவிலை கொடுப்பேன்."

கேட்கவும் நேர்ந்ததிக் கிளர்மொழி உந்தமோ
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"இதனால் என்றன் இனம்அழி வாகும்
இதன்பின் கலர்வோ இனம் உருவாகும்!"

அதன்பின் வீரர் அனைவரும் எண்ணினர்
வயோதிப மாதரும் மனதிலே நினைத்தனர்
பையனின் முடிவை எவ்விதம் தேடலாம்
அவனது மடிவை அடைதல் எவ்விதம்.

அவனைப் போட்டனர் அங்கொரு பேழையில்
அவனையோர் பீப்பா அதிலே திணித்தனர்
எடுத்துநீ ருள்ள இடத்துக் கேகினர்
அலைகளின் உள்ளே ஆழத் திட்டனர்.

பார்ப்பதற் காய்ப்பின் படர்ந்தனர் எழுந்து
இரண்டு மூன்று இரவுகள் கடந்தபின்
புனலிலே மூழ்கிப் போனனா மாய்ந்து
இறந்து பேழையுள் ஏகின னாஎன.

நீரிலாப் பையன் நிசமாய் மூழ்கிலன்
இறந்து பேழையுள் ஏகவு மில்லை
இருந்தனன் பேழையுள் இருந்தே வெளியிலே
அலைகளின் மேலே அமர்ந்தவன் இருந்தனன்
செப்புக்கோ லொன்று திகழ்ந்தது கரத்தில்
பட்டுநூல் இருந்ததப் பையனின் கோல்முனை
தூண்டிலில் கடல்மீன் தொகைப்பிடித் திருந்தனன்
ஆழியின் நீரையும் அளந்துகொண் டிருந்தனன்:
ஆழியில் நீருமோ அதிகமாய் இருந்தது
இரண்டு அகப்பையில் இருந்தது நீரும்
அதன்மேற் சரியாய் அளந்து பார்த்திடில்
மூன்றாம் அகப்பையில் மூளும்ஓர் பாகம்.

உந்தமோ என்பவன் உன்னினான் இப்படி:
"இந்தப் பையனை எங்கே போடலாம்
இவனைப் போட்டு எங்கே அழிக்கலாம்
மரணம் எப்படி கொணரலாம் இவற்கு?"

அழைத்துச் சேர்க்க அடிமைகட் கியம்பினான்
மிலாறுவை மற்றும் மிகுவைர மரங்களை
நூறு கிளையுறும் ஊசி(யி)லைத் தாருவை
தமக்குத் தெரிந்த **தார்வடி மரங்களை
சேர்த்தெலாம் போட்டொரு சிறுவனை எரிக்க
குல்லர்வோ என்றஅக் குறுபைய னொழிக்க.

ஒன்றாய்ச் சேர்ந்தனர் ஒன்றாய்ச் சேர்த்தனர்
மிலாறுவை மற்றும் மிகுவைர மரங்களை
நூறு கிளையுறும் ஊசி(யி)லைத் தாருவை
தமக்குத் தெரிந்திடும் தார்வடி மரங்களை
ஆயிரம் வண்டி மிலாறுவின் பட்டைகள்
நூறு கையளவு நுவலுமின் **னொருமரம்
நெருப்பையிம் மரங்களில் நேராய்க் கொழுத்தினர்
அடுக்கி மரங்களை அனலதை மூட்டினர்
எறிந்தனர் பையனை இழுத்துவந் ததன்மேல்

எரிந்துகொண் டிருந்த இருங்கனல் நடுவே.

எரிந்தது ஒருநாள் அதன்பின் இருநாள்
மூன்றாம் நாளும் முழுதா யெரிந்தது
பார்வை இடற்கு நேர்அவர் ஏகினர்
முழங்கால் சாம்பலில் முன்பையன் நின்றனன்
முழங்கைத் துகள்வரை முன்பையன் நின்றனன்
கரிவாரி ஒன்றினைக் கையில்வைத் திருந்தனன்
அதனால் நெருப்பை அவனே கிளறினன்
செந்தணல் ஒன்றாய்ச் சேர்த்துக்கொண் டிருந்தனன்
உறும்தலை மயிரும் ஒன்றிழக் காமல்
கேசமொன் றேனும் கீழ்க்குழம் பாமல்.

உந்தமோ என்பவன் உரைத்தான் சினந்தான்:
"இந்தப் பையனை எங்கே போடலாம்
இவனைப் போட்டு எங்கே அழிக்கலாம்
மரணம் இவற்கு கொணரல் எவ்விதம்?"
பையனைத் தூக்கில் பருமரத் தேற்றினர்
கட்டிச் சிந்துர மரத்தில் தூக்கினர்.

இரண்டு மூன்று இரவுகள் கழிந்தன
அளவதே பகலும் அகன்றே போயின
உந்தமோ என்பவன் உன்னினான் இவ்விதம்:
"இதுவே தருணம் ஏகியே பார்க்க
வீழ்ந்தனா குல்லர்வோ விழற்பையன் என்பதை
மடிந்தனா பையன் மரத்திலே என்பதை."

அடிமை ஒன்றை அவன்பார்க்க ஏவினன்
திரும்ப அடிமை சேர்த்ததிம் மொழியை:
"விழற்பையன் குல்லர்வோ வீழவு மில்லை
மரத்திலே பையன் மடியவும் இல்லை
பையன் மரத்திலே படங்கள் வரைகிறான்
கையில்வைத் திருக்கும் கவின்சிறு முள்ளால்
மரமெலாம் படங்கள் நிறைந்தே யுள்ளன
சிந்தூரம் முழுதிலும் சித்திர முள்ளன
இப்புறம் மனிதர்கள் அப்புறம் வாள்கள்
இன்னொரு பக்கம் ஈட்டிகள் இருந்தன."

உந்தமோ வுக்கு உதவவே றுளதெது
இழிந்தஇப் பையனின் அலுவல்கா ரணமாய்?
அழிவுஎவ் வளவை அவன்கொணர்ந் தாலும்
எவ்வள விறப்பை ஏற்படுத் தினுமவன்
அழிவின் வாயலில் அவன்வீழ் வதாயிலை
எவ்வித மாயினும் இறப்பதா யவனிலை.

கடைசியில் அவனும் களைத்துப் போயினன்
அவற்கேற் படுத்திய அழிவின் வகையிலே,
குல்லர்வோ என்ப(ா)னை வளர்க்கவே நினைத்தான்
சொந்தமைந் தனைப்போல் தொடர்ந்தே அடிமையை.

உந்தமோ இவ்விதம் உரைத்தனன் வார்த்தையில்
உரைத்தான் அவனே உரைத்தான் இவ்விதம்:
"ஒழுங்காய் வாழ உன்னால் முடிந்திடில்
நன்றாயெப் போதும் நடந்து வாழ்ந்திடில்
இந்த வீட்டில்நீ தங்கிவாழ்ந் திடலாம்
அடிமையின் வேலையை அத்துடன் செய்யலாம்;
சம்பளம் பின்னர்தீர் மானிக் கப்படும்
ஊதியம் வேலைக்(கு) ஒழுங்குசெய் யப்படும்
நின்றன் இடைக்கோர் நேரெழிற் பட்டியும்
அல்லது காதிலே அறையொன்று(ம்) கிடைத்திடும்."

வளர்ந்து குல்லர்வோ வந்ததும் பின்னர்
ஒருசாண் அளவு உடம்பு பருத்ததும்
அனுப்பப் பட்டனன் அவன்வே லைக்கு
ஏவப் பட்டனன் இயல்தொழில் பார்க்க
சிறியதோர் குழந்தையைத் தினம்கவ னித்தலும்
தொட்டிலைச் சிறுவிரல் தொட்டாட் டிடலும்:
"குழந்தையைக் கவனித்(துக்) கொள்வைநீ நன்றாய்
உணவூட்(டு) குழந்தைக்(கு) உணவுட்கொள் நீயும்
அலசுவாய் துண்டு துணிகளை அருவியில்
கழுவுவாய் குழந்தையின் களைந்தசிற் றுடைகளை!"

ஒருநாள் குழந்தையை இருநாள் பார்த்தான்
கையை உடைத்தான் கண்களைத் தோண்டினான்
அடுத்து வந்த அம்மூன் றாம்நாள்
கொடுநோய்ப் பட்டுக் குழந்தை இறந்தது
அடித்தே(கத்) துணிகளை அருவியில் போட்டான்
கொழுந்தீ மூட்டிக் கொழுத்தினான் தொட்டிலை.

உந்தமோ என்பான் உன்னினான் இப்படி:
"இப்பையன் சரிவர மாட்டான் இங்கே
சிறியதோர் குழந்தையைத் தினம் கவனித்தலும்
தொட்டிலைச் சிறுவிரல் தொட்டாட் டிடலும்;
அறியேன் இவனையெங் கனுப்பலாம் என்பதை
எத்தகு வேலை ஈயலாம் என்பதை
அனுப்பவா காட்டினை அழித்திட வெட்டி?"
அனுப்பினான் காட்டினை அழித்திட வெட்டி.

குல்லர்வோ என்பான் கலர்வோ மைந்தன்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"நானொரு மனிதன் ஆகியே விடுவேன்
கோடரி கையிற் கொண்டஇந் நேரம்
எவளவோ சிறப்பாய் இருக்கிறேன் பார்க்க
மேன்மையா யிருக்கிறேன் மிகமுன் னரிலும்:
ஐவருக் குச்சம மானசீர் மனிதன்நான்
அறுவரைப் போலவே அதிசய வீரன்நான்."

சென்றனன் கொல்லன் செய்வே லைத்தலம்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"ஓ, நற் கொல்லஎன் நேசச் சோதர!

கண்டக் கோடரி ஒன்றினை யடிப்பாய்
ஒருமனி தனுக்கு உகந்தகோ டரிசெய்
தொழிலாளி தனக்கு தொல்லிரும் படிப்பாய்!
அடவியை வெட்டி அழிக்கப் போகிறேன்
மிலாறு வலியதை வீழ்த்தப் போகிறேன்."

தேவை யானதைச் செய்தனன் கொல்லன்
ஒருகோ டரியை விரைவா யடித்தனன்
கூறுமா னிடர்க்காம் கோடரி வந்தது
இகல்தொழி லாளிக் கிரும்பு கிடைத்தது.

குல்லர்வோ என்பான் கலர்வோ மைந்தன்
பின்னர்தன் கோடரி பெரிதும் தீட்டினன்
தனதுகோ டரியைப் பகலெலாம் தீட்டினன்
அதற்குக் கைப்பிடி அமைத்தான் மாலையில்.

காட்டைப் பின்னர் வெட்டிடச் சென்றான்
உயர்ந்து அடர்ந்த ஓரட விக்குள்
மரங்கள் நிறைந்து வளர்ந்தகாட் டுக்குள்
நெருக்கமாய் மரங்கள் நின்றவ னத்துள்.

அக்கோ டரியால் அடித்தனன் மரத்தை
அவற்றை உருக்கின் அலகால் வெட்டினன்
ஓரடி யினிலே பலமரம் வீழ்ந்தன
பாதி அறையிலே பழுதுள சரிந்தன.

வேகமாய் ஐந்து வியன்மரம் வீழ்த்தினன்
எல்லாம் சேர்ந்து எட்டா யாகின
பின்வரும் சொற்களில் பின்அவன் சொன்னான்:
உரைத்தான் அவனே உரைத்தான் இவ்விதம்:
"விறற்பேய் வந்திவ் வேலைசெய் யட்டும்
அலகைஇம் மரங்களை அடித்துவீழ்த் தட்டும்."

மரக்குற்றி முனையில் வந்துபாய்ந் தேறினன்
கனபலத் துரக்கக் கத்திக் கூவினன்
சீழ்க்கை அடித்தனன் கீச்சொலி செய்தனன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"அழித்தலும் வெட்டலும் அவையிங் குறட்டும்
வெட்டி வலிய மிலாறு வீழ்த் தட்டும்
என்தொனி கேட்கும் இடத்தின் தொலைவரை
எனது சீழ்க்கை **இங்குருள் தொலைவரை!
நாற்றுச் செடிகள் நனிஎழல் வேண்டாம்
ஒளிர்புல் தாள்கள் உயர்தலும் வேண்டாம்
என்றுமே இந்த இருநிலக் கண்ணே
பொன்னிலாத் திகழும் பொற்பொழு தெல்லாம்
கலர்வோ மைந்தன் வெட்டிய காட்டில்
சிறந்தமா னுடனின் சீர்சால் புவியில்!

வியன்நிலத் திருந்தொரு விதை வரவிருந்தால்
விரிந்தொரு சிறுபயிர் வெளிவர விருந்தால்

தாளொன்று தாளாய்த் தானே முளைப்பதேல்
தண்டொன்று தண்டாய்த் தானே வெளிவரில்
வெளிவர வேண்டாம் நளிர்வகைத் தாளெதும்
அல்லது கதிர்தரும் அழகிய தண்டெதும்."

உந்தமோ வீரமும் வலிமையு முடையவன்
சென்றனன் அவற்றைச் சீருறப் பார்க்க
கலர்வோ(வின்) மைந்தனின் காடு அழித்தலை
புதிய அடிமையின் புகுவனம் வெட்டலை:
அழித்த காடு அழித்தலா யில்லை
விறல்யுவன் ஒருவனின் வெட்டலாய் இல்லை.

உந்தமோ பின்னர் சிந்தனை செய்தான்:
"இதற்கு அவனே ஏற்றவன் அல்லன்
நல்ல மரங்களை நாசம் செய்தனன்
தரமுறு மரங்களை தானரிந் தழித்தனன்.
எங்கே அனுப்பலாம் இவனையென்(று) அறியேன்
எந்தவே லைக்கு எவ்விடம் அனுப்பலாம்
வேலிகள் கட்ட விரைந்தே அனுப்பவா?"
வேலிகள் கட்ட விரைந்தே அனுப்பினன்.

குல்லர்வோ என்பான் கலர்வோ மைந்தன்
வேலிகள் கட்டும் வேலையைத் தொடங்கினன்
நிறுத்தினன் வேலியில் பெருந்தேவ **தாருவை
அவற்றைத் தூண்களாய் அமைத்தனன் வேலி
அப்படி யேகொணர்ந் தடவித் **தாருவை
இடை மரமாக இறுகக் கட்டினன்
முறுக்கிய கொடியால் இறுக்கி வரிந்தனன்
முழுதுயர் **பேரியில் முறுக்கிய கொடியால்
வேலியைக் கட்டினன் வாயிலில் லாமல்
வேலையை முடித்தனன் வாயிலில் லாமல்.

பின்வரும் சொற்களில் பின்அவன் சொன்னான்:
இயம்பினன் அவனே இயம்பினன் இவ்விதம்:
"ஒருவான் பறவையை **ஒப்பஅல் லாமல்
சிறகுகள் இரண்டால் பறப்பதல் லாமல்
கடிதெவ ரும்மிதைக் கடத்தல்சா லாது
கல்லர்வோ மைந்தன் கட்டிய வேலியை!"

உந்தமோ வுக்கு வந்ததோர் தருணம்
அவ்வழி வந்து அதைப்பார்த் திடற்கு
கலர்வோ மைந்தன் கட்டிய வேலியை
அமரின் அடிமை அமைத்தஅவ் வேலியை.

வேலியைக் கண்டனன் வாயில்இல் லாமல்
வெளியோ வாயிலோ புழையோ இல்லை
அன்னைமண் மீது அமைத்தஅவ் வேலி
தொடர்வான் முகிலைத் தொட்டே நின்றது.

உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:

"இவன்இவ் வேலைக் கேற்றவன் அல்லன்
வாயில்இல் லாமல் வேலியை யமைத்தான்
நுழைவா(யில்) இன்றி அமைத்தனன் வேலி
உயர்வான் வரையும் உயர்த்திக் கட்டினன்
விண்முகி லுள்ளே கொண்டே சென்றனன்
இதனைக் கடக்க என்னால் முடியா
உட்புகத் துவாரம் ஒன்றுமே இல்லை
எங்கே அனுப்பலாம் இவனையென் றறியேன்
எந்தவே லைக்கு எவ்விடம் அனுப்பலாம்
அரிதா னியக்**கதிர் அடிக்க அனுப்பவா?"
அரிதா னியக்கதிர் அடிக்க அனுப்பினன்.

குல்லர்வோ என்பான் கலர்வோ மைந்தன்
அரிதா னியக்கதிர் அடித்தான் இப்போ
பதராம் வரைக்கும் கதிரை அடித்தான்
அடித்தனன் வைக்கோல் அதுதுக ளாம்வரை
வந்தன னப்பா **அந்தஆ றெசமான்
தானே சென்று சரியெனப் பார்த்திட
கலர்வோ மைந்தன் கதிர்கள் அடித்ததை
குல்லர்வோ என்பவன் குவிசூ டடித்ததை:
பதராய்க் கிடந்தன பலதா னியமும்
துகளாய் இருந்தன தோன்றுவைக் கோலெலாம்.

உந்தமோ என்பவன் உற்றனன் ஆத்திரம்:
"வேலையாள் இவனிடம் விளையும் பயனிலை
எவ்வித வேலையை இங்களித் தாலும்நான்
படுமூ டத்தனம் பயனறச் செய்கிறான்;
ரஷ்ஷியா நாட்டுக் கோட்டவா இவனை
அல்லது விற்கவா அயற்கரே லியாபோய்
இல்மரி னன்எனும் கொல்லன் தனக்கு
கொல்லன்சம் மட்டிக் கொடுதொழில் செய்ய?"

அவ்விதம் விற்றனன் அவன்கலர் வோமகன்
விற்பனை செய்தனன் விரிகரே லியாவிலே
இல்மரி னன்எனும் கொல்லன் தனக்கே
தரமுறு கைவினைத் தனிக்கலை ஞற்கே.

எதனை அவனுக் கீந்தனன் கொல்லன்?
அவனிடம் கொல்லன் அளித்ததே ராளம்
ஓட்டைச் சட்டிகள் உருப்படி இரண்டு
பாதியாம் கொளுவிகள் பகரஓர் மூன்று
தேய்ந்த அரிவாள் சேர்ந்தஓர் ஐந்து
காலம் கடந்த வாரிகள் ஆறு
பெறுமதி யற்றஓர் பேய்மனி தற்கு
எதுவுமே பயனிலா இளம்அடி மைக்கு.

கலேவலா

பாடல் -32 குல்லர்வோவும் இல்மரினனின் மனைவியும்

அடிகள் 1-32 : இல்மரினனின் மனைவி கால்நடைகளை மேய்ப்பவனாக வேலை பார்க்கும் குல்லர்வோவுக்கு உள்ளே கல்வைத்துச் சுட்ட உணவைக் கொடுக்கிறாள்.

அடிகள் 33-548 : மேய்ச்சல் நிலத்தில் கால்நடைகளைக் கரடிகளிடமிருந்து பாதுகாப்பதற்கான மந்திர வேலைகள் பிராத்தனைகளை வழக்கம் போல முடித்த பின்னர் இல்மரினனின் மனைவி அவற்றை வெளியே அனுப்புகிறாள்.

குல்லர்வோ என்பான் கலர்வோ மைந்தன்
முழுநீல் காலுறை முதியவன் பிள்ளை
மஞ்சள் கேசமும் வனப்பும் வாய்ந்தவன்
கவின்தரத் தோலில் காலணி கொண்டவன்
கொல்லனின் இல்போய்க் கூடிய வுடனே
வேலைதான் கேட்டான் மாலையாம் வேளை
தலைவனை மாலைத் தருணம் கேட்டனன்
தலைவனை காலைத் தருணம் கேட்டனன்:
"இங்குள தொழில்கட் கிடும்பெயர் புகல்வீர்
ஒவ்வொரு தொழிற்கும் ஒவ்வொரு பெயராய்
எந்த வேலையை இப்போ செய்யலாம்
இங்கெனக் கென்று எத்தொழில் உளது?"

கொல்லன் அவன்*இல் மரினனின் தலைவி
அப்போ சிந்தனை அவளும் செய்தாள்
புத்தடி மைக்கு எத்தொழில் தரலாம்
பணத்துக் கெடுத்தோன் தனக்கெவ் வேலை
ஆக்கினள் கால்நடை காப்பவன் தாதனை
படர்பெரு மந்தையைப் பார்ப்பவன் ஆக்கினள்.

கொடியவள் அந்தக் கொல்லனின் துணைவி
இளிக்கும் பல்லுள இகல்கொ(ல்)லன் மனைவி
சுட்டனள் இடையனுக் கென்றொரு ரொட்டி
அகல்பெருங் கனமாய் அடையொன் றமைத்தாள்
மேற்படைத் தானியம் கீழ்ப்படைத் **தானியம்
இரண்டினுக் கிடையில் இருத்தினள் ஒருகல்.

உருகிய வெண்ணெய் அடைமேல் பூசினள்
கொழுப்பையும் அடைமேல் குணமாய்த் தடவினள்
அன்றைய பங்கென அடிமைக் கீந்தனள்
இடையனின் அன்றைய உணவாய்க் கொடுத்தனள்
அடிமைக் கவளே அறிவுரை தந்தனள்
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"இந்த உணவைநீ எடுத்துணல் ஆகா
காட்டினுள் மந்தை கடந்துசெல் முன்னர்".

அதன்பின் அவன்இல் மரினனின் தலைவி

மேய்ச்சல் நிலத்தே விரட்டினள் மந்தை
இனிவரும் சொற்களில் இவ்விதம் சொன்னாள்
இந்த மொழிகளில் இவ்விதம் மொழிந்தாள்:
"அனுப்பு கிறேன்என் ஆவினம் பொழிற்கு
பால்தரும் விலங்குகள் பசுந்தோப் புக்கு
அகல்கொம் புடையன அரசுக ளுக்கு
கோணல்கொம் புடையன கொழுமிலா றுக்கு;
அவைகொழுப் பதற்கே அனுப்புகி றேன்நான்
மாட்டு நிணத்தை மற்றாங் குறற்கு
பரந்து அகன்ற பசுந்தோப் புகளில்
அகன்று பரந்த தோப்பு நிலங்களில்
உயர்ந்து நிமிர்ந்து உளமிலா றுகளில்
தாழ்ந்து வளர்ந்த தனிக்காட் டரசினில்
பொன்னாய் மிளிறும் நன்னூ சி(யி)லைமரம்
வெள்ளியாய் விளங்கும் மிகுவன வெளிகளில்.

அழகிய இறைவனே, அவற்றை நீர்பாரும்!
நிலைபெறும் கர்த்தரே, நீர்அவை காப்பீர்!
தீநெறி யிருந்தவை திண்ணம்நீர் மீட்பீர்
அனைத்துக் கொடிதிலும் அவைபாது காப்பீர்
அல்லல் வராது அவையிருக் கட்டும்
துன்பம் எதுவும் தொடாதிருக் கட்டும்.

அவற்றைத் தொழுவில்நீர் அரிதுகாத் ததுபோல்
வலியநின் காப்பில் வைத்தது போலவே
தொழுவம் இலாத **வெளிக்கணும் பார்ப்பீர்
இயைகாப் பிலாத இடத்திலும் காப்பீர்
ஆயனுக் கதனால் அழகு வரட்டும்
தலைவிக் கதனால் தனம்சே ரட்டும்
நல்மன முள்ளோர் நச்சுதல் போல
வெம்தீ மனத்தார் விரும்பா ததேபோல்.
எனது மேய்ப்பன் இழிந்தவ னானால்
மேய்ப்போள் நாணம் மிகுந்தவ ளானால்
ஆக்குக இடையனாய் **அலரிச் செடியை
பசுக்கா வலனாய்ப் படைப்பாய் **பூர்ச்சம்
மாற்று **பேரியைப் பசுமேய்ப் போனாய்
விரட்டி வரட்டும் **சிறுபழச் செடிமனை
இறைவிதே டாது இருந்திட அவற்றை
அல்லது வருந்தா தமைந்திட மற்றோர்.

அலரி இடையனாய் ஆகா விட்டால்
பேரியும் பசுக்களை மேய்க்கா விட்டால்
பூர்ச்சமும் பசுக்களைப் பார்க்கா திருந்தால்
விரட்டா விட்டால் பழச்செடி மனைக்கு
அனப்புக நினது அதியுயர் சக்தியை
ஏவுக நினது இயற்கை மகளிரை
சீர்பெற வைக்கத் திகழும்என் செல்வம்
காத்திட முழுமையாய்க் காணுமென் மந்தை!
நின்னிடம் தாதியர் நிரம்பவு முள்ளனர்
ஏவல் கேட்பவர் ஏராள முள்ளனர்

இந்தவான் கீழே இருந்தே வாழ்பவர்
இயற்கை பெற்ற இளநல் மகளிர்.

கோடையின் சக்தியே, கொண்ட **தேர்ச் சியளே!
தென்காற் றரிவையே, திகழ்இயற் கையளே!
பைம்மரப் பாவையே, பயில்நல் தலைவியே!
சூரையின் சக்தியே, பேரெழிற் பெண்ணே!
**பேரியின் மகளே, பெண்ணில் சிறியளே!
தன்பழச் **செடிச்சேய், தப்பியோ மகளே!
மியெலிக்கி வனத்தின் வியன்மரு மகளே!
தப்பியோ மகளே, தனித்தெல் லர்வோ!
பார்ததுமேய்த் திடுவீர் படருமென் மந்தையை
சீர்பெற வைப்பீர் திகழுமென் செல்வம்
மிகவும் சிறப்பாய் விரிகோ டையெலாம்
முளைத்து ஓரிலை தழைவளர் காலம்
மரமதில் இலையும் வந்தசை நேரம்
பூமியில் புல்லின் புதுமுளைப் பொழுது.

கோடையின் சக்தியே, குலவுசீர்ப் பாவாய்!
தென்காற் றரிவையே, திகழ் இயற் கையளே!
மெதுவாய் விரிநின் விளங்குமே லாடை
விரித்துப் பரப்புக வியனார் நின்உடை
எனதுமந் தைக்கு இருக்கக் கூரையாய்
என்சிறு பிராணிகட் கிருக்கப் புகலிடம்
தொடர்சினக் காற்றுத் தூக்கிவீ சாமல்
பொல்லாச் சினமழை பொழியா திருக்க.

வருதீ திருந்தென் மந்தையைக் காப்பாய்
கொடுவழி யிருந்தாக் கூட்டம் மீட்பாய்
அசையும் சேற்று அகல்குழி யிருந்து
பெருகியே ஓடுமவ் வருவியி லிருந்து
நிதம்நகர் சதுப்பு நிலங்களி லிருந்து
வட்டமாய் அமைந்த வண்குளத் திருந்து
மற்றவைக் கல்லல் வராதிருக் கட்டும்
நிதம்எத் துன்பமும் நேரா தாகுக
சேறதில் குளம்புகள் சறுக்கா தொழிக
சதுப்பு நிலத்தில் வழுக்கா தமைக
விதித்த கடவுளின் விருப்புக் கெதிராய்
எமைஆ சித்தவன் எண்ணத் தெதிராய்.

**கொம்பினைக் கொணர்வீர் கூர்தொலை விருந்து
அந்தச் சுவர்க்கத் தருமுனை யிருந்து
தேனிகர் குழலை திகழ்விண் ணிருந்து
மதுரக் கொம்பைமண் மாதாவிடத் திருந்(து)!
உங்கள்அம் குழலை உடனெடுத் தூதுக
புகழார் கொம்பில் புத்தொலி எழுப்புக
உங்கள் மேட்டு உயர்நிலம் மலர
புற்றரை விளிம்பு புதுவனப் புறட்டும்
எழிற்பொழில் எல்லைகள் இனிமையே பெறட்டும்
வியன்தோப் போரம் மென்மையே யுறட்டும்

நனிசதுப் புக்கரை நறையுரு கட்டும்
உயர்சே றுளதரை உருண்டோ டட்டும்!

பின்என் நிரைக்குப் பேருண வூட்டுக
என்கால் நடைக்கு இரையினை யூட்டுக
தேன்சேர் உணவை தேர்ந்தவைக் கிடுக
குடிக்கக் கொடுங்கள் கொழும்தேன் பானம்;
பொன்னிகர் புற்களால் புத்துண வூட்டுக
வெ(ள்)ளிப்புற் றாள்களால் **மிகுவிரை வூட்டுக
துளிதுளி சொட்டும் தொல்சதுப் பிருந்து
பெருகியே ஓடுநீர் அருவியி லிருந்து
விரைந் திரைந்தெழுநீர் வீழ்ச்சியி லிருந்து
சீறிப் பாயுநற் செழுநதி யிருந்து
பொன்முடி யமைந்த புகார்க்குன் றிருந்து
வெள்ளியாய் மிளிரும் வெளிவனத் திருந்து.

பொன்னிகர் கிணறு பூதிதாய் வெட்டுக
மந்தை நிலத்தின் மற்றிரு மருங்கிலும்
கால்நடை அங்கே நீரருந் தற்கு
தேனிகர் நீரைச் சேர்ந்தருந் தட்டும்
பால்மடி ஊதிப் பருக்கும் வரையில்
பால்மடிக் காம்புகள் படுநோ வுறும்வரை;
பால்மடி நரம்புகள் பலஅசை வுறட்டும்
பாலாறு சுரந்து பல்கிப்பா யட்டும்
கிளைவிட் டோடுக கிளர்பால் அருவிகள்
நுரைஎழும் பட்டும் நுவல்பால் வீழ்ச்சிகள்
பால்ஓ டைகளில் பாலோ டட்டும்
பால்கால் வாய்களில் பாலோ டட்டும்
ஒவ்வொரு தடவையும் உவப்பாய்க் கொடுக்க
ஒவ்வொரு முறையும் ஊற்றிடு தற்கு
வெறுப் புளோர் நெஞ்ச விருப்புகட் கப்பால்
தீநினை வுடையோர் சேர்விரற் கப்பால்
மாய்வுல கம்பால் **போகா திருக்க
பசுவின் கொடைகள் பாழ்படா திருக்க!

கொடியமா னுடர்பலர் கூடவிங் குள்ளனர்
அவர்கள்பால் மரண உலகெடுத் தேகுவர்
பசுவின் கொடையைப் பாழுறச் செய்பவர்
எடுத்துச் செல்பவர் எங்கோ பசுவளம்;
நல்ல மனிதர்கள் சிலபேர் இங்குளர்
சாவுல கிருந்து பாலைத் தடுப்பவர்
**புளிப்பாலைக் கிராமப் பிடியினி லிருந்து
எங்கேனு மிருந்து இனிய தூயபால்
முன்னொரு போதும் இல்லையென் அன்னை
கிராமஆ லோசனை கேட்டது மில்லை
அயல்வீட்டில் கேட்டது மில்லை அவ்விதம்;
சாவுல கிருந்து தான்பால் பெற்றனள்
**புளித்த பால்பறிப் போரிட மிருந்து
எங்கேனு மிருந்து இனிய தூயபால்;
தொலைவிருந் ததுவரத் தொடர்ந்தனு மதித்தனள்

மிகமிகத் தொலைவிலே யிருந்தது வருவதை:
துவோனலா விருந்து தூயபால் வருவதை
இப்புவிக் கீழுறும் இறப்புல கிருந்து
தானே இரவில் தனிமையில் வருவதை
இருட்டுவே ளையிலே ஒளித்தே வருவதை
கடுங்கொடு மனிதரின் காதினில் விழாது
கடுந்தீ மனிதரால் காணப் படாமல்
தீவெறுப் புடையரால் சிந்தப் படாமல்
பொறாமைப் படுவோர் பொறாமைப் படாமல்.

இங்ஙனம் கூறினள் என்னுடை அன்னை
நானும் அதையே நவில்வேன் இங்ஙனம்:
பசுச்செல் வம்தடைப் பட்டது எங்கே?
புனிதபால் மறைந்து போனதும் எங்கே?
எங்கேனு மயல்நா டெடுத்தேகப் பட்டதா
கிராம முன்றிலில் வராக்கட் டுண்டதா
மாசுறும் சமூக மாதரின் மார்பில்
பொறாமையே கொண்டோர் புணர்கக் கத்திலே
அல்லது மரங்களில் அதுசிக் குண்டதா
வனத்து வெளிகளில் மறைந்தே போனதா
பொழிலார் நிலங்களில் போய்ச்சிந் துற்றதா
காணாது மறைந்ததா கடும்புற் றரைகளில்?

மரண உலகிலே மறையா பால்போய்
செல்லா பசுவின் செல்வம் வெளியூர்
சமூகப் பரத்தையர் தம்மார் பகத்தே
அழுக்கா றுடையார் அகல்கரங் களின்கீழ்
சிக்கவும் மாட்டா திகழ்மர மத்தியில்
அடவியின் மத்தியில் அழியவும் மாட்டா
சிந்திச் சிதறிப் போகா சோலையில்
புற்றரை மேட்டிலும் போகா வீழ்ந்து;
வீட்டு(க்கு)த் தேவை வியன்பால் என்பது,
வேளைக ளெல்லாம் விரும்பப் படுவது:
காத்துக் கிடப்பது கவின்இல் தலைவி
மரத்தின் **வாளியை வன்கரத் தேந்தி.

கோடையின் சக்தியே, கொண்ட**தேர்ச் சியளே!
தென்காற் றரிவையே, திகழ்இயற் கையளே!
**உண்பவள் தனக்கு உணவினை ஊட்டு
**பருகுவாள் தனக்குப் பானம் காட்டு
**நரம்புளாள் தனக்கு நற்பால் படைப்பாய்
புதியவள் தன்னை அதிசுரக் கச்செய்
இனியவ ளுக்கு இனிதளி பாலை
அப்பிளாள் தனக்கு அரும்புதுத் **தயிரை
ஒளிரும் வைக்கோல் ஒள்நுனி யிருந்து
அழகிய பனிபடர் இளம்புல் லிருந்து
இனிய புவியாம் எழில்தா யிருந்து
தேனிறைப் புல்லின் செறிமே டிருந்து
தேன்வடி இனிய செடிகளி லிருந்து
சிறுபழத் தண்டுத் திகழ்புவி யிருந்து

தண்மலர்ப் பற்றையின் சக்தியி லிருந்து
அலர்வைக் கோற்புதர் ஆவியி லிருந்து
**புகார்ப்பா லாடைப் பூவைய ரிருந்து
விண்ணகத் தூணின் வன்மையி லிருந்து
பாலுறும் பால்மடி பதமாய்க் கொணர்வாய்
நிறைந் தெப்போதும் நேர்வழி மடிகளை
பாவையர் மெல்லியர் பால்கறப் பதற்கு
சிறிய பூவையர் தினம்பால் பெறற்கு.

பாவையே எழுவாய் பள்ளத் திருந்து!
சிறந்த உடையுடன் சேற்றினி லிருந்து!
அருவியி லிருந்து அதிவெம் வனிதாய்!
தெளிந்த முகத்தளே, திகழ்ஊற் றிருந்து!
அருவியி லிருந்துநீர் அள்ளியே எடுத்து
எனது மந்தைமேல் இனிதாய்த் தெளிப்பாய்!
வளர்க சிறப்பாய் மந்தைக ளதனால்
தலைவியின் செல்வம் தனிபெரு கட்டும்
வெளியே தலைவியும் விரைவதன் முன்னர்
நிரைகளை இடைச்சியும் நேர்சரி பார்க்குமுன்,
தகுதியு மற்றுத் தலைவி இருந்தனள்
இடைச்சியும் கொண்டவ ளாயினள் மருட்சி.

மியெலிக்கி யே,வன மேன்மைத் தலைவியே!
தயாளக் கரமுடை(தகு) ஆநிரை மாதே!
உனது பெண்களில் உயர்ந்தவள் ஒருத்தியை
நின்பணிப் பெண்களில் நிகரிலாள் ஒருத்தியை
காத்திட அனுப்பு கடிதுஎன் செல்வம்
பார்த்திட அனுப்பு படருமென் மந்தை
பெரியஇக் கோடைப் பருவத் தினிலே
இறைவனின் வெப்பம் நிறையுமிக் கோடையில்
கர்த்தர் அளித்தஇக் காலகட் டத்தில்
கருணையால் கிடைத்தஇக் காலநாட் களிலே!

தப்பியோ மகளே, தகுதெல்லர் வோவே!
குள்ளமாய் வளர்ந்த குலவனப் பெண்ணே!
இனியமேற் சட்டை எழிற்பா வாடை
மஞ்சள் கூந்தல் மனோகரத் தோற்றம்
மந்தையைக் காக்கும் மாதவள் நீயே
தலைவியின் செல்வம் தனைவளர்ப் பவள்நீ
இனிமை நிறைந்த இந்த வனத்திலே
தனிக்கவ னம்நிறை தப்பியோ லாவிலே
கால்நடை சிறப்பாய்க் காத்தலைச் செய்வாய்
அத்துடன் செல்வம் அனைத்தையும் வளர்ப்பாய்.

அழகிய கரங்களால் அவற்றினைக் காப்பாய்
வனப்புறும் விரல்களால் வழிவகை காட்டு
சிறப்புறும் வகையில் சிவிங்கியின் தோல்போல்
சீருறும் வரையும் திகழ்மீன் சிறைபோல்
குரைகடற் கன்னியின் கூந்தலைப் போல
வியன்வனச் செம்மறி மென்மை மயிர்போல்!

வருவாய் மாலையில் வளர்இருள் இரவில்
மங்கிய பொழுது மறையும் வேளையில்
மந்தையைத் திருப்பி மனைக்குக் கொணர்வாய்
சீரார் தலைவியின் திருமுன் கெணர்வாய்,
அவற்றின் முதுகில் அசையும் நீர்ப்பை
பால்மடி தன்னில் பாற்குளம் இருக்கும்.

உறைகதி ரோன்தன் உறைவிடம் சேர்கையில்
மாலைப் புள்ளினம் மகிழ்ந்தே இசைக்கையில்
என்மந் தைக்கு இயம்புவேன் நானும்
கொம்புள பிராணிக் குரைப்பேன் நானும்:
'கோணல் கொம்பே, குறுகுக வீடு!
பாலளிப் பவரே, பார்ப்பீர் தொழுவம்!
வீட்டில் இருப்பது மிகநன் றுமக்கு
உயர்இன் னிலமும் உறங்கற குகந்தது
காடும் நடக்கக் காணும் மங்கலாய்
நீர்க்கரை திரிய நேர்ந்திடும் அவ்விதம்;
நீங்கள் வந்து நேர்இல் சேர்ந்ததும்
கன்னியர் வந்து கனலதை மூட்டுவர்
தேன்செடி நிறைந்த புல்மே டதனில்
சிறுபழத் தண்டுகள் திகழ்திரு நிலத்தில்.'

தப்பியோ மகனே, தகுநுயீ ரிக்கியே!
நீல உடைகொள் நிலப்புதர்ப் பையனே,
அம்தேவ **தாருவின் அடிமரத் துண்டையும்
**தாருவின் முடியையும் தகுமொழுங் கமைப்பாய்
அழுக்கின் மேலொரு அரிய பாலமாய்
நெடுந்தீ நிலத்தை நிரப்பிய பாதையாய்
நீர்தான் ததும்பும் நிலத்திலும் சேற்றிலும்
ஆடி யசையும் அகல்குள மீதும்;
நடந்து செல்லட்டும் நனிவளை கொம்பு
பிளவுடைக் குளம்பு பெயர்த்தடி யிடட்டும்
புகைவரும் ஒவ்வொரு இடத்தையும் புகட்டும்
இலாமல் காயம் இலாமல் சேதம்
தாழ்ந்துபோ காமல் தளர்சேற் றுநிலம்
அழுக்கிலே விழுந்து அமிழ்ந்துபோ காமல்!

கால்நடை களையே கவனிக் காவிடில்
இரவு வீட்டுக்கு வராமலே போகில்
**பேரியின் சக்தியே, சீர்ச்சிறு பெண்ணே!
**சூரையின் சக்தியே, சுந்தரப் பாவாய்!
வெட்டொரு மிலாறு வியன்தோப் பிருந்து
ஒடித்தெடு குச்சி ஒன்றினைப் புதரில்
பேரியின் கோலைப் பெரும்பயன் படுத்து
அமைப்பாய் சூரையில் சாட்டைஆ னிரைக்கு
தப்பியோ கோட்டை சார்பின் புறத்து
சிறுபழச் **செடிநில மறுபுறத் திருந்து;
தோட்டம் நோக்கி ஓட்டிடு மந்தையை
சவுனா வெப்பம் தான்அமை விடத்தே
வீட்டு மந்தையை வீட்டினை நோக்கி

காட்டு மந்தையைக் காட்டினை நோக்கி!

அரிய கரடியே, அடவியின் **அப்பிளே!
முன்வளை **முதுகே முதிர்தேன் பாதமே!
இப்போ **பொருத்தனை இனிதொன் றியற்றுவோம்
தவிர்ப்போம் எல்லைத் தகரா றிவ்விதம்
என்றென்று மேஎம் இன்னுயி ருளவரை
ஆயுள் வரையிலும் ஆகுவாழ் நாள்வரை
**விரிகுளம் பதனை இனித்தாக் காயென
பால்சுமப் பவளை ப் படிவீழ்த் தாயென
இப்பெருங் கோடை ஒப்பரும் போதில்
கனவெப் பம்நிறை கர்த்தரின் கோடையில்.

கிளர்மணி ஓசைநீ கேட்கும் வேளை
காதில் **எக்காள ஓசை வீழ்கையில்
பசும்புல் மேட்டின் பள்ளம் படுப்பாய்
புற்றரை மீதில் நித்திரை செய்வாய்
செவிகளைப் புற்களில் சேர அழுத்துவாய்
பசும்புல் மேட்டில் பதியவை தலையை
அல்லது கானகம் அதனுட் செல்வாய்
பாசி படர்ந்தவுன் பைங்குடி லடைவாய்
மறுபுற முள்ள மலைக்கே நகர்வாய்
வேறு புறத்தே விரைவாய் திடற்கு
மந்தையின் மணியுனை வந்தடை யற்க
ஆயனின் பேச்சுனை அடையா திருக்க!

அரியஎன் கரடியே, அன்புடைக் கரடியே!
தேன்நிகர் பாதமே,திகழ்என் அழகே!
நீஅலை தற்கே நான்தடை யில்லை
உலாவி வரற்கு உளமறுப் பெதுமிலை;
நாவினால் தொடற்கே நான்தடை யிடுவேன்
கொடுயநின் வாயைக் கொண்டுநீ தாக்கலை
எயிறுகள் கொண்டுநீ சிதறச் செய்வதை
அவற்றைநின் கால்களால் அறையும் செயலதை.

நடந்துசெல் மந்தையின் நன்னிலம் விலக்கி
தயிர்தரும் புதரைத் தவிர்த்து மறைந்துசெல்
மணியொலிப் பகுதியில் வளைந்துசெல் திரும்பி
ஆயரின் குரலுக் ககன்று விரைந்துசெல்!
பசும்புல் தரையில் பசுநிரை நிற்கையில்
நீசெல் சதுப்பு நிலத்தினை நோக்கி;
சதுப்பு நிலத்தினில் தாம்நிரை நிற்கையில்
அடர்ந்த காட்டை விரைந்துநீ அடைவாய்;
மலைகளின் மீது மந்தைகள் செல்கையில்
மலைகளின் கீழே வந்துநீ அடிவை;
மலைகளின் கீழே மந்தைகள் செல்கையில்
மலைகளின் மேலே வலுவிரைந் தேகுவை;
வெட்ட வெளிகளில் வியன்நிரை நிற்கையில்
பற்றை புதர்களில் பையநீ நடந்துசெல்;
பற்றை புதர்களில் பசுநிரை செல்கையில்

வெட்ட வெளிகளில் விரைவாய் நடந்துசெல்;
தங்கக் குயில்போல் தனிநீ போவாய்
வெள்ளிப் புறாப்போல் விரைந்துநீ போவாய்
வெண்மீன் போல்நீ வியப்புறத் திரும்பு
மீனதைப் போல வெளியில்நீ புரள்வாய்
கம்பளிக் கட்டுப்போல் கவினுற உருள்வாய்
சணல்கொத் துப்போல் தங்கிநீ நகர்வாய்
உரோமத் துள்நின் உகிர்களை மறைப்பாய்
முரசின் உள்ளே எயிறுகள் வைப்பாய்
அதனால் மந்தைகள் அஞ்சா திருக்கும்
கூசா தேகிடும் குறைவில்செல் வங்கள்.

அமைதியைக் கால்நடைக் கருள்வாய் நீயே
**விரிகுளம் புக்கு விடுதலை தருவாய்
மந்தைகள் அமைதியாய் வரட்டும் உலாவி
அமைதியாய் எங்கும் அலைந்து வரட்டும்
சதுப்புகள் ஊடாய் தம்நிலத் தூடாய்
காட்டுப் பசும்புல் கவின்தரை யூடாய்
என்றும் அவற்றைநீ இருப்பாய் தொடாது
அவற்றைக் கொடுமைக் காளாக் காதிரு.
பழையநின் ஆணையை பாங்காய் நினைவுகொள்
அங்கே துவோனலா ஆற்றின் பக்கலில்
தீய *நகத்துநீர் வீழ்ச்சியின் அருகினில்
கர்த்தரின் நல்முழங் கால்களின் முன்பு;
அனுமதி அங்குனக் கதுதரப் பட்டது
மூன்று முறைகள் முதிரும் கோடையில்
மணியொலி காதில் வந்துவீழ் தொலைவில்
பசுக்களின் மணிகள் இசைக்கும் நிலங்களில்
ஆயினும் உனக்கு அளிக்கவு மில்லை
அனுமதி உனக்கு அளிக்கப் படவிலை
தீச்செயல் எதுவும் செய்யத் தொடங்க
எதுவும் குழப்படி இயற்றி முடிக்க.

சினமோ உனக்குச் சீற்றமோ வந்தால்
கடிக்கும் வேகம் எயிற்றிலே வந்திடில்
காட்டுஉன் சீற்றம் கனத்திடும் புதரில்
ஊசிலை மரத்தில் உடற்றுநின் வேகம்
உழுத்த மரங்களைக் கடித்துநீ போடு
மிலாறுக் கட்டையை வீழ்த்திநீ போடு
மரத்துக் குற்றியை வலிதுநீர்த் திருப்பு
சிறுபழ மேட்டைப் புரட்டி எடுத்திடு!

உனக்குத் தேவை உணவா யிருந்தால்
உண்ணும் எண்ணம் உதித்தால் நெஞ்சில்
காட்டில் வளரும் காளான் உண்பாய்
எறும்புகள் வாழும் இரும்புற் றுடைப்பாய்
செந்நிறக் கிழங்கு தேர்வகை உண்பாய்
தேனிகர் காட்டுத் திகழ்சுவை யுணவுகள்
தாவர பட்சணித் தரைபுல் தவிர்த்து
வந்துநான் **தங்கிடும் வைக்கோல் தவிர்த்து.

தொடர்கான் பகுதியின் தொட்டித் தேனது
கொதித்துப் போனதால் அதிநுரைக் கிறது
பொன்னினால் ஆன பொலிகுன் றுச்சியில்
வெள்ளியில் ஆன வியன்வரை முடிகளில்;
ஊண்பெரி தயில்வோற் குண்டுண வாங்கு
பெருங்குடி யர்க்கு அருந்துபா னமுமுள
அயில்வதால் உணவு அருகி விடாது
குடிப்பதால் பானம் குறைந்து விடாது.

என்றுமோர் பொருத்தனை இவ்விதம் செய்வோம்
என்றுமே சிக்கல் இல்லா பொருத்தனை
அதனால் என்றும் அன்புடன் வாழலாம்
இனிதாய்க் கோடையாம் இவ்ருது முழுவதும்;
எமக்கு நிலங்கள் இருக்கும் பொதுவாய்
தயாராம் பொருட்கள் தனியாய் இருக்கும்.
ஆயினுன் நீயோ அமர்செய விரும்பில்
வன்போர் மடியிலே வாழ விரும்பினால்
குளிர்கா லத்திலே கொள்வோம் சமரை
தண்பனி பொழிகையில் சச்சர விடுவோம்.
வருகையில் கோடை **உருகையில் சதுப்பு
ஏரிகள் வெப்பமாய் இயைந்துமா றுகையில்
என்றுமே இப்புறம் எழுந்து வராதே
கிளர்பொன் கால்நடை கேட்கும் தொலைவரை.

நேர்ந்தால் இந்த நிலத்திடை நீவர
வரவேண்டி யிந்த வனங்களுக் கிருந்தால்
இங்கு எப்போதும் எய்தல் நடைபெறும்;
எய்பவர் வீட்டில் இல்லா தொழியின்
செயலுடை மாதர் செறிமனை யுள்ளனர்
வல்ல மனைவியர் இல்லகத் துள்ளனர்
பாழாக் கிடுவர்நின் பாதையை இங்கே
அவர்கள் பயணம் அழித்தே விடுவர்
உன்னால் தொடவும் ஒண்ணா தவர்களை
உன்னால் அவர்களுக் குறாது கெடுதலும்
இறைவன் என்பார் எண்ணத் தெதிராய்
ஆசி அருள்பவர் அகநிலைக் கெதிராய்.

ஓ, முது மனிதனே, உயர்மா தெய்வமே!
அதனுடை வரவுநீ அறிந்திடும் வேளை
வேற்றுப் பொருட்களாய் மாற்றென் பசுக்களை
மாற்றுப் பொருட்களாய் மாற்றென் மந்தையை
என்சொந் தத்தை இயற்றிடு கற்களாய்
கட்டைக ளாக்கென் கவின்இன் பிறவிகள்
அதிசயப் பிராணி அகல்நிலம் உலவையில்
அலைந்து திரிகையில் அக்கொழும் விலங்கு.

ஒருகான் கரடி உருவில்நான் இருந்தால்
**தேன்பாதம் போலத் திரிவதா யிருந்தால்
இங்கே வாழவே மாட்டேன் இங்ஙனம்

அனுதினம் முதிய அரிவையர் அடிகளில்;
வேறுள பகுதியில் விரிநிலம் உண்டே
**அடைப்புகள் வேறு அனேகமே யுளதே
ஒருதொழி லற்றோன் ஓடிச் சென்றிட
வேலை யிலாதவன் விரைந்தே முட்டிட
பாதத்து நுனிபிள பட்டிடும் வரையும்
ஆடு தசையெனும் அதுவெளி வரும்வரை
நீல நிறத்து நெடுங்காட் டுப்புறம்
வனத்தின் புகழுறும் வளைவின் அப்புறம்.

தாருவின் புல்வெளி நீடுநீ நடக்க
அடிவைத் தேக அம்மணல் வெளிகள்
போகப் பாதைகள் புனயப் பட்டன
ஒலிகடல் ஓரம் ஓடித் திரிய
வலுதொலை வுள்ள வடநிலம் வரைக்கும்
லாப்பு லாந்தின் எழிற்பெரு வெளிவரை;
அங்கு இருப்பது அதிர்ஷ்டம் உனக்கு
பொழுது அங்கு போகும் இனிமையாய்
காலணி யின்றிக் கோடையில் நடக்கலாம்
இலையுதிர் காலம் இன்றியே காலுறை
பெரிதாய் விரிந்த அரிய சதுப்பினில்
பரந்தகல் சேற்றுப் பாங்கார் நிலங்களில்.

புறப்பட் டங்குநீ போகா திருந்தால்
சரியாகப் போகத் தெரியா திருந்தால்
ஓடிப் போக ஒருவழி யின்றெனின்
குதித்துச் செல்வதற் கொருநெறி யிலையெனின்
அந்தத் துவோனலா அடவிக் காங்கே
கல்லறைச் சக்தியின் கனபுற் றரைமேல்.
அடிவைத் தேக அங்கே சதுப்புள
பாங்குற நடக்கப் பசும்புற் றரைகள்
அங்கே **கிரியா அங்கே **கரியா
அங்கே வேறு அழகிளங் கன்றுகள்
இரும்பினால் ஆன இழுசங் கிலியில்
பத்தாய்ப் பிணைத்த பல்பிணை(ப்பு) நுனிகளில்;
மெலிந்தது அங்கே மிகக்கொழுத் துயரும்
எலும்பும் தசையை ஏற்றுப் பெருகும்.

இனிமைகொள் பொழிலே, இதமென் வனமே!
நெகிழ்ச்சிதான் கொண்ட நீல்நிறக் காடே!
நிம்மதி கொடுப்பாய் நிரைகளுக் கினிதே
**விரிகுளம் புக்குத் தருவாய் அமைதி
இம்முறை வந்துள இனிதுயர் கோடையில்
தொல்இறை தந்தஇச் சூடார் கோடையில்.

*குய்ப்பன, கானகக் குலநல் லரசனே!
நரைத்தா டியுறு நல்வனக் காவல!
உமது நாய்களை உடனழைத் தேகுவீர்
நீச நாய்களை நீக்கியே வைப்பீர்.
எடுத்துக் காளான் இடும்ஓர் நாசியில்

அப்பிளை எடுத்து அடுத்ததில் வைப்பீர்
எவ்வித மணமும் எட்டா திருக்க
மந்தையின் மணமும் மணக்கா திருக்க
பட்டுத் துணியால் கட்டுக கண்கள்
சுற்றுத் துணியால் சுற்றுக செவிகள்
செல்வதை அசைந்து செவிகேட் கற்க
நடந்து செல்வதை நாடற் கவிழி.

இன்னும் போதா திருக்கின்இவ் வளவும்
இன்னும் அக்கறை இல்லையேல் சரியாய்
வைப்பாய் உந்தன் மைந்தனை விலக்கி
ஒழுங்கிலாப் பிறப்பை ஒதுக்கியே வைப்பாய்
இக்கா டிருந்து நன்தொலை வைப்பாய்
விளங்குஇக் கரைகளால் விரட்டி யடிப்பாய்
குறுகிய கால்நடைத் தரையதற் கப்பால்
அகன்று பரந்தவிவ் வணிநிலத் தப்பால்;
குழிகளில் மறைப்பாய் கொளும்உன் நாய்களை
நீச நாய்களை நீகட் டிறுக்கமாய்
பொன்னினால் ஆன புதுச்சங் கிலிகளால்
வெள்ளியில் பின்னி மிளிரும் வார்களால்
அவைதீ தெதுவும் ஆக்கா தமைக
பொல்லாங் கெதையும் புரியா தொழிக.

இன்னும் போதா திருக்கின்இவ் வளவும்
அக்கறை இன்னமும் அதற்கு இல்லையேல்,
ஓ, முது மனிதனே, உயர்பொன் னரசனே!
ஆட்சியை நடத்தும் வெள்ளிஆ ளுனனே!
என்பொன் னானஇச் சொல் கேட்பீர்
வழங்குமென் இனிய வாக்கியம் கேட்பீர்!
அழுத்து பேரியின் கழுத்து **வளையம்
சப்பை மூக்கினைச் சரியாய்ச் சுற்றி;
பேரியும் அதனைப் பிடியா திருப்பின்
செப்பிலே ஒன்றினைச் செய்தே எடுப்பாய்;
செப்பிலே செய்ததும் சேர்வலு வற்றதேல்
இரும்பிலே கழுத்து வளையம் இயற்று;
இரும்பு வளையமும் உடைந்தே போகில்
இன்னமும் செயல்கள் இருப்பின் தீதாய்
தங்கக் **காவடித் தண்டைச் செலுத்து
தாடையென் பிருந்து தாடையென் புக்கு
முனைகளை இறுக்கமாய் முடிந்துநீ வைப்பாய்
கெட்டியாய் அவற்றைக் கட்டு சரியாய்
அசையாது இருக்க அக்கொடு மலகுகள்
விலகாது இருக்க வெளிர்பல் சிலது
அவற்றை இரும்பால் அகற்றினால் தவிர
உருக்கால் அவற்றைத் திருகினால் தவிர
கத்தியால் குருதியைக் காட்டினால் தவிர
கிட்டுகோ டரியால் கிழித்தால் தவிர."

அதன்பின் இல்மரி னன்அவன் தலைவி
கைவினைக் கலைஞனின் கருத்துடை மனைவி

அனுப்பினள் தொழுவத் திருந்தவள் ஆனிரை
அனுப்பினள் மேச்சல் நிலத்துக் கானிரை
வைத்தனள் ஆயனை மந்தையின் பின்புறம்
ஆனிரை செலுத்த அடிமையை விட்டனள்.

கலேவலா

பாடல்-33 இல்மரினனின் மனைவியின் மரணம்

அடிகள் 1-98 : மேய்ச்சல் நிலத்தில் இருந்த குல்லர்வோ மாலை நேரத்தில் தனது பையிலிருந்த ரொட்டியை எடுத்து அதை வெட்ட முயன்றான். அப்பொழுது அவனுடைய கத்தி உடைந்தது. அந்தக் கத்தி ஒன்றுதான் அவனுடைய வீட்டின் நினைவாக அவனிடம் இருந்தது. அதுவும் சேதப்படவே மனதில் துன்பம் சூழ்ந்தது.

அடிகள் 99-184 : குல்லர்வோ இல்மரினனின் மனைவியைப் பழிவாங்கத் தீர்மானிக்கிறான். காட்டுமிருகங்கள் உண்பதற்காகக் கால்நடைகளைச் சதுப்பு நிலத்துக்கு ஓட்டிச் செல்கிறான். அங்கே கரடிகளையும் ஓநாய்களையும் சேர்த்து மாலையில் வீட்டுக்கு ஓட்டிச் செல்கிறான்.

அடிகள் 185-296 : வீட்டின் தலைவி பால் கறக்கச் சென்ற நேரத்தில் காட்டு மிருகங்களினால் கிழித்துக் கொல்லப் படுகிறாள்.

குல்லர்வோ என்பான் கலர்வோ மைந்தன்
உணவுப் பொருட்களை ஒருபை யிட்டனன்
செலுத்தினன் பசுக்களைச் சதுப்பின் வழியே
தான்புல் மேட்டில் தவழ்ந்தே ஏறினன்
செல்கையில் இவ்விதம் செப்பினான் ஒருசொல்
போகும் போதினில் புகன்றனன் இவ்விதம்:

"ஓ, நான் அதிர்ஷ்டம் ஒன்றிலாப் பையன்
ஓ,நான் அபாக்கிய ஒருபைய னாகினேன்
இப்போ தேநான் எங்கோ வந்துள்ளேன்
தீய வழிகளில் செயற்பட வந்துளேன்
எருத்தின் வாலுக் கிருக்கிறேன் ஆயனாய்
கன்றுக் குட்டிக் காவல னாகவும்
சதுப்பு நிலங்களை மிதித்தலை பவனாய்
பாழாம் பூமியில் பயணிப் பவனாய்."

புல்மே டொன்றின் பூமியில் அமர்ந்தனன்
தங்கினன் கதிரொளி தருமலை யோரம்
புகன்றனன் இவ்விதம் புனைகவி நடுவில்
பாடிடும் போதிலே பகர்ந்தனன் இவ்விதம்:
"இறைவனின் கதிரே, இகலொளி சிந்துவாய்!
ஆண்டவன் **ஆழியே அதிகனன் றொளிர்வாய்
கொல்லன் கால்நடை கொள்காப் பெல்லையில்
இல்லா அதிர்ஷ்டமிவ் விடையனின் மேலே
ஆயின்இல் மரினன் வாழ்விடம் வேண்டாம்
அடியொடு தலைவி யவள்மேல் வேண்டாம்!

வாழ்கிறாள் தலைவி மகிமையோ டாங்கே
வெட்டிக் கோதுமை ரொட்டி எடுக்கிறாள்
விழுங்குவாள் பணிய(ா)ர வியன்வகை தானே
வெண்ணெய் அவற்றின் மீதில் பூசியே;
அதிஷ்டமில் ஆயன் உலர்ந்த ரொட்டியை

உலர்ந்த துகள்களை உண்பவன் ஆயினன்
ஆனபுல் **அரிசியின் அடைகளில் இருந்து
பதரையும் சேர்த்துப் பண்ணிய ரொட்டியை
**அரைத்தவைக் கோலான் ஆகிய ரொட்டியை
**தாருவின் பட்டையில் சமைத்த ரொட்டியை,
மிலாறுக் காய்களின் மிளிர்செதில் ***அகப்பையில்
ஈரப்புல் மேடதன் இயல்உச்சி நீரதை.

ஆதித்த செல்லுக, அன்பே அகலுக!
ஆண்டவன் பொழுதே ஆழத் தமிழ்க;
தகிகதிர் நகர்க, தாருவின் அயலே,
பற்றையை நோக்கி நற்றிரு ஏகுக
சூரைப் பக்கமாய் தொல்கதிர் விரைக
அமைபூர்ச் சமர அளவினில் பறப்பாய்
ஆயனும் இல்லம் அடையநீ விடுவாய்
வெண்ணெய்க் கலயத் துண்டிட வெண்ணெய்
புளியா மாவின் எழுமடை உடைக்க
தேடிக் கிளறித் திணிஅடை எடுக்க."

அப்போ தில்மரி னன்அவன் தலைவி
இடையனும் மந்திரம் இசைத்திடும் வேளை
குல்லர்வோ குயில்போற் கூவிய நேரம்
கமழ்தன் வெண்ணெய்க் கலயத் துண்டனள்
உடைத்தனள் புளியா மாவின் ரொட்டி
தேடிக்கிளறி திணிஅடை எடுத்தனள்;
ஆயினும் நீரில் அமைத்தனள் ஒருரசம்
குளிராம் **கீரையில் குல்லர்வோ வுக்கு
அயின்றிருந் ததுவதன் கொழுப்பினை நீசநாய்
**கறுப்பும் உணவாகக் காலையில் தின்றது
**புள்ளியும் உண்டது புணர்விருப் பதன்படி
**பழுப்பும் வேண்டிய படியெல்லா முண்டது.

தொலைவில் பறவையும் தோப்பிலே இசைத்தது
புள்ஒரு சிறியது புதருள் இசைத்தது;
"அடிமையுண் பதற்கு ஆனநற் போதிதே
தந்தையிலா தோன் தன்அ(ந்)தி யுணவு."

குல்லர்வோ என்பான் கலர்வோ மைந்தன்
கண்டனன் வானில் கவின்நீண் கதிரொளி
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"இதுநல் நேரம் என்னுண வுண்ண
உகந்ததோர் நேரம் உண்ணத் தொடங்க
உணவுகள் தேடி உடனெடுப் பதற்கு."

ஒருபுறம் பசுக்களை ஓய்வாய் விட்டனன்
படுத்தன மந்தை பரந்தபுல் வெளியில்
புல்மே டொன்றிலே போய்த்தான் அமர்ந்தனன்
பச்சையா யிருந்த பசும்புற் றரையில்;
எடுத்தான் முதுகில் இருந்தே பையினை
எடுத்தான் பையில் இருந்து ரொட்டியை

பார்த்தான் ரொட்டியைப் பார்த்தான் திருப்பி
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"பற்பல அடைகள் மேற்புறம் அழகு
அவற்றின் துகள்களும் அதில்மிக மென்மை
உள்ளே இருப்பதோ உமியே முழுவதும்
துகள்களின் கீழே தோன்றும் பதர்தான்."

உறையிலே யிருந்து உருவினன் கத்தியை
ரொட்டி யதனையே வெட்டி யெடுத்திட:
கத்தியும் உள்ளே கல்லிலே பட்டது
பாறைக் கல்லிலே பட்டுத் தெறித்தது;
கத்தியின் அலகு கழன்றே வந்தது
உறைக்கத்தி யலகு உடைந்தே போனது.

குல்லர்வோ என்பான் கலர்வோ மைந்தன்
பார்த்தான் எடுத்துப் பகரருங் கத்தியை
அவனே பார்த்ததும் அழவும் தொடங்கினன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"உடன்பிறப் புப்போல் ஒரேயொரு கத்தி
அன்புக் கென்று அரியதோர் இரும்பு
வாங்கித் தந்தையார் வைத்த பொருளது
பெற்றவர் பெற்ற பேராம் பொருளது
கத்தி உடைந்தது கல்லில் பட்டதால்
பாறைக் கல்லிலே மோதி ஒடிந்தது
தீயஅத் தலைவி செய்தஇவ் ரொட்டியால்
கெட்டஅப் பெண்ணவள் சுட்டஇவ் ரொட்டியால்.
வனிதையின் நகைக்கு வழங்கலாம் எவ்விலை
நங்கையின் சிரிப்பு நாரியின் இகழ்ச்சி
கொடியாள் முதியாள் கொடுத்த பொருட்கு
சுடும்தீப் பரத்தை சுட்டரொட் டிக்கு."

காகம் ஒன்று கரைந்தது புதரில்
அண்டம் காகம் அதுதான் கரைந்தது:
"பாக்கியம் அற்றோய், பசும்பொன் **வளையமே!
கலர்வோ என்பவன் நிகரிலா மகனே!
எதற்காய் வந்தது இத்துயர் மனதில்
இதயத் திருளும் எதற்காய்ச் சூழ்ந்தது?
ஒடிப்பாய் பற்றையில் ஒருகுச் சியினை
காட்டின் குகைவாய்க் கம்பை மிலாறுவில்
சாணத் **தொடைகளைச் சதுப்புக் கோட்டு
பசுக்களைச் சேற்றுப் பாதைக் கனுப்பு
பாதி ஒன்றினைப் பகிர்கஓ நாய்க்கு
அடவிக் கரடிகட் காம்மறு பாதி.

ஓநாய் அனைத்தையும் ஒன்றாய்ச் சேர்ப்பாய்
கரடிகள் அனைத்தையும் கொணர்வாய் கூட்டமாய்;
**சின்னவ ளாகச் செய்ஓ நாய்களை
ஆக்கு**வெண் முதுகளாய் அனைத்துக் கரடியும்
மந்தையை அடுத்து மனைக்கே ஓட்டு
பன்னிறப் பிராணிகள் பரந்ததோப் புக்கு

இவ்வாறு விலைகொடு ஏந்திழை நகைக்கு
இவ்வாறு கொடிய பெண்இகழ்ச் சிக்கு."

குல்லர்வோ என்பான் கலர்வோ மைந்தன்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"பொறுப்பாய், பொறுப்பாய், புன்பேய்ப் பரத்தாய்!
தந்தைகத் திக்கு தளர்ந்துநான் அழுவதால்
இதற்குமேல் நீயோ இங்கழப் போகிறாய்
பால்தரும் நிரைக்குப் பரிந்தழப் போகிறாய்."

ஓடித்தான் குச்சி ஒன்றினை பற்றையில்
சூரைச் செடியிலே ஆனிரைச் சாட்டையை
பசுக்களைச் சேற்றுப் பாதையில் அமிழ்த்தினன்
கவிழ்த்தனன் வீழ்மரக் குவியலில் எருதுகள்
ஒருபா தியினை ஓநாய் உண்டிட
அடவிக் கரடி அடுத்தபா தியையுண
மந்திரத் தோநாய் மாற்றினன் மந்தையாய்
கானகக் கரடி கால்நடை யாக்கினான்
ஆக்கினன் சின்னவள் ஆகவொன் றினையே
மற்றதை ஆக்கினான் வளர்வெண் முதுகளாய்.

தென்மேற் புறத்துச் செங்கதிர் சாய்ந்தனன்
மாலையோர் பாதி மறையத் திரும்பினன்
தேவதா ரளவில் சிறிதாங் கிறங்கினன்
விரைந்தனன் **கறக்கும் வேளைப் பாலது;
அதிர்ஷ்டமே இல்லான் அங்குள இடையன்
குல்லர்வோ என்பான் கலர்வோ மைந்தன்
வீடு நோக்கி விரட்டினன் கரடிகள்
ஓநாய் மந்தையை ஓட்டினன் தோட்டம்
அப்போ கரடிக் கறிவுரை புகன்றான்
ஓநாய்க் கிங்ஙனம் வாயாற் கூறினன்;
"தலைவி என்பவள் தசைத்தொடை கிழிப்பீர்
கடிப்பீர் கெண்டைக் காலா டுதசை
அவள்பார்ப் பதற்காய் அருகில் வருகையில்
பால்கறப் பதற்காய்ப் படியிற் குனிகையில்!"

செய்தனன் ஒருகுழல் செழும்பசு வெலும்பில்
எருதின் கொம்பில் இசைக்குழ லியற்றினன்
ஆக்கினன் **துவோமிக்கி காலிலெக் காளம்
ஒன்று**பன் னிறத்தாள் பின்கால் நரம்பினில்
ஊது குழலெடுத் தூதத் தொடங்கினன்
எக்காள மெடுத்து எக்காள மிட்டனன்
மும்முறை வீட்டின் வெளிப்புறக் குன்றினில்
ஊதினன் அறுதரம் ஒழுங்கை வாயிலில்.

அப்போ தில்மரி னன்அவன் தலைவி
கொல்லனின் முதியோள் நல்லஅம் மங்கை
நேரம் வெகுவாய்ப் பாற்கெதிர் பார்த்தனள்
கோடைவெண் ணெய்க்கு நீடுகாத் திருந்தனள்;
இசைத்தல் சேற்றுப் புறத்தில் கேட்டனள்

மணியொலி புற்றரை வளர்புறம் கேட்டனள்
இனிவரும் சொற்களில் இவ்விதம் சொன்னாள்
இந்த மொழிகளில் இவ்விதம் மொழிந்தாள்:
"இறைவனே, நன்றியை இயம்பினேன் உமக்கு
எழுகிற திசையொலி வருகிற தானிரை
எக்காளம் அடிமைக் கெவ்விதம் கிடைத்தது
கூலியாட் கெங்ஙனம் குழலொன்று வந்தது
அதனால் இசைத்தே அவனும் வருகிறான்
எக்காளம் கொண்டே எக்காள மிடுகிறான்
ஊதுதல் என்செவி ஊடாய்ச் செய்கிறான்
இசைசெல் கிறது என்தலை துளைத்து."

குல்லர்வோ என்பான் கலர்வோ மைந்தன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்;
"பெற்றனன் அடிமை எக்காளம் சேற்றில்
குழலொன்று சதுப்பி லிருந்தே கெணர்ந்தனன்;
மந்தை ஒழுங்கைப் புறம்வரு கின்றது
வயற்றொழு வப்புறம் வந்துநிற் பனபசு;
பரம்பிடச் செய்வாய் படர்புகை மூட்டி
பசக்களில் சென்று பாலினைக் கறப்பாய்!"

அப்போ தில்மரி னன்அவன் தலைவி
உரைத்தனள் கறக்க ஒருமுதி யவளை;
"பாலைக் கறக்கப் படர்க முதியளே
ஆற்றுக முன்சென் றானிரை அலுவல்
ஏனெனில் நேரம் எனக்கிங் கில்லை
மாப்பசை பிசையும் மறுதொழி லிருந்து."

குல்லர்வோ என்பான் கலர்வோ மைந்தன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"எப்போதும் என்றும் இனிய தலைவியர்
சாதுர்ய மான தகும்இல் தையலர்
செல்வர் தாமே செழும்பசுக் கறக்க
ஆற்றுவர் முன்சென் றானிரை யலுவல்."

அதன்பின் இல்மரி னன்அவன் தலைவி
மூட்டினாள் புகையை முன்வந் தேதான்
அடுத்ததாய் வந்தனள் அவள்பால் கறக்க
முற்றிலும் மந்தைஓர் முறைஅவள் பார்த்தாள்
சுற்றிலும் கால்நடைத் தொழுவினைப் பார்த்தாள்
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"எழிலாய் உள்ளதிக் கால்நடைப் பண்ணை
உரோமம் மென்மை உடையன மந்தை
சிவிங்கி உரோமத் திகழ்மே லாடைபோல்
கானகச் செம்மறிக் கம்பளி போன்றவை
பால்மடி கனமாய்ப் பருத்தே யுள்ளன
பால்மடிக் காம்புகள் பருநிறை வுள்ளன."

சற்றே பால்பெறத் தாழ்ந்து குனிந்தனள்
கறந்தெடுத் தற்குக் கால்தாழ்ந் தமர்ந்தனள்

இழுத்தனள் ஒருமுறை இழுத்தனள் மறுமுறை
முயன்றாள் விரைந்து மூன்றாம் முறையும்:
ஓநாய் அவள்மேல் ஓடிப் பாய்ந்தது
அடுத்துக் கரடியும் அங்குதா வியது;
ஓநாய் விரைந்தவள் வாயைக் கிழித்தது
கரடியும் பிய்த்தது கால்களின் நரம்பை
ஆடு தசையின் அரைத்தசைத் தின்றது
கால்எலும் பிருந்து குதியை முறித்தது.

குல்லர்வோ என்பான் கலர்வோ மைந்தன்
இகழ்ந்த பெண்பழி இவ்விதம் வாங்கினன்
பெண்இகழ்ச் சிக்குப் பேதையின் நகைக்கு
கொடியபெண் ணுக்குக் கூலி கொடுத்தனன்.
அரும்இல் மரினனின் பெருமைகொள் தலைவி
அவளே கண்ணீர் அழுதே சொரிந்தாள்
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"ஆயனே பாவி அடாதது செய்தனை
விரட்டிக் கரடிநீ வீட்டிடைக் கொணர்ந்தாய்
ஓநாய் கொணர்ந்தனை உயர்பெரும் முன்றிலில்."

குல்லர்வோ என்பான் கலர்வோ மைந்தன்
இவனும் பதிலை இவ்விதம் மொழிந்தான்:
"ஆயன்நான் பாவி அடாதுதான் செய்தேன்
தலைவியே, நின்செயல் சரிய(ல்)ல பாவியே,
ரொட்டியைக் கல்லிலே சுட்டே எடுத்தனை
பாறையில் அடையினைப் படைத்தே எடுத்தனை
கல்லின்மேல் என்றன் கத்திநான் வைத்தேன்
கத்தியால் பாறையைக் கடிதுநான் வெட்டினேன்
எந்தையின் கத்தியிங் கிருந்ததே ஒன்றுதான்
என்னுடைச் சுற்றத்து எழில்உறை கத்திதான்."

இல்மரி னன்துணை இவ்வாறி யம்பினள்:
"ஓ, நீ இடையனே, உயருமன் புடையனே!
உன்சொல் திரும்ப உடன்நீ பெறுவாய்
மந்திரச் சொற்களை வாங்குவாய் மீளவும்
ஓநாய் பிடியிருந் துகந்தெனை விடுவி
கரடியின் உகிர்களில் காப்பாய் என்றனை
நல்லமே லாடையில் நானுனை வைப்பேன்
எழிற்காற் சட்டை ஈவேன் உனக்குநான்
வெண்ணெயும் ரொட்டியும் வியன்வகை தருவேன்
பாங்கொடு புதுப்பால் பருகவும் தருவேன்;
ஓராண்டு வேலை ஒன்றிலா துணவும்
மறாண்டும் தருவேன் வழங்கேன் வேலைகள்.

இதனால் விடுவியா திருப்பையேல் என்னை
கட்டவிழ்த் தென்னைக் காவா திருப்பையேல்
விரைந்தே மரணம் விரைவில் தழுவுவேன்
மடிந்துநான் மக்கி மண்ணாய்ப் போவேன்."

குல்லர்வோ என்பான் கலர்வோ மைந்தன்

உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"மரணிப்ப தாயின் மரணத்தை யடைநீ
மறைந்தே போகில் மறைந்தே போநீ
போனவர்க் கெல்லாம் பூமியில் இடமுள
மறைந்த மாந்தர்க்கு மயானமு மங்குள
பாரிய பலமுளோர் படுத்திளைப் பாற
பெருமைமிக் குடையோர் பெரிதிருந் தோய்வுற."

இல்மரி னன்துணை இவ்வா றியம்பினள்:
"ஓ, முது மனிதனே, உயர்மா தெய்வமே!
உன்பெரும் குறுக்குவில் உடனே தயார்செய்
தெரிவுசெய் உனது சிறப்புறும் ஓர்கணை
குறுங்கணை ஒன்றினைப் பொருத்திடு செப்பிலே
கொதித்துக் கனலும் குறுக்குவில் மேலே
தீபோற் கணையைச் செலுத்திடு முன்னே
அனுப்பிடு செப்பினால் ஆன குறுங்கணை
உடனவன் கக்கத் தூடாய் எய்வாய்
கெட்டோன் தோட்டசை கிழித்தே எறிவாய்
கலர்வோ மகனைக் கவிழ்ப்பாய் கீழே
எய்வாய் இழிந்தோன் இறந்தே போக
உருக்கு முனைகொள் உயர்வம் பொன்றால்
செப்பினா லான சீர்க்குறுங் கணையால்."

குல்லர்வோ என்பான் கலர்வோ மைந்தன்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"ஓ, முது மனிதனே, உயர்மா தெய்வமே!
என்றனை நோக்கி எய்தலைச் செய்யேல்
இல்மரி னன்அவன் தலைவியை எய்வாய்
கீழாம் பெண்ணவள் கீழ்வைத் திடுவாய்
மாற்றா திருக்க மற்றவள் **தன்னிடம்
இங்கிருந் தவளசைந் திடாதிட எங்குமே."

அதன்பின் இல்மரி னன்அவன் தலைவி
கைவினைக் கலைஞனின் கருத்துடை மனைவி
இறந்தாள் உருண்டு புரண்டே இறுதியில்
கலயத் திரும்புகைக் **கறையென வீழ்ந்தாள்
அவளது சொந்த அகல்வதி விடத்தில்
அந்தத் தோட்டத் தமைகுறு வெளியில்.

இளம்பெண் ஒருத்தி ஏகிய விதமிது
அத்துடன் சென்றாள் அழகிய தலைவியும்
கனநாள் கொல்லன் காத்திருந் தடைந்தபெண்
ஏங்கவைத் திருந்தபெண் இருமூன் றாண்டுகள்
என்றுமில் மரினனின் இன்பமா யிருந்தவள்
**பெறுபுகழ்க் கொல்லனின் பெரும்பே றானபெண்.

கலேவலா

பாடல் 34 - குல்லர்வோவும் அவனுடைய பெற்றோரும்

அடிகள்-1-128 : குல்லர்வோ இல்மரினனின் வீட்டிலிருந்து தப்பியோடிக் காடுகளில் கவலையுடன் அலைந்து திரிகிறான். அப்பொழுது காட்டில் ஒரு வயோதிப மாதைச் சந்திக்கிறான். குல்லர்வோவின் தந்தை, தாய், சகோதரன், சகோதரி ஆகியோர் இன்னமும் உயிருடன் இருப்பதாக அந்த வயோதிப மாது கூறுகிறாள்.

அடிகள் 129-188 : காட்டில் சந்தித்த வயோதிப மாதின் அறிவுரைப்படி குல்லர்வோ லாப்புலாந்தின் எல்லையில் தனது தந்தை, தாய், சகோதரன், சகோதரி ஆகியோரைக் காண்கிறான்.

அடிகள் 189-246 : குல்லர்வோ எப்பொழுதோ இறந்துவிட்டதாகவும் சிறுபழங்கள் பொறுக்கப் போயிருந்த சமயம் மூத்த மகள் தொலைந்து விட்டதாகவும் தான் எண்ணியிருந்ததை அவனுடைய தாய் கூறுகிறாள்.

குல்லர்வோ என்பான் கலர்வோ மைந்தன்
முழுநீல் காலுறை முதியவன் பிள்ளை
மஞ்சள் கேசமும் வனப்பும் வாய்ந்தவன்
கவின்தரத் தோலதில் காலணி கொண்டவன்
புறப்பட் டவனே போயினன் விரைந்து
கொல்லஇல் மரினனின் குடியிருப் பிருந்து
எசமான் செய்தியை இனிதறி வதன்முன்
மனை(வி)க்கு நேர்ந்த மரணம் பற்றி

நெஞ்சிலே அதனால் நெடுந்துயர் வந்து
போரென்று ஒன்றைப் பொரத்தொடங் கலின்முன். 10
கொல்லனைப் பிரிந்தான் குழல்இசைத் தபடி
*இல்மாவின் நாட்டை இனிதாய்க் கடந்தான்
எக்காள மூதி ஏகினான் புற்றரை
சத்தமிட் டேகினான் தனிக்கான் வெளியிலே:
ஒலிசேற்று நிலம்தரப் புவிநடுங் கிற்று
பதிலுக் கெதிரொலி பகர்ந்தன புற்றரை
குல்லர்வோ இசைத்த வல்லிசை கேட்டு
தீமகன் நடத்திய தீச்செயல் பார்த்து.

கொல்லனின் தலத்திலே அவ்வொலி கேட்டது
தலத்தினில் கொல்லன் இயக்கம் நிறுத்தினன் 20
ஒலியினைக் கேட்க ஒழுங்கையை யடைந்தனன்
முற்றத்து வந்தனன் முழுவதும் பார்த்திட
எழுங்காட் டிசையது என்னவென் றறிய
ஏற்பட்ட புற்றரை எக்காளம் ஏன்என.

உண்மை எதுவென உணர்ந்தனன் இப்போ
பொய்யலா நிச்சய மெய்நிலை யெதுவென:
துயிலினில் இருந்த தோகையைக் கண்டனன்
அங்குவீழ்ந் திருந்த அழகியைக் கண்டனன்

முற்றத்து வீழ்ந்து முன்கிடந் தனள்பெண்
சாய்ந்து புற்றரை தான்படுத் திருந்தனள்.

கொல்லனவ் விடத்தில் கல்லாய் நின்றனன்
இதயம் முழுவதும் இன்னல்சூழ்ந் திருந்தது
ஏங்கி யழுதழு திரவைக் கழித்தனன்
விழிநீர் பெருக்கினன் வெகுகா லம்வரை
உளநிலை **கீலின் அளவிலும் சிறப்பிலை
படுமனம் கரியைப் பார்க்கிலும் வெளுப்பிலை.

தானே குல்லர்வோ தனிநடந் தேகினன்
எங்கேனும் அடிவைத் தெதிரே சென்றனன்
நாளெல்லாம் காட்டில் நடந்தே சென்றனன்
பேய்மரம் நிறைந்த பெருங்கா னகமெலாம்;
எதிர்கொண்ட தந்தி இரவும் இருண்டிட
மேட்டு நிலத்திலே மெதுவாய்த் தங்கினன்.

அமர்ந்திருந் தான்பிதா அற்றதோர் பிள்ளையாய்
அன்பறி யாதான் அவன்இதை எண்ணினன்:
"என்னைப் படைத்தவர் எவரா யிருக்கலாம்
ஏழையை ஆக்கியோர் எவரா யிருக்கலாம்
இரவாய்ப் பகலாய் இவ்வா றலைந்திட
வானத் தின்கீழ் வாழ்நாள் முழுவதும்?

மற்றையோர் தத்தம் மனைகட் கேகுவர்
வதிவிடம் நோக்கி வழிச்செல முனைவர்
வெங்கான் எனக்கொரு வீடைமைந் துள்ளது
புற்றரை வெளியில் பொலித்தோப் புளது
அகல்வெளிக் காட்டில் அடுப்படி யுளது
வளர்கனற் சவுனா மழையிலே யுளது.

ஒருபோதும் வேண்டாம் உயர்தல் லிறைவனே!
இந்த உலகிலே என்றுமே வேண்டாம்
அதிர்ஷ்டமில் பிள்ளையை ஆக்கா திருப்பீர்
அன்பதை என்றுமே அறியாப் பிள்ளையை
பெருவா னின்கீழ் பிதாவிலாப் பிள்ளையை
அன்னை யிலாததை அறவே வேண்டாம்
இறைவனே, படைத்தது என்றனைப் போல
ஏழை என்றனை இங்குரு வாக்கல்போல்
ஒண்கடற் **புட்குலத் தொன்றெனப் படைத்தனை
கடற்பாறை மீதுள்ள **கடற்புள் ளாக்கினை.
கதிரொளித் **தூக்கணாங் குருவிக் கமைவதும்
வெண்மையைச் **சிட்டுக் குருவிக் களிப்பதும்
குதூகலம் காற்றுப் பறவைகட் காகுமாம்
ஆயினும் என்றுமே அமைந்தெனக் கிலையே
வாழ்நாளெப் போதுமே வராதுஏ ழைக்கு
ஆனந்த மென்றுமே ஆகா துலகிலே.

என்னைப் படைத்தவர் எவரென அறியேன்
என்றனை வளர்த்தவர் எவரெனத் தெரியேன்

**பொன்வாத் தொன்று புனைந்ததா பாதையில்
சேற்றிலே **தாரா(வும்) செய்துதான் போட்டதா
கரையிலே உருவம் **கடல்வாத் தீந்ததா
பொந்திலே பாறையில் **புனல்வாத்து வேலையா?

தனிச் சிறுவயதில் தந்தையை இழந்தேன்
இளமையில் தாயும் இல்லா தாகினேன்
இறந்தனன் தந்தை இறந்தனள் அன்னை
ஏனையோர் பேராம் இனத்தோர் இறந்தனர்;
பனிக்க(ட்)டிக் காலணி எனக்கென விட்டனர்
நனிமறந் தேகினர் பனியுரு(கு) காலுறை;
பனிக்கட்டித் தடங்களில் எனைவிட்டே போயினர்
பனிமழை சுழன்றிடும் படியினில் விட்டனர்
ஒவ்வொரு சதுப்பிலும் உடலமிழ்ந் தேக
அழுக்குச் சேற்றிலே ஆழ்ந்துவீழ்ந் தகல.

இந்தவாழ் நாளில் இல்லைஆ னாலும்
அந்நிலை என்றும் அமைந்திட மாட்டா
சதுப்பு நிலமதன் தனிவழி மரம்போல்
அழுக்கு இடமதன் பலகைகள் அவைபோல்
சேற்றிலே ஆழ்ந்து செல்லநான் மாட்டேன்
என்னிடம் கரங்கள் இரண்டுள போதில்
விரல்கள் ஐந்தினை விரித்துநான் நீட்டலில்
நகங்கள் பத்தினை நானுயர்த் துகையில்."

இப்போ அவனது இதயத் தெழுந்தது
மூளையில் சிந்தனை மூண்டது இவ்விதம்
உந்தமோ என்பான் சொந்தவூ ரடைந்து
தந்தையின் அடிப்பழி தான்தீர்க் கெண்ணினன்
தந்தையின் அடிக்கு தாய்விழி நீர்க்கு
தன்னை நடாத்திய தகாக்கொடும் செயற்கு.

உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"உந்தமா என்போய், ஓ, பொறு, பொறுப்பாய்,
சற்றுக் காத்திரென் சுற்றம் அழித்தோய்
உன்னுடன் போர்க்கு உடன்றுநான் வருகையில்
ஆக்கேனா வதிவிடம் அனைத்தும் சாம்பராய்
தோட்டத்துக் காட்டையும் சுடர்கனற் கட்டையாய்?"

முதியவள் ஒருத்தி முன்எதிர் வந்தனள்
நீலமே லாடையில் நீள்புதர் வாழ்பவள்
இந்தச் சொற்களில் இயம்பினள் அவளே
இயம்பினள் அவளே இயம்பினள் இவ்விதம்:
"புறப்பட்ட தெங்கே புகல்கநீ குல்லர்வோ
கலர்வோ மைந்தனே கடிதகல் விடமெது?"

குல்லர்வோ என்பான் கலர்வோ மைந்தன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"என்றன் நெஞ்சிலே எழுந்தது இவ்விதம்
மூளையில் சிந்தனை மூண்டதும் இவ்விதம்

எவ்விட மாயினும் ஏகிடற் கெழுந்தேன்
உந்தமோ என்பான் சொந்தவூ ரடைய
சுற்றத் தழிவின் தொடர்பழி தீர்த்திட
தந்தையின் அடிக்குத் தாய்விழி நீர்க்கு
அனைத்தும் வதிவிடம் ஆக்கச் சாம்பலாய்
அனைத்தையும் துகள்களாய் அழித்திட மாற்றி."

முதியவள் பின்வரும் மொழிகளில் கூறினள்
இயம்பினள் அவளே இயம்பினள் இவ்விதம்:
"ஆனஉன் சுற்றம் அழிக்கவு மிலையே
இன்னமும் கலர்வோ இறந்திட விலையே
உன்றன் தந்தை உயிரோ டுள்ளனன்
நாட்டிலே தாயும் நலமா யுள்ளனள்."

"ஓ,என் அன்புடை உயர்மூ தாட்டியே,
அன்புமூ தாட்டியே, அதையெனக் குரைத்திடு!
என்றன் தந்தை எவ்விட முள்ளனர்
என்னைச் சுமந்த எழிலியும் எவ்விடம்?"

"அவ்விடம் இருக்கிறார் அரியஉன் தந்தை
அடைந்துனைச் சுமந்த அழகியும் அவ்விடம்
லாப்பின் அகன்ற எல்லையின் அருகில்
மீன்குளம் ஒன்றின் மிகுமருங் குள்ளனர்."

"ஓ,என் அன்புடை உயர்மூ தாட்டியே,
அன்புமூ தாட்டியே, அதையெனக் குரைத்திடு!
அவ்விடம் நான்போய் அடைவது எவ்விதம்
எவ்வழி வாயிலாய் ஏகலாம் அவ்விடம்?"

"அங்குநீ செல்லல் அமையும் நன்மையாய்
அன்னிய னாகிலும் அவ்வழி யேகலாம்
நடந்துநீ செல்க நவில்கான் மூலையில்
ஓடியும் செல்க உறுநதிக் கரையினில்;
ஒருநாள் நடப்பாய் இருநாள் நடப்பாய்
மூன்றாம் நாளும் முன்விரைந் தேகுவாய்
வடமேல் திசையின் வழிநோக் கிடுவாய்
மரமடர் குன்று வந்துனைச் சேரும்:
அக்குன் றடிமருங் கடிவைத் தேகு
குன்றதன் இடப்புறம் குறுகி நடந்திடு.

அடுத்ததாய் அங்கே ஆறொன் றடுக்கும்
அதுவும் உன்றன் அகல்வலப் புறமாய்;
ஆற்றின் ஓரமாய் அங்குநீ நடப்பாய்
நுரைநீர் வீழ்ச்சி வருமூன் றினைக்கட;
கடல்முனை ஒன்றன் நுனியைநீ அடைவாய்
குடாநில நீண்ட முடிவினை யடைவாய்:
கடல்முனை நுனியில் வதிவிட மொன்றுள
குடாநிலை முடிவில்மீன் குடிலொன் றங்குள
அங்குதா னப்பாஉன் தந்தை வாழ்கின்றார்
உனைச் சுமந்தவளும் உளளங் கழகியும்

அங்குதா னப்பாஉன் அன்புச்சோ தரிகள்
அழகிய இரண்டு அரிவையர் அங்குளர்."

குல்லர்வோ என்பான் கலர்வோ மைந்தன்
எழுந்தடி வைத்து ஏகினான் பாதையில்
ஒருநாள் நடந்தனன் இருநாள் நடந்தனன்
மூன்றாம் நாளிலும் முன்விரைந் தேகினன்
வடமேல் திசையின் வழியினை நோக்கி
மரமடர் குன்றினை வந்தே சேர்ந்தனன்:
அக்குன் றடிமருங் கடிவைத் தேகினன்
குன்றதன் இடப்புறம் குறுமருங் கேகினன்
அடுத்ததாய் அங்கே ஆறொன் றடுத்தது
ஆற்றின் ஓரமாய் அவன்நடந் தேகினன்
ஆற்றினைத் தொடர்ந்தனன் அவன்இடப் பக்கமாய்
மூன்றுநீர் வீழ்ச்சியை முன்கடந் தேகினன்
அடைந்தனன் கடல்முனை அதன்ஒரு நுனியினை
குடாநில நீண்ட முடிவுக் கேகினன்:
கடல்முனை நுனியினில் வதிவிடம் இருந்தது
குடாநில முடிவில்மீன் குடிலொன் றிருந்தது.

அடுத்துஅவன் வதிவிடத் ததனுட் சென்றனன்
அடைய(ா)ளம் கண்டிலர் அங்குளோர் அவனை:
"இந்த அன்னியன் எங்கிருந் தடுத்தனன்
நாடோடித் திரிபவன் நல்வதி விடமெது?"

"உன்றன் மைந்தனை உளமறிந் திலதா?
உரிமைப் பிள்ளையைத் தெரியவு மிலையா?
உந்தமோ என்பவன் மாந்தர்கள் ஒருதினம்
தம்முடன் இல்லகம் தாமெடுத் தேகினர்
அவன்பிதா கைச்சாண் அளவவ னிருக்கையில்
தாயவள் நூற்கோல் தன்நெடி திருக்கையில்?"

தாயால் இப்போ தான்சொல முடிந்தது
வயோதிப வனிதையும் வருமா றியம்பினள்:
"ஓ,என் மைந்தா, உயர்பாக் கியமிலாய்!
ஓகோ, ஏழ்மையோய், உயர்பொன் **னணியே,
உன்விழி யோடினும் உயிருட னுள்ளாய்
பலஇந் நாடுகள் பயணம் செய்கிறாய்
இறந்துபோ னாயென ஏங்கிநா னழுகையில்
தொலைந்துபோ னாயென நினைத்திட வேளையில்!

இருவர் மைந்தர்முன் எனக்கே இருந்தனர்
எழிலார் புதல்வியர் இருவரு மிருந்தனர்
அந்தப் பிள்ளைகட் கதிர்ஷ்ட மற்றநான்
இழந்தேன் மூத்த இருபிள் ளைகளை:
வந்த பெரும்போ ரதில்மைந் தனையும்
புரியாத இடத்தில் புதல்வியும் இழந்தேன்;
மைந்தனோ மீண்டும் வந்திங் குற்றனன்
மகளின் வருகை நிகழமா ட்டாது."

குல்லர்வோ என்பான் கலர்வோ மைந்தன்
அவனால் இவ்விதம் வினாவ முடிந்தது:
"எங்கே இழந்தனை உன்றன் மகளைநீ
என்றன் சோதரி எவ்வழி யேகினள்? "

இந்தச் சொற்களில் இயம்பினள் அன்னை
இயம்பினள் அவளே இயம்பினள் இவ்விதம்:
"என்றன் மகளை இழந்தது அங்கே
உன்றன் சோதரி உவ்வழி சென்றனள்:
சிறுபழம் பொறுக்கச் சென்றனள் வனத்தே
**ஒருபழம் பொறுக்க உயர்மலை யடியில்
தொலைந்தது கோழி தோன்றா தாங்கே
அகாலத் திறந்தது அங்கே பறவை
மற்றது புகலொணா மரணத் தொழிந்தது
விபரிக்க முடியா(த) மொழியில் விடிந்தது.

பெண்ணுக் காகப் பெருந்துயர் கொண்டதார்?
தாயல்ல என்னில் யார்வே றுள்ளனர்!
தாய்தான் முதலில் தான்போய்ப் பார்த்தனள்
தாயே தேடினள் தாய்துய ருழன்றனள்;
செய்பாக் கியமிலாள் தேடிநான் சென்றேன்
தேடிப் பார்த்தேன் செல்வஎன் மகளை
கரடியைப் போல காடெலாம் மோடினேன்
நீர்நாய் போல நீள்வனம் திரிந்தேன்
ஒருநாள் தேடினேன் இருநாள் தேடினேன்
மூன்றாம் நாளும் முழுதும் தேடினேன்;
மூன்றாம் நாளும் முடிவுறும் போதினில்
கடைசியோர் வாரம் கழிந்தநே ரத்தில்
உயர்ந்த பெருமலை யொன்றினி லேறினேன்
உயரத் தடைந்து உச்சிசேர்ந் திட்டேன்
அங்கென் புதல்வியை அழைத்தேன் கூவி
தெலைந்தவள் எண்ணித் துயருற நின்றேன்:
'என்சிறு பெண்ணே எங்குநீ உள்ளாய்
என்தவ மகளே இல்லத்து வருவாய்!'

என்மகட் கூவி இவ்வா றழைத்தேன்
இழந்தவள் எண்ணி ஏங்கி யிருந்தேன்
மலைகூ றிற்று மறுமொழி யிப்படி
பசும்புற் றரையெலாம் பதில்எதி ரொலித்தது:
'தேடியுன் மகளைக் கூவி யழைத்திடேல்
கூவி யழைத்திடேல் குரலால் அழைத்திடேல்
இந்தவாழ் நாளில் என்றும் வந்திடாள்
அவள்தன் வாழ்நாள் என்றும் திரும்பிடாள்
அன்னைவாழ்ந் திட்ட முன்னாள் வதிவிடம்
வயதாம் தந்தையின் படகுத் துறைப்புறம்.' "

கலேவலா

பாடல் 35 - குல்லர்வோவும் அவனுடைய சகோதரியும்

அடிகள் 1-68 : குல்லர்வோ தன் பெற்றோருக்காகப் பலவித வேலைகளைச் செய்தும் அவை பயனற்றுப் போனதால், அவனுடைய தந்தை வரிகளைச் செலுத்துவதற்கு அனுப்புகிறார்.

அடிகள் 69-188 : குல்லர்வோ வரிகளைச் செலுத்திவிட்டுத் திரும்பி வரும் வழியில் முன்னொரு நாள் சிறுபழங்கள் பொறுக்கப் போய்த் தொலைந்து போன சகோதரியைச் சந்திக்கிறான். அவளைச் சகோதரி என்று அறியாமல் தனது வண்டிக்குள் இழுத்து அவளுடன் தவறான முறையில் நடக்கிறான்.

அடிகள் 189-344 : பின்னர் அவர்கள் தங்களுடைய உறவு முறையை அறிந்ததும், அவள் ஓடிப்போய் ஆற்றில் பாய்கிறாள். குல்லர்வோ வீட்டுக்கு விரைந்து நடந்த சம்பவங்களைத் தாயிடம் கூறிவிட்டுத் தானும் தற்கொலை செய்ய எண்ணுகிறான்.

அடிகள் 345-372 : தாய் அவனுடைய தற்கொலை எண்ணத்தைத் தடுத்து எங்காவது ஒரு தனியிடத்தில் போய் இருந்தால் மனம் ஆறுதல் பெறும் என்று கூறுகிறாள். ஆனால் குல்லர்வோ எல்லாவற்றுக்கும் முன்னர் உந்தமோவைப் பழிவாங்கத் தீர்மானிக்கிறான்.

குல்லர்வோ என்பான் கலர்வோ மைந்தன்
முழுநீள் காலுறை முதியவன் பிள்ளை
வாழ்வை நடத்த வாய்ப்புக் கிடைத்தது
பெற்றவர் தந்த பெருநிழ லதன்கீழ்
ஆயினும் விளங்கினான் அவன்எது மில்லை
மனிதன் ஒருவனின் மனதைப் பெற்றிலன்
ஏனெனில் தவறாய் எங்கோ வளர்ந்ததால்
மூடனைப் போல முன்தா லாட்டலால்
தவறாய் வளர்த்த எவரோ ஒருவரால்
மூடனாய்த் தாலாட் டியமுன் ஒருவரால்.

வேலை(க்குப்) பையன் வெளிக்கிட லாயினன்
ஆயத்த மாயினான் அவனே உழைக்க
மீன்பிடித் தொழிலை விரும்பிப் பார்த்தனன்
பாரிய வலையிழு பணியினைக் கொண்டனன்;
இவ்விதம் பின்னர் இயம்பினன் அவனே
செங்கைத் துடுப்புடன் சிந்தனை செய்தான்:
"முழுப்பலம் அனைத்தும் மூட்டி இழுக்கவா
வலுவனைத் தினொடும் வலிக்கவா துடுப்பு
அல்லது கருவியின் அதன்இயல் பிழுக்கவா
வலிக்கவா துடுப்பு தேவைக் கேற்றதாய்?"

பேசினன் சாரதி பின்னணி யத்திருந்(து)
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"முழுப்பலம் அனைத்தையும் மூட்டி இழுப்பினும்
வலுஅனைத் தினிலும் வலிப்பினும் துடுப்பு
உன்னால் படகை உடன்நகர்த் தொண்ணா
**மிண்டுக் குவட்டை மிகநொருக் கொண்ணா."

குல்லர்வோ என்பான் கலர்வோ மைந்தன்
முழுப்பலம் அனைத்தும் மூட்டி இழுத்தான்
வலுஅனைத் தினிலும் வலித்தான் துடுப்பு
மிண்டுக் குவடுகள் வேறாய்ப் பெயர்ந்தன
சூரைச் சட்டம் துகளா யுடைந்தன
காட்டர சுப்பட கதுநொருங் கியது.

கலர்வோ வந்தனன் கண்டிட நிகழ்ந்ததை
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"என்றும் துடுப்புநீ இழுப்பவன் ஆகாய்
மிண்டுக் குவட்டை வீணாய்ப் பெயர்த்தனை
சூரைச் சட்டம் துகளா யுடைத்தனை
முழுப்பட கினையும் முனைந்தே நொருக்கினை;
செல்வாய் வலைக்குள் செறிமீ னடிக்க
மீன்களை அடிக்கும் மிகுவலன் ஆகலாம்!"

குல்லர்வோ என்பான் கலர்வோ மைந்தன்
அடிக்கச் சென்றான் அகல்வலைக் குள்மீன்
அடிக்கும் போதில் அவன்மீன் களையே
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"சக்தியும் பலமும் சார்த்தி அடிக்கவா
மனிதனின் தனியொரு வலியுட னடிக்கவா
அல்லது கருவியின் அதன்இயல் அடிக்கவா
தேவைக் கேற்றதாய்ச் செறிமீ னடிக்கவா?"

இழுத்தவன் வலையை இயம்பினன் இவ்விதம்:
"அடிப்பவன் ஒருவனால் ஆம்பய னெதுவுள
சக்தியும் பலமும் சேர்த்தடிக் காவிடில்
மனிதனின் வலியுடன் நனியடி யாவிடில்!"

குல்லர்வோ என்பான் கலர்வோ மைந்தன்
சக்தியும் பலமும் சார்த்தியே அடித்தான்
மனிதனின் தனியொரு வலியுட னடித்தான்
கலக்கி நீரைக் கஞ்சியா யாக்கினான்
அடித்து வலையை ஆக்கினான் சணற்கூழ்
இடித்துப் பசைக்குழம் பியற்றினான் மீன்களை.

கலர்வோ வந்தனன் கண்டிட நிகழ்ந்ததை
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"அடிப்பவன் என்றும் **ஆகாய் மீன்நீ
அடித்து வலையை ஆக்கினை சணற்கூழ்
அடித்து மிதவையை ஆக்கினை துகள்கள்
கயிற்றை ஒடித்துக் கனதுண் டாக்கினை;
செல்வாய் வரிகளை எடுத்துநீ செல்வாய்
செலுத்தவும் செல்வாய் செறிநில வரிகளை
பயணம் செய்வதில் பல்வல னாகலாம்
செல்வழித் திறமை உள்ளவ னாகலாம்."

குல்லர்வோ என்பான் கலர்வோ மைந்தன்
முழுநீல் காலுறை முதியவன் பிள்ளை

மஞ்சள் கேசமும் வனப்பும் வாய்ந்தவன்
கவின்தரத் தோலதில் காலணி கொண்டவன்
எடுத்தவன் வரிகளை எடுப்புடன் சென்றான்
நிலத்தின் தீர்வையைச் செலுத்திடச் சென்றான்.
எடுத்து வரிகளை ஏகிய பின்னர்
நிலத்துத் தீர்வையைச் செலுத்திய பின்னர்
சறுக்கு வண்டியில் தான்வந் தேறினன்
ஏறிச் சறுக்கு வண்டியில் இருந்தனன்;
வீடு நோக்கி மேற்செலத் தொடங்கினன்
உரிய நாட்டுக்குப் பயணம் செய்தனன்.

வண்டியை விரைந்து வடிவாய்ச் செலுத்தினன்
வழித்தொலை யதனை வாகாய்க் கடந்தனன்
வைனோப் புற்றரை வளர்வெளி களிலே
தொன்னாள் வெட்டிய தொடர் வெளிகளிலே.

எதிரிலே வந்தனள் ஏந்திழை ஒருத்தி
பொன்னிறக் கூந்தலாள் மின்னெனச் சறுக்கியே
வைனோப் புற்றரை வளர்வெளி களிலே
தொன்னாள் வெட்டிய தொடர்வெளி களிலே.

குல்லர்வோ என்பான் கலர்வோ மைந்தன்
அங்கே வண்டியை அவன்உடன் நிறுத்தி
அரிவையோ டுரைசெய ஆயத்த மாயினன்
அரிவையோ டுரைசெய அணங்கினை மயக்கிட:
"ஏறுக பெண்ணே என்றன் வண்டியுள்
ஏறியென் பின்புறத் துரோமத் துணிபடு!"

சறுக்கணி நின்றஅத் தையலும் கூறினள்
சறுக்கிக் கொண்டே சாற்றினள் சென்றவள்:
"மரணம்தான் வந்துன் வண்டியில் ஏறும்
உரோமத் துணியில்நோய் ஒன்றுதான் படுக்கும்."

குல்லர்வோ என்பான் கலர்வோ மைந்தன்
முழுநீள் காலுறை முதியவன் பிள்ளை
சாட்டையை ஓங்கிச் சாடினன் பரியை
மணிமுனைச் சவுகால் வளமாய் அறைந்தான்
பரியும் பறந்தது பயணம் தொடர்ந்தது
நிமிர்பரி விரைந்தது நீண்டது பயணம்
வண்டியை விரைந்தே வாகாய்ச் செலுத்தினன்
வழித்தொலை கடந்து வளர்கதிச் சென்றனன்
தெளிந்த கடலதன் செறிவிரி பரப்பில்
திறந்து பரந்த திகழ்நீர்ப் பரப்பில்.

எதிரிலே வந்தனள் ஏந்திழை ஒருத்தி
உயர்ந்ததோல் காலணி அணிந்தளாய் வந்தனள்
தெளிந்த கடலதன் செறிவிரி பரப்பில்
திறந்து பரந்த திகழ்நீர்ப் பரப்பில்.

குல்லர்வோ என்பான் கலர்வோ மைந்தன்

அங்கே குதிரையை அவனுடன் நிறுத்தி
வாயையும் ஒழுங்காய் வைத்துக் கொஞ்சம்
மொழிகளும் தேர்ந்து மொழிந்தனன் இவ்விதம்:
"வனப்பின் வனப்பே வண்டியுள் வருவாய்
தேசத் தெரிவே சேர்என் பயணம்!"

மங்கையும் இவ்விதம் மறுமொழி புகன்றாள்
உயர்ந்ததோற் காலணி உடையாள் கூறினள்:
"துவோனிதான் வண்டியுள் தொடரும் உன்னுடன்
மரண உலகுஉன் வழிச்செல வுடன்வரும்."

குல்லர்வோ என்பான் கலர்வோ மைந்தன்
முழுநீள் காலுறை முதியவன் பிள்ளை
சாட்டையை ஓங்கிச் சாடினன் குதிரை
மணிமுனைச் சவுக்கால் வளமாய் அறைந்தான்
பரியும் பறந்தது பயணம் தொடர்ந்தது
வண்டி உருண்டது வழித்தொலை குறைந்தது
வண்டியை விரைந்து வாகாய்ச் செலுத்தினன்
வழித்தொலை கடந்து வளர்கதிச் சென்றனன்
அந்த வடபுல அகல்புற் றரைவெளி
லாப்பில் பரந்தகல் எல்லைப் பரப்பில்.

எதிரிலே வந்தனள் ஏந்திழை ஒருத்தி
ஈயத்து நெஞ்சாள் ஏகினள் தன்வழி
அந்த வடபுல அகல்புற் றரைவெளி
லாப்பில் பரந்தகல் எல்லைப் பரப்பில்.

குல்லர்வோ என்பான் கலர்வோ மைந்தன்
அங்கே குதிரையை அவனுடன் நிறுத்தி
வாயையும் ஒழுங்காய் வைத்துக் கொஞ்சம்
மொழிகளும் தேர்ந்து மொழிந்தனன் இவ்விதம்:
"அரிவையே வண்டி அதனுள் வருவாய் என்றன் போர்வையுள் அன்பே வருவாய்
என்றன் அப்பிள் எழிற்பழம் உண்ண
என்றன் விதைகள் இவைசில கொறிக்க!"

மங்கை கூறினள் மறுமொழி இவ்விதம்
ஈயத்து நெஞ்சாள் ஏசினள் இவ்விதம்:
"இழிந்தோய், உமிழ்கிறேன் இதோஉன் வண்டியில்!
சண்டாள மனிதா, சரிஉன் வண்டியில்!
உன்றன் போர்வையில் உள்ளது குளிர்தான்
உன்றன் வண்டியுள் உள்ளது இருள்தான்."

குல்லர்வோ என்பான் கலர்வோ மைந்தன்
முழுநீல் காலுறை முதியவன் பிள்ளை
வனிதையை இழுத்து வண்டியுள் போட்டனன்
அவளை வண்டியில் அவன்பிடித் தேற்றினன்
உரோமத் துணிகளின் உள்ளே ஆழ்த்தினன்
போர்வையின் உள்ளே புகுத்தியே மூடினன்.

அப்போ(து) இவ்விதம் அரிவையும் மொழிந்தாள்

ஈயத்து நெஞ்சாள் இவ்விதம் கடிந்தாள்:
"விடுவாய் இங்கிருந் தெனைவெளி யேற
பிள்ளைக்கு விடுதலைப் பேறினைத் தருவாய்
தீயவன் சொற்களைச் செவிகொளா திருக்க
கொடியவன் ஏவல் கொள்ளா திருக்க.
அல்லது வண்டி அதன்தளம் உதைப்பேன்
பலகைகள் அனைத்தையும் பார்த்தே உடைப்பேன்
வண்டியை நொருக்கித் துண்டுதுண் டாக்குவேன்
சறுக்கும் கலத்தைத் தனித்துக ளாக்குவேன்!"

குல்லர்வோ என்பான் கலர்வோ மைந்தன்
முழுநீல் காலுறை முதியவன் பிள்ளை
எடுத்தான் செல்வ மெலாம்நிறை பெட்டகம்
பலநிற மூடியைப் படாரெனத் திறந்தான்
காட்டினான் வெள்ளிக் கனதன் காசுகள்
பரப்பி வைத்தான் பலவகைத் துணிகள்
பொன்னலங் காரப் புதுக்கா லுறைவகை
வெள்ளி வேலையில் விளங்கிடைப் பட்டிகள்.

துணிகளில் சபலம் தோகைக்கு வந்தது
மணப்பெண்(ணை) செல்வமும் மனமாற்றியது
வெள்ளியும் அவளை வென்றே நின்றது
தங்கமும் தையலைத் தனதாக் கியது.

குல்லர்வோ என்பான் கலர்வோ மைந்தன்
முழுநீல் காலுறை முதியவன் பிள்ளை
இதன்பின் அரிவையோ டிதமாய்ப் பேசினன்
தன்வச மாக்கித் தந்தான் கூச்சமும்
பரியின் கடிவளம் ஒருகரம் தன்னில்
மறுகை மங்கையின் மார்பகம் தன்னில்.

பெண்ணுடன் இங்ஙனம் பெருங்களி கொண்டனன்
ஈயத்து நெஞ்சளைக் களைக்கப் பண்ணினன்
செப்பு நிறத்தொளிர் திகழ்போர் வைக்கீழ்
புள்ளிக் கம்பளிப் புதுத்துணி களின்மேல்.

இப்போ திறைவன் ஈந்தார் விடியல்
அடுத்த நாளினை ஆண்டவன் கொணர்ந்தார்
அரிவையும் கேட்டனள் அவள்இவ் வார்த்தையில்
பெண்ணவள் கேட்டனள் பேசினள் இவ்விதம்:
"எந்த இனத்தில் இருந்துநீ வந்தனை
உறுமுறு மனிதஎவ் வுறவைநீ சேர்ந்தனை
உண்மையில் நீயொரு உயர்பெரு மினத்தவன்
உயர்வாம் தந்தையின் உயர்வழி வந்தவன்."

குல்லர்வோ என்பான் கலர்வோ மைந்தன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"நானோ மாபெரும் நல்லினத் தோனலன்
பெரியதும் அல்ல சிறியதும் அல்ல
ஆயினும் மத்திமம் ஆன இனத்தவன்;

கலர்வோ என்பான் கடன்தாழ் புத்திரன்
முழுஅறி வேயிலாப் மூடப் பையன்நான்
எதற்குமே உதவா ஏழைப் பிள்ளைநான்;
ஆயினும் இப்போ அறைகநின் இனத்தை
உரமாம் குடும்பம் உன்னதைப் புகல்வாய்
பேர்பெறும் இனத்தில் பிறந்தையோ என்பதை
உயர்பிதா வழியில் உற்றயோ என்பதை."

அரிவை உண்மையில் அளித்தாள் மறுமொழி
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"நானோ மாபெரும் நல்லினத் தாளலள்
பெரியதும் அல்ல சிறியதும் அல்ல
ஆயினும் மத்திமம் ஆன இனத்தவள்;
கலர்வோ என்பான் கால்தாழ் புத்திரி
முழுஅறி வேயிலா மூடப் பெண்நான்
எதற்கும் உதவா ஏழைப் பிள்ளைநான்.

அந்நாள் சிறுமியா யானநே ரத்திலே
அன்பாம் என்றன் அன்னையின் வீட்டில்
சென்றேன் காட்டுச் சிறுபழம் பொறுக்க
மலையடி வாரம் **மற்றொரு கனிக்காய்;
பூமியில் சிவந்த **பொழிற்பழம் ஆய்ந்தேன்
மலையடி வாரம் **மற்றொரு பழத்தை,
பகலில் பறித்தேன் இரவிளைப் பாறினேன்
பறித்தேன் ஒருநாள் பறித்தேன் இருநாள்;
மூன்றாம் நாளின் முடிவிலும் பறித்தேன்
வீடு செல்லும் பாதையைத் தெரிந்திலேன்
பாதைகாட் டுக்குப் படர்ந்தே சென்றது
அடர்ந்த வனத்துக் கடிவழி சென்றது.

அங்கே அமர்ந்தேன் அழவும் தொடங்கினேன்
அழுதேன் ஒருநாள் அழுதேன் இருநாள்
அழுதே னப்பா அம்மூன் றாம்நாள்
உயர்ந்த குன்றம் ஒன்றிலே ஏறினேன்
உயர்வா யிருந்த உச்சியை அடைந்தேன்
கூவினேன் அங்கிருந்(து) குரல்கொடு கத்தினேன்
காடங் கொருவிடை கூறிற் றிவ்விதம்
பசும்புற் றரையெலாம் பதில்எதி ரொலித்தது:
'மூடப் பெண்ணே, முனைந்து கூவாதே!
விவேகமற் றவளே வீண்கத் தாதே!
யார்க்குமுன் சத்தம் நனியிங்(கு) கேளா!
கூச்சல்நீ உறைந்த குடில்வரை போகா!'

நாட்கள் மூன்று நான் காய் நகர்ந்தன
ஐந்தா றாக அகன்றன இறுதியில்
இறந்துபோ தற்கு இருந்தேன் தயாராய்
எண்ணினேன் அழிந்து இறந்தே மறைய;
ஆயினு மிறந்தேனு மில்லையவ் வாறு
இழிந்த பிறவிநான் அழிந்தே னில்லை.

இழிந்த பிறவிநான் இறந்துபோ யிருந்தால்
பேதைநான் இவ்விதம் பிரிந்துபோ யிருந்தால்
அதிலிருந் திரண்டாம் ஆண்டில் சரியாய்
மூன்றாய் தாய்வரும் முழுக்கோ டையிலே
புல்லாய்த் தோன்றி மெல்லசைந் திருப்பேன்
மலரின் மொட்டாய் முளைவிட் டிருப்பேன்
நிலம்வளர்ந் திருப்பேன் நலச்சிறு பழமாய்
சிவந்த நிறத்தினில் **சிறுசிறு பழமாய்
இந்தக் கொடுமைகள் என்செவி கேளா
அல்லல் நிறைந்ததை அறியா திருப்பேன்."

ஒருவா றிப்படி உரைத்து முடித்ததும்
ஒருதரம் அதையே உரைத்து முடித்ததும்
சறுக்குவண் டியினால் தானவள் பாய்ந்தனள்
ஓடினாள் அங்கிருந் தொருஆற் றினுக்குள்
நேராய்ப் பாய்ந்த நுரைத்தநீர் வீழ்ச்சியுள்
புகைத்திரைந் திட்ட புகுநீர்ச் சுழலினுள்
அங்கே அடைந்தாள் அவள்தன் இறப்பை
அங்குசந் தித்தாள் அவள்தன் மரணம்
துவோனலா சென்றே புகலிடம் பெற்றாள்
அலைகளின் மத்தியில் அடைந்தனள் கருணையை.

குல்லர்வோ என்பான் கலர்வோ மைந்தன்
சறுக்கு வண்டியால் தான்பாய்ந் திட்டனன்
பெருங்குர லெடுத்துப் பெரிதாய் அழுதனன்
கடுந்துய ரத்தொடே கதறி அழுதனன்:
"ஓ,நான் பேதை உறும்என் வாழ்நாள்
ஐயகோ பாவிநான் அடாததீப் புரிந்தேன்
அருஞ்சகோ தரிக்கு அல்லவை செய்தேன்
அன்னைஎன் பெற்றவள் அவளைக் கெடுத்துளேன்!"

ஐயோ, என் தந்தையே ஐயோ, என் அன்னையே
ஐயோ, என் புகழுறும் அரும்பெற் றோரே
என்னை எதற்காய் இங்கே படைத்தீர்
இந்த இழியனை எதற்குச் சுமந்தீர்!

நன்றாய் இருக்கும் நடந்திருந் தால்இது
பிறந்திடா திருந்தால் வளர்ந்திடா திருந்தால்
இவ்வுல கினுக்கு எனைக்கொண ராவிடில்
இந்தமண் ணுக்குஇவன் வரா திருந்தால்;
மரணம் எனக்கு வந்தில நேராய்
சரியாய் நோயும் சார்ந்திட விலையெனை
அப்போ தெனையது அழித்திடாக் காலம்
ஈர்இரா வயதில் எனைக்கொ(ல்)லா நேரம்."

கடிவாள வடத்தைக் கத்தியால் வெட்டினான்
இழுவைப் பட்டியை இரும்பா லடித்தான்
ஏறினான் நல்ல இகல்பரி முதுகில்
வெள்ளைச் சுட்டியின் விரிநல் முதுகில்
நிலத்திலே சிறுதொலை நேராய்ச் சென்றனன்

சிறிதே தூரம் சீராய்க் கடந்தனன்
தந்தையின் முற்றம் தனிலவன் வந்தான்
சொந்தத் தந்தையின் தொன்னில மடைந்தான்.

மாதா முற்றத்து வளர்வெளி வந்தாள்:
"ஓ,என் **அன்னையே, எனைச் சுமந்தவளே!
பேதைத் தாயே, நீபுரிந் திருந்தால் -
அந்தநாள் என்னைநீ அரிதீன்(ற) பொழுது
சவுனா அறையைத் தனிப்புகை நிரப்பி
கூடக் கதவின் கொடுந்தாள் பூட்டி
அப்புகை எனைமூச் சடைக்கவே வைத்து
ஈர்இரா வயதில் எனையழித் திருந்தால் -

முரட்டுத் துணியில் எனைநீர்க் கொணர்ந்து
படுக்கைத் திரையில் சுற்றியாழ்த் தி(யி)ருந்தால் -
என்றன் தொட்டிலை எரிஅனல் கொழுத்தி
ஆடும் தொட்டிலை அடுப்பிலிட் டிருந்தால்!"

கிராம(த்து) மக்கள் கேட்டிருப் பரோஇது:
'இல்லகத் தொட்டில் ஏகிய தெங்கே
சவுனாக் கதவு தாளிட்ட தெதற்காய்?'
இவ்விதம் பதிலை(யும்) இயம்பியு மிருப்பையோ:
'**தொட்டிலைத் தீயிலே சுட்டெரித் திட்டேன்
ஆடும் தொட்டிலை அழலிலே யிட்டேன்;
சவுனாக் கூடத் தன்முளை எடுத்து
செஞ்சுவைப் பானம் செய்துகொண் டிருந்தேன்.' "

விரைந்தே இவ்விதம் வினவினள் அன்னை
வந்து பெற்றவள் வருமா றுசாவினாள்:
"நேசஎன் மகனே, நிகழ்ந்தது என்ன?
நீகேள்வி யுற்ற நேர்கொடுஞ் செயலெது?
வெந்துவோ னலாவால் மீண்டது போலவும்
பொன்றுல கால்வரல் போலவும் காண்கிறாய்."

குல்லர்வோ என்பான் கலர்வோ மைந்தன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"நீசக் கொடுஞ்செயல் நிகழ்ந்ததொன் றுண்டு
அழிவு வேலையொன் றமைந்ததுண் டிங்கு
சொந்தச் சோதரிக் கல்லவை சூழ்ந்தேன்
தாய்பெற் றவளை நானே கெடுத்தேன்!

வரியெடுத் தேகி வருகையில் திரும்பி
வாடகை செலுத்தி வருகையில் மீண்டு
வழியிலே வந்ததோர் வனிதைசந் தித்தேன்
நான்களி யாட்டம் நடத்தினேன் அவளொடு;
அவளோ என்றன் அருஞ்சோ தரியாள்
சொந்தத் தாய்க்குத் தோன்றிய பிள்ளை.

அங்கே அடைந்தாள் அவள்தன் இறப்பை
அங்குசந் தித்தாள் அவள்தன் மரணம்

நேராய்ப் பாய்ந்த நுரைத்தநீர் வீழ்ச்சியுள்
புகைத்து இரைந்தவோர் புகுநீர்ச் சுழலுள்;
என்னைப் பொறுத்து எனக்குத் தெரிந்தில
சிந்திக்க முடிந்தில செயமுடி வியன்றில
எங்கே அடையலாம் என்இறப் பென்பதை
இழியவன் நான்சா எங்கேற்ப தென்பதை;
ஊளை யிட்டிடும் ஓநாய் வாயிலா
கடுகிவந் துறுமிடும் கரடியின் அலகிலா
அல்லது திமிங்கிலத் ததன்வயிற் றினிலா
கோலாச்சி மீனின் கொடியபற் களிலா?"

இனிவரும் சொற்களில் இயம்பினள் அன்னை:
"என்றன் மைந்தநீ ஏகிட வேண்டாம்
ஊளை யிட்டிடும் ஓநாய் வாய்க்குள்
கடுகிவந் துறுமும் கரடியின் அலகுள்
அல்லது திமிங்கிலம் அதன்வயிற் றினினுள்
கோலாச்சி மீனின் கொடிதாம் பற்களுள்!

பின்லாந்து நாட்டில் பிறவிடம் பலவுள
*சவோவின் எல்லையில் தனிஅகல் இடமுள
மானுடர் புரிகொடுஞ் செயல்மறந் திருக்க
தானே ஒளித்திட தன்தீச் செயற்கு
ஐந்தோ ஆறோ ஆண்டுகள் மறைந்திட
ஒன்பது ஆண்டுகட் கொருங்கெலாம் சேர்ந்து
காலம் கனிந்து கருணை தரும்வரை
ஆண்டுகள் கவனம் அரிதாய்ப் போம்வரை."

குல்லர்வோ என்பான் கலர்வோ மைந்தன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"மறைந்து வாழநான் மறந்தும் போகிலேன்
நான்கொடி யோனொளித் தோடலை நாடேன்
மரணவாய் எதிரே வலிதுநான் நடப்பேன்
கல்லறைத் தோட்டக் கதவதன் வழியே
பெரிதாய் நடக்கும் பெரும்போர்க் கேகுவேன்
மனிதரைக் கொல்லும் வன்களத் தேகுவேன்
உந்தமோ இன்னும் உயிரோ டிருக்கிறான்
வீழ்த்தப் பட்டிலன் வெந்தீ மானுடன்
பழிவாங் கிடவே பட்டில பிதாவடிக்(கு)
விழிநீர்க்(கு) அன்னையின் விலைதரப் பட்டில
இங்கிலைத் தேவை எண்ணமற் றும்துயர்
நான்அனு பவித்த **நற்செயல் பற்றியும்."

(end of Kalevala 2, covering verses 19-35)